14363




# தவத்திரு வடிவேற் சுவாமிகள் நினைவு மலர்

270
வடிவே
SL-IPR

தமிழ்ச் சங்கம்
சபை,
73
பதி 10 6 1950
148
கசெட இல. 7. 6. 1968

14363



# தவத்திரு வடிவேற் சுவாமிகள்

## நினைவு மலர்

வெளியீடு:

மகாதேவ ஆச்சிரமம்

ஜெயந்தி நகர்

கிளிநொச்சி

# நன்றி நவிலல்

இம் மலருக்கான ஆசியுரை, வாழ்த்துரை என்பவற்றை நாம் கேட்ட அளவில் எவ்வித தாமதமுமின்றி மனமுவந்து தந்துதவிய பெரியார்கட்கும் கட்டுரைகள், கவிதைகளை தங்கள் சிரமத்தைப் பாராது எழுதி நல்கிய அன்பர்கட்கும் தாபன ரீதியாகவும் தனிப்பட்ட வகையிலும் பொருள் தந்துதவிய உபகாரிகளுக்கும் எமது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம். மேலும் இம்மலரைப் பதித்த கொழும்பு டாம் வீதி குமரன் அச்சக உரிமையாளர் திருமதி மீனாம்பாள் கணேசலிங்கம் அவர்கட்கும், அந்நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் காட்டிய ஒத்துழைப்பு செயற்பாடுகட்கும் நாம் நன்றி கூற வேண்டியவர்களே.

இஃதன்றித்தங்களது அரிய நேரத்தைப் பாராது உடல் நிலையையும் பேணாது பிழை திருத்தம் பார்த்துதவிய முன்னைநாள் பாராளுமன்ற மொழி பெயர்ப்பாளர் உயர் திரு. சோ. க. தம்பிப்பிள்ளை ஐயா, ஓய்வு பெற்ற அதிபர் கனகலிங்கம் M. A. அவர்கள் தமிழ் சங்க பொதுக்காரியதரிசி க. கந்தசாமி அவர்கள் ஆகியோருக்கும் எங்கள் பாராட்டு உரியதாகுக.

— ஆசிரியர்

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| ஆசியுரை<br>ஸ்ரீ சிவகுருநாதபீடம் | 1 |
| வாழ்த்துரை<br>சுவாமி சித்ருபானந்தா | 2 |
| வாழ்த்துரை<br>திருமுருக கிருபானந்தவாரியார் | 3 |
| ஆசிச்செய்தி<br>ஸ்ரீமத் ஆத்மகணானந்தாஜீ | 4 |
| ஆசிச்செய்தி<br>ஸ்ரீமத் அத்வயானந்தசரஸ்வதி | 5 |
| ஆசியுரை<br>ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் | 6 |
| ஆசியுரை<br>ஸ்ரீமத் சுவாமி பிரேமானந்தா | 7 |
| வாழ்த்துரை<br>திரு. கா. மாணிக்கவாசகர் | 9 |
| நூன்முகம்<br>திரு. கா. சு. சிதம்பரப்பிள்ளை மேலைப் புலோலி | 10 |
| நாம் கண்ட கர்மயோகி தவத்திரு வடிவேற்சுவாமிகள்<br>ஆத்மஜோதி நா. முத்தையா | 17 |
| வாழ்க திரு வடிவேற்சுவாமிகள்<br>திரு. மு. கந்தையா B.A. | 21 |
| சுவாமிகளின் அருட்பணிதொடரட்டும்<br>திரு. க. கனகராசா J.P.<br>மில்க்வைற், யாழ்ப்பாணம். | 24 |
| குருநாதரின் திருவாக்கிலிருந்து உதிர்ந்தவை | 25 |
| சர்வார்த்த விநாயகர் பேரில் பாடிய குருவிருத்தம் | 26 |
| வருணபகவானை வேண்டுதல் | 28 |
| உருத்திரபுரீஸ்வரர் காட்சி | 29 |
| பாசவேரறுத்தாண்டகுருமணி<br>திரு. செ. முத்தையா<br>ஓய்வு பெற்ற ஆசிரியர், | 30 |

விடயம் | பக்கம்

ஞானபரம்பரைவரிசையில் சுவாமிகள் — 33
திரு. சோ. பரமசாமி B.A. இணுவில்

வேதாந்தவித்தகர் வடிவேல் சுவாமிகள் — 36
செல்லத்துரைச் சுவாமிகள்
சிவதொண்டன் நிலையம், மட்டக்களப்பு.

நமது குருநாதன் அருள்வாக்கு — 39
பரமானந்தவல்லி சுவாமி அம்மா

நாம் தரிசித்த அருளாளர் வடிவேல்சுவாமிகள் — 41
திரு. பொ. கந்தையா, காந்தி ஆசிரியர்

தவத்திரு வடிவேற் சுவாமிகள் மீதுபாடிய
திருவிரட்டை மணிமாலை — 43
திரு. வை. க. சிற்றம்பலம்
ஓய்வுபெற்ற ஆசிரியர், அளவெட்டி

ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் சில நினைவுகள் — 47
திரு. பொ. நடராஜா, இணுவில்.

ஞானப்பழம் — 49
சுவாமி சீதாலட்சுமி அம்பாள்
ஸ்ரீ லட்சுமிபதி, ஆனந்தா ஆச்சிரமம்,
ஸ்ரீ நகர், சஞ்சீவிமலை அடிவாரம்,
இராஜபாளையம், தமிழ்நாடு.

ஈழத்துச் சமாதிக் கோயில்கள் — 54
திரு. க. குமாரசாமி
சிவஞானவாரிதி, புலவர்

நல்லைக் குருமணி சமாதிக்கோயில் — 66
திரு. சி. த. நடராஜன்
மேலாளர், நல்லை ஆதீனம்

வேதாந்தரசம் — 67
திரு. வே. ச. செல்லம் நாராயணராஜா
தமிழ்நாடு.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி — 75
ஸ்ரீலஸ்ரீ தவத்திரு கணேசானந்த மகாதேவ
சுவாமிகள்.

ஆன்மவிசாரம் தத்துவஞான உபதேசம் — 82
ஸ்ரீ மகாதேவ சுவாமிகள்,
நினைவு மலரைத் தழுவியது.
(முதலாம், இரண்டாம் பாகங்கள்)



தவத்திரு வடிவேற் சுவாமிகளின்
மோன நிலை

உ

## ஆசியுரை

# ஸ்ரீ சிவகுருநாத குருபீடம்

18, குமாரசுவாமி வீதி:
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

### வெண்பா

மகாதேவ ஆச்சிரம மாண்பார்த்த சீடார்
மகான் வடிவேற் சுவாமி தகாதவற்றைப்
போக்கியே நம்மவர்க்குப் போங்கதியைக் காட்டினார்
சாக்கடந்தார் மேன்மையினைச் சாற்று

தவத்திரு வடிவேற் சுவாமிகள் மஹா சமாதியடைந்த முத லாம் வருடக் குருபூசைத் திருநாளை முன்னிட்டுக் கிளிநொச்சி ஜெயந்தி நகர் மஹாதேவ ஆச்சிரமம் ஒரு சிறப்பு மலரை வெளி யிட இருப்பதறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இக்கால இளைஞருக்கும் வருங்கால சந்ததியினருக்கும் எமது ஞானிகளின் வாழ்க்கைமுறை ஒரு வழிகாட்டியாய் அமையுமென்ப தில் சிறிதும் ஐயமில்லை. தவத்திரு வடிவேற் சுவாமிகள் இளமை தொடக்கம் தெய்வீக வாழ்க்கையில் ஈடுபட்ட மகா புருஷர். கொழும்புத்துறை யோகர் சுவாமிகளின் வழிகாட்டலின் யாழ்ப் பாணம் கந்தர்மடம் வேதாந்த மடத்தில் குருபீடாதிபதியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் மகாதேவா சுவாமிகளின் பெயரால் ஓர் ஆச்சிரமமமைத்துக் குருவழி நின்று சைவமும் தமிழும் தழைத் தோங்குவதற்கும் தம்மை அர்ப்பணித்தார். அந்த வகையில் சுவா மிகளின் நினைவு மலர் வெளிவருவது சைவ மக்களுக்குப் பெரிதும் பயன் அளிக்கும்.

மலர் மாண்புடன் விளங்கி நன்மணங்கமழ வேண்டுமென்று திருவருளையும் குருவருளையும் சிந்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

சற்குருபாதந்துணை

**ஸ்ரீ சோமஸ்கந்தவேள் சுவாமிகள்**

உ

குருவே துணை

# வாழ்த்துரை

கற்பனை அற்றுக் கனல்வழியே சென்று
சிற்பனை எல்லாம் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்றுத்
தற்பர மாகத் தகுந்தண் சமாதியே,

என்னும் திருமூலர் திருமந்திரப் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் மகாதேவா ஆச்சிரமத்தை அமைத்து பல விதமான சமுதாயத்துக்கு அமைவான சீரிய பணிகளைச் செய்தும், செய்வித்தும், செய்விக்க ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். யான் தவத்திரு வடிவேல் சுவாமிகளை ஒருமுறை தரிசிக்க வாய்ப்புக் கிட்டியது பெரும் தவப் பேறாகும். தவத்திரு சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் ஆட் கொள்ளப்பட்ட ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் சமாதியடைந்த தினத்தைக் குறிக்குமுகமாகவும் அன்னாரின் மகத்தான சேவையை நினைவு கூருமுகமாகவும் ஓர் மலர் வெளிவருவதையறிந்து பேருவகை கொள்வதோடு தற்போது பீடாதிபதியாக இருந்து அருளாட்சி புரிந்து வரும் தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகளையும் இவரைச் சார்ந்த ஆச்சிரம அன்பர்களையும் வாழ்த்துகின்றோம்.

எம்மிலும் பார்க்க வயசு முதிர்ந்தவரும் ஆத்மீக வாழ்வில் ஒரு நிறை கண்டவரை யாம் நினைப்பதும் வாழ்த்துவதும் நமக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

"தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே."

என்ற வாக்குக் கமைவாக எல்லாம் வல்ல சிவபெருமானை வணங்கி உய்தி பெறுவோமாக.

எல்லாம் சிவன் செயல். இறை பணியில்
அன்புள்ள
**சுவாமி சித்ருபானந்தா.**

ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை.
27-1-94.



முருகா

தொலைபேசி . 535666

[illegible]

"வேலை வணங்குவதே வேலை"
கிருபானந்தவாரி
107, சின்னையா செட்டித் தெரு
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002

நாள்: 15/2/93

உயர்திரு வடிவேல் சுவாமிகள் திருவருளுக்கு
மகாதேவ ஆச்சிரமம்
கிளிநொச்சி

வாழ்த்துரை

இலங்கையில் கிளிநொச்சி என்ற இடத்தில் ஒரு ஆச்சிரமம் அமைத்து மக்களுக்கு அரும்பணியை ஆற்றி மெய்ஞான நெறியை பரப்பிய தவத்திரு வடிவேல் சுவாமிகள் 'அன்பே சிவம்' [illegible] செய்தார்கள். 1942 முதல் காலமானவரை(?) என்னுடன் அன்பாக பழகி வந்தார்கள். [illegible], ஆக்கம்(?), உண்மையாய் மக்கள் தொண்டு மகாதேவன் தொண்டு என்று மக்களுக்கு மகிழ்ந்து அயராது தொண்டு செய்து வந்தார்கள். அப்பேர்ப்பட்ட பெரியவருடைய(?), கருணை நிறைந்த நல்ல உள்ளம் படைத்தவரான(?) [illegible] அவர்கள் ஆத்ம சாந்தி அடைய பரமனை(?) பரமனை பிரார்த்திக்கின்றேன்.

அன்புள்ள

கிருபானந்தவாரி

உ
சிவமயம்

# ஆசிச் செய்தி

நமது சமயத்திலே தோன்றிய ஞானியர்கள் எண்ணி லடங்கார். அவர்கள் பெற்ற ஆன்மீக அனுபூதிகளோ சொல் லிலடங்கா. ஆனால் அந்த அனுபூதிகளின் வாயிலாக அவர்கள் பெற்ற உயர்ந்த பண்பு ஜீவகாருண்யம் என்பதாகும். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்; வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன், 'எல்லா உயிரும் இன் புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' 'சர்வேஜனா சுகினோ பவந்து (எல்லா உயிரும் இன்புறுக)' என்றெல்லாம் பலவாறாகத் தங்கள் உள்ளக் கிடக்கையை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். பகவான் இராமகிருஷ்ணரும் இந்த உயர்ந்த தர்மத்தையே போதித் தார் 'மக்கட் தொண்டே மகேசன் தொண்டு' என்பது இராமகிருஷ்ண இயக்கத்தின் உயர்ந்த கோட்பாடாகும்.

இத்தகைய உயர்ந்த பண்பிலே வாழ்ந்தும் வாழ்ந்து காட்டியும் வந்துள்ளார்கள் தவத்திரு வடிவேல் சுவாமிகள். சுவாமிகளின் பணிகளை இம்மலரில் பக்தர்கள் பலவாறாக விவரித்துள்ளனர். சுவாமிகளின் அடிச்சுவட்டைப் பின் பற்றி இளைஞர் பலர் தங்கள் வாழ்க்கையைச் சமுதாயத் தொண்டிற்கு அர்ப்பணிக்க முன்வரவேண்டும்.

மகாதேவ ஆச்சிரமத்தின் பணிகள் மேன்மேலும் வளர ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இறைபணியில்,

**சுவாமிஜி ஆத்ம கணாநந்தா**

**இரா மகிருஷ்ணமிஷன்**
ாமகிருஷ்ணா றோட்,
ı-6.

உ
சிவமயம்

# ஆசிச் செய்தி

சிறிது நேரமாவது மக்களின் மனத்தை ஆன்மீக நெறியில் செலுத்துவதற்காக ஸ்ரீலங்காவில் மகாதேவ ஆச்சிரமம் நிறு விய தவச்சீலர் வடிவேல் ஸ்வாமி அவர்களின் பணி சம்பந்த மான விஷேச மலர் வெளியிட முனைந்துள்ள அடியார்கள் அனைவருக்கும் ஸ்வாமிகளின் ஆசியும் அன்னை பராசக்தி யின் அருளும் உண்டாவதாக. ஸ்வாமிகளின் பணி அவர் களுடைய சிஷ்யர்களிடையில் தொடர்ந்து பரவிவர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சுவாமி

**அத்வயானந்த ஸரஸ்வதி.**

**ஸ்ரீ. லலிதா மஹிலாஸமாஜம்**
திருஈங்கோய்மலை P. O. மணமேடு S. O.
முசுறி T. K. திருச்சி.

உ

குருபாதம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

குருமஹா சந்நிதானம் - ஆதீன முதல்வர், ஸ்தாபகர்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமகா சந்நிதானம்—ஆதீனமுதல்வர்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

பருத்தித்துறை வீதி, நல்லூர்,

யாழ்ப்பாணம், இலங்கை.

# ஆசியுரை

அருளோங்கும் மெய்யன்பர்களே,

ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் குருபக்தியைச் சிர மேற்கொண்டு சைவத்திற்கும் தமிழிற்கும் குறிப்பாக வன்னி மாவட்டம் வாழ் மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகள் அளப்பரியன ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் சமாதி எய்திய தினத்தை ஒட்டி விழாவெடுப்பதும் வழிபாடு செய்யவிருப்பதும் பாராட்டிற்குரியன. இது அவரின் நிலைபேறான குருபக்திக்கு எடுத்துக்காட்டாகும். பூர்வஜென்ம புண்ணியவசத்தினாலேயே ஒருவருக்கு சற்குரு அமைவர்? அநுபூதி பெற்ற மகான்களின் அருள் வாக்குகளிலே அவரின் அருமை பெருமை மகிமை என்பனவற்றை எல்லாம் அறியலாம். தாய், தந்தையைக் காட்ட, தந்தை குருவைக் காட்ட, குரு தெய்வத்தைக் காட்டுவார் என்பதும் ஒரு கருத்தாகும். மாதா, பிதா, குரு தெய்வத்துக்குச் சமமானவர் என்பது இன்னொரு கருத்து. குருவின் திருவார்த்தை கேட்டல், குருவின் திருமேனி காண்டல், குருவின் திருநாமம் செப்பல், குருவோடு இணங்கி இருத்தல், இவை முதலான பாக்கியங்கள் கிடைக்கப்பெற்றவர், ஸ்ரீமத் கணேசானந்த சுவாமிகள்.

இவ் விழாவில் கலந்துகொள்ளும் அன்பர்கள் எல்லோருக்கும் இறையருளைச் சிந்தித்து எமது உளமார்ந்த நல்லாசிகளையும் வழங்குகின்றோம்.

என்றும் வேண்டுவது இன்ப அன்பே,

ஸ்ரீ ல ஸ்ரீ குருமகா சந்நிதானம்

ஓம்

குருவே துணை

சனாதன தர்மம்



ஆத்ம சொரூபர்களே!

வணக்கம்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மதம் இந்து மதமாகும். ஆதி காலந் தொட்டே மனிதன் பூமியை பூமா தேவியாகவும், நீரைக் கங்காதேவியாகவும், நெருப்பை அக்கினி தேவியாகவும், இயற்கையையும் பஞ்ச பூதங்களையும் பயபக்தியுடன் தெய்வமாகவே வழிபட்டு வந்தான். இந்த இயற்கையை மனிதன் இன்றும் தெய்வமாக வணங்கி வருவது இந்து மதத்தின் சிறப்பாகும்.

இந்து மதத்தில்தான் இவ்வுலகம் காக்க தச அவதாரங்கள், 18 சித்தர்கள், 12 ஆழ்வார்கள், 63 நாயன்மார்கள் தோன்றினார்கள். மற்றும் ஞானிகள் மகான்கள் சங்கிலித் தொடர் போல இன்றும் அவதரித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

மனிதன் மாயையில் சிக்கித் தவிக்கின்றான். அதில் இருந்து விடுபட்டு இறைவனுடைய பாதாரவிந்தங்களில் நெருங்குவது தன் முக்கியமான குறிக்கோளாகும். இதைத்தான் நமது சனாதன தாமம் உணர்த்துகின்றது. இறைவன் ஒருவனே; அவனுக்குச் சூட்டப்பட்ட நாமங்கள் தான் வேறு. இறைவனை எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் எந்த ரூபத்திலும் எந்த நாமத்திலும் வழிபடலாம்.

நமது திருக்கோயில்கள் எல்லாம் சாலப் பழமையும் பெருமையும் வாய்ந்தன. அன்றைய காலத்து மன்னர்கள் நமது சனாதன தர்மத்தில் உள்ள உண்மையை உணர்ந்து கோயில்கள் கட்டுவதில் தமது காலத்தைச் செலவழித்தார்கள்.

மேலும் நமது சனாதன தர்மம் திருவருளை அடையக் குருவருள் தேவை என்பதனையும் உணர்த்துகின்றது. நாமரூபமற்ற இறைவன் பக்குவம் அடைந்தவர்களிடம் மானிட உருவம் தாங்கி வருகின்றது என்கிறது நமது மதம். மாணிக்கவாசகர் பக்குவம் அடைந்ததால் இறைவனே குருவடிவாக வந்தார் என்று வரலாறுகள் கூறுகின்றன.

பக்திமார்க்கமானாலும், யோக மார்க்கமானாலும், ஞான மார்க்கமானாலும் குருவின் அருள்பெற்றே இறைவனை அடைய முடியும் என்கின்றது புராணங்கள்.

மனம் எப்போதும் செம்மையாக இருக்க வழிநாடுங்கள், எல்லோரையும் அணையுங்கள், அன்பு வையுங்கள், பண்பாக நடவுங்கள், பழக்கவழக்கத்தில் உயர்ந்த நிலையை நாடுங்கள், சிறந்தவர்களாக இருங்கள், நல்ல நிலையை அடையப் பொறுமையாக இருக்க வேண்டும். இப்படித்தான் நடக்க வேண்டும் என நாம் எதிர்பார்ப்பது சரியல்ல. எல்லாம் நாம் நினைப்பதுபோல் நடக்காது. இறைவன் தன் கருணையை அனைவருக்கும் ஒரே விதமாகவே பொழிகிறான். உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்ற எந்த வேறுபாடும் இறைவனிடத்தில் இல்லை. தன்னை மறந்து தன்நிலை மறந்து இறைவனையே மனதில் பதிக்கும் நிலை மனிதனுக்கு வரவேண்டும. யாரிடமும் கோபம், பகை மனஸ்தாபம் எதுவும் வேண்டாம். வேற்றுமை, பழி வாங்கும் தன்மை, அகங்காரம், ஆணவம் அனைத்தையும் விட்டொழியுங்கள். எதையும் 'நா' அறிந்து பேச பழகிக்கொள்ள வேண்டும்.

கடவுள் எங்கும் நிறைந்த பரம்பொருள். உங்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளும் இருக்கின்றார். இந்த சனாதன தர்மம் உலகில் நிலைத்திட யுகங்கள் தோறும் அவதாரங்கள் அவதரித்த வண்ணமே இருக்கின்றார்கள். அவர்கள் மக்களுக்கு எடுத்துரைப்பதுடன் வாழ்ந்துகாட்டுகின்றனர். உண்மை ஒன்றே.

கிடைத்தற்கரியது இம் மானிடப் பிறவி. இப் பிறவியில் நாம் இவ்வுலகில் நீண்ட காலம் வாழப்போவதில்லை. கூடினால் 80 முதல் 100 வயதுவரை தான் வாழ முடியும். இக் குறிப்பிட்ட காலத்தில் உண்பதிலும், உறங்குவதிலும் உலகியல் விஷயங்களிலுமே நாம் கழித்துவிட்டால் இம் மானிடப் பிறவியின் பயன்தான் என்ன? இறையருளை எண்ணி அவனது திருநாமத்தை உச்சரிப்பதிலும் நம்மை அவன் மலர் பாதாரவிந்தங்களில் சரணடைந்து அர்த்தமுள்ள வாழ்வு வாழ்வதுதான் நமது வாழ்வின் நோக்கமாகும். அத்தகு வாழ்விற்கு நமது சனாதன தர்மம் சிறந்த வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் விளங்குகின்றது என்பது உறுதி.

எல்லாம் வல்ல அகிலலோகநாயகி சமயபுர, அம்பாளினதும், வெக்காளி அம்மனினதும் மாந்தளை முத்துமாரியம்பனினதும் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றோம்.

இறைவன் சேவையில்
**சுவாமி பிரேமானந்தா**



# வாழ்த்துரை

கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தின் ஸ்தாபகர் வடிவேல் சுவாமிகள் சமாதியடைந்து ஓராண்டு நிறைவெய்தியுள்ளது. அதன் பொருட்டு மலர் வெளியிடப்படுவதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழும், சைவமும் வளரவேண்டும் என்ற நோக்குடன் 1952ம் ஆண்டு சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட மகாதேவா ஆச்சிரமத்தைக் கிளிநொச்சி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் தரிசிக்கக் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன். சைவத்திற்குப் பேராபத்து நேருமோ என அஞ்சப்பட்ட வேளையில் இவ்வாச்சிரம சேவை பெருந்துணை புரிந்தது யாவரும் அறிந்ததே.

சுவாமிகளின் பணியைத் தொடர்ந்து தவத்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகள் ஆற்றிவருகின்றார்கள். இவ்வரிய பணி பல்லூழி காலம் தழைத்தோங்க எல்லாம் வல்ல முழுமுதல் தெய்வமாகிய சிவபெருமானை இறைஞ்சுகிறேன்.

**கா. மாணிக்கவாசகர்**
அரச அதிபர்

**திரு. கா. மாணிக்கவாசகர்**
அரசாங்க அதிபர்,
**கிளிநொச்சி.**

உ
பிள்ளையார் துணை
குருவே துணை

# நூன் முகம்

''ஒன்றாய் இருதிறமாய் ஓரைந்தாய் ஐயைந்தாய்
அன்றாதியின் மீட்டும் ஐந்தாய் அளப்பிலவாய்
நின்றாய் சிவனே யிந்நீர்மையெலாம் தீங்ககற்றி
நன்றாவிகட்கு நலம் புரிதற்கே அன்றோ.''

(கந்தபுராணம்)

அகண்ட பரிபூரண சச்சிதானந்த பிழம்பாகிய இறைவன் ஓர்
உருவம் ஒரு நாமம் அற்ற பரம் பொருள் ஆவார். பிறப்பதும்,
இறப்பதும் பெயரும் செய்கையும் அவர்க்கு இன்று. அநாதி மல
முத்தபதியாகிய அவரே சர்வலோக நாயகன். இவ்வாறாய
கடவுட்கு மேலே கூறிய இருபத்தைந்து முதலாய கேவலவடிவங்
களும் பின்தரும் இலிங்கமுதலாக சிஷ்யபாவம் ஈறாகவுள்ள அட்
டாட்ட மூர்த்தங்கள் எனப்படும் அறுபத்து நான்கு லீலாவடிவங்
களும் எதற்கு என்ற வினா எழலாம். என்னேயெனின் ''அரிது
அரிது மானிடராதல் அரிது'' என்ற நல்லிசைப் புலமை மெல்லி
யலாரின் வாக்கின்படி ஆன்மாக்கள் தாங்கள் ஜென்மஜென் மாந்
திரங்களில் செய்து கொண்ட புண்ணிய மேலீட்டினால் மண்ணுல
கில் மானுடராய்ப் பிறக்கின்றனர். அவ்வாறு பிறந்தவர்களாகிய
நாமெல்லோரும் மேலும் மேலும் பிறந்து இறந்து உழல்வதே அன்றி
இப்பிறவிப் பெருங்கடலை நீந்திக்கடக்க முனைவதில்லை.

''பிறவிப்பெருங் கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்''

என முழங்குகின்றது தெய்வத் திருமறை; இறைவனடி சேராது
பிறவித் துன்பத்தே அழிந்து வாடி வருந்திக் கரைகாணாது அல்ல
லுறும் ஆன்மகோடிகளைப் பரங்கருணைத் தடங்கடலாகிய ஈஸ்வரன்
தமது பாத நீழலிலே சேர்த்தற்காகவே மேற்கூறிய வடிவ பேதங்
களாய்ப் பல திருவிளையாடல்களைக் கொண் டுய்வித்தாரெனக்
கொள்க. இவைகளை நன்குணர்ந்து எமது இந்த உடம்பாகிய
தனுவும் அதன் கணுள்ள கரணங்களும் நாம் வாழும் இப்பூமியும்
ஏனைய போகங்களும் எனவே தனுகரணபுவன போகங்க
ளென்றின்னனயாவும் அழிந்துபடுவன என்றும், அழியாப்பொருள்



ஒன்று உண்டு அதுவே தான் பரம்பொருள் என்ற திட
சித்தம் கைவரவேண்டும். அதன் மேல் இயமம். நியமம், ஆசனம்,
பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி
என நூல்களில் விதித்துள்ளபடி ஒழுகுதல் வேண்டும். மேலே
நுவன்றன அட்டாங்க யோகங்கள் எனக்கூறப்பெறும். இவ்வழி
யில் சித்தி அடைந்த அடியார்கள் இறைவனால் ஆட்கொள்ளப்
பெறுகின்றனர். ஆன்மபதியாகிய இறைவன் மேலேகூறியபடி பரி
பக்குவமடைந்த நிலைகண்டு அருட்குரு மூலமாகவோ அல்லது
தாமாகவோ இப்பூவுலகில் மானுடச்சட்டை தாங்கிவந்து திருவடி
தீட்சை செய்து ஈற்றில் அந்தமில் இன்பத் தழிவில் வீடாகிய
முத்திப் பேற்றை அருளுவர்.

இவ்வாறான மகானுபவர்களே தாம் வாழ்ந்த காலத்து மக்
களை உய்விக்கவல்ல ஞானிகளும் சித்தர்களுமாய்த் தொன்று
தொட்டு வாழ்ந்து, தொண்டுபூண்டு வந்துள்ளனர். இவர்களா
லேயே வையகம் வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றது. மாநிலத்தில்
மாமழை பொழிகின்றது. மாந்தர்மயக்கொழிந்து ஆன்மீக அறிவு
பெற்று பிறவிப்பயனை எய்துகின்றனர். அவர்களின் பெருமை இத்
துணைத்தென்று எம்மால் கூறும் தரத்தன்று.

''அடியார்க்கு எளியன் தில்லைச் சிற்றம்பலவன்''

என்பது தில்லைக் கூத்தப்பிரானின் திருவாக்கு;

நிற்க, மேலே கூறிய ஞானிகள் பரம்பரையிற் தோன்றியவரும்
நீர்வளமும் நிலவளமும் சான்ற கிளிநொச்சியில் உள்ள உருத்திரபுர
நகருக்கு அவர் தம் குருநாதரால் யாழ் நகரினின்றும் வருவிக்கப்
பெற்ற மகானுபவரும் இவ்விடம் வந்து ஜெயந்திபுர நகரின் கண்
அஞ்ஞானம் அகலப்பெற்று அருளொளியும் மலர்ந்து விளங்கவே
தமது குருநாதரின் நினைவறாது ஸ்ரீ மகாதேவ ஆச்சிரம மென
நாமம் புனைந்த ஆச்சிரம நிறுவன மொன்றை ஸ்தாபித்து அளப்
பரிய தொண்டுகள் புரிந்தவரும் ஈழநாட்டிலன்றித் தாய்நாடாகிய
பாரதத்தினின்றும் ஆன்மீகத் துறைபோகிய பலபெரியார்களும்
ஞானிகளும் உவந்து வந்து உரையாடலால் உள்ளத்தையும்,
இன்னமுதூட்டுவதால் உடலையும் நன்கு போஷித்தவரும் அயல்
கிராமங்கள் தோறும் சென்று சென்ற இடமெல்லாம் மக்கள் வழி
பாட்டிற்குரிய ஆலயங்களை அமைத்து வழிபாடுகள் செய்ய வழி
வகுத்தவரும், சிறார்கள் பயில்வதற்குரிய கல்விச்சாலைகள்
அமைத்துச் சைவத்திற்கும் தமிழிற்கும் தம்மாலான பணிசெய்த
தன்றிக் காடுகள் கழனிகளாகவும் பொன்விளையும் பூமிகளாகவும்

அறப்பணிகள் அளவில ஆற்றியவரும் பிரமோதூத வருடம் ஆனித்
திங்கள் ஆயிலியத்தில் மகாசமாதி அடைந்தவருமான தவத்திரு வடி
வேற்சுவாமிகளே இம்மலர் வெளியீட்டிற்கு காரணகர்த்தர் என்பது
வெள்ளிடைமலை இதற்கெல்லாம் சிறிதும் ஓயாது அயராது உழைத்த
ஸ்ரீலஸ்ரீ தவத்திரு கணேசானந்த மகா தேவ சுவாமிகளின் அருந்
தொண்டு எவராலும் மறக்கற் பாற்றன்று.

தற்போது மகாதேவ ஆச்சிரம நிர்வாகத் தலைமை பூண்ட
குருமகாஜீ அவர்களே மேற்கூறிப் போந்த மலர் ஒன்றை வெளி
யிடக் கருதி அன்பர்கள் பலரின் வேண்டு கோட்படியும் அடியார்
களின் வேணவாவையும் நிறைவேற்றுதல் காரணமாகக் கட்டுரை
களை வழங்குமாறு தொடர்பு கொண்டுள்ளவர்களைக் கேட்டுள்
ளனர். எனவே அன்பர்கள் அனுப்பிய கட்டுரைகளும் கவிதைகளும்
நூலில் அடக்குதற்கரியவாயின. ஆதலால் எல்லோர் மனமும் களிகூர
யாவற்றையும் சேர்த்து ''மலரும்மாலையும்'' என மகுடமிட்டு எம்
பணியை ஏற்புடைத்தாக அமைக்கலாமா அமையுமா என வினவு
மிடத்து தற்போதைய காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப எழும்
குறுக்கீடுகள் பலவாதல் பற்றி இயலாதெனயாவரும் ஒப்ப முடிந்தது.
எனவே விடயதானம் செய்த அன்பர்கள் எல்லோரினதும் ஆவலை
யும் பூர்த்தி செய்ய முடியாததால் அவர்கட்கு மேல்வரும் மலரில்
முன் இடந்தரக் கடமைப்பட்டுள்ளோம்.

தெய்வ மணங்கமழும் இம்மலரை நுகருமிடத்து வாழ்த்துரை
களை வருமுறை நெறியே வகுத்துள்ளோம். அவை அவ்வப் பெரி
யார்களின் உள்ளத்தினின் றெழுந்த உணர்வுகளுடன் உதிர்ந்த
முத்துக்களே யாமெனக் கொள்ளற்பாலது. மேலும் சுவாமி அவர்
களது வரலாற்றோடு கூடிய சரித சாராம்சத்தை இலகுவாய்
இணைத்து இன்சுவைத் தமிழில் திருவிரட்டை மணிமாலை என்ற
கவிதை அமைப்பில் வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் மீள
வரயாத்துள்ளனர் ஓர் அன்பர். அவை யாவராலும் நோக்குதற்
குரியன. இவ்வாசிரியர் சுவாமிகளோடு பன்னாட் பழகிய பண்பினர்
போலும் மிளிர்கின்றது. மற்றும் இறைபணியிலும் தொண்டுகளிலும்
சிறந்து விளங்குபவரும் ஆத்மசோதி ஆசிரியரும் ஆன்மீகச் செல்
வருமான பெருந்தகை தந்துள்ள செவ்விய செஞ் சொற்சுவைகள்
தற்போதைய நிலையில் மக்களுக்கு இன்றி அமையாது வேண்டப்
பெறுவதாயும் அவைகளைச் சிந்தித்துத் தெளிந்து செயல்பட வேண்
டியது அவர்கள் கடமை என்பதை வலியுறுத்துவதாயும் அமைந்
திருத்தல் பற்றி அவ்விடயம் அன்பர்கட்கு ஓர் விழிப்புணர்ச்சியைக்
கொடுக்கும் என்பதற்கு ஐயமில்லை.



சமாதிக் கோயில்கள் என்ற மகுடத்தில் வந்த சரிதைத்
தொகுதிகளுக்கு முன்னெவ்வித வரலாற்றுச் சான்றுகளும் இலதாய்ச்
சில அமைதல் பற்றிக் காலப்பகுப்பினுட்படுத்தல் எவர்க்கும் அரிதா
யிருப்பினும் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்னும் உத்திக்
கமையவும் ''கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்ப
மொழிவதாம் சொல்'' என்ற பொய்யில் புலவன் வாக்கின் படி
அமைந்துள்ளதன்றியாவற்றையும் தேடிக் கூட்டிக் கோவையாய்த்
தந்துள்ள அவரின் பெருமுயற்சி பாராட்டற்குரியதாகும். அழிந்தும்
மறைந்தும் மறந்தும் போன வரலாறுகளோடு கூடிய ஞானிகளின்
கதைகள் மக்கட்கு ஊக்கத்தையும் நல்லுணர்வையும் ஆன்மீக
நாட்டத்தையும் அளிப்பதாக.

குருநாதரான சுவாமிஜீ அவர்கள் வாக்கினின்றும் உதிர்ந்த
இதழ்களோ பக்திக் கடலிற் படிவித்து பரவசம் ஊட்டுவன. அவர்
அநாதிமுத்தசித்தபதியாகிய இறைவனோடு நேர் நின்று காண்
பதும் கதைப்பதுமானவும் நயப்பதும் நகைப்பது நிகரவும் புகழ்
வதும் போற்றுவ புரையவும் கலந்து கரந்து சேறல் போலவும்
காட்சி தருகின்றன. இதனைத் துருவித் துருவிச் சிந்திக்கும் அடியார்
களின் உள்ளத்தை ஊடுருவிப்பாய்ந்து பக்தி வெள்ளத்தைப்
பெருக்கும் என்பதற்குச் சந்தேகம் இல்லை.

ஆச்சிரமத்தையும் அடிகளாரையும் போற்றி எழுதிய அன்புப்
பெரியார் சுவாமிகளது வரலாற்றினை யாற்று நீர்போன்று
''தண்ணெனன்றொழுக்கமும் தழுவ'' அமைத்ததன்றி மிகுந்த ஆராய்
வோடு அரும் விடயங்களையும் அவரோடு ஒப்ப வாழ்ந்த ஞானி
களையும் தொடர்புபடுத்தி முதுமொழிகள் தந்து இணைத்து சுவாமி
அவர்களின் அருட் பணிகளையும் தெய்வீக வாக்குகளையும்
கருணை நோக்கையும் சீரிய சிவமயமான தோற்றத்தையும் தெள்ளத்
தெளிந்த அழகியநடையில் அளித்துள்ளமை போற்றுதற்குரியது.

வாழ்க திரு. வடிவேற்சுவாமிகள் என்ற தலையங்கத்தின் கீழ்
வந்த உரையில் வாழ்தல், வாழ்வித்தல் என்பதன் பதப்பொருள்
களை ஆசிரியர் உதாரணங்கள் கொண்டு விளக்கித் தானது நாட்டித்
தனாது நிறுத்தல் என்னும் உத்திக்கமையவும் பசுமரத்தாணி
போல் பதிய வைத்ததன்றி வாழ்க என ஆரம்பித்து ஈற்றிலும்
வாழ்க என்றே நிறைவு செய்தது திருவருட் குறிப்பேயாமென்க.

சுவாமிஜீ அவர்களைக் குருமணியாகக் கொண்டு வடித்த பாக்
களும் ஏனைய உரை நடைகளும் அவர் மனத் தகத்தடங்காது மீறி

எழுந்த குருபக்தியையும் அன்பின் பெருக்கையும் திடவைராக்கிய சிந்தையையும் மனையின் கண் ஏற்றிய தீபம்போல கல்வயல் ஆசிரியர் அவர்கள் உரைகள் விளக்குவனவாகின்றன. நன்றி பலப் பல ''பாயிரமில்லது பனுவலன்றே'' என்ற மரபுவழிக் கோடலே கொள்கைய தெனினும் ''முற்றமொழி குறின் முடிவில ஆதலின்'' ஒவ்வோர் இதழ்களையும் ஒப்ப நோக்குதலும் ஆராய்தலும் மலருக் காதலின் சாலாதெனக்கொள்ளற்க.

மேலும் 'குருவே சிவமெனக் கூறினன் நந்தி, என்ற மகுட நாமத்தில் யாத்து நல்கிய தற்போதைய ஆச்சிரமத் தலைவரான ஸ்ரீலஸ்ரீ தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள் வாக்குகளைத் தலைதாழ்ந்து ஏற்பதே கடனாக, ஆரம்ப நிகழ்ச்சிகளையும் அதன் பின் சுவாமிஜீ அவர்களின் போதனையும் சாதனையும்' ஆச்சிரம நிகழ்ச்சிகள், நித்திய நைமித்திய பூஜைகள், சுவாமிகளின் குரு பாரம்பரியம் என்ற பந்திகளாக அமைத்து நிறைவுரை, வாழ்த் துரைகளோடு நிறைவுறுகின்றது அது. எனவே மேலும் அவர்களது வாயிலாக உள்ள சில குறிப்புகளைத் தருகின்றோம். ஆரம்பகாலத் திருந்து ஆயிரத்துதொள்ளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டுவரை திருவாளர் த. நல்லதம்பி அவர்கள் செய்த தொண்டிற்கும் பணி களுக்கும் 'வான் செய்த உதவிக்கு வையகம் என்செயும்' என்ற படி அவர் தம் பணியை ஏற்று அவைகளைப் பிறழவிடாது மேலும் மேலும் உயர்வுடமையாக்குவதே எங்கள் எல்லோருடைய கடப்பாடு என்பதும் அவரே எங்கள் குருநாதரின் அணுக்கத் தொண்டனாக ஆலாலசுந்தரர் போன்று அமைந்து விளங்கினார் என்றும் அறியற்பாலது.

'ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்'

என்ற செந்நாப் போதகர் கூற்றுப்படி, குருநாதரால் தீட்சா நாமமும் நல்லாசியும் பெற்று பெரும்பேறு அடைய வேண்டிய நல் லார் இரு ஆண்டுக்கு முன் சொல்லேது பொருளேது ஒன்று மின்றி இறைவன் பாத நீழலை அடைந்தனர். ஆகவே அவர் தொட்ட பணிகளையும் எங்கள் குருநாதரோடு இயைந்து ஆற்றிய சேவை களையும் முன்னோரிடத்து கூறியாங்கு தொடர்ந்து எம் ஆச்சிரமம் நால்வர்க்கு நன்நெறி காட்டிய கல்லால நீழலாக அமைய வேண் டும் என்று அமலனை வேண்டுவோமாக.

இஃதன்றி தற்போதைய சந்நிதான தாபகர் தவத்திரு கணே சானந்த மகாதேவ சுவாமிகள் தமது குருநாதருக்கு செய்த ஆன்ம



ஈடேற்றப் பணிகள் ஒரு சிலவற்றை அவர் கருத்து ஒவ்வாதாயினும் அடியேனுக்கு வெளிக்கொணர வேண்டிய கடப்பாடு உண்டு. இதனால் அவர் பெருமையையோ அல்லது திறமையையோ உணர்த் துவதற்கன்று. அன்னார் பெற்ற பேற்றினைப் போற்றவும் அவர் காட்டிய வழி வாழ்ந்து கடைத்தேறவும் உதவுவதற்குமாமென்க. மறைவின் பின் தவத்திரு சுவாமி அவர்களே அணுக்கத் தொண்ட ராகவும் சீடர்களில் தலைமைத்துவம் பெற்றும் குருமகாஜீயின் அன்பிற்கும் அருளுக்கும் பாத்திரமாயுமிருந்தனர் என்றால் மிகை யாகாது.

'குறிப்பிற் குறிப்புணர்வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்'

என்பது தேவர் வாக்கு. அதன்படியே சுவாமிஜீ அவர்களின் குறிப்பறிந்து அவர்கள் எதையும் ஏவுதல் முன்னமே தெரிந்து வினையாற்றும் பெருந்தகை. வெளியே உஞற்ற வேண்டிய கருமங் கட்கும் அன்றி ஆலய பிரதிட்டைகட்கும் மன்றங்கட்கும் பரி பாலன சபைகட்கும் அருளுரை, அறவுரை, சமயச் சொற்பொழிவு, கதாப்பிரசங்கம் நிகழ்த்துமிடமெங்கணும் அழைத்துச் செல்வதும் அவரின் பெரும் பொறுப்பாகும். அஃதன்றி மெய்வருத்தம் பாரா தும் தமது உற்றார் உறவினர் உடைமைகள் யாவற்றையும் துறந் தும் அர்ப்பணித்தும் மக்கள் தொண்டே மகாதேவன் தொண் டெனக் கொண்டும் அவர்கள் தேவைகளையும் பூர்த்தி செய்வதே நம் கடமை என்றும் பரமாத்மாவாம் கண்ணபிரானிடத்து கர்ணன் யாசித்தது என்ன 'இல்லை என்றுரைப் போர்க்கில்லை என்றுரையா இதயம் நீ அளித்தருள் என. வேண்டியாங்கு நாமும் இரவலர். தொண்டர்கள் அன்பர்களுக்கும் அள்ளி வழங்கும் பண்பும் பொருந் தியவராய் திகழுகின்றார். ஆலயத்திற்கென்ன ஆச்சிரமம் என்றால் போதும் அவர் தம் கரங்கள் வாரி மாரிபோல் வழங்கும்.

இஃதன்றி வேதசாஸ்திரங்களையும் சமய நூல்களையும் படிக் கும் நேரமன்றி மிகுதி நேரங்களிலும் இரவு வேளைகளிலும் சடைச்செந்நெல் பொன்விளைக்கும் வயலினை அன்றும் இன்றும் அவரே

சிறப்புடன் நடுவதும் பருவஞ் செய்வதும்
அறுப்பதும் தொகுப்பதும் என்றின்ன பணிகட்

கெல்லாம் மூல காரணராக ஆண்டு நடாத்துதலன்றி அகப்புறப் பூசைகளையெல்லாம் விதி முறைப்படி உரிய காலங்களிலே செய்து

மக்கள் தெய்வசாந்நித்தியத்தைப் பெறவும் சமயாசார நெறியும் சன்மார்க்கமும் தழைத்தோங்கவும் சத்சங்கம் வளரவும் சைவம் பிரகாசிக்கவும் தேனினுமினிய தீந்தமிழானது சிறப்புறவும் அதுவுமன்றி ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தி மூன்றாம் ஆண்டு வரை இருந்தே நாட்டில் நிகழ்ந்து வரும் அசம்பாவித செயல்களால் அல்லலுறும் மக்கள் நாடு, வீடு, மனை, மக்கள், யாவரையும் பிரிந்து வருந்தி அநாதரவாய், அபலைகளாய், அலைந்து, உலைந்து திரிவதிலிருந்து மீளவேண்டி அயற் கிராமங்களிலுள்ள ஆலயங்களி லெல்லாம் விசேட பூசைகள் ஆராதனைகள் கூட்டுவழிபாடுகள் பாதயாத்திரைகள் என்பன தொடர்ந்து நடைபெற வேண்டுமெனப் பெருமுயற்சி எடுத்தும் அதனை தாமே நேரில் சிலசில ஆலயங்களுக் குச் சென்று வழிபாடுகள் பஜனைகளில் கலந்து மக்களுக்கு அருள் உணர்வும் ஊக்கமும் உண்டாகும் வண்ணம் உரையாற்றியும் மேலும் தமதகமாகிய ஆச்சிரமத்திலுள்ள தில்லைக் கூத்தப்பிரானாக விளங்கும் நடராஜப் பெருமானுக்கும் ஏனைய மூர்த்தி கட்கும் விசேட அபிடேகங்களும் பூஜையும் தேவார பாராயணமும் அஷ்டோத்தர சதநாமா வளிகளும் கிரமமாக ஓதியும் உலகசேமத்திற் காக உழைத்தும் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப் பணித்த மகானுபவரே ஆவர். அவர்களது பாதமலர் பூண்டுற்ற அருளாசியுடனும் வாழ்த்து மூடனேயே இம்மலர் நிறைவெய்துவ தாக.

ஆசிரியர்.

---

## அம்மன் சந்நிதி அமையலாயிற்று

உருத்திரபுரம் சிவன் கோவிலுக்கு அதிகாலையிலே பல அடியார்களுடன் கூடிச்சென்ற சுவாமிகள், அவ்வாலயத்துக்கு அருகிலுள்ள குளக்கட்டில் அமர்ந்திருந்து பகல் முழுவதும் தவம் செய்தார்.

மாலை வந்ததும் காட்டார்ந்த அவ்விடத்தில் தாம் இருந்து தோத்திரம் செய்த இடத்தைப் பார்த்தவாறு அம்பாள் சந்நிதி ஒன்று அமையவுள்ளது என்றுகூறிவிட்டு ஆச்சிரமத்துக்குத் திரும்பினார்கள்.

சில மாதங்கள் கழித்து, சுவாமிகள் குறிப்பிட்ட இடத் திலே குளத்தை நோக்கிய வாயில் கொண்ட அம்மன் சந்நிதி அமையலாயிற்று.

மகாதேவ ஆச்சிரம மலர், 1982

---



## இருபத்தைந்து கேவலவடிவங்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| சந்திரசேகரர் | திரிபுராரி | சண்டேசானுக்கிரகர் |
| உமாமகேசர் | சலந்தாரி | நீலகண்டர் |
| இடபாருடர் | மாதங்காரி | சக்கரப்பிரதர் |
| சபாபதி | வீரபத்திரர் | கயமுகானுக்கிரகர் |
| கல்யாண சுந்தரர் | அரியத்தர் | சோமாஸ்கந்தர் |
| பிக்ஷாடனர் | அர்த்தநாரீஸ்வரர் | ஏகபாதர் |
| காமாரி | கிராதர் | சுகாசீனர் |
| காலாரி | கங்காளர் | தக்ஷிணாமூர்த்தி |
| | | இலிங்கோற்பவர் |

## அட்டாட்ட மூர்த்தங்களாவன

| | | |
|---|---|---|
| இலிங்கம் | அர்த்தநாரீஸ்வரம் | தக்ஷயக்ஞவதம் |
| இலிங்கோற்பவம் | கஜயுத்தம் | கிராதம் |
| முகலிங்கம் | ஸ்வராபக்னம் | குருமூர்த்தம் |
| சதாசிவம் | சார்த்துலஹரி | அசுவாருடம் |
| மகா சதாசிவம் | பாசுபதம் | கஜாந்திதம் |
| உமாமகேஸ்வரம் | கங்காளம் | சலந்திரவதம் |
| சுகாசனம் | கேசவார்த்தம் | ஏகபாதத்திரிமூர்த்தம் |
| உமேசம் | பிக்ஷாடனம் | திரிமூர்த்திதிரிபாதம் |
| சோமாஸ்கந்தம் | சிம்ஹக்னம் | ஏகபாதம் |
| சந்திரசேகரம் | சண்டேசானுக்கிரகம் | கௌரீவரப்பிரதம் |
| இடபாரூடம் | தக்ஷிணாமூர்த்தம் | சக்கரதாருஸ்வருபம் |
| இடபாந்திகம் | யோகதக்ஷிணாமூர்த்தம் | கௌரிலீலாசமந்விதம் |
| புஜங்க லளிதம் | வீணாதக்ஷிணாமூர்த்தம் | விஷாபகரணம் |
| புஜங்கத்திராசம் | காலாந்தகம் | கருடாந்திகம் |
| சந்தியா நிருத்தம் | காமாரி | பிரமசிரச்சேதம் |
| சதா நிருத்தம் | இலகுளீஸ்வரம் | கூர்ம சங்காரம் |
| காளிதாண்டவம் | பைரவம் | மச்சாரி |
| கங்காதரம் | ஆயதோத்தாரணம் | வராகாரி |
| கங்காவிஜர்சனம் | வடுகம் | பிரார்த்தனாமூர்த்தம் |
| திரிபுராந்தகம் | க்ஷேத்திரபாலகம் | ரக்தபிக்ஷாப்ரதானம் |
| கலியாணசுந்தரம் | வீரபத்திரம் | சிஷ்யபாவம் |
| | அகோராஸ்திரம் | என அறுபத்து நான்காகும்: |

# நாம் கண்ட கர்மயோகி தவத்திரு வடிவேற்சுவாமிகள்

## கர்ம யோகம்

### ஆத்மஜோதி நா. முத்தையா

''கண்ணன் சொன்னான் கீதையிலே
கடமையைச் செய்வாய் பாரினிலே''

என்பது பாரதியார் வாக்கு. நாம் எல்லோரும் கர்மம் செய்யப் பிறந்தவர்களே. செய்யுந் தொழிலை பலனை எதிர்பாராது செய்தலும் செய்யுந் தொழிலை இறைவனுக்கு அர்ப்பணித்தலும் கர்ம யோகமாக்கும் வழிகளாகும்.

பகவத்கீதையானது இந்து மதத்தில் அனைவரும் ஒப்புக்கொண்டு மதிக்கும் நூல். அதை எல்லா சம்பிரதாயங்களைச் சேர்ந்தவர்களும் அங்கீகரிக்கிறார்கள். பகவத்கீதையினால் கேவலம் யாகாதி கிரியைகளுக்கு அதாவது வேள்வி மார்க்கத்துக்கு பிரதானம் குறைந்தது. இரண்டாவது துறவுமார்க்கம் ஒன்றே மோட்ச சாதனம் என்ற அபிப்பிராயமும் திருத்தப்பட்டது. வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்களை நடத்தியே தர்மத்தில் நிற்கலாம் என்ற உண்மையை கீதை நன்றாக ஊர்ஜிதப்படுத்தி விட்டது.

கர்மத்தின் மூலம் கடவுளை அடையுங்கால் அதற்குக் கர்மயோகம் என்று பெயர். கர்மசாதனம் செய்கின்றவர் கர்மயோகி. இம்முறையைக் கடைப்பிடித்தவர்கள் தொண்டர் என்றும் அழைக்கப்பட்டனர். பெரிய புராணத்திலே வரும் எழுபத்திரண்டு நாயன்மார்களும் கர்மயோகிகள். ஆனபடியினாற்தான் அதற்குத் திருத்தொண்டர் புராணம் என்று பெயர் வைக்கப்பட்டது.

இறைவனைத் தொழுகின்ற வகைகள் பலவுள. அவைகளுள் தொண்டு தலையாயது. ஏனென்றால் அது ஸ்தூலமாக எல்லார்க்கும் தென்படுகின்றது.

வேதத்தில் யக்ஞம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. யக்ஞம் அல்லது வேள்வியின் முக்கிய அம்சம் தியாகம். கீதா கீதா என்று இடைவிடாது சொன்னால் அது தாகி, தாகீ என்று ஆகும். தாகீ என்றால் தியாகம். கீதையின் உட்பொருள் தியாகம். அது கர்மயோகத்தின் வெளிப்பாடேயாகும்.

சுயநலத்தையும் ஆசையையும் விடுவதே வேள்வியின் சாரம்.
ஆகையால் வேள்வி பலவிதத்தில் செய்யக்கூடிய காரியம். இப்படிப்
பலவிதத்தில் செய்யப்பட்ட வேள்விகளுக்கும் வேதத்தில் சொல்லப்
பட்ட பலனுண்டு. ஆகையால் மோட்சத்தை விரும்புகிறவன் சகல
காரியங்களையும் வேள்வியாகவே செய்து விடுதலை பெறலாம்.
பற்றற்றுச் செய்யப்பட்ட தொழில் வேள்வியே யாகும்.

மனிதனுடைய வாழ்க்கை முழுவதும் ஒரு யாகம் என்று உப
நிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பிறர் நன்மையை உத்தேசித்து
பகவானுக்கு அர்ப்பணமாகச் செய்யப்படுவதற்கு வேள்வி என்று
பெயர். அவ்வாறு வேள்வியாகச் செய்யப்பட்ட தொழிலில் உனக்
கும் ஏதாவது நன்மை உண்டாயின் அதை வேள்வியில் மிஞ்சிய
பிரசாதத்தைப்போல் அனுபவிப்பாயாக. வேதங்களில் பலவித
வேள்விகள் விவரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம்
தொழில் செய்துதான் உண்டாகும். இதை உணர்தலே மோட்ச
மாகும்.

சாமக்கிரியைகள் கொண்டு செய்யப்படும் சாதாரண வேள்வி
யைக் காட்டிலும் ஞானத்தால் செய்யும் வேள்வி சிறந்தது. எத்
தகைய கிரியையும் ஞானத்தில்தான் முடிவு பெறுகிறது.

ஞானயக்ஞம் என்பது ஞானத்தால் செய்யப்பட்ட வேள்வி.
நெய் முதலிய திரவியங்களில்லாமல் ஞானம் என்ற திரவியத்தைக்
கொண்டு, செய்யப்படுவது ஞானயக்ஞம். அதாவது உலக வாழ்க்
கைக்கு வேண்டிய கடமைகளைப் பற்றற்றுச் செய்வது. எந்தக்
கருமம் செய்யினும் அக்கருமத்தின் பலனைப்பற்றி ஆசை கொள்ளா
மல் மனதை நிதானப்படுத்துவதே கருமத்தைப்பற்றிய ஞானம்.
இதனால் வரவர வேற்றுமையுணர்ச்சி கரைந்து சகல ஜீவன்களிலும்
தன்னுடைய ஆத்மா நிற்பதைக் காணுவான். அப்படியே எல்லா
ஜீவன்களும் பரமாத்மாவில் அடங்கி நிற்பதையும் காணுவான்.
இதைக்காண பற்றற்று வேலை செய்வதும் எளிதாகும். எந்தக்
கர்மம் செய்யும்போதும் அதைத் தூண்டும் நோக்கத்தை பரிசுத்தப்
படுத்திக் கொண்டோமானால் பாவமும், கருமபந்தமும் நம்மைச்
சேரா. இப்படிப் பரிசுத்த நோக்கத்தைக்கொள்ளச் செய்வது ஞானம்.

யோக முறையை உணர்ந்து தான் செய்யுங்கருமங்களில் பற்று
என்பதை வெட்டித்தள்ளி, தன்னைத்தான் ஆட்கொண்டோனைக்
கருமங்கள் கட்டுப்படுத்தமாட்டா.

வாழ்க்கையின் குறிக்கோள் எது என்பதை அறிந்து கொள்ள
வேண்டும். சுகசீவனம் பண்ணிக்கொண்டிருப்பது பலருக்கு வாழ்க்



கையின் குறிக்கோள் ஆகிறது. எப்படியாவது இன்புற்றிருந்தால்
போதும் என்பது அவர்களுடைய கருத்து. ஆனால் உண்மையில்
வாழ்க்கைக்கு அது குறிக்கோள் ஆகாது. ஏனென்றால் மனிதன்
மட்டுமல்ல, எண்ணிறந்த சிற்றுயிர்களும் தம்போக்கில் பெரிதும்
இன்புற்றிருக்கின்றன. மேலாம் பிறவியாகிய மானுடப்பிறவியை
எடுத்துள்ளவர்களுக்கு ஞானத்தைப்பெறுவது ஒன்றே வாழ்வின்
நோக்கமாகும்.

இன்பமயமான வாழ்க்கை வாழ்வதற்கு எளியவழி என்ன தெரி
யுமா? உயிர்க்குலத்திற்குப் பணிபுரிதலாகும். எல்லா உயிர்களிடத்
திலும் அன்பு காட்டவேண்டும். எங்களை நாங்களே தூய்மைப்
படுத்திக் கொள்ளவேண்டும். தியானம் செய்யவேண்டும்.

இதை எங்கிருந்து கொண்டும் செய்யலாம். இதற்காக உத்தி
யோகத்தை விடவேண்டாம். தொழிலையோ குடும்பத்தையோ
துறக்கவேண்டாம். வேண்டியதெல்லாம் நம்முடைய கண்ணோட்
டத்திலே தேவையான அளவு மாறுதல் மட்டுந்தான். நம்முடைய
ஆணவத்தை விட்டுவிடவேண்டும்.

இறைவன் எங்கும் இருக்கிறான். அவனுடைய விருப்பத்தை
நிறைவேற்றும் கருவியாக நான் செயல்பட்டு வருகிறேன். அவனு
டைய கரங்களிலே நான் பாதுகாப்பாக இருக்கின்றேன் என்ற
பாவனையை, இதயத்தில் வரவழைத்துக்கொண்டு வாழ்க்கையை
நடத்தவேண்டும்.

உயிர்களின் பொதுநலத்துக்காகவே எந்தக் காரியத்தையும்
செய்துவர வேண்டும். அப்படிச் செய்து வருபவர்தான் தம்முடைய
காரியங்களைச் செய்வதில் உண்மையைக் கடைப்பிடித்து வருபவர்
ஆவார். தவம்செய்து வருபவரும் ஆவார். மற்றவர்களெல்லாம் தம்
சுயநலத்துக்கு ஆசைப்பட்டு தீமைகளைச் செய்து வருபவர்கள்
ஆவார்கள்.

ஒருவன் சுயநல நோக்கமும் ஆசைப்பற்றும் நீக்கிக்கொண்டு
உலகம் முழுவதும் ஒன்றே என்றும் ஞானத்தை அடைந்துவிட்ட
பின் சகல லௌகிக கருமங்கள் செய்துகொண்டே இருப்பினும்
அவன் சந்நியாசியாவான், கர்மத்தைப் பற்றிய ஞானத்தை
நாம் அடைந்த பின் சந்நியாசத்திற்கும் கர்மயோகத்துக்குமுள்ள
வேற்றுமை ஒழிந்துவிடுகிறது. ஞானமும் கர்மமும் சேர்ந்தால் கர்ம
யோகம் .

செய்கையில் தனக்கென்று பலனை எதிர்பாராமல் செய்ய வேண்டியதைச் செய்வோனே துறவி. யோகியும் அவனே. தீயை வளர்க்காதவனும் கிரியைகளை விட்டவனுமே சந்நியாசி என்று எண்ணுவது தவறு.

நியமிக்கப்பட்ட கர்மத்தை இது செய்தற்குரியது என்று செய்து, அதன் பலனைப் பற்றிய எண்ணத்தையும் சுயநலத்தையும் ஒருவன் விட்டுவிடுவானாயின் அந்தத் தியாகமே இதுகாறும் கூறியுள்ளவற்றால் கர்மயோகத்தையும் அதன் சாதனைகளையும் அதனோடு இயைந்துள்ள சந்நியாச யோகங்களையும் பார்த்தனுக்குப் பரந்தாமன் உபதேசங்களாக உள்ள இவைகளை எல்லாம் எங்கள் கிளிநொச்சியிலுள்ள ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரம ஸ்தாபகரும் குருமகா சந்நிதானமாய் அமர்ந்து மகாசமாதியை அடைந்த தவத்திரு வடிவேல் சுவாமிகள்

'நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு'

என்பதற்கிணங்க தம்மிடத்து அருள்ஞானம் பெறவரும் அடியார்கள் தொண்டர்கள் பக்தர்களுக்கெல்லாம் அள்ளி அள்ளி வழங்குவார்கள். அதன் ஒரு சிறு பகுதியே மேற்கண்ட பகுதியாகும். எனவே அவரது இந்த முதலாவது ஆண்டு விழாவிற்கு அடியேனால் சேர்க்கப்பெறுவதுடன் அன்னாரின் அருட்கருணை யாவர்க்கும் அமையுமாறு பிரார்த்திக்கின்றேன். மேலும் சுவாமி அவர்களுடைய அருளொளி கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் அல்ல மலைநாடுகளிலும் பரந்துள்ளது. அளவற்ற பல சமயச் சொற்பொழிவுகளையும் பேருரைகளையும் நிகழ்த்தி மலையக மக்களாலும் போற்றப்பெற்றனர். இன்னும் சுவாமி அவர்கள் தமது தீர்க்கதரிசனத்தினால் தற்போது சந்நிதானத்தின் தாபகராயுள்ள தவத்திரு கணேசானந்த சுவாமி அவர்கட்கு பீடாரோகண விழாவெடுத்து அவரையே ஆச்சிரம குருவாக்கி தம்முடைய அருளையும் ஆசியையும் வழங்கியுள்ளனர். எனவே அவரது ஆசியையும் அருளையும் அருமையையும் பெருமையையும் இத்துணைத்தென்று எம்மால் எடுத்துக்கூற இயலாதாயினும் அவரே எம்மையும் அடியார்களையும் அன்பர்களையும் தொண்டர்களையும் என்றும் எப்பொழுதும் காப்பவராவர். அன்னாரின் திவ்யதிருவருள் பொலிந்து விளங்குவதாக.



# வாழ்க திருவடிவேற் சுவாமிகள்

மு. கந்தையா B. A.
ஏழாலை மேற்கு,
சுண்ணாகம்.

வடிவேற் சுவாமிகள் வாழ்க என்பது நமச்சிவாய வாழ்க என்பது போலாகும். நமச்சிவாய வாழ்க என்பது நமசிவாய என்ற ஐந்தெழுத்துக்குத் தீர்க்காயுள் வேண்டுவதாகாது. இந்த ஐந்தெழுத்தாலும் குறிக்கப்படும் ஐந்து பொருள்களின் தொடர்புணர்வாகிய மெய்ஞ்ஞானம் நம் உள்ளத்தில் நீங்காதிருக்க என்பதே அதன் தாற்பரியம். மாணிக்க வாசக சுவாமிகள் தான் ஓர் ஏழைத் தொழும்பனாயிருந்து கொண்டு எத்தனையோ கால மெல்லாம் முயன்று பெற்ற அந்த மெய்ஞ்ஞான இன்பம் எல்லோர்க்கும் ஆகட்டும் என்ற கருணையால் இவ்வாறு வாழ்த்தியுள்ளார்.

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பது தானே அவர் போல்வார் நிலை. மேலே குறித்த ஐந்தில் ந-திரோதானம், ம-மலம், சி-சிவம், வ-பராசக்தி, ய-உயிர், இவற்றில் திரோதானம் மூலம் உயிரை மலத்தில் தொடர்புபடுத்தி உலகில் வாழ்விக்கும் சிவமே மீள அதனைப் பராசக்தி மூலம் விடுவித்து தன்னோடு சேர்த்துக் கொள்ளும் என்ற மெய்ஞ்ஞான விளைவுண்டு. அதனை அனுபவிக்கும் இன்பக்களி மாணிக்க வாசகரை வாழ்த்த வைத்திருக்கின்றது.

வடிவேற் சுவாமிகள் வாழ்க என்பதும் சுவாமிகளுக்குத் தீர்க்காயுள் வேண்டுவதாகாது, சுவாமிகள் தமது உருவினாலுந் திருவினாலும் நம்மவர்க்குப் பயன்பட வாழ்ந்த வாழ்வும் தமது உபதேசங்களாலும் பரோபகாரச் செயல்களாலும் நம்மவரை வாழ்வித்த வகையும் நம்முள்ளத்தில் என்றைக்கும் நீங்கா நினைவாக நின்றொளிர வேண்டும் என்பதே அதன் தாற்பரியம்.

இத் தொடர்பில் வாழ்த்தல் என்றால் என்ன? வாழ்வித்தல் என்றால் என்ன என்றவினா எழும். இவற்றுக்குச் சுருக்கமான விடையின் வருமாறு அமையும். வாழ்தல் என்பது மெய்ப்பொருளை

வழிபட்டொழுகுதல், வாழ்வித்தல் என்பது பிறரும் அங்ஙனம் ஒழுக வழிப்படுத்துதல் என்னல் பொருந்தும்.

உண்டுடுத்துச் சுகித்திருத்தலே வாழ்வு என்றால் கட்டடங்களும் வாங்கு மேசைகளுந்தான் பாடசாலை என்பது போன்ற ஒரு போலி விளக்கமாயிருக்கும். நல்லாசிரியரிடம் நன் மாணாக்கர் கற்றுத் தேறுதல் இல்லையேல் பாடசாலை இல்லை என்பதே அர்த்தம். அதேபோல் உண்டுடுத்துச் சுகித்திருக்கும் சூழ்நிலை நன்கனம் இருந்தும் வழிபட்டு ஒழுகுதல் இல்லையேல் வாழ்தல் இல்லை என்பதே அர்த்தம்.

அதேபோல் நன் கனம் உண்டுடுத்துச் சுகித்திருக்கும் வசதிகளைக் கூட்டுவித்தலே வாழ்வித்தல் என்பதும் ஒரு பற்றாக்குறை விளக்கமாயேயிருக்கும். வழிபட்டொழுக வழிப்படுத்தப் படாவிடத்து வாழ்வித்தல் இல்லை என்பதே அர்த்தம்.

ஆனால் கட்டிடம் தளபாடங்கள் படிப்பார்க்கு மழைவெயில் காற்றுக்களால் படிப்பு தடை படாதிருக்க உதவுவது போல உண்டுடுத்துச் சுகித்திருக்கும் சூழ் நிலையும் வழிபட்டொழுகுதற்கும் பிறரை வழிப்படுத்துதற்கும் உதவுதல் தப்பாதாகும்.

இங்ஙனம் விளங்கிக் கொள்ள வேண்டிய யதார்த்த பூர்வமான வாழ்தல் வாழ்வித்தல்களில் நாம் கண்ணாரக் கண்ட விளைவுகளே வடிவேற் சுவாமிகளின் சுவரூபம். அது எம்முளத்தில் நீங்காதிருக்க வேண்டிய தொன்று.

இன்றைய கிளிநொச்சியின் சமய சமூக கல்வி பொருளாதார விளக்கத்தில் சுவாமிகளின் வாழ்தல் வாழ்வித்தற் பண்புகள் கலந்தொளிரக்காணுதலில் மகிழ்ச்சி உண்டு.

இணுவில் பெரிய சந்நியாசியார் அருளாசியாற் பிறந்து பிறக்க முன்னமே அவரிட்டபெயரே பெயராகக்கொண்டு பிறந்த அன்றே இவன் சம்சாரி ஆகான் என சோதிட ரீதியாக ஊர்ஜிதம் செய்யப்பட்டுக் கந்தர்மடம் வேதாந்த மடத்து மகாதேவசுவாமிகளின் ஞான வாரிசாக வளர்ந்து கொழும்புத்துறை யோக சுவாமிகள் கிளிநொச்சியின் அன்றைய தேவையை முன்னிட்டு நீ கிளிநொச்சிக்கு போ என ஆணையிட அதன்வழியே வந்து சுவாமிகள் இங்கு தங்கிய செய்திகள் விரித்து விளங்க வேண்டியவைகள்.

யோக சுவாமிகளோடு கொண்டிருந்த நெருக்கமான உறவு காரணமாக எழுந்தது சிவதொண்டனும் சிறுத்தொண்டனும் என்ற



சரித்திர முக்கியத்துவமான சம்பாஷணை யோக சுவாமிகளைச் சிவதொண்டனாக வைத்து அவர்க்கெதிரில் தன்னது சிறுத்தொண்டனாக அமர்த்திச் சுவாமிகளே எழுதியது அச் சம்பாஷணை. கிளிநொச்சியில் இன்று காணும் சமய கலாசார விருத்தியின் அந்தரங்கத்தை அறியின் அதில் வைத்தன்றி அறிதல் இயலாது.

கரைச்சி மாவட்டப் பாடசாலைகள், சிவாலயங்கள், கிளிநொச்சி ஆதார கல்விக் குருகுலம், உருத்திரபுரம் புராதன சிவாலய வெளிப்பாடு ஏன் ஓரளவில் அப்பகுதி குடியேற்ற விருத்தி விவசாய விருத்தி கூடச் சுவாமிகளின் சந்நிதி விசேடத்தால் விளைந்த விளைவுகளே.

சுவாமி ஒரு செல்வனோ சொத்துரிமையாளனோ அல்ல. அரசியற் செல்வாக்கோ ஆளடுக்கணியோ உள்ளவரல்ல. ஆகத்திர அவர் பாலித்தது ஆன்மீகத் தூய்மை ஒன்றே ஒன்று தான். அவருடைய விபூதிப் பொலிவிலும் சிரிப்பொலியிலும் பேச்சொலியிலும் அது பிரகாசித்துக் கொண்டிருக்க ஐம்பது வருடகாலமாக கிளிநொச்சியில் ஆகவேண்டிய யாவும் ஆகியுள்ளன. அத்தூய்மையின் ஒளியில் ஆயிரம் ஆயிரம் பேர் நல்வாழ்வு பெற்றிருக்கிறார்கள். இத்தூய்மை பற்றிய நினைவு எம்முளங்களில் என்றென்றும் வாழ்க.

## சோம்பல் மிகக் கெடுதி

உண்மையை உணரும் வரை வேலையைச் செய்து கொண்டேயிருத்தல் வேண்டும். அறிந்த பின் விட்டும் விடலாம், செய்தும் இருக்கலாம். சோம்பல் மிகக் கெடுதி, வேலையில் ஞானம் இல்லை. வேலையைச் செய்யும் மனப்பாங்கிற்றான் ஞானம் உண்டு.

காலத்துக்குக் காலம் தோன்றிய ஞானிகளும் ஏனைய பெரியோரும் ஏதோ சிலவெல்லாம் கூறிச் சென்றனர். ஆனால் அது அதாக, என்றும் அறிய முடியாததாக, புதிதாக, புதிராக இருக்கிறது,

எத்தந்திரத்தில் தேடிப் போனாலும் அவரவர்க்கு அது அத்தந்திரத்தில் மறைந்து நிற்கும்.

உள்ளே பார்க்க இன்பம்; புறத்தே பார்க்கத் துன்பம். அத்துன்பத்துக்குள்ளும் அவ்வுண்மைப் பொருள் இருக்கிறது.

மாயப் பிரபஞ்சம் என்றும் இடையறாது மாறிய வண்ணம் இருக்கிறது. மாறாது இருந்துகொண்டு மாற்றங்களைச் செய்விப்பதுதான் உண்மைப் பொருள்.

— யோக சுவாமிகள்

# சுவாமிகளின் அருட்பணி தொடரட்டும்

தமது அருள் வாக்கால் அருள் நோக்கால் அருள் நெறியை வளரச் செய்த எங்கள் யோகர் சுவாமிகள் தமது அருள் ஆணையால் அருளாளர்கள் சிலரை அருட் பணியாற்றவென ஆங்காங்கு அனுப்பி வைத்தார்கள்.


இலங்கையில் வன்னிப்பிரதேசத்தில் அருட்பணி யாற்றிட அனுப்பிவைக்கப்பட்டவர்களுள் சமாதிநிலை எய்திய வடிவேல் சுவாமிகளும் ஒருத்தராவார். வடிவேல் சுவாமிகள் சிந்தித்து எல்லாம் சிவபூரணமாக வந்தித்து வாழ்த்தி வணங்கி வந்தவர்கள்.

வடிவேல் சுவாமிகள் தொட்டபணிகள் துலங்கின. துயர் துடைக்க உதவின. சுவாமிகள் விட்ட பணிகள் தொடரப்படவேண்டும். விரிவு படுத்தப்படவேண்டும்.

அருள் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் காலத் தில் இவற்றை எய்திட முடியும் என்ற நம்பிக்கை எங்கள் ஒவ்வொருத்தர் இதயத்திலும் நிறைந்திட வேண்டும். நாமும் செயற்பட வேண்டும்.

அன்பே சிவம்

க. கனகராசா J. P.
உரிமையாளர்,
மில்க்வைற் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.



குருநாதர்

அன்னை
குருபரன் பாதந்துணை

# குருநாதரின் திருவாக்கிலிருந்து உதிர்ந்தவை

சீரார் திருமுறை செல்வச் செழுந்தமிழ் நூல் விரித்தாய்
பேராயிர முடைப்பெம்மான் பெரும்புகழ் பேச நிற்பாய்
ஓராயிரம் யுகம் உன் புகழ் ஓங்கி உயர்வுபெற
ஆராவமு தின்னடி யான்தொழு தேத்துவனே. 1

அருணகிரியின் அருட்கவிக்காக்கத்தை ஆக்கிவைத்தாய்
மருளும் மனத்தவர் மாண்புற மானுட வாழ்வு தந்தாய்
அருளும் திருவும் அருங்கலை ஞானமும் ஈயவல்லாய்
பொருளென் றுணர்ந்த ஜகந்நாத பெயருடைப்புங்கவனே. 2

நல்லருளாளன் நமையாளும் அண்ணல் இந்நானிலத்தே
புல்லியரும் புனிதம் பெற்றாரண பூரண போதமுற
நல்லுரையாற்றி நறுஞ்சுவை நற்றமிழால் எழுதும்
வல்லவ நின்னை வணங்கினன் வாழ் ஜெகநாத என்றே 3

## வேறு

நற்றவர் வாழ்த்திடும் ஜெகந்நாதன்
கற்றவர் வழுத்திடும் ஜெகந்நாதன்
பற்பல கலைதரு ஜெகந்நாதன்
பெற்றவன் பெரும்புகழ் ஜெகந்நாதன் 4

## வேறு

புண்ணியனே உன் புதுமலர்த் தாளிணை போற்றிசெய
எண்ணியபோது எதிர்க்கும் பகையை எடுத்தெறியத்
திண்ணிய நெஞ்சமும் சீர்ஞான வாளும் எமக்களிக்க
புண்ணியம் செய்திலனோ புனிதா என்குருபரனே.

கண்ணியம் தேடிக் களிக்கின்ற கயவரோ டின்னினியும்
மண்ணில் எனக்குற வேதுமில்லாமல் நின்அருளாம்
புண்ணியத் தோணியி லேற்றி புனித நின்பூரணமாம்
பண்புயர் அடிகளில் பதைப்பற வைத்திடெம் பண்ணவனே.

எண்ணிளந்தாருயிர் போகுமுன்னே உன் இணையடிகள்
கண்ணினிற் காட்டிக் கடுந்துயரோட்டிக் கருணையினால்
பண்பினையூட்டிப் பழவடியார் பதம் பாடி நிற்கும்
தொண்டினைத் தந்து தொடக்கறுத்தாள் துரியப்பொருளே;

# சர்வார்த்த விநாயகர் பேரில் பாடிய
# குருவிருத்தம்

பொன்னம்பலத்துப் புனிதனருளிய பூரணனாம்
முன்னை வினையை முடிக்க முழுமுதலாகியவன்
தன்னை நினைத்துத் தவம்புரிவோர் இருநிதியம்
மன்னக் கணேச புரமமர்ந்தான் கரிமுகனே. 1

கன்னல் கதலி கமுகொடு காய்நிறை தெங்கு பலா
சென்நெல் இனம்பல தேரும் பழைய கொலனியிலே
துன்னும் பல சமயத் தவர் கூடிய ஏர் ஒலி பண்ணையுள
அன்பும் அறனும் கூடிய ஐக்கிய சங்கமமுமாமதுவே. 2

தெளிவுற்று வாழத் திறம்பெற்று தேசம் செழித்திடவே
களிப்புற்றுத் தீமையாம் காரிருள் நீங்கிக் கருணையுறும்
தொளிலுற்றும் தோத்திரத்தோடு பல தொண்டுகள் சூழவே
கிளிநொச்சி தனில் வாழும் அடியவர் வாழவே வேண்டுவோமே. 3

சங்கம் தளைத்திடச்சற்சனர் தாம் பலர் சார்ந்திடவே
எங்கும் மனித குலம் ஓர்குலம் என்றொளி பெருகவும்
தீங்கும் வறுமையது நிலையாது போக்கிட நீள்கருணை
பொங்கும் சர்வார்த்த நற்சித்தி விநாயகன் துணையதாமே. 4

பொற்றாமரைப் பதம் போற்றுநின் அன்பர்க்கும் காணரிய
நற்றாமரைப் பதம் நல்கிட நற்கருணைக் கடலாய்
கற்றாருளத்தில் கருணையும் பூத்துக் கனி சிறந்தே
பற்றான சர்வார்த்த சித்தி விநாயகனாய் எமை சார்ந்தனையே. 5

குற்றம் குணங்கள் குடிகொண்ட கோழையாம் என்னகத்தே
மற்றும் பலவகை மாறுகள் தீர்த்து மகிழும் வண்ணம்
கற்றலும் கேட்டலும் காட்சியதாக கருத வைத்தாய்
இற்றென நின்அருள் சொல்வமோ சர்வார்த்த சித்திவிநாயகனே. 6



மற்றொரு பற்றிலை மாநிலத்தே நின் மலரடிக்கே
உற்றது பற்று உறுதுணை நீ எனப் போந்த என்னை
சற்றும் தயக்க மிலையெனச் சற்குருவாகி வந்த
சர்வார்த்த சித்திவிநாயக நின்னருள் சாற்றரிதே. 7

கருணையனின்ற கற்பகக்களிறே கருதுவாருளம் கசிந்துருக
கருணையே பொழியும் காரணமூலக் கடவுளே கடையனேனக
இருளெலா மகற்றி இன்பவாழ்வளித்துக் குறையெலா மிரிய
பொருவருங் கமல பதமருள் சர்வார்த்தமாம் விநாயகப்
பொருளே. 8

பொருளெ லாமுனது பொற்க மலாகும் போகமும் உன்னதே
புலையேன்
மருளெலா மகற்றி மனத்தலிசிருந்து மாண்புடைஞான
மெய்யொளியால்
கருவினை அகற்றிக் காதலால் நானும் நீயுமொன்றா
மெனக்கலந்து
ஒருவனாயிருப்பதென்று கொல் சர்வார்த்தமாம் சித்தி
விநாயகனே. 9

பிறப்பறுத் தாண்டனை பேத மவித்தனை பேருலகில்
குறை தவிர்த்தாள் குணமேவிடு அன்பர் கூட்டத்திலே
நிறைமதி போலென்னை நீடித்தருளில் நிறைய வைத்து
நறைமலர்ப்பாதம் அருளும் சர்வார்த்த விநாயகனே. 10

## வேறு

சித்தத் துருகி சிறுமைகள் தீர்த்துள சீரடிக்கே
பித்துடையோனாய்ப் பெரிதுந் திருவருள் பித்தனென
வைத்தாண்ட வல்லபம் வாழ்த்தும் வான்கருணை
வைத்தாண்டசித்தி சர்வார்த்தமுமாகும் விநாயகனே. 11

நற்றவர் வாழவும் நன்னெறி வாழவும் நாடுநலம்
பெற்றவரும் திருவோரும் பெறலரும் செல்வமுற்று
முற்று நின்னன்பரினமென வாழ்ந்து முதன்மையுறு
மற்றும் சர்வார்த்தமாம் சித்தி விநாயக மா முகனே. 12

சீரிற் பொலிவயல் செந்நெல் கரும்பு செழித்திடவே
காரிற்றடவும் கமுகு கதலி கதித்த தென்னை
போரிற் பொலியும் புனல் சூழ் கொலனி பொலிபெற
பாரிற் கடவுள் சர்வார்த்தமாம் சித்தி விநாயகனே. 13

## வருண பகவானை வேண்டி இரங்குதல்

பொன்னிறமேனி புரி சடையோய் நின்புது மலர்த் தாள்
சென்னியில் வைத்தென் செருக்கறுத்தாய் சிவனே என்
நன்மையை நாடி நலமருள் செல்வத்தை நாடி நின்றோம்
பொன்னனைய மழை பொழிந்துன்னடி போற்ற வைப்பாயே 1

பரவை திரைக் கடல் நஞ்சமுண்டாய் பல் உயிர்களுக்காய்
தரையில் தனித்தனி தாண்டவ மாடினை தண்ணருளாம்
திரையிற்படிந்து திருவைப்பல உயிர் சேர்வதற்காய்
வரையிற் படிந்து வளம் பெற வாரியை நல்குவையே. 2

கண்ணார்நு தலுடைக் கற்பகமேநின் கருத்தறியேன்
பெண்ணாரமுதினைப் பேணிய பாக பெருந்தகையே
மண்ணாருயிர்கட்கு மாண்புடை மாமழை மல்கிடவே
தண்ணார் கருணை முகிலே தருணம் தருணமிதே 3

மாமழை வாழிய மாமழை வாழிய மாமழை வாழியவே
சேமம் மிகுத்து சிறந்து வளம்பெற செல்வம் மிகுத்திடவே
ஏமமிதந் துடலோங்க உயிர்க்குல உன்னடி யேத்திடவே
மாமுகில் வாழிய மாமுகில் வாழிய மாமுகில் வாழியவே 4

உய்ந்துனை வேண்டி நின்றேனுயர் மாமழை உவந்தளிப்பாய்
ஐய்யன் ஆறுமுகத்தப்பாவென அழைத்தே ஆய்மலர்கொண்
டுய்வான் உயர்நிலை உயத்துணர்வான் செயலொழி வீரேல்
ஐய்யா உன்னருள் தந்திலையேல் எனை உய்ய வைப்பார் எவரே. 5

### அகவற்பா

சத்தி நாயக தற்பர நாயக
முத்தி நாயக மும்முதல் நாயக
ஏத்து மன்பர் எழில் சர்வார்த்த
சித்தி விநாயக சிற்சுக வாரியே
சுற்றமும் துணையும் பொருளும் நீயே
நற்சழலடியே நாற்றிசை நலமும்
பெற்றபேறு பெருமையும் எல்லாம்
அற்புதந் தந்தனை ஆர் அறிவாரே
தீமைதீர்த்து திருவினை நல்குவாய்
சேமவாழ்வு செழித் திடச் செய்குவாய்
தூய மேனிச் சுடர்க் கொழுந்தே துணை
எம நின்னருள் இன்றி இலையென
கற்றவர்க்கருள் கற்பகமே மனம்
மற்ற அன்பர் அகத்துத் துணையே
மருவற்கரிய மலரடி தந்தனை
பற்றுவாய் பரம ஆனந்த வெள்ளமே.



## உருத்திரபுரீஸ்வரர் காட்சி

தெள்ளு தமிழ் வளர்ப்பார் சேவைபல செய்திடுவார்
வள்ளல் உருத்ரபுர வளநகரின் மாந்தரெலாம்
ஆளும் ஒன்றேனும் அடியார்க்குதவுவதும்
சூளும் திறல்ருத்ர சீர்ப்பதியில் கண்டேனே
தன்னை அளித்த தனிமுதலைத் தத்துவனை
மன்னை உருத்திரபுர மாநகரிற் கண்டேனே
என் குருவாய் வந்து எளியேன் பிறப்பறுத்த
மன்னுருத்ரபுர மாமணிக் கண்டேனே
சொல்லற்று சும்மா இரு என்ற சுந்தரனை
நல்லார் பயில் ருத்ர மாபுரத்துக் கண்டேனே
கானகத்திற் கோயில் கொண்டென கருவேறறுத்தவனை
வானத்தார் ருத்ரபுரி வழுத்திடவும் கண்டேனே
சித்தந் தெளிய சிவ வடிவு தந்தவனை
உத்தமர்கள் போற்றும் உருத்திரபுரி கண்டேனே
காயமிது மாயமென கற்பித்த காரணனை
தாயெனவே ருத்ரபுரி தத்துவனைக் கண்டேனே
சொல்ல முதல் எந்தன் சொரூபம் தெளிய வைத்த
வல்லவனை உருத்திர வள நகரிற் கண்டேனே
சென்னிமிசை சேவடியே சேர்த்த சிவகுருவை
அன்னையாய் உருத்திரபுரி அமர்ந்திடக் கண்டேனே
மாமயில்கள் ஆட மலர் சொரியும் சோலையிலே
தே மொழியோடு ருத்ர தேவனையும் கண்டேனே
பூ வேறு புனலாடி புது மலர்கள் போட்டிறைஞ்சி
சேவை செய்ய ருத்ர செல்வனிடம் கண்டேனே
கந்தன் கணபதியும் காவிமலர்க் கண்ணுமையும்
எந்தை ருத்ர நாயகனை ஏந்திடவும் கண்டேனே
தேவரெலாம் கூடி தென்னா தமிழ் பாமாலை
ஆவலொடு உருத்திரர்க்குச் சூட்டுவது கண்டேனே
ஆதியந்தமில்லா அருளுடைய் ஆண்டருளும்
நீதியனை ருத்ரபுரி நின்மலனைக் கண்டேனே
பாதியுருப் பெண்ணோடு பாராண்ட கோலமதை
நீதிசேர் ருத்ர நீள்பதியிற் கண்டேனே
கண்டேன் பல பிறப்பில் காணாத காட்சியினை
அண்டர் தொழும் ருத்ர ஐயரருள் காட்டவே
மண்டுபுனல் வாவி மருங்கமரும் ருத்ரபுரி
தொண்டர் பலர்கூடி தொழுதிடவும் கண்டேனே
வாவியிலே நீர் பெருகி வயலூடு நெற்களெலாம்
மேவிவிளைருத்ரபுரி வேந்தனடி கண்டேனே
சேயாயெனை வளர்த்த செல்வ னுருத்ரபதி
தாயவனைத் தாழ்ந்தெனது தன் பிறவி யற்றனனே
அல்லல் அகன்றேன் அருட்கடலிலே குளித்தேன்
நல்ல ருத்ர நாயகனை நாளும் வழுத்துவனே

முற்றும்

# பாச வேரறுத்தாண்ட குருமணி

செ. முத்தையா
ஓய்வுபெற்ற ஆசிரியர்
கல்வயல், சாவகச்சேரி

கல்லாலின் கீழிருந்த கண்ணுதலை மாமேரு
வில்லால் புரமெரித்த வேதியனை
சொல்லாமற் சொல்லிப் பிறப்பறுத்த தூயவனை
நல்நெஞ்சே சொல்லிப் பல்காலும் தொழு.

வழிதனை அறியேனே வடிவேலவனே
மொழிக்குத் துணையாகிய முருகா எனும் ஒரு
மொழிதனை மொழிந்து உயர் முத்திக்கான ஒரு
வழிதனை அறியேனே.
பக்தி உள்ளவனே பரமபாக்கியசாலி
பயிருக்கு முள்வேலி உயிருக்கு உண்மை வேலி.

பாசவேரறுக்கும் பழம்பொருள் தன்னைப் பற்றுமாறு
அடியேனுக்கு அருள்பொழிந்த எம்குருநாதன் முன்னிற்க
யாம் அன்னாரின் பெருங்கருணையையும் அருள்மொழிகளையும்

இங்கே கூறுதல் என் அறிவுக்கு ஏற்றதல்ல.

ஓராண்டுபூர்த்தி அடியார்கள், அன்புத்தொண்டர்கள், பக்தர்கள் சேர்ந்து குருநாதனை நினைந்து அகம் குழைந்து அன்புருகி வாழ்த்தும் வாய்ப்பை உருவாக்குகிறது திருநாள் பெருநாள்.

புராணம் இதிகாசம் திருமுறைகள் திவ்யப்பிரபந்தங்கள் தனிப்பாடல்கள் ஞான சாஸ்திரங்கள் நால்வேதங்கள் மந்திரப்பிரயோகங்கள் எல்லாத்துறைகளிலும் ஆழ்ந்த அறிவு அடங்கிய குருநாதன், தவத்திரு சிவயோக சுவாமிகளின் வேண்டுதலின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் மகாதேவ ஆச்சிரமம் நிறுவி அன்பர்களை உருவாக்கிய அளப்பரும் கருணை இருந்தவாறு என்னே.

1. உள்ளத்தினுள்ளே ஒளிந்திருந்தான்பரன் - குரவன்
   கள்ளந்தனை அகற்றிக் காண் காண்பித்தான்.



2. தன்னை அறிந்தின்புமுற வெண்ணிலாவே ஒரு
   தந்திரம் நீ சொல்லவேண்டும் - வெண்ணிலாவே.

3. தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
   தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
   தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
   தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே.

இப்பாடல்கள் தன்னைத்தான் உணர்ந்து கதியடைவதே மனிதப்பிறவி பெற்றதனால் அடையும் பெரும் பயன் என விளக்குகின்றன.

இப்பெருநிலையை அடையவேண்டில் வழிகாட்டியாக ஞான குரு கிடைக்கவேண்டும். குருத்தேட்டம் உண்டாக வேண்டும்.

1. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்பேணி
   தமராகக் கொளல்.

2. மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் தொடங்கினர்க்கு
   வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும்
   பராபரமே - பராபரமே.

3. அன்பர்பணி செயவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
   இன்பநிலை தானே வந்தெய்தும் - பராபரமே.

4. பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப்பிறப்பறுக்க
   முன்னே தவங்கள் முயன்று கொண்டேன்.

குருவார்த்தைகேட்டல் விதையிடுதலாம்
சிந்தித்துத் தெளிந்து பேறடைதல்—ஞானம்—
கருதிக் கருதிக் கவலைப்படுவார் கவலைக்கடலை களையும்
பரம்பொருளை உள்ளத்தில் உணர்ந்து இன்படைதல்
முடிந்த முடிவு - விடுதலைக்கு வழி.
ஆண்டவனுடைய அருளாகிய குளிர்ந்த வெண்ணிலாவில்
உள்ளம் உலவுதல் பெரிய பேறு.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிளவேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.
அகக்கண் திறந்த அளப்பருங்கருணை - ஞானகுருவின்
அருள்பெற்றோர்கள் - அவர்களே மேலோர்கள்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

கந்தபுராணக்காப்பு - புராணிகர்கள் வளங்கும் கருத்துரையும் அறியத்தந்து விளக்கி மறைமொழியாம் வேதவாக்கியத்தையும் விளங்கத்தந்த குருநாதனின் அறிவுள்ளம் அன்னார் சமரச ஞானி என்று விளக்கியது அன்றியும் சித்த புருஷருமாவார். அன்னதான மண்டபம் அமைத்த ஞான்று வேலை செய்வோர் ''அத்திவாரம் வெட்டி முடிந்தது. சுவாமிஜீ அத்திவாரத்துக்குத் தண்ணீர் விட்டுப் பெலப்படுத்த வேண்டும். தண்ணீர் விட பம் (*Pump*) எடுப்பியுங்கள்'' என்று அறிவித்தார்கள்.

''அவசரப்படவேண்டாம். சிறிது நேரம் பொறுங்கள்'' என வாக்களிக்கப்பட்டது. அரைமணி நேரம் கழிந்தது. திடீர் என வானம் இருண்டது. மழைவெள்ளம் வேண்டியவண்ணம் சொரிந்தது. அத்திவாரம் நிரம்பி மேல் கொண்டது.

இவையெல்லாம் யாம் இங்கே எழுதவேண்டிய விஷயமா என மனத்தளர்ச்சியும் ஏற்படுகிறது. கிளிநொச்சியில் பலமுறை மழை வரட்சி ஏற்பட்டாலும் ஜெயந்தி நகரில் அப்படி நடந்ததே இல்லை.

சுவாமிஜீ திருவடிகளில் அடியேன் தங்கிய நாட்கள் ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள்.

தந்தையாய் தாயாய் எம்மை போஷணை செய்து நாய்க்குத் தவிசு வழங்கியது போல அடியார் நடுவுள் வைத்தமையே பெரும் பேறு.

புறம்புகாண்குவன் புல்லியன் ஈசனை
அறிந்தஞானி அகமுறக் காண்பனே
எறும்பிகாண்குறில் இன்கரும்பே உண்ணும்
செறிந்த ஆடுஇலை கறிக்கும் என்பரால்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



# ஞான பரம்பரை வரிசையில் சுவாமிகள்

இணுவில் சோ. பரமசாமி B. A.

இந்த நூற்றாண்டில் எம்மிடையே வாழ்ந்த ஞானச் செம்மல் வடிவேல் சுவாமிகள். உள உறுதியும் உடல் உறுதியும் கொண்ட இப்பெரியார் சென்ற இடமெல்லாம் சிவமணம் கமழும். ஈழத் தமிழ் மண்ணின் புதுக்குடியேற்றப் பிரதேசமான கிளிநொச்சியில் சைவம் தழைக்க ஆச்சிரமம் அமைத்த சமய சாதகர். கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத் தாபகரான சுவாமிகள் அப்பகுதி மக்களுக்கு ஆத்ம ஞானம் பரப்பிய ஓர் அறிவுச் சுடராய் விளங்கினார்.

அன்பும் ஆளுமையும் ஆத்ம ஞானமும் நிரம்பிய வடிவேல் சுவாமிகள் அடியார்க்கு எளியர், அறிஞர்க்கு அறிஞர். அல்லற்பட்டு அலைந்தோர்க்குக் கைகொடுத்த தெய்வம். சுருங்கக் கூறின் யாழ்ப்பாணத்தில் அங்கும் இங்குமாய் வாழ்ந்த ஞான பரம் பரையினர் வரிசையில் இன்றைய தலைமுறைக்கு இவர் ஒரு கலங்கரை விளக்கு. இஞ்ஞானச் சுடர் கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமக் குருமணியாய் இருந்த காலம் என்றும் நினைவுகூரத்தக்கது.

அளக்கலாகா ஆற்றல் நிறைந்த சுவாமிகள் கொண்ட கொள்கையிற் குலையாத குணமுள்ளவர். இவர் தாம் எடுத்த முயற்சியில் வெற்றிகாணும் வரை மனவுறக்கம் கொள்ளார். தம்மை அண்டினோர் யாராயினும் அவரை அன்புடன் அணைத்து, அமுதளித்து, ஆறுதல் கூறி, புதிய தெம்பூட்டிய திறன் படைத்திறர். நாளைய தேவைக்கென எதனையும் மறைத்து வைக்காது அன்றைய தேவையை நிறைவாகச் செய்யும் இயல்புள்ளவர்.

துறவி என்ற வட்டத்துள் நின்று சொந்த ஆன்ம நலம் பெறுவதில் மட்டும் இலக்கு வைக்காது, ஆன்ம விடுதலை பெறுவதோடு புறவுலக வாழ்விலும் விடுதலை வேட்கைமிக்கவர். சுரண்டல் பேர் வழிகளை இனம் கண்டு, அவர் கொட்டம் அடக்கிய பெருமையும் இவருக்கு உண்டு. இன்முகம் காட்டி இன்னுரை வழங்கும் இயல்பினரான வடிவேல் சுவாமிகள் எளிமையும் ஏழ்மையும் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர். இணுவைப்பதியில் நடமாடுந் தெய்வமாய் விளங்கி இன்று மஞ்சத்தடியிலே சமாதிக்கோயிலில் இருந்து அடி-

யார்க்கு அருள் சுரக்கும் பெரிய சன்னாசியாரின் அணுக்கத் தொண்டரான காசிநாதருக்கும் (சன்னாசி கந்தருக்கும்) சின்னக் குட்டி அம்மையாருக்கும் ஐந்து பெண்களின் பின் ஆறாவது ஆண் மகவாய்த் தோன்றினார். அருமையும் பெருமையும் வாய்ந்த தமது மகனை இளமைக் காலத்திலே சிவனடியார் கூட்டத்துள் இருத்திச் சிவக்கொழுந்தாக வளர்த்தார் இவரது தந்தையார். இதனால் சிறு வனான வடிவேல் பிஞ்சு வயதிலேயே தேவார திருவாசகங்களை நெஞ்சுருகப் பாடும் வல்லமை பெற்றார்.

கருவிலே திருவுடைய காளை வடிவேலின் சிவவேடத்தில் விருப்பம் கொண்ட சிவனடியார் கூட்டம் அவரின் சிறு குடிலைத் தேடி எந்நாளும் சுற்றத்தொடங்கியது. நாளடைவில் இவருக்கும் சிவனடியார்களுக்கும் உண்டான உறவு மார்ச்சார சம்பந்த மாயிற்று.

நற்குருவை தேடுவதில் நாட்டம் கொண்டிருந்த வடிவேல் சுவாமிகளுக்கு ஞான குருவாக வாய்க்கப்பெற்றவர் கொழும்புத் துறை யோக குருநாதன் ஆவர். சுவாமிகள் சமய சாத்திரங்களை முறையாகக் கற்க வேண்டுமென விருப்பம் கொண்டிருந்ததைத் தெரிந்து கொண்ட யோக குருநாதர் கந்த மடத்திலுள்ள வேதாந்த மடத்திற்குச் செல்லுமாறு சுவாமிகளை நெறிப்படுத்தினார். குரு நாதரின் ஆணைப்படி வேதாந்த மடத்துக்குச் சென்ற சுவாமிகள் அங்கு குருமூர்த்தியாய் இருந்த மகாதேவ சுவாமிகளைக் கண்டதும் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அவரையே தமது தீட்சா குருவாகவும் ஏற்றுக்கொண்டார்.

தோற்றப் பொலிவில் குருவும் சீடரும் ஒத்ததன்மை பெற்றிருந்த தால், மடத்தில் நாளிலும் பொழுதிலும் புதிய ஒளி பரவத் தொடங்கியது. திருமுறைகள் ஓதலும், சமய சாஸ்திரங்கள் பாடங் கேட்டலும் ஆன்ம விசாரமுற்றார்க்கு விடையளித்தலும் வேதாந்த மடத்துப் பணிகளாயின. குருநாதரின் ஆணைகளைத் தட்டாது, பாடங்களை விரைவாக விளங்கிக் கொண்டதால் மடத்திற் பயின்ற மாணவர்களுள் தலைமாணாக்கள் ஆனார். தமது குரு நாதரைப்போல் பிரசங்க வன்மையும் சமய தோத்திரங்களுக்கு விளக்கம் அளிப்பதில் வல்லமையும் வடிவேல் சுவாமிகளுக்குக் கைவரப் பெற்றன, வேதாந்த மடத்தின் குரு பீடத்தை அலங் கரிப்பதற்கு ஓர் இளவல் வாய்த்துள்ளார் என்று குரு மூர்த்தியான மகாதேவ சுவாமிகளும் வாயூறியதுண்டு.

அப்பொழுது வடிவேல் சுவாமிகளின் பணி வேறோர் இடத்தில் நிகழவேண்டி இருந்ததை எவரும் அறிந்திருக்கவில்லை.



கிளிநொச்சிப் பகுதியிலே புதுக்குடியேற்றம் நடைமுறைப்படுத் தியபோது, அங்கு குடி வந்த மக்களை நெறிப்படுத்த வேண்டிய அவசியத்தை யோக குருநாதர் அறிந்து ஒருநாள் வடிவேல் சுவாமி களைக் கண்டதும் ''குருசேத்திரம் கிழக்கே இருக்கின்றது; அங்கு சென்றால் நன்மை உண்டு'' என்று சுருங்கச் சொன்னார்.

குருநாதரின் உள்ளக் கருத்தை உணர்ந்த சுவாமிகள் கிளிநொச் சிக்குச் சென்று தமது தீட்சா குருவின் பெயரில் ஆச்சிரமம் அமைத்து ''சைவ சமயமே சமயம்'' என்பதை அங்கு குடிவந்த மக்கள் அனைவரின் நெஞ்சிலும் பதியச் செய்தார். புதுக்குடியேற்ற மக்கள் பிற மதத்தவர்களின் போதனை வலையிற் சிக்காது சைவாலயங்களையும் அமைப்பித்துச் சமயப் பிரசங்கங்கள் செய்து மக்களிடையே சைவசமய அறிவை ஊட்டினார்.

ஏழ்மையின் விளிம்பில் இருந்து பொருளாதார வளம் தேடிக் கிளிநொச்சிக்கு வந்த மக்களுக்குக் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக வடிவேற் சுவாமிகள் ஆற்றிய பணி காலத்தின் தேவையை நிறைவு செய்வதாகும்.

ஆன்ம ஞானமும் அருளுரைகளும் அள்ளி வழங்கிய சுவாமிகள் கடந்த ஆண்டு ஆனித் திங்கள் ஆயிலிய நல் நாளன்று மகா சமாதி எய்தியுள்ளார். சுவாமிகள் ஆற்றிய சேவைகளை ஒரு கணம் நாம் நினைத்துப் பார்க்கையில் அவர் இருண்டவானில் தோன்றிய ஓர் உதயதாரகை என்றே எண்ணத் தோன்றுகிறது. சுவாமிகளின் தூல உடலை சமாதி வைத்துத் தினசரி பூஜைகள் ஆராதனையும் மாதந் தோறும் ஆயிலிய நட்சத்திர தினத்தில் விசேட பூஜை, அபிடே கம், ஆராதனை, அன்னதானம், அருட்தானம் ஆகியன நடை பெற்று வருகின்றன. மேலும், சிறப்புற நடைபெறக் குரு அருளை யும் திரு அருளையும் வழுத்துவோமாக.

''உபாத்தியாரே! உம்முடைய பாத்தியிலே என்ன இருக் கிறது? பொறுமை, தயை, அன்பு முதலிய நற்பயிர்கள் வளரக் காமம், குரோதம் முதலிய களைகளைப் பிடுங்கி விடுகிறீரா?

— யோக சுவாமிகள்.

# வேதாந்த வித்தகர் வடிவேல் சுவாமிகள்

செல்லத்துரைச் சுவாமிகள்
சிவதொண்டன் நிலையம்,
செங்கலடி,
மட்டக்களப்பு.

செந்தமிழ் யாழ்ப்பாணம், வேதாந்த வித்தகர் என்றும் செறிந்து வாழ்ந்த பதியாகும். நல்லூர், சந்நிதி, வல்லிபுரம், நயினாதீவு, கீரிமலை முதலாய தலங்களில் ஞானியர் சமாதியடைந்துளர். இந்த ஞானியர் வாழ்ந்த தலங்களைச் சூழ்ந்து சிவனடியார் பலர் தோன்றிச் சிவதொண்டும் சிவஞானமும் வளரத் தம்மடியார்களைப் பரிபாலித்தனர். இவ்வாறு தோன்றிய ஞானபீடம் ஒன்று கந்தர்மடத்திலுள்ள வேதாந்த மடமாகும். அங்கிருந்து ஆன்மீக அலையை வீசிய பல பெரியாருள் ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளும் ஒருவராவர் இவர்களின் காலத்திலேயே வேதாந்த மடம் மிகப் பிரபலமாக மிளிர்ந்தது. நீதி நூல்கள் சமய சாத்திர நூல்கள் முதலியன மாணவர்களாக ஆன்மலாபம் தேடி ஓடி வந்தவர்களுக்கும் ஊரூராகச் சென்று கோவில்களிலும் மடங்களிலும் சமய போதனைகளுமாக வேண்டி வந்தழைத்தார்க்கும் போதிக்கப்பட்டன.

இப்படியான சூழ்நிலையில் வேதாந்த மடத்துப் பாட போதனைகளில் பங்குபற்றிப் பயனடைந்தோர் பலர். அவர்களுள் இணுவில் கிராமத்தைச் சேர்ந்த சிலரும் உளர். இவர்களுள் ஒருவரே ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகள் ஆவர். அந்நாளில் இவர் கமத்தொழில் செய்து சிவனஞ் செய்யும் ஒருவராவர். திருமணமாகாது சீவியத்துக்கு உழைக்கும் நேரங்கள் தவிர்ந்த ஏனைய பொழுதெல்லாம் சைவ ஒழுங்கில் சைவத்திருமுறைகளை ஓதியும் ஓதுவித்தும் வருவார். தமது ஞான குருவாக ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளையே உளங்கொண்டார். குருவினாவிற் தொடர்ந்து ஊரூராகச் சென்று சைவ பாடசாலைகளை அமைத்தும் அமைப்பித்தும் சைவ போதனைகள் செய்து வருவதை பின்பற்றித் தாமும் அப்பணியிலேயே ஈடுபட்டார்.



சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு.

சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைதெளிவுமுண்டு என்றார்க்கு தொண்டின் முதிர்ச்சியால் சிவனருள் பாலித்தது. தமது ஞானகுருவின் நாமம் விளங்க ஓர் நிலையம் நிறுவும் உளத்தோடு கொழும்புத்துறையில் ஞானமூர்த்தியாகப் பிரகாசித்த யோக சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றபோது ''நீ போய் கிளிநொச்சியில் இரு'' என அவர் ஆசீர்வாதம் செய்துள்ளார். அம்மங்கல வாக்கின் படி கிளிநொச்சியில் உருத்திரபுரத்தில் மகாதேவர் ஆச்சிரமம் எனும் நாமம் பூண்ட ஓர் ஞானப் பண்ணையை உருவாக்கினார்.

காடுகள் கழனிகளாக அமைந்த அந்நாளில் அப்பகுதியில் ஆன்மீகத்தை விதைத்து பயிர்த் தொழில் நடாத்தினார். சில நாட்களுள் அப்பகுதியெங்கும் ஆன்மீக மணம் வீசியது. அடியார் பலர் திரண்டனர். பக்தி நாட்டங்கொண்டு செயலாற்றினர். சைவப் பண்ணைகள் சமயபூசகராக மலர்வதற்கு ஏற்ற ஓர் குருகுலமும் தொண்டர் கதிரவேல் அவர்களைக் கொண்டு அருக இயங்கியது. இந்து மத விழாக்களை இதய சுத்தியோடு நடத்தினார். மகாலங்களான குரு பூசைகள் சமய ஞானச் சொற்பொழிவுகள் ஆதிய ஸ்ரீமத் வடிவேல சுவாமிகளின் தலைமையில் உருவாகி நடைபெற்றன.

உலகம் யாவுக்கும் உயிர்களனைத்துக்கும் இறைவனாகிய கடவுளைச் சிவன் என்னும் திருப்பெயரால் போற்றிவழிபடும் சமய நெறியே சைவம். சைவம் சிவனுடன் சம்பந்தமானது.

உயிருக்குயிராக விளங்கும் சிறந்த மெய்ப்பொருளைப் பண்டைத் தமிழ் மக்கள் செம்பொருள் எனவே சிறப்பித்துப் போற்றுவித்தனர். ''செம்பொருள் காண்பதறிவு'' எனவள்ளுவரும் செம்பொருளான சிவமெனலாமே எனத் திருமந்திரமும் ''செம்மையேயாய சிவபதம்'' எனத் திருவாசகமும் அருளிய உரைகள் சிவம் என்ற சொல் செம்பொருள் என்ற பொருளில் முழுமுதற் கடவுளாகிய கந்தழிக்கு வழங்கும் திருப்பெயராதலை நன்கு தெளிவுபடுத்துகின்றன. சைவநன்னெறி ஒவ்வொருவரும் தத்தமக்கென ஒரு நெறி முறையினை அமைத்துக்கொள்ள இடந்தரும் ஒரு ஜனநாயகப் பண்புடையது. அறுபத்துமூவரும் பிற அடியார்களும் தமது காலத்தாலும் குலத்தாலும் செயலாலும் தனித்தனி நின்றாலும் சிவபெருமானே முழுமுதற் பொருளென உணர்ந்து தொண்டாற்றிய நிலையில் அனைவரும் போற்றப்படுகின்றனர். சைவ நன்னெறியில் செயலைவிடச் செயலின் நோக்கமே தனிச்சிறப்புடையது. மலர் எய்த மன்மதன் சாம்பலாகினான். கல்லெறிந்த சாக்கியர் பெரு

மானுக்குக் கற்கண்டாகிறார். தந்தையின் காலைவெட்டிய சண்டேசுரர் சிவ வழிபாட்டில் திருக்கோயிலில் தனிச்சிறப்புப் பெறுகிறார்.

சமூகச் சீரமைப்பைக் குறிக்கோளாகக் கொண்டதால் சைவம் தொண்டு நெறியாகத் திகழ்கிறது. நாவுக்கரசர் இதனை ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' எனத் தெளிவாகக் கூறுகிறார். செய்வன யாவும் சிவப்பணியாகவே செய்தல் வேண்டும். அப்படிச் செய்பவர் முனைப்பெலாம் அழிவுறும்.

''நிலைபெறுமாறு'' என்ற சொற்றொடரையுடைய
திருத்தாண்டகம் சிந்திக்கற்பாலது.

மேலும் தோழரான நம்பியாரூரருக்கும் இறைவன் இட்ட கட்டளையில் வித்தகம் பேசவேண்டாம் பணி செய்ய வேண்டும் என்றே அருளியுள்ளார். சிவதொண்டு செய்பவர்கள் சிவனடியாராவர். அவர்கள்,

''பெருமையால் தம்மை ஒப்பார் பேணலாம் எம்மைப் பெற்றார்
ஒருமையில் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்றுமில்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆவர்
இருமையும் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய்''

என்று எம்பெருமான் கூறிய கூற்றே சுந்தரரின் திருத்தொண்டத் தொகைக்கு காரணமாகியது. ஊழி ஊழியாக அடியார் பெருமையை அவனிக்களித்ததாலேயே அடியார்க்கு அடியாராகத் தோன்றிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெரிய புராணத்தின் கதாநாயகனாயினார், பாரம் ஈசன் பணியலது ஒன்றில்லாது சைவத் தொண்டாற்றிய ஸ்ரீமத் வடிவேற் சுவாமிகள் பரம்பரை நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

---

**சுயநலத்தை விட்டு வாழுங்கள்**

''நீங்கள் திருந்துங்கள்; உலகம் திருத்தமாய்த் தெரியும். எல்லா உலகமும் மனதில்தான் உண்டு. மனதைச் சரியான இடத்தில் வையுங்கள். அதன்பின்னர் யாவும் தெளிவாய் விளங்கும். உலக நன்மையின் பொருட்டுச் சுயநலத்தை விட்டு வாழுங்கள். நீங்கள் மட்டுமன்றி, மற்றவர்களையும் அவ்வாறு வாழும்படி கூறுங்கள்.''

— வடிவேல் சுவாமிகள்



# நமது குருநாதன் அருள்வாக்கு

## பரமானந்தவல்லி சுவாமி அம்மா



பரமானந்தவல்லி சுவாமி அம்மா

உலகம் தோன்றியதில் இருந்து இன்றுவரை முத்தியடைந்த முத்தர்களாகிய பிரம்ம ஞானிகளுக்கு எமது அனேக நமஸ்காரங்கள. தானம் செய்ய வேண்டுமென்று பொதுவாக எல்லோருக்கும வேதம் விதித்திருக்கிறது. அன்னதானம் வித்யாதானம், ஞானதானம் இன்னும் பல தானங்கள இருக்கின்றன. இது வேதவிதி. அன்னதானம் எல்லா உயிர்கட்கும் உணவு கொடுதது உடலைப் போஷிப்பது. ஆனால் அந்த உடல் நிலையுள்ளதல்ல, என்றோ ஒரு நாளைக்கு மறைந்துவிடும. வித்தியாதானம உலக அறிவைப்பெற்று முறையாகத் தனக்கும் மற்றவற்கும் பயன பட வாழ்ந்து சிறப்படையலாம். பின் அதுவும் சுருங்கிச் சுருங்கி எல்லாவற்றையும் விட்டு மரணமடைவதுதான மிஞ்சும. இது கண்கூடாக எல்லோருக்கும் தெரிகிறது. ஞானதானமோ வெனில் தேசகால வர்த்தமானத்தால் சிதைவுறாதது. அகண்டமானது, கண்டப்படாதது. பரிசுத்தமானது, மங்களமானது, அழிவில்லாதது. எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியது. அதைவிடச் சிறப்புற்ற சாசுவதமான வஸ்து, மூன்று உலகத்திற்கு அப்பாலுமில்லை. என்றும் இது சிறந்த தானம், ஞானதானம். இந்த ஞானத்தை எங்கே பெறுவது, யாரிடத்தில் பெறுவது, எல்லோருக்கும் ஆதி குரு தெட்ஷணாமூர்த்தி. அதிலிருந்து வாழையடி வாழையாகத்தான் குரு பரம்பரை வளர்ந்து வந்தது. முற்பிறவிகளிற் செய்த தவத்தின் பயனாக இப்பிறவியில் நல்லுணர்வு வரப்

பெற்று நானார் உலகம் என்பது என்னை என்று விசாரணை தொடங்கி, குருவை நாடி ஓடிவரும் கானவர் வலையிற்பட்டு கைதப்பி ஓடும் மான்போல ஓடுவான். அவன் உலக வர்ணனையை விட்டு பஞ்சேந்திரியங்கள், கருவி கரணங்கள் எல்லாம் ஓய்ந்து, ஸ்ரீகுருபாதத்தில் விழ்ந்து ஒன்றுமே தோன்றாது, உடல் பொருள் ஆவி குருவிற்கு சமர்ப்பணம் பண்ணி சிலவருடமோ அன்றிப் பல வருடமோ குருவிற்குப் பாதசேவை செய்து வேறொன்றும் நாடா திருப்பின் அப்படிப்பட்ட சிடனுக்குத்தான் குரு ஞானதானம் பண்ணு வார். அது எல்லோருக்கும் கிடைப்பது அல்ல. ஏகதேசத்தில் ஒரு வருக்குத்தான் கிட்டும். பின் அது பலவாகும். எல்லோரும் முன் வரலாம், ஆயினும் ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் கிட்டும் என்பது ஸ்ரீ கீதை வாக்கு. எனவே,

கிளிநொச்சி மாவட்டத்தில் ஓர் ஸ்ரீகுரு ஞானபரம்பரை தோற்று வதற்கும் ஞானதானம் செய்வதற்கும் (ஞானதேசிகனாம்) ஸ்ரீவடி வேல் சுவாமிகள் ஸ்ரீ மகாதேவ ஆச்சிரமம் என்னும் ஞானநிலை யத்தை உருவாக்கினார்கள். அங்கு கர்மம் கட்டுவிட்டு கர்மாதிதம் செல்கிறவர்கட்கு வழிகாட்ட ஞான உபதேசம் ஞானசாஸ்திரம் படித்தல் வேறு சிந்தனையின்றி ஆத்மீகத்தி யானத்திலிருத்தல் முழு நேரமும் ஆத்மீகத்தியானத்தைவிட வேறு விடயங்களை நாடாத வர்கள் அதிசீக்கிரத்தில் ஞானநிலை அடைவார்கள் என்பதையே அதிகமாகப் போதிப்பார்கள். அதிசூட்சுமமான கருத்துக்களை எளிய முறையில் புரியவைப்பது அவர்களின் தனியியல்பு. சுவாமியவர்கள் நாலாவது சன்னிதானமாக உள்ளவர்கள். அவர்கள் மகாசமாதி எய்தி ஓராண்டு பூர்த்தியாகிறது. அதற்காக மலர் வெளியிடு வோருக்கு ஸ்ரீகுருவருள் சகல நலன்களையும் கொடுத்து ஆசீர்வதிப் பார்களாக.

''கர்மாக்களுக்கு அடிமையாகாதே. வேலையைப் பெருக் காதே. தியானத்தைக் குறைக்காதே. செய்யும் கருமங்களை ஆண்டவனுக்கர்ப்பணித்து நீ அதுவாக இரு. வாக்கை அடக்கு, மனத்தை அடக்கு, மகாமௌனமாயிரு, பொறுமையோடிரு, அவர் பெரியர் சிறியர் என நினையாதே. புற உலகில் புத் தியை நாட்டாதே. உன்னை அறிய விழிப்பாயிரு. ஒன்றுக்கும் நான் நான் என்றும் முந்தாதே.''

இது அவர்களின் திருவாயிலிருந்து வரும் அருள் வாக்கு. அதில் சில.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



நாம் தரிசித்த அருளாளர்

# வடிவேல் சுவாமிகள்

பொ. கந்தையா
காந்தி ஆசிரியர்,
திருக்கோணமலை.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் 4-6-91ல் எழுதிய கடிதம் 15-7-91ல் கிடைத்தது. அதில் ''இணுவில் தியா கராஜ சுவாமிகள், உருத்திரபுரம் வடிவேற் சுவாமிகள், திருக்கோண மலை சிவயோகசமாஜம் கெங்காதரானந்த சுவாமிகள் போன் றோருடைய மறைவுகள் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பேரிழப் பாகும்.'' என்று எழுதியிருந்தார். இதிலிருந்துதான் சுவாமிகள் சமாதியானதை அறியமுடிந்தது.

சுவாமிகளின் சமாதி விபரங்களைக்கேட்டு மகாதேவ ஆசிரமத் திற்கு கடிதம் எழுதினேன். சுவாமிகளின் வாரிசாக இருந்து ஆத் மீகப் பணியாற்றும் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் 18-1-92ல் விபரங்களை எழுதினார்கள். தினமும் நித்தியபூஜையும், மாதம் ஒருமுறை ஆயிலிய நட்சத்திரத்தில் பிரார்த்தனை பூஜை அன்ன தானம் ஆகிய அருட்பணிகளும் நடந்து வருவது மிகச் சிறப் புடையது.

சுவாமிகள் சமாதியான செய்தியைத் திருக்கோணமலையிலுள்ள சுவாமிகளின் அடியார்கள் அறிந்து மனம் வருந்தினர். சுவாமிகளின் ஆத்மசாந்திக்காக எல்லோரும் பிரார்த்தித்தனர். சுவாமிகளின் அருள்ஒளி எல்லோருள்ளத்திலும் புகுந்து ஆத்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டுவதாக.

கொக்குவில் இராமகிருஷ்ண சங்க வித்தியாலயத்தில் நான் ஆசிரியராகப் பணியாற்றும்போது சமய விழாக்கள் நடப்பது வழக்கம்.

அண்மையிலுள்ள இணுவில் கிராமத்துக்குச் சென்று வடிவேல் சுவாமிகளை அழைப்போம். சுவாமிகளைத் தோட்டத்தில்தான் சந்திக்கலாம். ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்'' என்பதைத் தனது வாழ்க்கையில்

நடந்து காட்டினார். கேட்கும்போதெல்லாம் ஓடோடி வந்து சமயப்பிரசங்கங்கள் செய்து மக்களை ஆத்மீகப் பாதையில் வழி நடத்தினார்.

சுவாமிகள் கிளிநொச்சிக்கு வந்து மகாதேவ ஆச்சிரமத்தை அமைக்கத் திருவுளம் கிடைத்தது. உருத்திரபுரத்தில் ஜெயந்தி நகரில் ஆச்சிரமம் அமைக்கப்பட்டது. ஆச்சிரமத்தை அமைக்க உறுதுணையாக இருந்தவர் மாபெரும் சமயத் தொண்டர் திரு. த. நல்லதம்பி அவர்களாவர். ஆச்சிரமம் உள்ளவரை தொண்டர் நல்லதம்பி அவர்களின் நினைவும் நிலைத்திருக்கும். பிற்காலத்தில் சுவாமி அம்மா அவர்களும் ஆச்சிரமத்துக்கு வந்து சுவாமிகளின் அருளைப்பெற்று ஆச்சிரமத் தொண்டில் ஈடுபட்டார்கள்.

சுவாமிகள் திருக்கோணமலைக்கு வந்து ஆத்மீகச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்கள். மகாதேவ ஆச்சிரமத்துக்கு நாங்கள் அடிக்கடி சென்றுள்ளோம். போனவுடன் சுகம் விசாரித்து தாகந்தீர்த்து பசியாற்றிய பின்பே ஆத்மீக ஞானங்களைப் போதிப்பார்கள். ஆச்சிரமத்திலும் சுவாமிகள் விவசாயத்தில் ஈடுபட்டார்கள். சுவாமிகள் சும்மா இருந்து சாப்பிடவில்லை.

பொலிவான தோற்றம். முழங்கால் மட்டில் கட்டிய காவி வேட்டி. தோளில் ஒரு காவித்துண்டு. சிரிப்பில் மலர்ந்தமுகம். அருள் ஒழுகும் கண்கள். கலகலப்பான பேச்சு. பேச்சோடு பேச்சாக ஆத்மீகத்தையும் புகுத்தி விடுவார்கள். எதற்கும் கவலைப்பட வேண்டாம். எல்லாம் அவன் சித்தம் என்பார்கள். கஷ்ட நஷ்டங்களை விசாரித்து ஆறுதல் கூறுவார்கள்.

ஆச்சிரமம் திறம்பட நடைபெற சுவாமிகள் ஆவன செய்து வைத்துள்ளார்கள். தனக்குப்பின் தனது ஆத்மீகப் பணிகளைப் பேண கணேசானந்த மகாதேவ சுவாமிகளை ஆக்கித் தந்துள்ளார்கள். கணேசானந்த மகாதேவ சுவாமிகள் பல்லாண்டு வாழ்ந்து ஆத்மீகப் பணிகள் புரிய எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

சுவாமிகளின் வாழ்க்கை வரலாறும் ஆத்மீக நல்லுபதேசங்களும் புத்தகமாக வெளிவந்து அன்பர்கள் அடியார்கள் படித்துப் பயன் பெறவேண்டும்.

இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க.

ஆனந்தம்.



## தவத்திரு வடிவேற்சுவாமிகள் மீது பாடிய

# திருவிரட்டை மணி மாலை

திரு வை. க. சிற்றம்பலம்
ஒய்வுபெற்ற ஆசிரியர்,
அலுக்கை, அளவெட்டி.

காப்பு

உருவாய்த் திருவா யுதித்த இனுவைப்
பெரியார் வடிவேலைப் போற்றி—அரிதாம்
திருவிரட்டை நன்மணியால் பாமாலை சூடக்
கரிமுகத்துக் கற்பகமே காப்பு

அவையடக்கம்

வடிவேற் சுவாமியார் வாழ்விலே யுற்ற
படியெல்லாம் நூலிற் பகர்வேன்—அடிசான்ற
அன்பினீர் போற்றி அருளாற் குணமளைந்து
இன்புறுவீர் என்றும் இனிது

குருவணக்கம்

பண்ணையும் பாடிப் பயனையும் பகர்கின்ற
அண்ணலை யேத்த அருள்சான்ற—கண்ணார்
வடிவேற் சுவாமிகளை வாடாதென் னெஞ்சம்
அடிபேணு மென்றும் அமர்ந்து

நூல்

ஜெனனமும் நாம கரணமும்

வெண்ணீறு மைந்தும் விளங்குநற் தந்தையார்
கண்ணாக ஆண்மகவு கைவரவே புண்ணியத்தின்
வந்த மகற்கு வடிவேல் திருநாமம்
புந்தியுற வைத்தார் புகழ்ந்து

இளமையும் கல்வியும்

கட்டளைக் கலித்துறை

2. புகலுந் தவலித்திற் புக்கு முளைத்துப் புரையகன்று
பகரும் அருள்தளிர் பாலித்து அவக்களைப் பற்றகற்றி
நிகரில் சிவனருள் நித்தம் விளங்க நிறைவிளைவாய்
நுகருஞ்செஞ் சாலி யினுவை வளர்ந்தது நித்தமுமே

### நேரிசை வெண்பா

3. நித்தனருளால் நிகரில் குழவிக்கு
சுத்தான்னம் பாலடிசி லூட்டியே—பத்தியாய்
ஏற்றகா லத்திலே ஏடுத் தொடக்கினார்
சாற்றும் விநாயகரைச் சார்ந்து

### கட்டளைக் கலித்துறை

4. சார்ந்த புராணம் சிவனூல் திருமுறை சாத்திரங்கள்
தேர்ந்து படிக்கச் சிவசேது லிங்கரைச் சென்றொழுகி
ஆய்ந்தவே தாந்த மடத்தின் குருமகா தேவரிடம்
போந்துவை ராக்கியம் கைவல்யம் கற்றும் பிறங்கினரே

### நேரிசை வெண்பா

5. பிறங்கும் இணுவைக் கோயிலில் நற்சேவை
அறங்கூரச் செய்தே யடங்கி—திறஞ்சேர்
திருமுறைகளோடு புராணமும் படித்தார்
வருமுறையிற் சந்ததியே வாழ

### பிரமசரியமும் அநுஷ்டானமும்
### கட்டளைக் கலித்துறை

6. வாழ்ந்து வரும்வடி வேல் வருபிரமாசாரியராக
தாழ்ந்த மனத்துடன் தாய் தந்தை சுற்றத்தவர் வருந்த
ஆழ்ந்த கவலையில் மூழ்குமன் னார்கட் கறிவுறித்தி
சூழ்ந்தவே தாந்தச் சுருதியின் வாய்மையுஞ் சொற்றனரே

### பெற்றோரைப் பேணலும் கடனும்
### நேரிசை வெண்பா

7. சொற்ற முறையாலே சோதரிமார் ஐவர்க்கும்
சுற்றத்திலைவர் துணைசேர்த்து—பற்றோடு
நன்மணத்தைச் செய்வித்து நாடும் பெற்றோர் கடனும்
பின்னமறச் செய்தார் பெரிது

### வேதாந்த மடமும் போதனையும்
### கட்டளைக் கலித்துறை

8. பெரிதும் பிறர்சேவை தன்சேவை போலப் பிரியமுடன்
அரிதென் றகலாத அன்பின் வடிவேலை யாதரித்தே
திரித லில்லாத திகழ்மேன்மை யாளர் திருவுடையார்
ஒருதலை யாய்வந்து சீடர்களாயினர் உத்தமர்க்கே



### நேரிசை வெண்பா

9. உத்தமராம் மகா தேவர்க்கு உகந்த நற் சீடராய்
நித்தம் புரியுங் கடனியற்றி—பத்தியுடன்
வேதாந்தங் கற்றே விரும்பிமோ னத்தமர்ந்து
போதாந்தமும் பெற்றார் போந்து

### கட்டளைக் கலித்துறை

10. போற்றிய கந்தர் மடத்திற் குமாரசுவாமி யென்பார்
சாற்றிய காணியில் வேதாந்தப் பேர் மடம் சார்ந்துபர
ஆற்றிய சார்ஜன் கனகரத் னம்மகா தேவரின் பின்
தோற்றிய நல்லறிவால் வடிவேலே திகழ்ந்தனரே

### உருத்திரபுர வருகையும் பணிகளும்
### நேரிசை வெண்பா

11. திகழ்ந்துமுன் னாளிலே முத்தியடைந்தார்க்கே
புகழ்ந்து குருபூசை போற்றி—நிகழ்வால்
வழியடியா ரேத்த வடிவேல் ஜெயந்திப்
பொழிலிடையே சென்றார் புகுந்து

### கட்டளைக் கலித்துறை

12. புகுந்தே ஜெயந்தி நற்புரம் போந்து புதுமையதாய்
நகுந்தேவ கோட்டஞ் சமைத்திடப் பார்த்திட்ட நண்ணலரும்
தகுந்தெய்வ ஆச்சிர மம்மிதென் றே நற் றகுதிசொல
மிகுந்தே வளர்த்தனர் சைவமது ஞான்றும் மிளிர்ந்திடவே

### நேரிசை வெண்பா

13. திடமாக மாணாக்கர் செய்கடன்க ளோடு
நடமாடும் ஆச்சிரமம் நண்ணி—கடனாக
வடிவேலடி களின் வாய்மைகேட் டன்னார்
அடிபேணி நின்றார் அமர்ந்து

### கட்டளைக் கலித்துறை

14. துயர்துன்ப மின்றித் தன் சுற்றத் தொடக்கின்றித்
தூய்மையுடன்
அயர்வின்றி வைகும் அடிகளை யோக பிரானனுகி
உயர்வற்ற உருத்திரபுர மாந்தர் தம்முன்னம் உயரும்
வண்ணம்
பெயர்வின்றிச் சைவப் பயிர்வளர் என்ற சொல் பேணினரே

நேரிசை வெண்பா

15. பேணியுஞ் சொற்காத்தும் பேரார் வயல் சூழ்ந்த
காணியைப் பல்துறைக்காய் பற்றுதற்கே—வாணியமர்
குருகுலமொன் றே யமைக்கக் கோதிலதி காரி
தருவதற்குந் தூண்டினார்தான்

கட்டளைக் கலித்துறை

16. தன்னை நடாத்துந் தனியரன் நாமந் தனைமறவாது
என்னை நடாத்து மினியவனே யிந்த வையமெல்லாம்
முன்னை நடாத்தி யவரவர்க் கேற்ற முகந் தளிக்கும்
அன்னை நடாத்திடென் றன்பினர் வேண்டினர்
அப்பனையே

அருள் பட்டஞ் சூட்டுதலும் தாபன மேன்மையும்
நேரிசை வெண்பா

17. அப்பனையே நாடு மடியார் குழாத்திற்குச்
செப்பரிய சேவைதனைச் செய்தேத்தும் ஒப்பரிய
தொண்டர் கணேசன் துணையாகு மந்நிலையைக்
கண்டார் அருள்செய்தார் காண்.

கட்டளைக் கலித்துறை

18. காட்சியின் மூழ்குங் கணேசனார் தஞ்சேவை காண்பரிய
மாட்சியதாகலும் மன்னுங் குருவடி வேலவர்க்கு
ஆட்சிய தாகும் அருட்பட்டஞ் சூட்டி அனைத்தையுமே
தாட்சியி லாதுநற் றாபன மேன்மையுந் தந்தனரே

நேரிசை வெண்பா

19. தாங்குந் திருவருள் தந்த குறிப்பறிந்து
ஆங்கே யருள் வடிவேலடிகள் - பாங்காய்
கணேசர்க்கு மாதேவர்ப் பட்டங் கரத்தால்
துணையாகச் சூட்டினார் தொட்டு

சிவயோக சமாதி எய்துதல்
கட்டளைக் கலித்துறை

20. தொடரும் பிரமோதூத ஆனியில் ஆயிலி யத்திலன்று
சுடரும் வடிவேற் சுவாமிகள் தொண்டர் குழாம் பரவ
படரும் பிறப்பறுத் தேசிவ யோக பதமடைந்தார்
இடரும் அகன்றனர் ஏத்தினர் யாவரும் வெண்ணீறணிந்தே

தவத்திரு வடிவேற் சுவாமிகள் வரலாறு குறித்த
திருவிரட்டை மணிமாலை முற்றிற்று.



# ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் சில நினைவுகள்

திரு. பொ. நடராஜா
அண்ணா தொழிலகம்,
இணுவில்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மையமாக விளங்கும் இணுவில் கிராமத்தில் தமிழும் சைவமும் இசையும் விவசாயமும் கைத் தொழில்களும் செழிப்புற்று விளங்கிய ஆங்கிலேய ஆட்சிக்காலம். அன்று சன்னாசிக் கந்தர் என்று பக்தியுடன் அழைக்கப்பட்ட திரு. கந்தர் தம்பதிகள் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டு தவ வாழ்க்கை நடாத்துங்கால் தாம் குடியிருந்த காணியிலேயே ஸ்ரீ பரமானந்தவல்லி அம்பாள் எனும் தமது குலதெய்வத்துக்கு வழிபாட்டு ஸ்தலத்தை ஸ்தாபித்து ஆராதித்து வந்தார்கள். இவர் கள் குலதெய்வ வழிபாட்டு மகிமையாலும் இணுவில் மஞ்சத்தடி எனும் குறிச்சியில் வசித்து இணுவில் கந்தசுவாமி கோவில் அற்புத மஞ்சம், காரைக்கால் சிவன் ஆலயம் ஆகியவற்றுக்கு நிர்மாண கர்த் தாவாகவும் பல சித்துக்கள் திருவருட்டுணை கொண்டு இயற்றிய வருமாகிய பெரிய சன்னாசியார் என்றழைக்கப்பட்ட ஏககாலத்தில் வாழ்ந்த அருள்வள்ளல் ஸ்ரீ சுப்பிரமணியம் சுவாமியாருடைய அருட் கடாக்ஷத்தாலும் பல பெண் குழந்தைகளுக்குப் பின் ஏகபுத்திரனாக அவதரித்தார்.

தவச் சூழ்நிலையில் வளர்ந்த காரணத்தாலும் முன்ஜன்ம சிலத் தாலும் ''ஞானப்பசி''யுள்ள குழந்தையாக வடிவேல் எனும் நாமம் தாங்கி ஆரம்பக் கல்வியை அக்காலத்தில் அம்பிகைபாக வித்தியா சாலை என்றழைக்கப்பட்ட இணுவில் சைவப்பிரகாச வித்தியால யத்தில் ஆரம்பித்து அங்கு கல்வி பயின்றார். அதோடு சேதர் சட்டம் பியார் மாணிக்கவாசக உபாத்தியார் ஆகியோராலும் தமிழ், சைவம், கணிதம் கல்வியூட்டப்பட்டு இசையுடன் திருமுறைகள் பிழையற ஓதவும் பயின்று வந்தார். பெற்றோருடன் விவசாயத்தில் ஓய்வு நேரங்களைச் செலவிட்டாலும் பெரிய சன்னாசியார் நயினா தீவுச் சாமியார் யோக சுவாமியார் ஆகிய தவசீலர்களின் தொடர் பையும் வளர்த்துக் குலதெய்வமான ஸ்ரீ பரமானந்தவல்லி ஆலயத் தின் அருட்கிரியைகளிலும் இடையறாது கலந்துகொண்டார். திருவருள் நாட்டமே மேலோங்கியிருந்த காரணத்தால் ஆன்மீகப் பணிகள் நலிவடையாத பிரகாரம் நித்திய பிரமசார்யத்தை அனுஷ்டிக்க முற்பட்டார்.

அக்காலகட்டத்தில் குடும்பப் பொறுப்புகள் குறைந்தபோதிலும் பெற்றோரின் முதுமைக்காலத் தொண்டுகளைக் கருத்தில் கொண்டு விவசாயத்தில் ஈடுபட்டதுடன் ஓய்வு நேரங்களில் இலக்கண இலக்கிய சமய சம்பந்தமான ஏராளமான நூல்களைத் தேடித் தன் ஞானப் பசிக்கு உரமேற்றியதுடன் ஊரிலுள்ள சிறுவர்களை அழைத்துக் கோவில் மடத்தில் தினமும் தேவாரம் முதற்கொண்டு திருப்புகழ் சிறாணபஞ்சபுராண படனமும் திருமந்திரம் முதல் அருட்பாக்கள் வரையும் இசையுடன் படனம் தானும் அதில் லயப்பட வாழ்ந்தார். அதோடு ஓர் அரிய சமயப் பிரசங்கியாகவும் பல காலம் பல ஸ்தலங்களிலும் இசைச் சொற்பொழிவுகளை நடாத்தியும் வந்தார். இக் காலகட்டத்தில் இரு தடவைகள் திருத்தல யாத்திரையாக தமிழ் நாடு சென்று பல விசேட புண்ணியஸ்தலங்களையும், தீர்த்தங்களையும், இரமணரிஷி முதலான மகான்களையும் தரிசித்தும் வந்துள்ளார்.

இதன்பயனாக கதாப்பிரசங்கங்களில் நந்தன்-சரித்திரம், சமய குரவர் வரலாறுகள் என்பன முக்கிய இடம் வகித்து கேட்போரைப் பரவசமடையச் செய்தன. ஆஜான பாகுவான தெய்வீகத்தோற்ற முடைய திருவடிவேல் சுவாமியார் கையில் கெச்சைத்தாள் ஒலிக்கும். இசைமாரியுடன் சொன்மாரியும் பொழியும்போது லயித்துப் பக்தர் கூட்டம் மெய்மறந்து கேட்டிருக்கும் காட்சியே அலாதி. அக்காலகட்டத்தில் இவரைத் தேடிப் பல ஊர்களிலிருந்தும் பக்தர்கள் வருகை பெருகத் தொடங்கியது. குடிஇருந்த நிலப்பரப்பும் சிறிது. எனவே பெற்றாரது அந்தியக் கடன்கள் நிறைவேற்றியதும் தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் முகமாக அந்நாள் அரச அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் உதவியுடன் கிளிநொச்சி ஜயந்தி நகரில் விசாலமுடன் காணி நிலம்பெற்று அதைத் திருத்தி வளமாக்கியதுடன் தற்போதைய மகாதேவ ஆச்சிரமத்தை சைவ அன்பர்கள் துணைகொண்டு அமைத்துச் சைவப்பணியை மேற்கொண்டார். அவரது சாந்த சுபாவமும் ஞானத் தெளிவும்—தொண்டின் மகிமையும் அருள்துணையும் இவ்வாச்சிரமத்தை இன்றைய நிலைக்கு உயர்த்தியது.

மேலும் அவர் தீர்க்க தரிசனமாக தமக்குப்பின் தனது வாரிசாக அருட்பெருஞ் சீடர்களுள்ளே தவத்திருவாக விளங்கிய ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள் என நாமகரணம் சாத்தி குருபீடாரோகண விழாவையும் நடத்திவைத்துள்ளார்கள். அதன் பின் மகா சமாதி அடைந்தார்கள். என்னே அவரின் அருஞ்செயல்.

அருட் குருநாதர் தமிழோடு சைவத்துக்கும் இசைக்கும் ஆற்றிய பணிகளை அவர் சமாதி எய்திய ஓராண்டு பூர்த்தியைக் கொண்டாடும் சைவத் தமிழ் மக்கள் பக்திசிரத்தையுடன் வருடா வருடம் விழா எடுக்க கடப்பாடு உடையர் என்பதை வலியுறுத்துவதோடு எமது ஸ்தாபனத்துடன் சம்பந்தமுற்ற அனைவரதும் நல்வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கிறோம்.

ஓம்சாந்தி!



# ஞானப்பழம்



ஓம் பரப் பிரம்மனே நம:
ஓம் குருப்பியோம் நம:

**சுவாமி சிதாலட்சுமி அம்பாள், ஸ்ரீலட்மிபதி ஆனந்தா ஆச்சிரமம், ஸ்ரீநகர் சஞ்சிவி மலை அடிவாரம். இராஷ பாளையம் தமிழ்நாடு.**

**குருஸ்துதி**

"பாச மனைத்தையும் தனித் தனி பரிந்திட நீக்கி,
நேசமாகிய அறிவுரு நீயெனக் காட்டி,
பேசும் ஏழ்வகை பிறப்பு உனக்கில்லையெனப் பேசி,
தூசு நீக்கிய சுயஞ்சிதாகாசனைத் தொழுவோம்."

ஞானம் என்பது சிற்சொரூபம் நிஸ்காம கர்மத்தினால்தான் இதுகைகூடும். இது களங்கமில்லா விவேகிகளுக்கு கணத்திலே கைவரப் பெறும். கேள்வி ஞானம், தெளிந்த சிந்தனை, தத்துவ விசாரணை மேற்கொண்டு பேதமை நீங்கி நல்லறிவு தோன்றினால் அவர்களை காமாதி விகற்பங்கள் தாக்காது. இதை எவ்வாறு அடையப்பெறுவது எனில் வாசியோகத்தினால் வருவதல்ல. பின் எப்படியெனில் பிறரிடம் கற்றதனால் மற்றல்ல கற்றனதயே நேர்மையாய், செவ்வியதாய், தன்னைத்தானே தனக்குள்ளே விசாரணையினால் வருவதொன்றாகும்.

ஞானம் என்றால், அறிவை அறிவால் அறியும் அறிவு. சிந்திய பாலை திரும்ப எடுக்க முடியாது. ஆகவே இளமை மீண்டும் வராது. காலம் போனால் வராது என்று பாரதத்தில் தர்மர் யக்ஷனிடம்

பதில் கூறியதாக நமக்கு அறிவிக்கின்றது. இது தர்மரின் ஞானத்தை அன்றோ நமக்குப் போதிக்கின்றது. அப்பர் பெருமானோ தெளிந்த ஞானத்தினால் அன்றோ ''சங்க நிதி, பதுமநிதி இரண்டும் தந்து'' என்னும் திருத்தாண்டகப்பாடல் முடிபில் ''கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'' என்றார். இந்த அன்பையே சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாரும் இறைவன் ஸ்ரீ கண்ணபிரானின் இன்பத்தை உணர்த்த ''கற்பூரம் நாறுமோ — உன்செம்பவள வாய் தான் தித்திக்குமோ — சொல்வாய் நீ வெண்சங்கே'' என்று ஸ்ரீ கண்ணனின் மதுர இதழ்ச் சுவையை திருப்பாசுரத்தில் பாடி பக்தி ஞான சாகரத்தைப் பிழிந்து நமக்குப் பரமனின் புகழை உணர்த்தினார். ஞானம் என்றால் என்ன? எல்லாப் பொருள்களிலும் ஒன்றினைக் காண்பதே ஞானம், ஞானம் வரவேண்டும் எனில் முதலில் எந்த ஒரு செயலாக இருப்பினும் இறைவனை நினைக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் பலனுண்டு. இதை ரமண மகரிஷி ''கர்த்துராச்ஞயத்ராப்யதேபலம் — கர்மகிம்பரம் கர்மதஜஜ்டம்'' என்றார்கள். யாருக்குவேண்டுமானாலும் ஆணவம் வரலாம். ஆனால் அடியார்களுக்கு மட்டும் ''அது'' வரக்கூடாது. அப்படி வருமேயானால் தடிப்பு, அகந்தை, ஏற்பட்டுவிடும். பின் ஞானப் பழத்தைப் பறிக்கவே முடியாது.

ஞானம் என்பது வைராக்கியத்தினால் வரும். அப்படியெனில் வைராக்கியம் என்றால் என்ன? அதாவது ஞானத்தைப்பெற மரணம் நேரிடினும் அஞ்சாதே. ஒருவன் உறுதியானமனம் படைத்து எதையும் எதிர்பாராது மானமேது - அவமானமேது, பகையேது — நட்பேது. என்று தன் ஆணவத்தையிழந்து உள்ளத்துறவும் தூய்மையும் பெறுவதுதான், கூறுபடாத உள்ளத்துடன் பரப்பிரம்ம விஸ்வரூபத்தை உணர்பவன் தான் ''ஞானியாவான்''. இதையே தான் திருமூலரும் ''அறுமின் ஆசையறுமின் ஈசனோடாயினும் ஆசையறுமின்'' என்றார்.

ஞானம் இதை எங்கு வைப்பது என்று ப்ரம்மா தேவர்களிடம் கேட்டபோது தேவர்களிற்சிலர் ஆழ்கடலுக்குள் என்றும் மற்றும் சிலர் பூமிக்குள் என்றும் பிறர் ஆகாசத்தில் என்றும் கூற அதன் பின் ப்ரம்மா கூறினார் ''மனிதனுக்குப் புரியாத அவன் உள்ளத்தினுள்ளேவை'' ஆகவே தன்னைத்தான். உள்ளே நாடி ஒளிவற நோக்கினால் நீயே பரப்பிரம்மம் ஆகின்றாய் என்கிறது பகவத் கீதை. ஆகவே இருக்கிறபோதே ஒன்றும் இல்லாதது போல இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இராமலிங்க அடிகளாரும் இதனையே



''ஈயென'' கேளாமை வேண்டுமென்றார். ஆகவே ஆசைகளைக் குறைத்து உள்ளத்தை ஆண்டவன் பால் செலுத்துவதே ஞானம். கொண்ட நோயும் பாயும் நீயன்றி வேறில்லை துணையென்றார் இராமலிங்க வள்ளலார், பல விடயங்களில் ஓடுகின்ற மனமுடைய மனிதர்களுக்கு தெய்வீகம் விளங்காது, ஆகவே ஞானம் என்பது, எல்லாம் அவனுக்கே என்னும் சர்வசங்க பரித்தியாக நிலையேயாம். இறைவன் ஸௌலப்பியம் (சகலகுணங்களும்) நிறைந்தவன். எப்படி நீரானது பனிக்கட்டியாவதும், பனிக்கட்டி நீராகவும் உள்ளதோ அதே பிரகாரம் இறைவன் எங்கும் உருவமும் அருவமுமாக உள்ளான். உருவத்தைத் தொடர்பவர்கள் (சகுணவழிபாடு) பரம் பொருளை அடையலாம். ஆகவே அவர்களுக்கு ஏற்பதான உருவழிபாட்டைக் கைக்கொள்ளலாம். அதனால் அனுபவமும் ஆனந்தமும் பெறப்பெற விவேக முண்டாகி படிப்படியாக வைராக்கிய சிந்தை ஏற்பட்டு ஞான வைராக்கிய சிந்தை கிட்டும். ஆகவே உண்மை அறிவாகிய ஞானம் கிடைக்கப்பெறின் நமக்குத் தோன்றும் ஆங்கே நம் தூல உடம்பே வேதனைப்படுகிறது. ஆத்மா வேதனைப்படவில்லை என்ற நிலைப்பாடு தோன்றும். எனவே ஞானம் பெற விழையும் போது நம்முடைய மனமானது எப்படி ஓர் ஸ்பிறிங் கட்டிலில் நாம் அமரும் போது கீழே அழுந்தி இறங்குவதும் பின்னர் நாம் எழுந்தவுடன் மீண்டும் அது பழைய நிலைக்கு வந்துவிடும். அதே பிரகாரம் அலைகின்ற மனதை நிறுத்தி ஒரு நிலைப்பட முதலில் (சத்சங்கத்தை) நாடு. அதன் பிற்பாடு உண்மை அறிவும் ஆற்றலும் வெளிப்படும். இதுவே பரிணமித்து ப்ரமதோரூபத்தில் லயித்துவிடின் எப்படி வண்டு மரத்தைத் துளைக்கும் பலமிருந்தும், மென்மையாகிய மலரில் மதுவுண்டு மயங்கி அதில் அகப்பட்டுக் கொள்ளுமோ அதுபோல நீயும் பிரம்மத்தில் லயிக்கின்றதே 'ஞானம்'. ஓர் ஸ்திரிக்கு பன்னிரண்டு வருடங்கள் கழித்து மகப்பேறு உண்டாகி ஜெனித்த குழந்தை நன்கு சௌக்கியமாக இருந்து வரும் காலத்தில் மருத்துவர் தாயிடம் மேற்கொண்டு உங்களுக்குப் புத்திரப்பேறு கிடையாது என்ற பின்பு இத்தனை வருடங்கள் குழந்தைப்பேறு இன்றி மனமுடைந்த தாய் மருத்துவரின் கூற்றை அவதானித்து அக்குழந்தையின்மேல் எவ்வளவு பாசமுண்டோ அப்படிப்பட்ட உறவு இறைவன்பால் உண்டாகுமேயானால் ''அந்த ஞானம். ஞானப்பழம் என்பதாகும்.'' அத்யாத்மம் என்றால் ஆத்மா ஞானம் என்றால் அதைப் பற்றிய விசாரம். ஆகவே நம்மைப் பற்றிய விசாரணை செய்யவேண்டும். இன்பத்துக்குப் பின் துன்பமும் துன்பத்துக்குப் பின் இன்பமும் மாறி, மாறி, (துவம் துவமாக) வந்துகொண்டே இருக்கின்றது, எதுவும் நிலையாக நிலைத்து நிற்பதில்லை என்று ஸ்ரீமத் மகா பாரதம் செப்புகின்றது. ''பிரானருள் உண்டெனில் உண்டு

நற்செல்வம். பிரானருள் உண்டெனில் உண்டுநல்ஞானம். (செல்வ
நெடுமாடஞ் சென்று சேண்நோங்கி என்னும் சம்பந்தர் திருமுறையை
நினைவு கூரற்பாற்று.) பிரனருளிற் பெருந்தன்மையுமுண்டு, பிரான
ருளிற் பெரும் தெய்வமுமாமே-என்கின்றார் திருமூலரும்.'' எனவே
தவம் காரணமாக சிவனே குருவாக வருவான். ஆகவே இறையருள்
கைவரப்பெற்று விசாரம் தேவை. நமது முயற்சியால் மட்டும் ஞானம்
கைவரப்பெறாது. அவனருளாலே அவன்தாழ் வணங்கி என்றருளி
னார் மணிவாசகப் பெருமானார் சிவபுராணத்தில் தாம் திருவாய்
மலர்ந்தருளிய சிவபுராணத்தில் முதற்பகுதியில். எனவே இறையருள்
வேண்டும் அவனை எப்பொழுதும் நினைவிற்கொள்வார் முன் அவனே
சற்குருவாக வருவான். இந்த நற்பொருளைத்தானே இலங்காபுரியின்
வடபாகத்தில் யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறைப் பகுதியில்
அருளாட்சி அமைத்த சிவயோக சுவாமிகள் தம் நற்சிந்தனையில்
''என்னையெனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்'' என்று மொழி
கின்றார்கள்.

ஞானிகள் அடிக்கடி தங்கள் மனச்சேட்டையை பரிசோதனை
பண்ணிப் பார்ப்பார்கள். அதன் காரணமாக அவர்கள் ஆன்மீகப்
பாதையில் முன்னேற்றமடைவார்கள். சீர்காழி வேதியர் குலத்தில்
அவதரித்த கணநாதர் அங்கு கோயில் கொண்டுள்ள திருத்தோணி
யப்பர் சுவாமிக்கு தினசரித்திருப்பணியாம் திருநந்தவனத்திருப்
பணி, திருமஞ்சன நீர் கொண்டுவருதல், திருவிளக்கிடுதல், மெழு
கிடுதல் செய்வதோடு பலரையும் திருவைந்தெழுத்தோதவும் கற்
பித்தார்கள். ''ஞான நூல்களை ஓதுவித்தல், நல்லுரைகளை
கேட்டல், சிந்தித்தல், தெளிதல், அதன் பிரகாரம் நிட்டை
கூடுதல் என்பன ஆகும். இவ்வைந்தும் இறைவன் பாதார விந்தங்
களிற் சேர்ப்பிக்கும் எழில் ஞானபூஜை'' என்னும் சிவஞானசித்தி
யாரின் மொழிவழி செயல் முறையில் நடைமுறைப்படுத்தினார்கள்.
சுந்தரமூர்த்தி நாயனாரும் கடற்காழிக் கணநாதன் அடியார்க்கு
மடியேன் எனப் போற்றித் திருத்தாண்டகத்தில் கூறியுள்ளார்.

''நாம் தான் அது'' என்கின்ற
ஞானம் தேடினால் கிடைக்காது. இதைத்தான் 'ஞானசக்தி
ஞானம் 'அறிவு' நமக்கு ஏற்படவேண்டும். யால் உணர்ந்து' என்று தாயுமானப் பெருந்தகையார் கூறுகின்றார்.
ஸ்ரீமத் பகவத்கீதை என்பது அர்ச்சுனனுக்குக் கூறுவதுபோல் கூறி
ஞானிகளுக்கு ஞானத்தை உபதேசித்தார் பகவான் ஸ்ரீ கிருஸ்ண
பரமாத்மா. ஆகவே அத்தகைய ஞானம் பூரண அறிவு ஞானப்பழம்
என்பதாகும். உலக வாழ்வில் கட்டுண்ட குணத்தொழிலில் பற்று
அடைகின்றான். அப்படிப்பட்ட அறிவற்ற மூடர்களுக்கு நல்லறி



வுள்ளவன் 'ஞானமுடையவன்' அவர்கட்குப் போதிப்பதில்
பயனில்லை, 'க்ருத்ஸன்' அதாவது பூரண ஞானமுடையவன் மேலே
கூறப்பட்ட அறிவற்ற மூடர்கள் தாமே வலிந்து வந்து கேட்பின்
போதித்தல் நன்று என்று பகவான் பகவக்கீதையின் மூலம் ஞானத்
தின் பெருமை, மதிப்பு, மகிமை, மகத்துவத்தைப் பற்றிக் கூறுகின்றார்.
ஞானம் என்பதோ லோகசக்தியை அறிவது, 'ஞானபுருஷஹ-லோக
ஸங்கிரஹ' இந்த ஞானநிலை எப்படி வருமென கேட்பின் அஃது
ஒருவன் 'நான் ஈஸ்வரன் கரத்தில் உள்ள ஒரு கருவி' எனனும ஓர்
உணர்வைப் பெறுகின்றபோதுதான். கர்த்ருத்வா என்ற சமஸ்கிருதச்
சொல் குறிப்பிடுகிறது. 'உபநிஷத்' எனபது நமக்கு ஆத்ம ஞானத்
தைப் புகட்டி அதன் மூலம் உண்மை உணர்த்தி மோட்ஷ ஸாதனத்
தைக் காட்டுகின்றது. உபநிஸத்தின் ஸாரம்தான் கீதையின் மூலம்
ஞானமார்க்கத்தைக் காட்டுகின்றது. ஆகவே சம்சாரம் எனபது சமசார
பந்தம் என்பது அஞ்ஞானம். அந்த அஞ்ஞானமாகிய அந்தகார
இருளை நீக்கி ஒளிமயமாக்குவது உபநிஷத்து. கீழ்க்காணும் சுலோகம்
நமக்குப் புரியத்தருகிறது.

ஓம் அஸதோ மா ஸத்—கமய!
தமஸோ மாஜ்யோதிர்கமய!
ம்ருத்யோர் மா அம்ருதம்—கமய!!

ஓம் சாந்தி; சாந்தி; சாந்தி; அர்ச்சுனனுக்கு ஸோகம் என்
கின்ற ஸம்சார கவலை வந்துவிட்டது. ஆகவே அதிலிருந்து அவனை
விடுவித்து மோஷ ஸாதனையைக் கூறுகின்றார். ஞானிகள் மாயையை
ஞானத்தால் மாய்ப்பர்.

மேலே விபரித்துள்ள விளக்கப் பிரகாரம் தாங்கள் வழிநடத்தி
வருகின்ற மகாதேவ ஆச்சிரம நிகழ்வுகள் நடைபெறுவதையிட்டு
அகம் பூரிக்கின்றோம்.

ஓம்சாந்தி; சாந்தி; சாந்தி;

குருவருளுக்கு இலக்கானவன் குறிக்கோளை எய்துவான்

ஐம்பொறி யின்பவழியே தன்னையலைய விட்டவன் தான்
வந்தவாறும், போமாறும் யாதெனக் குறிக்க முன் இறந்து
விடுகிறான். ஆனால், நல்லாசிரியனது திருவருளுக்கிலக்காகி,
அவர் நல்லுபதேச மொழிக்கிணங்கத் தன்னறிவைத் தெருட்டி
நடப்பவன் தன் நோக்கத்தின் முடிவைப் பெறுகிறான்
என்பது திண்ணம்.

— விவேக சூடாமணி.

# ஈழத்துச் சமாதிக் கோயில்கள்

திரு. க. குமாரசாமி புலவர்,
பளை.

சிவயோக ஞானி செறிந்த அத்தேசம்
அவயோக மின்றி அறிவோர் உண்டாகும்
நவயோகங் கைகூடும் நல்லியல் காணும்
பவயோகமின்றிப் பரலோகமாதமே — திருமந்திரம்

சிவயோகிகள் ஞானிகள் வாழ்கின்ற, வாழ்ந்த தேசம் பவ யோகமில்லாத பரலோகமாக விளங்கும் என்பது திருமூலநாயனார் திருவாக்கு ஆகும். ஆகவே மகாஞானிகள் இந்த உலகின்கண் சில காலம் வாழ்ந்து தாங்கள் வந்த வேலை முடித்துக்கொண்டால் இத்தூல உடலை உதறிவிட்டு வானுலகம் சென்று விடுவார்கள். அம் மகானுபவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த காலத்தில் அனுட்டித்த நெறி முறைகளையும் ஞான நாட்டம் கொண்டு குருட் டினை நீக்கும் குருவினைத் தேடி அலைந்ததும் அவரவர் பக்கு வத்திற்கேற்ப குருமூர்த்தி மானுடச் சட்டை சாத்தி வந்து தரிசனம் கொடுத்த பெற்றியையும் உய்த்து உணர்தல் வேண்டும். குரு மூர்த்திகளின் தீக்ஷை மகிமையினாலும் பார்வை மிருகத்தைப் போன்று சீடனை வழிநடத்துகின்றபான்மையும் திருவருள்தலைக் கொண்ட சீடனானவன் இயம நியமாதிகளைக்கூட கடந்து சமாதி நிலை கைவரப் பெற்றுச் சீவன் முத்தர்களாக வாழ்ந்து மகாசமாதி எய்திய கதைகள் நம் நாட்டில் நிறைய உண்டு. அங்ஙனம் சமாதி எய்திய சித்தர்களின் தூல தேகத்தை அருங்குகை செய்து அதன் மேல் சிவலிங்கப் பிரதிட்டையும் செய்து பூசைபுரிந்து வழிபடல் வேண்டுமென்பதுபற்றி திருமூலர் அருளிய மணி மந்திரமாலையில் விரித்துக் கூறப்பட்டுள்ளது. மகாஞானிகளின் தூலத்தை எரித் தாலோ அன்றிப் பாரதீனமாக அழியவிடினோ அந்த நாட்டிற்கும் மன்னனுக்கும் மக்களுக்கும் பெருந்தீங்கு நேரிடும் என்று அறுதி யிட்டுக் கூறியுள்ளார். அப் பகுதியில் ஓரிரு பாடலை ஈண்டு தரு வாம்.



'அந்தமில் ஞானி தன் ஆகந் தீயினில்
வெந்திடில் நாடெலாம் வெப்புத் தீயினால்
நொந்தது நாய் நரி நுகரில் நுண்செரு
வந்து நாய் நரிக் குணவாகும் வையமே'

'எண்ணிலா ஞானி எரியுடல் தாவிடில்
அண்ணல் தங்கோயில் அழலிட்ட தாங்கொக்கும்
மண்ணில் மழை விழா வையகம் பஞ்சமாம்
எண்ணரும் மன்னர் இழப்பர் அரசே'

என்றபடி ஞானியர் தம் உடலை கெடவிடுதலோ அன்றி எரி யூட்டுதலோ கூடாதென்பது துணிவாம். அம் மகான்களது தூலத்தை எப்படிப் பேணுதல் வேண்டுமென்பதனை ஏழாந் தந்தி ரத்தில் சமாதிக் கிரியை என்ற பகுதியில் மிகவும் விரித்துக் கூறி யுள்ளார்

'அந்தமில்ஞானி அருளை அடைந்தக் கால்
அந்த உடல்தான் அருங்குகை செய்திடில்
சுந்தர மன்னரும் தொல்புவி உள்ளோரும்
அந்தமில் இன்ப அருள் பெறுவாரே'

மகா ஞானிகள் தேகம் விட்டால் அவ்வுடலைத் தன்மனை' சாலை, குளக்கரை, ஆற்றங்கரை, நன்மலர்ச்சோலை, நகரிற் புனித இடம், உன்னரும் கானகம், உயர்மலைச் சாரல் இன்னோ ரன்ன இடங்களிலே சமாதிக் கோயில் எழுப்புதல் வேண்டும் என வும்,

ஆதனம் மீதில் அரசு சிவலிங்கம்
போதும் இரண்டினில் ஒன்றைத் தாபித்து
மேதகு சந்நிதி மேவும் தரம் பூர்வம்
காதலிற் சோடசம் காணுபசாரமே

என்றபடி (பதினாறு வகையான) சோடச உபசாரப் பூசனை கள் விதிமுறை வழுவாது செய்தல் வேண்டும் என்றும் சமாதிவைக் கும்போது முக்கோணமாகக் குகை செய்து அதில் வேம்பு அல்லது வில்வ மரத்தாலாய முக்கோணப் பலகை இட்டு அதன் மேல் பஞ்ச லோகங்கள் நவமணிகள் பரப்பி அதன் மேல் தர்ப்பைப் பாயா லான ஆசனம் இட்டு அவ்வுடலை பத்மாசனத்தில் இருத்தி குப் பாயமிட்டு வெண்ணீறு இட்டு பொற்சுண்ணம் பூரித்து மாலை அணிந்து களபம், கஸ்தூரி, சந்தனம், புனுகு, பாளிதம், பன்னீர் சேர்த்து தூபம் இடுதல் வேண்டும். குற்றமற்ற சுண்ணம், திருநீறு,

கற்பூரம் ஆதியன குப்பாயத்தைச் சூழ பொலிவித்ததன் மேல் மேல் வட்டஞ்சாத்துதல் வேண்டும். இவ்வண்ணமே இதன் மேல் சிவலிங்க தாபனம் செய்யலாம். அரசு நாட்டலாம். விதி வழுவா வண்ணம் சமாதிவைத்த கோயில்களை பூசை நியமந் தவறாது செய்து ஓம்புதல் வேண்டும் எனவும் விரித்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வகையில் எழுந்த சமாதிக் கோயில்கள் இந்தியாவில் அநேகம் உண்டு. இவ்வாறமைக்கப்பெற்று பூசை நிகழும் திருத்தலங்களில் அருட்பிரவாகம் பொங்கித்ததும்பிப் பொலிவது கண்கூடாகும். உதாரணமாக தீந்தமிழ் தென்நாட்டில் போகரின் சமாதி அடைந்துள்ள பழனி, பட்டினத்தடிகளின் சமாதி அமைந்துள்ள திருவொற்றியூர் போன்ற திருத்தலங்களையும் இன்னும் தென்னாட்டில் பல்வேறு சமாதிக்கோவில்கள், வடநாட்டுச் சமாதிக் கோவில்கள், புதுச்சேரியிலுள்ள முப்பத்திரண்டு சமாதிக்கோவில்களின் அருட்பிரபாவம் பற்றிப் பேசின் விரியும் அன்றோ?

இந்த வகையிலே நமது ஈழமணித் திருநாட்டில் பல் வகையான சித்துக்கள் புரிந்து அருளாட்சிசெய்த மகாஞானியர்கள் ஆங்காங்கு சமாதியெய்தியுள்ளார்கள். அடியார்கள் அத்தூலத்தைப்பேணி வைத்து சமாதிக் கோயிலும் எழுப்பி உள்ளார்கள். முறையானே பூசனைபுரிந்து வழிபட்டும் பண்டுதொட்டே பரிபாலனம் செய்தும் வருகின்றார்கள். அவற்றுள் யாமறிந்த சிலவற்றையும் அச்சமாதிக் கோயில் எய்திய மகான்களது திருவருட்செயல்களையும் இங்கு குறிப்பிடுகின்றோம்.

## சுவாமி நிரஞ்சனானந்தர் சமாதி

இம்மகான் பாரதத்தில் நின்றும் மலையகத்தில் வந்து குடியேறிய தோட்டத் தொழிலாளி ஒருவருக்கு மகனாக அவதரித்தார். பரமகுருசுவாமிகள் என்ற பெயரோடு இளமையிலேயே துறவுபூண்டார். ஆன்மீகப் பசிதலைக்கொண்டு அலைப்ப இந்திய யாத்திரை செய்து கிடாரிப்பட்டி என்ற மலைப்பிரதேசத்தில் கடுந்தவம் இயற்றினார். திரும்பி இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்தில் பல சீடர்களை ஞானவான்களாக்கினார். குழந்தைவேற் சுவாமிகள் இவரது பிரதம சீடராகும். இவர் ஆயிரத்து தொளாயிரத்து நான்காம் ஆண்டு மாத்தளையில் மகாசமாதி எய்தினார். சேர். பொன். அருணாசலம் அவர்களது தலைமையில் அங்கு சமாதிக் கோவில் எழுந்தது. அன்று தொட்டு இன்றுவரை மக்கள் விசுவாசத்துடன் வழிபட்டு வருகின்றார்கள்.



## பெரியானைக் குட்டிச் சுவாமிகள் சமாதி

இவர் கண்டிப் பகுதியில் சிறுபராயந்தொட்டு வாழ்ந்தவர். மகாஞானி. கதிரேசன் கோவிற்படிக்கட்டிலேயே இருந்து தவம் செய்தவர். இந்தியாசென்று பற்பல சித்தியலாடல் புரிந்தவர். சித்தானைக் குட்டிச்சுவாமிகளை தமது பிரதம சீடராக்கிக் கொண்டார். கொழும்பு முகத்துவாரத்தில் சமாதி எய்தினார். செட்டிமார்கள் சேர். அருணாசலம் அவர்கள் தலைமையில் சமாதிக்கோவில் கட்டினார்கள். அதனை உள்ளடக்கியே முகத்துவாரம் சிவன் கோவிலையும் அமைத்து பூசித்துவருகிறார்கள். மக்கள் இன்றும் வெள்ளம் போற் சென்று வழிபட்டு வருகிறார்கள்.

## சுவாமி சித்தானைக் குட்டிகள் சமாதி

இவர் இராமநாதபுரத்தைச் சேர்ந்த பெருநாணியிற் சிற்றரசருக்கு மகனாக அவதரித்துக் கோவிந்தசாமி என்ற பெயரோடு வாழ்ந்தவர். இளமையில் துறவுமேற்கொண்டு இலங்கைக்கு வந்தார். கிழக்கு மாகாணத்தில் தங்கி பல்வேறு சித்துக்கள் புரிந்தார். கதிர்காமக் கந்தனை நேரிற்கண்டு ஏழு மலைகளையும் அவருடன் தரிசித்தவர். கல்முனைச் சந்தியில் இருந்து கொண்டே கதிர்காமத் திரைச்சீலை எரிகின்றதென்று தனது வேட்டியை கசக்கி அவித்தவர். இப்படியான அற்புதங்கள் புரிந்து மக்களைக் கவர்ந்த சுவாமிகள் மட்டக்களப்பு காரைதீவில் ஆடிசோதியில் சமாதி எய்தினார். ஆங்கு சமாதிக் கோவில் எழுப்பி மக்கள் ஆடிச்சோதிவிழா விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.

## தவநாத சித்தர் சமாதி

தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையிலிருந்து ஆடையின்றி கௌபீன தாரியாத் தவம்புரிந்தவர். பின்னர் இலங்கையிலுள்ள நாவலப்பிட்டியில் குயின்ஸ்பரித் தோட்டத்தில் முருகன்கோவில் கும்பாபிஷேகத்திற்கு வரும்படி பெருமாள் அம்மையார் அழைக்கவிரும்பி எழுதிவைத்த கடிதம் வீட்டிலேயே இருக்க தாமே ஞானத்தால் உணர்ந்து அத்தினத்தன்றே குவின்ஸ்பரிக்கு எழுந்தருளி வந்த மகானுபவர். தோட்டப்பகுதி மக்களுக்கு எல்லை இல்லாத சித்துக்களைப் புரிந்து காட்டி தம்வசப்படுத்தியவர். இவரது சமாதிக்கோவில் குயின்ஸ்பரித் தோட்டத்தில் அமைந்துள்ளது: மக்கள் ஆராத காதலோடு வழிபட்டு வருகின்றனர்.

## தாளையான் சுவாமிகள் சமாதி

இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள நப்புதாளை என்ற ஊரில்
முகைதீன் அல்துல் காதர் அவர்கட்கும் மீரா நாச்சியாருக்கும்
அருந்தவப்புதல்வனாய் அவதரித்தவர். 'ஜெய்கு நெய்னா முகம்மது
மஸ்தான் பாவா' என்பது இவரது பிள்ளைத் திருநாமம். இளம்
பராயத்தில் தந்தையை இழந்தார். தாத்தாவின் அரவணைப்பில்
இருந்த பாவா அவருடன் சென்று தொண்டில் இருந்த மௌன
குரு சித்தரிடம் உபதேசம் பெற்றார். தாத்தாவிடம் அனுமதி
பெற்றுக்கொண்டு உழைப்பிற்காக இலங்கை வந்தார் பல வருடங்
கள் வர்த்தகம் செய்து பொருள் ஈட்டினார். சிவன் அடியார்களுக்
கும் பக்கிர்களுக்கும் அன்னபானாதிகள் கொடுத்து ஓம்பினார்.
தொண்டியிலிருந்து குருநாதன்சாமி. சமாதி எய்தியது அறிந்து
முத்துப்பேட்டைக்குச் சென்று குரு அருளால் சித்துக்கள் வாய்க்கப்
பெற்று இலங்கை திரும்பினார் தாளையன் அச்சகம் நிறுவி வரு
வாய்களை அடியார்கட்கு செலவிட்டார். சாதனையில் மூழ்கிய
பாவா அவர்கள் ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தைந்தாம்
ஆண்டு ஆகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி மகா சமாதி
அடைந்தார். அவர்களால் இரத்மலானையில் நிறுவப்பெற்ற சமா
திக்கோவில் இன்றும் யாவரும் போற்றும்படி ஆன்மீகத்துறையில்
நிகரில்லாது விளங்குகிறது. பூசனைகளும் வழிபாடுகளும்
நிகழ்ந்தே வருகிறது.

## ஆதி குருநாதன் என்ற கடையிற் சுவாமிகள் சமாதி

இவரே யாழ்நகரிலே ஒரு ஞான பரம்பரையை உருவாக்கிய
மகா யோகி ஆவார். பெங்களூரில் நீதிபதியாகக் கடமை புரிந்த
இம் மகான் ஞான நாட்டம் கொண்டவராகி தலயாத்திரை மேற்
கொண்டு கப்பலேறி ஊர்காவற்றுறையில் வந்து இறங்கினார்.
மண்டைதீவு பகுதியில் சஞ்சரித்தார். வைரமுத்துச் செட்டியாரின்
தலை அன்பிற்குப் பாத்திரமாய் இருந்தமையால் யாழ்ப்பாணத்
திற்கு வந்து பெரிய கடையிலே தங்கிவிட்டார். இவரது ஞானமுதிர்ச்
சியையும் சித்து இயல்புகளையும் கண்ட மக்கள் கூட்டம் பின்
தொடர்ந்தது கடையிற் சுவாமிகள் என்று அடியார்களால் அன்பு
டன் அழைக்கப்பட்ட ஆதிகுருநாதன் எல்லை இல்லாத சித்துகள்
செய்தவர் ஆவர். கடைசி காலத்தில் நீராவியடிப் பிள்ளையார்
கோவிலுக்குப் பக்கத்தில் தங்கிவிட்டார். கரவருடம் புரட்டாதித்
திங்கள் புரட்டாதி நாளில் பௌர்ணமி அன்று மகாசமாதி எய்தி



னார்கள். சமாதிக்கோவில் பெரிய அளவில் கட்டப்பெற்று பூசைகள் நியமமாக நடைபெறுகின்றது.

## மகாதேவ சுவாமிகள் சமாதி

இவர் ஊர்காவற்றுறை சுரம்பொன் கிராமத்தில் இராமநாதருக்கும் அன்னபூரணி அம்மைக்கும் திருமகனாக அவதரித்தவர். கருவிலே திருவுடைய இக்குழந்தை சிறுபராயத்திலேயே ஞான நாட்டம் கொண்டுள்ளது. தம்பையா என்ற பிள்ளைத் திருநாமம் கொண்ட இம்மகான் கீரிமலையில் இருந்த ஞானியாகிய கனகரத்தினம் சுவாமிகட்குச் சீடரானார். குருநாதனிடம் மோட்ச சாதனம் பயின்றபின் அவருடன் இந்திய யாத்திரை செய்து திரும்பினார். யாழ்நகரின் பல பகுதிகளில் சைவப் பாடசாலைகளை நிறுவினார். சுந்தர்மடத்தில் சிவகுருநாதபீடம் என்ற வேதாந்த மடத்தைத் தாபித்து குருநாதனாகிய கனகரத்தினம் சுவாமிகளை தலைமைக் குருவாகக் கொண்டு வேதாந்த பாடங்களை கற்பதற்கு உறுதுணையாய் இருந்தார். ஆயிரத்து தொளாயிரத்து இருபத்திரண்டாம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதின்நான்காம் நாள் மிருகசீரிட நன்னாளில் குருநாதன் பரிபூரணம் எய்தியவுடன் சிவகுருநாத பீடத்திலேயே சமாதிவைத்து தாமே பூசையும் புரிந்து வந்தார். இதன்மேல் தவத்திரு வடிவேல் சுவாமிகளையும் சாசன் சுவாமிகளையும் தமது உத்தம சீடர்கள் ஆக்கிக்கொண்டார். ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்திரண்டாம் ஆண்டு அக்டோபர் மாதம் முப்பதாம் நாள் மகாதேவ சுவாமிகள் சிவகுருநாத பீடத்திலேதானே சமாதி எய்தினார். இன்றும் சமாதிக் கோயிற் கிரியைகள் வெகுசிறப்பாக நடைபெற்று வருகிறது.

## குழந்தைவேற் சுவாமிகள் சமாதி

இவர் வேலணையில் வசித்த சண்முகநாதருக்கும் தெய்வானைப் பிள்ளை அம்மைக்கும் அருந்தவப் புதல்வனாக அவதரித்து குழந்தைவேல் என்ற நாமத்தோடு பாலிய வயதிலே ஞானமுள்ளவராகத் திகழ்ந்தார். அக்காலத்தில் பிரபல்யமாயிருந்த ஆங்கிலமும் கற்று முதலியார் வேலைபார்த்தவர். அநுராதபுரத்திலுள்ள கதிரேசன் கோவிலைக் கட்டிவைத்தவரும் இவரே. தனக்கு மேலதிகாரியாக இருந்த ஆங்கிலேயரான நீதிபதி ஒருவர் தமிழர்களை இழிவாகப் பேசியதை சகிக்கமுடியாது வேலையை உதறித்தள்ளிவிட்டு யாழ்ப்பாணம் வந்தவர் கடையிற் சுவாமிகள் காந்தப்பார்வையிற் சிக்கி இழுபட்டார். அவருக்கே சற்சீடருமாயினார். குருநாதனின் சமாதிக் கிரியைகளை தானேமுன்னின்று செய்தார். ஆயிரத்து

தொளாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மார்ச்சு மாதம் எட்டாம் நாள் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் சமாதி எய்தினார்கள். கீரிமலையில் சமாதிக்கோவில் எடுக்கப்பெற்று பாணலிங்கப் பிரதிட்டைசெய்து வெகுசிறப்பாக பூசனை நடைபெற்று வருகிறது.

## சடையம்மா சமாதி

திருநெல்வேலி கிழக்கில் வாழ்ந்த வீரகத்திப்பிள்ளைக்கும் சின்னாச்சி அம்மைக்கும் அருந்தவக் கொழுந்தாக அவதரித்து முத்துப்பிள்ளை என்ற பெயரோடு வாழ்ந்தவர். கதிரேசு என்பவரை மணந்து இல்லற தருமத்தில் ஒழுகியவர். நல்லூர் கந்தப்பெருமானை யும் வைரவ சுவாமியையும் அடிக்கடி வணங்கித் தொண்டு பூண்டொ முகியவர். ஞானமுதிர்ச்சிபெற்று தலயாத் திரையாக கதிர்காமம் சென்று மடந்தாபித்து முருகனுக்குக் கோவில் அமைத்து விழாக்காலங் களில் கந்தபுராண படனங்களும் பஜனைகளும் அமையச்செய்து பூசித்து வந்தவர். ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்தாறாம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி அனுஷ நன்னாளில் சமாதி அடைந் தார். கீரிமலையில் சமாதிக் கிரியைகளை சிவயோக சுவாமிகள் முன்னின்று நடத்தினர். பூசைகள் சிறப்பாக நிகழ்கின்றது. இதன் மேற்புறத்தில் விஸ்வநாத சுவாமிகளின் சமாதிக் கோவிலும் உள்ளது. மக்கள் இடையறாது சென்று வழிபட்டு வருகிறார்கள்.

## அருளம்பலச் சுவாமிகள் சமாதி

இவர்வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கடையிற் சுவாமிகளுடனே ஞான உறவு கொண்டுவாழ்ந்தவர். பின் குழந்தைவேற் சுவாமிகளிடம் ஞான தீட்ஷை பெற்று சற் சீடராக ஒழுகினார். சுத்தாத்வைத அச்சியந்திரசாலையை நிறுவிச் சைவப்பணி புரிந்தவர். ஆயிரத்துத்தொளாயிரத்து இருபத்தைந் தாம் ஆண்டு ஆனித் திங்கள் அத்த நாளில் சமாதி எய்தினார். குருநாதனின் சமாதிக்குப் பக்கத்தில் சமாதிக் கோயில் எழுப்பி முறையானே பூசை நிகழ்கின்றது.

## சிக்கந்தர் சமாதி

இவர் முஸ்லிம் சமயத்துறவி. சைவத்தையும் நன்கு கற்று இரு சமயத்து மக்களும் மெச்சும்படி நல்லூரில் வாழ்ந்தவர். பழைய நல்லூர் கந்தசுவாமி கோயில் இருந்த குருக்கள் வளவு என்ற இடத்தில் சமாதி எய்தினார். அக்காலத்து அயலில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் சமாதிக் கோயிலை எழுப்பி வழிபட்டு வந்தார்கள். சைவர்



களும் சென்று வழிபட்டு வந்தார்கள் என்பது செங்கை ஆழியான் அவர்கள் எழுதிய நல்லைநகர் நூலில் காணப்படுகிறது.

## தொண்டைமானாறு செல்வச்சந்நிதி சமாதி

கோவில் மேற்புறத்தில் உள்ள பூவரச மரத்தடியில் அமர்ந்து தவஞ்செய்த ஓர் மகாஞானி உடல் விட்டதாகவும் அச் சமாதியின். மேல் பூவரசு உற்பத்தியாகி இன்றும் காட்சி அளித்துவருவதாகவும் அடியார்கள் பலரும் அங்குகூடி இருந்து யோகம் புரிவதும் பஜனை செய்வதாகவும் அமைந்து காணப்படுகிறது. இதனைப் பற்றி செல்வச் சந்நிதி கோவிற் பூசகர்களும் கந்தன் அடியார்களும் கர்ணபரம்பரை யாக பேசிவருகின்றனர்.

## சின்னத்தம்பிச் சுவாமிகள்

இம்மகாஞானியின் சமாதிக் கோவில் சாவகச்சேரியைச் சேர்ந்த மறவன் புலோவில் அமைந்துள்ளது. அடியார்கள் அநுதினமும் வணங்கி பூசை புரிந்து வருகிறார்கள்.

## கடவுட்சுவாமிகள் சமாதி

இவர் அல்வாயைச் சேர்ந்த முருகுப்பிள்ளை சுவாமிகள். நிறைந்த சாஸ்திரஞானம் கொண்டவர். செல்வச்சந்நிதியிலிருந்து அருந்தவம் புரிந்துகொண்டு அடியார்களுக்கும் சீடர்களுக்கும் ஞானஉபதேசம் செய்தவர். பிற்காலத்தில் கடவுட் சுவாமிகள் என்று அழைக்கப்பட் டவர். மௌன நிலையில் பலகாலம் இருந்தவர். சமாதிக்கோவில் மறவன் புலோவில் வைக்கப்பெற்று பூசை நிகழ்கின்றது.

## காசிப்பிள்ளைச் சுவாமிகள் சமாதி

எழுதுமட்டுவாளிலுள்ள ஒட்டுவெளியில் முருகன் ஆலயத்திற்குப் பக்கத்தில் சமாதிக் கோவில் பூசைகள் முறையானே நடைபெற்று வருகிறது.

## பொன்னம்மாள் அம்மை சமாதி

ஏழாலையை பிறப்பிடமாகக் கொண்டவர். இளமையிலே ஞானம் கைவரப் பெற்றவர். முருகேசு சுவாமிகளிடம் ஞானதீட்சை பெற் றவர். சடைவரத சுவாமிகளை தமக்கு சற்சீடராக வாய்க்கப் பெற் றவர். உசன் மடத்தில் சமாதிக் கோவில் எழுப்பப்பெற்று பூசைகள் நடைபெற்று வருகிறது.

## சடைவாத சுவாமிகள் சமாதி

அச்சுவேலியில் வாழ்ந்த ஏகாலிய வம்சத்தவராகிய சுப்பையா தம்பதிகட்கு தவப்பயனால் சற்புத்திரராய் அவதரித்தவர். சரவணை என்ற பிள்ளைத் திருநாமம்பூண்டு இளமையிலே அடியார் பத்தியில் சிறந்து விளங்கியவர். இவரது முகஒளியையும் பேரழகையும் கண்டு ஆசைகொண்ட நீராவியடியைச் சேர்ந்த ஓர் அம்மையார் தந்தை இடம் வேண்டி அழைத்துச்சென்று செல்லமாக வளர்த்தார். எட்டாம் வயதில் அங்கு வாழ்ந்த சடையிற் சுவாமிகளின் நயன தீட்சை கிடைக்கப்பெற்று ஞானமுதிர்ச்சி அடைந்தார். முருகேசு சுவாமிகளை அண்டி தீட்சை பெற்று சடைவரதர் என்னும் தீக்ஷாநாமம் பெற்று விளங்கினார். பின்பு குருவாய் மொழிப்படி பொன்னம்மாள் அம்மையைக் குருவாகக் கொண்டு தொண்டு பூண்டொழுகினார். இவருக்கு ஏழாலையில் பல சீடர்கள் உண்டு. உசன் மடத்தில் வாழ்ந்த இவர் சமாதிஅடைவதற்கு முதல் நாள் ஏழாலைக்கு வந்துசேர்ந்தார். யுவ வருடம் ஆடித்திங்கள் உத்தர நாளில் மகாசமாதி எய்தினார். ஏழாலை அடியார்கள் சமாதிக் கோவில் எழுப்பி பூசனை புரிந்து வருகின்றார்கள்.

## அருளம்பல சுவாமிகள் சமாதி

இவர் வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கருவிலே திருவுடையராதலாலே இளமையிற் துறவுபூண்டு ஞானங் கைவரப் பெற்றார். இந்திய நாட்டில் தலயாத்திரை செய்துகொண்டு புதுச்சேரியில் வாழ்ந்தவர். சுப்பிரமணிய பாரதியாருக்கு புதுவையில் குருவாக வாய்த்தவர். இம்மகானைச் சந்தித்த பாரதியார் தனது பாடல்களில் யாழ்ப்பாணத்துக் குள்ளச்சுவாமி, அழுக்குமூட்டைச் சுவாமி, மாங்கொட்டைச் சுவாமி, எனக்கு குட்டிச் சுவரைக்காட்டி பாண் கிணற்றடியில் தீட்சை தந்தானே என்று பாடிஉள்ளார்.

புதுவையில் பல சித்துக்கள் செய்து கொண்டு ஒடியே திரிபவர் ஆயினார். சுவாமி அரவிந்தர் அவர்கள் ''தான் ஒரு சமயம் புதுச்சேரியில் மேல்மாடியில் தியானம் செய்து கொண்டிருக்கும்போது மனம் குழம்பிச் சலனமடையவே வெளியில்வந்து கீழேயுள்ள வீதியைப் பார்க்கும்போது அங்கே யாழ்ப்பாணத்துச் சுவாமி நின்றாராம். தன்னைப் பார்த்து பின் ஓர் தேங்காய்ச் சிரட்டையை வீதியில் கவிழ்த்து மூடி எடுத்தாராம். உடனே தன்மனம் ஒடுக்க நிலையை எய்தியதென்று கூறியுள்ளார்கள். இவைபற்றி நாராயணக்கண்ணு எழுதிய புதுவை 'ஞானபூமி' என்ற நூலில் காணப்படுகிறது. இந்த



மகான் கடைசி காலத்தில் தான்பிறந்த பொன்னாட்டினை நாடி வந்து மௌனநிலை கைவரப் பெற்றவராகி வியாபாரிமூலையில் சமாதி எய்தினார்கள். அடியார்கள் வீரபத்திர கோவிலுக்குப் பக்கத்தில் சமாதிக் கோவில் எழுப்பி இலிங்கப் பிரதிஷ்டைசெய்து வழிபடுகிறார்கள்.

## நயினாதீவுச் சமாதிகள் சமாதி

நயினாதீவைச் சேர்ந்த ஆறுமுகம் தம்பதிகட்கு அருந்தவப் புதல்வனாக அவதரித்து முத்துக்குமாரசாமி என்ற நாமத்துடன் விளங்கியவர். பூர்வீக ஞானம் இருந்தமையால் உலகியலை வெறுத்துத்தள்ளி திருத்தலயாத்திரை செய்யத் தொடங்கினார். இந்தியாவிற்குச் சென்ற சுவாமிகள் ஆங்கு குருநாதனைச் சந்தித்து அவருடனே பல காலம் வாழ்ந்தார் ஒருநாள் குருமூர்த்தி சிஷ்யனை விளித்து நீ பிறந்த ஊருக்குச் செல்லலாம் என்றார்கள். குருவாக்கை திருவாக்காகக் கொண்டு-நயினாதீவிற்கு வந்தார்கள். நீண்ட சடைமுடியுடன் ஆலயத்தில் தங்கினார். சுவாமிஜீயின் மகத்துவத்தை அறிந்து பல அடியார்கள் கூடினர். சுவாமி அவர்களை அழைத்துக்கொண்டு தலயாத்திரை செய்வார். ஈற்றில் ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தொன்பதாம் ஆண்டு ஜனவரி மாதம் இருபத்தாறாம் நாள் நயினாதீவில் சமாதி எய்தினார்கள். அடியார்கள்கூடி காட்டுக்கந்தசாமி கோவிலின் மேற்குப் புறத்தில் சமாதிக்கோவில் எழுப்பி சோமாஸ்கந்தலிங்கப் பிரதிட்டை செய்து வணங்கி வருகிறார்கள்.

## முருகேசு சுவாமிகள் சமாதி

இவர் காரைநகரில் அவதரித்தவர் கருவிலே திருவுடையர் ஆதலின் இளமையில் துறவியாய் விட்டார். ஞானம் கைவரப் பெற்றவர். அடியார்கள் இவரைப் பேப்பர் சுவாமிகள் என்று அன்புடன் அழைப்பர். எட்டியாந்தோட்டை கணேசன் என்பாரது தோட்டத்தில் காரைநகர் மேற்கிலுள்ள நாட்டுப்பாளி என்ற இடத்தில் சமாதி எய்தினார். அடியார்கள் கோவில் கட்டி பூசைசெய்கின்றனர்.

## சுப்பிரமணிய சுவாமிகள் சமாதி

இணுவிலில் அவதரித்தவர் மகாஞானியாக விளங்கியவர். பல தவயாத்திரைகள் செய்துவந்து ஈற்றில் மஞ்சத்தடியில் சமாதி எய்தினார்கள். அன்பர்கள் கோவில் எடுத்து அருணகிரிநாத சுப்பிரமணிய சுவாமி கோவில் என்றுவழிபட்டு வருகின்றார்கள்.

## சச்சிதானந்த சுவாமிகள்

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பாலியத்தில் பற்றற்ற ஞானியாகி விட்டார்கள். பல்வேறு இடங்கட்கு யாத்திரை செய்துவந்தார். உடையார்ச்சுவாமி என்று அடியார்கள் அன்பொழுக அழைப்பார்கள். இணுவில் சிவன்கோவிலுக்குப் பக்கத்தில் கீழ்த்திசையில் சமாதிக் கோவில்கட்டி பூசனை நிகழ்கிறது.

இதன் மருங்கே அம்பலவாண சுவாமிகள் மாரிமுத்து சுவாமிகள் சமாதிகளும் நடராஜா முனிவரது சமாதிக் கோவிலும் அமைந்துள்ளன. இவ்வனைத்துச் சுவாமிகட்கும் உரியகாலத்தில் பூசை நிகழ்கிறது.

## குடைச்சுவாமிகள் சமாதி

கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கந்தையாச் சுவாமிகள் என்ற பெயரை உடையவர். இளமைக்காலத்து உலகியலை வெறுத்து சுவாமி ஆனவர். தலயாத்திரை செய்து திருக்கேதீஸ்வரத்தில் குருவருள் சித்திக்கப் பெற்றார். பின்பு கோண்டாவில் பகுதியிலே சுற்றித் திரிந்தார். கக்கத்தில் குடையை வைத்தபடி ஓடித்திரிவார். வரணி கரணவாய் பகுதிகளில் வாழ்ந்த சைவக் குருக்களாகிய பொன்னுக் குருக்கள் முதலாய அன்பர்களிடம் நடந்தே சென்று வருவார். இம்மகானை அண்டிய அடியார்கள் அனைவரும் நற்பயன் பெற்றவர்களே.

மகாசமாதி எய்துவதற்கு முதல்நாளன்று ஆத்மீக உறவினராகிய தவத்திருவடிவேற் சுவாமிகளை நாடி கிளிநொச்சியிலுள்ள மகாதேவ ஆச்சிரமம் சென்றார். அவர்களுடன் அளவளாவியபின் இன்னும் ஆறு மணித்தியாலங்களே இருக்கிறது. வடிவேல் ஐயா நீங்கள் வந்து என் கடமைகளை நிறைவேற்றி விடுங்கள் என்று கூறிவிட்டுச் சென்றார். அதன் பிரகாரம் அவர் சென்ற விரைஊர்தியே (கார்) திரும்பியும் வந்து வடிவேற் சுவாமிகளை அழைத்துச் சென்றது. அவர் கூறியபடியே முறிகண்டிப்பிள்ளையார் கோவிலுக்குத் தென்மேற்குத் திசையில் சின்னக்குட்டியார் என்னும் திருநாமம் பூண்ட ஞானியாருக்கு சமாதி வைக்கப்பெற்று இலிங்கப் பிரதிட்டை செய்யப் பெற்றுள்ளது.

## வடிவேற் சுவாமிகள்

யாழ் ஞான பரம்பரையின் வழிவந்தவரே தவத்திரு வடிவேல் சுவாமிகள் ஆவார். கற்றோரும் கலைவாணரும் தெய்வச்சால்புடை



பெரியாரும் மிக்கு வாழும் இணுவில் பதியில் கந்தர் தம்பதிகளின் அருந்தவப் புதல்வராக அவதரித்தார். இவரது பிள்ளைத் திருநாமம் வடிவேல் என்பதே. இவரது தந்தையாரின் பற்றற்ற நிலையை உணர்ந்த அவ்வூர் மக்கள் சந்நியாசியார் என்றே அன்புடன் அழைப்பார்கள். பிதாவுந் தன்மகனாகிய வடிவேல் அவர்களை இளம் வயதிலே தேவாரம் புராணங்களை பண்ணோடு ஓதப்பழக்கினார். சங்கர சுப்பையர் போன்ற மகா வித்துவான்களது சைவப் பிரசங்கத்தை தவறாது கேட்பிப்பார். இவ்வழியில் ஒழுகிவந்த வடிவேற் சுவாமிகள் ஞானநாட்டம் கொண்டவராகி தாமும் கதாகாலாட்சேபம் செய்தல் திருமுறை ஓதுதல் பிள்ளைகட்கு பண்முறை பழக்குதல் ஆகிய சிவதொண்டில் மேம்பட்டு விளங்கினார்.

கொழும்புத்துறையில் வாழ்ந்த மகா ஞானியாகிய சிவயோக சுவாமிகளுடனும் அவரது அதிஉத்தம சீடராகிய மகாதேவ சுவாமிகளிடத்தும் ஆராத அன்புகொண்டு ஞானத் தொடர்பு வைத்தார்கள். மகாதேவ சுவாமிகளைக் குருவாகக் கொண்டு கந்தர்மடத்தில் வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களை முறையாகப் பயின்றார்கள். 1952ஆம் ஆண்டளவில் சிவயோக சுவாமிகள் கிளிநொச்சியில் உருத்திரபுரத்துள்ள கடமைகளை கவனி என்று கூறியருளினார்கள். அத்திருவாக்கை உச்சிமேற்கொண்டு கிளிநொச்சி வந்து சைவப்பணி புரியலானார். பரமானந்தவல்லி அம்மையார் அவர்களையும் திரு. நல்லதம்பி, கணேசானந்த மகாதேவ சுவாமிகள் ஆகியோரையும் உத்தம சீடர்களாக்கி ஜெயந்தி நகரில் தமது குருநாதன் பெயராலேயே மகாதேவ ஆச்சிரமத்தைத் தாபித்து பல துறைகளில் சைவப் பணிபுரிந்து தவம் மேற்கொண்டு ஒழுகினார்கள். ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு மார்கழி மாதம் பன்னிரண்டாந் திகதி ரோகிணி நன்னாளில் தமது ஆச்சிரமப் பொறுப்பினை தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகளிடம் ஒப்படைத்தார்கள்.

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு ஆனித்திங்கள் இருபத்தாறாம் தேதி ஆயிலிய நன்னாளில் மகாசமாதி எய்தினார்கள். தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள் தலைமையிலேயே ஆச்சிரமத்தில் சமாதிக் கிரியைகள் நடைபெற்று முக்கோண வட்டமாக நிலமட்டத்தில் அமைக்கப்பெற்று,சமாதியில் தினமும் அபிஷேக ஆராதனை, பூஜைவழிபாடு, பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவு, தீட்சை, அருள்தானம், அன்னதானம் என்பன கிரமமாகவும் தவறாமலும் நிகழ்ந்து வருகின்றன. அடியார்கள் அன்பர்கள் பலரும் மேலும் மேலும் இவைகளிற் பங்குபற்றியும் கலந்தும் வருகிறார்கள்.

இம்மகானது சமாதிக் கோவிலை முறையாகக் கட்டியெழுப்ப அடியார்கள் முன்வரல் வேண்டும் என்ற பெருநோக்கோடு மகா சமாதி அடைந்த சுவாமிஜீ அவர்களின் ஆண்டு நினைவாக இக் கட்டுரையோடு மலராக வெளியிடுகின்றோம். நாம் அறிந்துகொள்ள வாய்ப்பில்லாத சமாதிக் கோவில்கள் இன்னும் இருக்கலாம். அன்பர்கள் அவ்வரன் முறையை அளிப்பின் நன்றி.

# நல்லைக்குருமணி சமாதிக்கோவில்

**திரு. சி. த. நடராஜன்**
மேலாளர்
நல்லை ஆதீனம்

நல்லைக்குருமணி அவர்கள் யாழ் வண்ணையில் பிரம்மஸ்ரீ எஸ். செல்லையாக் குருக்கள் அவர்கட்குப் புத்திரனாக பிங்கள வருடம் தைமாசம் இருபத்தேழாந் திகதி வெள்ளிக்கிழமை அவதரித்துள்ளார். இவரது பிள்ளைத் திருநாமம் சிவசுப்பிரமணியம் என்பதாம்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இவர் ஆரம்ப கல்வியைப் பயின்றார். பின் யாழ் இந்துக் கல்லூரியில் சங்கீதமும் பயின்று, வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம், ஜிந்துப்பிட்டி ஸ்ரீமுருகன் ஆலயம் இவை -யில் உபந்நியாசங்கள் ஆற்றியபோது சீ. எஸ். எஸ். மணி பாகவதர் என்ற புனைபெயரையும் பெற்றுக்கொண்டார். இருபத்தாறாவது வயதில் திருமணம் செய்து புத்திரபாக்கியமும் கிடைத்தது. மேலும் இடைவிடாது பிரசங்கங்கள் ஆற்றினார்.

ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்தாறாம் ஆண்டு தமிழகம் சென்று மதுரை ஆதீனத்தில் கஷாயம்பெற்று ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் என்ற தீட்சாநாமத்தைப் பெற்றுக் கொண்டார். யாழ் நகருக்கு திரும்பிவந்து நல்லூரில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமொன்றை ஸ்தாபித்தார். தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பணி ஆற்றினார்.

யோக சுவாமிகள், விபுலானந்த சுவாமிகள், சங்கர சுப்பையர், செந்திநாதையர் இவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளவர். சித்தார்த்தி வருடம் பங்குனித் திங்கள் பத்தாம் நாள் சுக்கிரவாரம் பூர்வபக்கத்தில் திருவாதிரைத் தினத்தன்று சிவபரி பூரணத்துவம் எய்தினார். அவர்களின் சமாதி நல்லை குருமூர்த்த ஆலயத்தில் அமைந்துள்ளது. அவரின் சுயம்புலிங்கம் பிரதிட்டை செய்யப் பெற்றது ஆராதனைகள் சிறப்புற நடைபெற்று வருகிறது. புராண படனங்கள், சமயபோதனைகள், வேதாகம ஆய்வுகள் என்பன அறிஞர்கள், அடியார்கள், யாவர்க்கும் உள்ளத்தெளிவையும் அருளையும் ஓங்கச்செய்து ஈற்றில் இறைவனைச் சேரும் உண்மையை உணர்த்துவனவாக அமைந்திருப்பது போற்றத்தக்கதாம்.



ஓம் சற்குருப்யோ நம:



# வேதாந்தரசம்

திரு.
வே. ச. செல்லம் நாராயணராஜா

விக்னத்வாந்த நிவாரணைக தரணிர்; விக்னாட்திரும்போத் பவ:
விக்னவ்யாளகுலோபமர்த கருடோ;
விக்னேபபஞ்சானன; விக்னோத்துங்க கிரிப்பே தனபவிர் விக்னாட
விஹல்யவாட்;
விக்னாகௌக கனப்ரண்ட பவனோ; விக்னேஸ்வர: பாதுந:||

பிரபஞ்சத்திலே உள்ள சகல ஜீவராசிகளிலே காரியம் என்பது அந்தக் காரியம் நல்ல நிலையிலே நடக்கவும், சித்திக்கவும் ஒரு சக்தி அவசியம். அதன்பொருட்டு வேதங்கள் மஹாகணபதியை சகல காரியங்களு(க்கு)ம் நிர்விக்னமாக (குறைவில்லாமல்) முடிக்கின்ற மூலப்பொருளாக வழிபடச் சொல்கிறது.

வேதாந்தம் என்பது பிரம்மவித்தை. ''ஓம்ப்ரஹ்மவிதாப்னோதி பரம்''. பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மநிலை எய்துகிறான். பிரம்மத்தை யார் நன்றாக அறிகின்றானோ அவன் ''பிரம்மவித்'' பிரம்மத்தை அறிந்தவன். பரமானந்தநிரதிசயமான பிரம்மத்தையே அடைகின்றான். அதுவே ''ஸத்யம் ஞானம் அனந்தம் பிரஹ்ம'' ருக்வேதம்.

*(1)* ருக்வேதத்தின் சிகரம்போன்ற கருத்துவிளக்கம். முடிபு யாதெனில் ''பிரக்ஞானம் பிரஹ்ம:'' என்பதுதான். ஞானமதே பிரக்ஞானம். அதாவது உண்மை அறிவாகிய அறிவுதான் ஞானம். ஆகவே நமது நிஜவடிவு ஞானமயமானதே. அதாவது ஞானத்தால் சகலமும் தெரியும். ஜகத்துப் பொருளனைத்தும் ஞானத்தில் தெரிவதாலே. ஞானத்திற்கு அன்னியப்பொருள் ஒன்றுமில்லை. ஞானத்தினாலே உணரப்படுவதால் ''ஞானமே நமது நிஜவடிவாகும்.'' ஆகவே ஞானமே பரப்பிரஹ்ம வடிவேயன்றோ! ஸர்வ ஜகத்திலும் ஞான சொரூபமானது சத்தியஞான வஸ்துதான்.'' இதுவேதான் பிரஹ்மம் என்னும் பதத்தின் பொருளுமாகும். ஆகவே மனதை பிரணவத்தில் ஓங்காரத்தில் ''ஓம்''ல் சேர்க்க வேண்டும். ஆகவே கைவல்யோபநிஷத்தில் ''யதீஹி பகவன் பிரஹ்ம வித்யாம் வரிஷ்டாம்; ஸதா ஸத்பிஹி சேவ்யமானாம் நிகூடாம்; யயாஸ்ச்சிராத் ஸர்வபாபம் விபோஹ்ய; பராத்பரம் புருஷ: யாதி வித்வான்'' – என்று பிரம்ம வித்யை யைப்பற்றிக் கூறுகிறது.

*(2)* யஜுர்வேதத்தின் முடிபானது ''அஹம்ப்ரஹ்மாஸ்மி'' என்பதாம். அகமதுவே ஜீவன். பிரம்மம் - ஈஸ்வரன். அஸ்மி - அந்தமிலா பிரம்மத்தில் ஐக்கியமாதல். அதாவது ஜீவன்பலவிதமாகிய உபாதவாதனைகளைத் தூரத்தள்ளி ஸர்வகாரணமாம் உண்மை அறிவை உணர்ந்து, உபாதியிலிருந்து நீங்கி உண்மையான அறிவாகிய ''சித்சொரூபம்'' சுத்தமான சொரூபத்தை உணர்தலேயாகும். அதாவது உண்மையை நிலைபெற்ற உயர்வாகிய பொருளை உன் உள்ளத்திற்குள்ளேயே விசாரித்து (தத்துவவிசாரணை) மாயையாகிற அஞ்ஞானத்தைத்தள்ளி, எங்கும் நீக்கமற நிறைந்து நின்ற அகண்டாகார சித்சொரூபமாம் பரப்பிரம்மத்தை உணர்ந்து பூரண பிரம்மம்நானே; அத்துவித பரப்பிரம்மம்நானே; சகலமும் தெரிகின்ற பிரம்மம் நானே; நிரவயவ பிரம்மம்நானே; சித்சுக பிரம்மம்நானே; நிரஞ்சனமான பிரம்மம்நானே; நிர்குண பிரம்மம்நானே; விகாரமிலாபிரம்மம் நானே என்ற அறிவார்ந்த ஞானம் வந்து; மனதில் ஒரு விதமான பந்தமுமின்றி பரப்பிரம்மத்தில் ஐக்கியமாதல். இதுவே ''அஸ்மி'' என்பதாகும். இதுவேயஜுர்வேத மறைமுடியாகிய ''அஹம்ப்ரஹ்மாஸ்மி''. அதாவது அழிவில்லாத ஜீவன் பரத்தில் ஐக்கியமாதல்.

*(3)* ஸாமவேதத்தின்முடிபு யாதெனில் ''தத்வமஸி'' என்பதாம். தத் + துவம் + அஸி — தத் = அதுவாக, துவம் = நீ. அஸி = இருக்கிறாய். அதாவது தத் = லக்ஷ்யமானபிரம்மரூபம் துவம் = லக்ஷ்யமான நீ. அஸி = ஐக்கியமாகிவிடுகிறாய். அதாவது எப்பொழுதும் உலகமாயை



என்னும் உபாதியிலிருந்து (நீங்கும்பொழுது) நீங்கி உண்மையான அறிவாகிய சுத்தமான ஞானசொரூபத்தை உணர்கிறாயோ அப்பொழுது நீ இரண்டுமற்று நீ அதுவாகவே ஆகிவிடுகிறாய் (ஐக்யம்) என்பதுவே. மனிதனுக்கு உண்மையான அறிவு ஏற்படுவதுதான் ஞானம். உலகம் யாவும் உண்மை என்று நினைத்து அதில் பெறும் இன்பம்தான் இன்பம் என்று அந்த மாயையில் உழன்று தாழ்வது அஞ்ஞானம். இவையாவும் மாயம் என அறிந்து பரப்பிரம்ம சொரூபமேயாவும், அதுவன்றிவேறில்லை என்றுணரும் அறிவுக்குப் பெயர் தன்னைத்தானறிதலாகும். That is Oneness '[illegible]'. அதுவாகவே நீ இருக்கிறாய் (ஆகிவிடுகின்றாய்.) எந்த இன்பத்தை துன்பமிலா இன்பம் என்று தேடி நாடி ஓடிக்கொண்டிருக்கின்றாய்? அது உன்னுள்ளேயே இருக்கிறது. ஏனென்றால் அது நீயாகவே இருக்கிறாய்; அதை நீ அறியாத தன்மையினால் நாம் தேடுவது வெளி உலகத்தைப் பொறுத்தவரையில் இருக்குமானால் அதற்குமுடிவே கிடையாது. (ஆசைகள்) அது ஒரு மாயக் காட்சியேயாகும். ஆனால் நாம் தேடுவது நமக்குள்ளேயே என்று அமைந்துவிட்டால் 'Search in by himself' அதாவது தன்னைத்தானுணர்தல் 'self realisation' என்று ஆகிவிட்டால், அது நம்மையறியாமே உண்மையாக உணர்வுடன் முடிந்துவிடும். ஆனால் இதுவும்கூட ஒரு வகையில் முடிவு இல்லாததுதான். ஏனென்றால் நாம் தேடி உணரமுயலும் பொருளும் முடிவே இல்லாத ஒன்று. அது பரப்பிரம்மமேதான். உன்னுடைய உண்மை வடிவம் ஆனந்தசொரூபம் என்பதை உணர்வாயாக என்று ஸாம வேதத்தின் முடிபாக வேதம் கூறுகிறது. காமத்தை மனத்தூய்மைக்காகச்செய்; கர்மத்தை யோகமாகச்செய். அதாவது 'நிஷ்காமியகர்மம்' பலன் கருதாதவகையில்செய். அதாவது காமத்தை காமயோகமாக மாற்றுக என்று வேதம் கூறி நம்மை ஞானமார்க்கத்திற்கு அழைத்துச்செல்கிறது. இதைத்தான் சாத்திரங்களும் பராபரமேதபபம்; காமமேபரம கர்மதஜடம்.' என்று உணர்த்துகிறார் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியும்.

*(4)* அதர்வணவேதம் கூறுகிறதாவது ''அயம் ஆத்மா பிரஹ்ம'' அயம் = வெளியிலிருக்கும் ஆத்மா = ஆத்மாவும் பிரஹ்ம: = அதுவும் ப்ரம்மமாகிற ஒன்றே என்பதுதான். அஃதெவ்வாறெனில் ஸர்வ வியாபக வஸ்துவாயிருக்கிற பரப்பிரம்மம் எல்லாவற்றையும் சிருஷ்டித்து அந்தந்த சிருஷ்டிவஸ்துக்களின் உள்ளே புகுந்தது. அதனுள் புகுந்தது எவ்வாறு என எண்ணலாமல்லவா? அது தன் சுயரூபத்தில் புகுந்ததா? அல்லது வேறு அன்னிய உருவிலா? உள்ளே இல்லாமல் வெளியே இருக்கும் பொருள்தான் உள்ளே நுழையக்கூடும். ஏற்கனவே உள்ளே இருக்குமாகில் அந்த வஸ்து எப்படி உள்ளே

நுழையமுடியும்? பிரம்மம் எங்கும் வியாபித்தது. எங்கும் நிறைந்தது. இப்படிப்பட்ட பிரம்மம் உள்ளே நுழைவதென்றால் எப்படிப் பொருந்தும்? உள்ளே நுழைவதற்கு முன்னால் உள்ளே பிரம்மம் இல்லையென்று கூறவேண்டும். அப்பொழுது பிரம்மம் வியாபகம் இல்லையென ஆகிவிடும். ஜகத் வேறு பிரம்மம் வேறு அல்ல. வீடு கட்டி ஒருவன் கிருஹப்பிரவேசம் செய்வதுபோல் ப்ரம்மம் ஜகத்தை ஸ்ருஷ்டித்து அதனுள் நுழைந்ததாக அர்த்தமில்லை. நிர்மலமான தடாக ஜலத்தில் சூர்யபிரதிபிம்பத்தைப் பார்க்கும்போது அதில் பகலவன் ப்ரவேசித்திருப்பதாக நினைக்கிறோமல்லவா! அது போலவேதான் இங்கும். ஆனால் உண்மையில் இல்லை. அவ்வளவு தான். ஸர்வவிகல்பங்களுக்கும் அதாவது சிருஷ்டிக்கும் காரணம் பிரம்மம். அது விகல்பமாயிருந்தும் தனது சுய சங்கல்பத்தினால் எல்லாமாக வேண்டிய பலவிதமான நாமரூபங்களை எடுத்துக் கொண்டது. அவ்யக்தமாக இருந்தது பல நாமரூபேதமாக வ்யக்த மான (மாறுபாடுடைய) ஜகத்தாகப் பரிணமித்தது. பரிணமித்து பிராணிகளின் இதய குகையில் பிரகாசிக்கின்றது. இந்த ஸத்திய மான பரம்பொருள் மூர்த்தமாகவும் (உருவமுள்ள) சிலைவடிவ ரூபமாகவும், அருவ (அமூர்த்த) வஸ்துக்களாயும், குறிப்பிட்ட வஸ்துக்களாகவும், குறிப்பிடமுடியாத பொருள்களாகவும், வியவ ஹார சம்பந்தமான ஸத்யவஸ்துக்களாயும், வியவஹாரசம்பந்தத்தில் பொய்யான பொருளாகவும் மற்றுமுள்ளயாவையுமாகிவிட்டது. இது 'ஸத்வஸ்து'. பாரமார்த்திக ஸத்யம் என்பதுதான் பிரம்மம். எப்போதும் எங்கும் உண்மையாக இருக்கும். 'ரஜ்ஜு ஸர்ப்பம்' கயிற்றில் தோன்றும் பாம்பு; 'ஸுக்திரஜதம்' - சிப்பியில் தோன்றும் வெள்ளி இது முதலானவைகள் பொய்யன்றோ! வியவஹாரத்திலும் (விசாரணையில்) பொய்தான். அவைகளைக்காட்டிலும் வேறான உண்மைப் பாம்பும், உண்மை வெள்ளியும் இருக்கின்றனவா! அவைகளும் ஒரு விதத்தில் பொய்தான். ஆனாலும் வியவஹாரிக ஸத்யம். பொன் - நகையாக மாறியது நாமரூபமாற்றம். உருக்கினால் மீண்டும் பொன். இப்படிச்சொல்வது கூட தவறு. அது என்றும் பொன்னாகத்தான் இருக்கிறது. அதுமாதிரி ப்ரம்மத்திற்கு நாமமும் ரூபமும் கொடுக்கும் பொழுது அது ஜகத்தாக மாறுகிறது. ஆனால் உண்மையில் ஜகத் என்று ஒன்றுமில்லை. எப்படி பொன்தான் என்றும் உள்ளதோ, அதுமாதிரி ப்ரம்மம்தான் என்றும் உள்ளது. அதனால் தான் ப்ரம்மம் ஸத்யம், ஜகத் மித்யா என்று ஞானிகள் அருள் கிறார்கள். மித்யா என்றால் இருப்பதுபோல் தோன்றுகிறதே ஒழிய உண்மையில் இல்லை என்று பொருள். ஆகவே எப்பொழுது ப்ரம்மத்திலிருந்துதான் ஜகத் உண்டானதோ, பிரம்மத்தை அறிந்தால் இந்த மேலே கூறப்பட்ட அனைத்தையும் அறிந்தமாதிரிதான்.



ஆகவே 'அயம் ஆத்மா ப்ரஹ்ம:' பகவானை அடைய வேதம், கீதம்' ஞானம் ஆகிய இந்த மூன்று வழிகள் கூறப்படுகின்றன. இந்த மூன்றும் திருப்புகழில் உள்ளது. திருமூலரும் 'வேதத்தைவிட்ட அறமில்லை வேதத்தில், ஓதத்தகும் அறம் எல்லாம் உளதர்க்க, வாதத்தைவிட்டு மதிஞர் வளமுற்ற வேதத்தை ஓதியே வீடுபெற்றார்களே' என்று அறிவுறுத்துவதை உற்றுநோக்குவோமாக. ஈஸ்வரபக்தி, குரு பக்தி உள்ளவனுக்கு நான் இந்த உடம்பில்லை என அறிவது மிக மிக எளிது. இது (ஸுஸுகம என்று கூறப்படுகிறது.) ஒரு நாளும் இந்த ஞானம் அழியாது. (அவ்யயம்) வீண்போகாது என்பது கீதை (அத். 9) நிர்க்குணம்-சிவன். (அஹம்-சிவன்) திருமால் பாற்கடலில் உறக்கம். அவரை உறங்கவைத்தது சக்தி. மாயாசக்தி நிர்க்குண பரப்ப்ரமத்தில் எப்பொழுது சேருகிறதோ அப்பொழுது அது சற்குணப் பரப்ப்ரம்மம் ஆகிறது. (மாயாலோகம்). இதுதான் சைவ சித்தாந்தம். கடவுளைக் காண வேண்டும் என்பது உன்னுடைய தேடுதலின் முடிபுஅல்ல. அது ஒரு ஆரம்பமேயாகும். ஆகவே அன்பர்களே சக்தியைக் கட்டலாம் வாருங்கள். எப்படி என்கிறீர்களா? இதோ பாருங்கள் மண்ணிலே வேலி போடலாம். வானத்திலே போடமுடியுமா? போடலாம். மண்ணிலும் வானம் தானே நிரம்பியிருக்கின்றது! மண்ணைக் கட்டினால் அதிலுள்ள வானத்தைக் கட்டியதாகாதா? உடலைக்கட்டு-உயிரைக்கட்டலாம். உயிரைக்கட்டு உள்ளத்தைக் கட்டலாம். உள்ளத்தைக்கட்டு, சக்தியைக்கட்டலாம். அந்த சக்திக்குக் கட்டுப்படுவதிலே வருத்தமில்லை. அதுவேதான் ஆனந்தோஹம் ஆனந்தோஹம் ஆனந்தம் பிரம்மானந்தம். 'ஸர்வம் பிரம்மமயம் ரேரே ஸர்வம் பிரம்மமயம். தேஹோ நாஹம் ஜீவோ நாஹம் ப்ரத்யஹ பின்னப்ரம்மைவாஹம்; பரிபூர்ணோஹம பரமார்த்தோஹம் ப்ரம்மைவாஹம் ப்ரம்மாஹம். ஆனந்தோஹம் ஆனந்தோஹம் ஆனந்தம் ப்ரஹ்மானந்தம், வியாபக சேதன ஆத்ம சிவோஹம். வ்யத்த அவ்யக்த ஸ்வரூப சிவோஹம்; ஸாக்ஷி ஸ்வப்ரகாஸ நிர்மலோஹம். நித்தியமுக்த நிராகார நிர்குணசிவோஹம... ஓம் சங்கர ஓம் சங்கர ஓம் சங்கர ஓம் என்று இந்த நிலையை உபநிஷத்துக்கள் உரைக்கின்றன. ப்ரணவம் பயமில்லாத ப்ரம்ம சொரூபம். ப்ரணவத்தை தியானிப்பதில் பயப்பட வேண்டாம். ஓங்காரமே அபர ப்ரம்மம். பரப்ப்ரம்மமும் அதுவேயாகும். அதற்கு காரணமில்லை. நாசமில்லை. உள்ளுமில்லை. வெளியுமிலலை. எல்லா ஜந்துக்களின் இதயத்திலும் பிரகாசிக்கும் பிரமமமே ஓங்காரம்.

வைசம்பாயனர் என்ற திரிசங்குராஜனிடம் ஒரு விருட்சத்தைக் காட்டி அதன்கீழ் அமர்ந்து த்யானம்செய் என்றார். அவனும் அவ்

வைசம்பாயனர் என்ற குரு திரிசங்கு ராஜனிடம் ஒரு விருட்சத்தைக் காட்டி அதன்கிழ் அமர்ந்து தியானம் செய் என்றாா. அவனும் அவ்வாறு அமர்ந்து நிஷ்டை கைகூடி ஓர்நாள் சமாதி கலைந்து 'ஓம்' என்று கூறி குருவிடம் 'அஹம் வ்ருக்ஷஸ்யரேரிவா! கிர்த்தி:ப்ருஷ்டம் கிரேரிவ! ஊர்த்வ பவித்ரோவாஜிநீவ ஸ்வம்ருதமஸ்மி! த்ரவிணம்ஸவர்சஸம்!' ஸுமேதா அம்ருதோக்ஷித:! என்று கூறி அடி தொழுதான். குரு அவனைப் பார்த்து 'அருமையான சிஷ்யனே, உனக்கு மங்களமுண்டாகட்டும். அதி உன்னத நிலையை அடைந்து விட்டாய். ப்ரம்மத்துடன் இரண்டறக் கலந்துவிட்டாய். பத்திரமாய் போய்வா' என்று விடை கொடுத்தார். மேலே கூறிய ஸ்லோகத்தின் பொருள் யாதெனில் 'நான் விருக்ஷத்தின் உயிர் நிலை. (அதாவது சம்ஸாரவிருஷம் மேலே வேருள்ளதும் கிழே கிளைகளுள்ளதுமாக ஸம்ஸாரத்தை (உலகத்தை வர்ணிப்பது வேத மரபு.) (ஆகவே பரப்ப்ரம்ம நிலையில் திரிசங்கு இந்த மந்திரங்களைக் கூறியிருக்கிறான்.) அதாவது பிரம்மமாகிய நான் ஸம்ஸார விருஷத்தின் அந்தர்யாமியாக இருந்து நடத்துகிறவன் என்பதாம், மலையின் உச்சிபோல் என் கீர்த்தி உயர்ந்திருக்கிறது. பரிசுத்தமாயும் காரணமாயும் உள்ள ப்ரஹ்மஸ்வரூபமாக நான் இருக்கிறேன். சூரியனிடம் போல் என்னிடமும் ஆத்ம தத்வம் விளங்குகிறது. அதேதான் நான். நான் பிரகாசமுள்ள தனமாகவும் சோபனமான புத்தியாகவும் விளங்குகிறேன். மரண தர்மம் எனக்கு இல்லை. குறைவற்றவனாகவும் இருக்கிறேன் என்பதாம். ஆகவே இந்த 'ஓம்' என்கின்ற அக்ஷரம் அப்யஸிக்க அப்யஸிக்க உண்மை அறிவு (ஞானம்) ஒளிவிடுகிறது.

ஓங்காரமே பிரம்மம். ஒருவன் தேவாலயத்திற்குப் போகிறேன் என்று அனுமதி கேட்பதற்கு மற்றவன் 'ஓம்' என்று சொல்லித்தான் அனுமதி அளிக்கிறான். இந்த அதி அற்புதமான வழக்குச் சொல் ஈழ நாட்டின் கண் (இலங்கையில்) உள்ளதை யாம் அங்கு வந்துற்ற பொழுது கேட்டு ஆனந்தித்தோம். என்னே நீங்கள் பெற்ற பெரும்பேறு என்று இன்றும் பெருமிதம் கொள்கிறோம். யாகம் செய்யும்பொழுது 'ஓம்சரவாய' என்று சொல்கிறார்கள். இங்கு அக்கினியைக் கூப்பிட்டு 'ஹவிஸ்' (அவிர்பாகம்) கொடுக்கும் விபரத்தை தேவர்கள் காதில் தெரிவிக்கும்படி தெரிவிக்கச் சொல்கிறார். 'ஓம்ஸோம்' என்று சொல்லியே ருக்வேதத்திலுள்ள 'சஸ்த்ர' மந்திரங்களை ஓதுகின்றார்கள். 'ஓம்' என்றே அத்வர்யு 'ப்ரதிகரம்' என்னும் மறுமொழியை ஹோதாவுக்கு அறிவிக்கிறார். பின்னும் 'ஓம்' என்றே பிரம்மாவும் அனுமதி வழங்குகிறார். 'ஓம்' என்னும் சொல்லைக் கூறியே அக்கினி ஹோத்திரம் செய்வதற்கு 'அநுக்ஞை' (அனுமதி) கொடுக்கிறார். வேதத்தை கிரஹிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வேதம் பயில வந்த மாணவனும்



முதலில் 'ஓம்' என்று சொல்லியே அத்யயனம் (ஆரம்பம்) செய்கிறான். இதனால் இந்த மாணவன் நிச்சயமாக வேதத்தை ஸ்வாதீனம் செய்துகொள்கிறான். அதாவது வேதத்தை தனதாக்கிக் கொள்கிறான். பிரம்ம பாவத்தை அடைய விரும்பும் ஸாதகனும் அதற்கு உபாயமாக ஓங்காரத்தையே சொல்கிறான். இந்த ஓங்காரம் மூலமாக ஆத்மஞானம் பெற்று அவன் நிச்சயம் ப்ரஹ்மமாகவே ஆகிவிடுகிறான்.

வேத சாஸ்திரத்தில் சொல்லியுள்ள எட்டுத் திக்குகளிலும், பதினாறு கோணங்களிலும் மேலும் கீழும் எங்கும் ஏகரசமாக விளங்குவது சுத்தப் பிரம்மமாகிய ஸர்வஸாக்ஷி. அந்த ப்ரம்மமாகிய ஈஸ்வரன் எல்லாக் கடவுளாகவும் எல்லாத் தேவர்களாகவும் எல்லா மனிதர்களாகவும், எல்லாப பிராணிகளாகவும், எல்லாப் பொருள்களாகவும் ஆகியிருக்கின்றார். காணப்படுகின்ற எல்லா ரூபமாக ரூபங்களாக இருப்பவரும் அந்தப் ப்ரம்மமே. அப்பரப் ப்ரம்மத்தைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. அந்த ப்ரம்மமே எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு மனச் சஞ்சலம் அடையாமல் நிலைபெற்றிருத்தல் வேத அந்தம் (வேதத்தின் முடிவு.) இதுவே பரிபூரண ஞானம் எனப்படுவது என்று கீதையின் வாயிலாக ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கூறுகிறார். (கீதை–அத்யாயம் 7ல்)

'ஸ்ருதி' = வேதம் பிரம்மாவிடத்திலிருந்து, அவர் வாயில் இருந்து வந்தது.

'ஸ்ம்ருதி' = பகவானிடமிருந்து ஒருவர் கேட்டுப் பின்னர் ஒருவர் மூலம் வந்தது.

'ஸ்ருதிஸ்மிருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்<br>
நமாமி பகவுத்பாத சங்கரம் லோக சங்கரம்.' } ஆதிசங்கர பகவத்பாதர்

'சிதானந்த ரூபம் சிவோஹம் சிவோஹம்' ஆகவே. வேத நான்கிலும் ருக்—ப்ரக்ஞானம்ப்ரஹ்ம:, யஜுர்— அஹம்ப்ரஹ்மாஸ்மி: ஸாமம்—தத்வமஸி, அதர்வணம்—அயமாத்மா ப்ரஹ்ம: என்று மெய்ப்பொருளை உணர்த்துகிறது. வேதம் என்பது உலகின் பாற்பட்டது. இறைநிலை (பிரம்மம்) பிரபஞ்சமாக விரிவடைவதை விளங்க வைப்பது. அனாதியானவேதம்தானே தோன்றியது. அதாவது இறைவன் உலகைப் படைப்பதற்கு முன் தோற்றுவித்த இலக்கணம். ஆக இதனை உணர்ந்த நம் ஈழத்துச் சித்தனார் ஸ்ரீ யோகஸ்வாமிகளும் நற்சிந்தனையில் 'ஆன்மாநித்தியம் என்று

படிப்போம்...சுருதி நிலையில் நிற்கும் சுகம் காட்டுவோம் என்றும், 'ஆன்மா நித்தியம் என்றாடு பாம்பே' என்றும், 'ஆன்மா நீ அறிந்திடடி' என்றும் (யோகநெறி) நானே நீ நன்மதி நீ, தானே தான் தானே தான் .....வேதம் நீ வேதியன் நீ' என்று தன்னைத் ஞானறிவதே வேதத்தின் அந்தம் எனக் காட்டுகிறார்கள். மேலும் 'நவிலுமறை நான்குமாகமமும் தேடி' என்றார்கள். இவ்வாறே சமயக் குரவர்கள் சைவத்தில் 'வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை' கண்டேனே, 'வேதமந்த்ரசொருபநமோ நமோ' 'வேத நான்கிலும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம் நமசிவாயவே' என்றும் 'ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா 'ரஸோஹமப்ஸு கௌந்தேய..... ப்ரணவ: ஸர் வவேதேஷு ஸப்த: கே பௌர் ஷம் ந்ருஷு'—கீதை அத்—7ல் கூறுகிறார். ஆக 'ததேவஸத்யம்' வேதாந்தம் கூறும் உண்மை இதுவேதான். ஆகவே வேதாந்த ரசம் இதுவே' இதனை நீவிர் கிளிநொச்சி ஸ்ரீ மகாதேவ ஆஸிரமம் ஸ்ரீ வடிவேல் ஸ்வாமிகளின் அருளாசி பெற்ற ஸ்ரீ கணேஸானந்த மஹாதேவ ஸ்வாமிகளை அணுகி உய்யுமாறு இறை பரம்பொருளைப் பிரார்த்திக்கிறோம்.

## நல்ல மழை பெய்தது

1951 இல் நீண்ட நாட்களாக மழை பெய்யாமல் கிணறுகள் வற்றித் தோட்டப்பயிர்களும் வாடி கால்நடைகளுக்கும் நோய் பரவத் தொடங்கி விட்டது.

மழை தொடர்ந்து பெய்யாது விட்டால் அழிவு அதிகமாகி விடும் என்று கருதிய (வடிவேல்) சுவாமிகள் தமது குலதெய்வமான பரமானந்த வல்லி அம்பாளுக்குப் பல குடம் தண்ணீரால் அபிடேகம் செய்யும்படியும், அம்பாளின் கருவறையின் வாசற்படியளவு உயரத்திற்கு நீரை ஊற்றித் தேக்கி வைக்குமாறும் பணித்தார்.

முதல்நாள் காலையில் தேக்கி விடப்பட்ட நீர் மறுநாள் காலையிலேயே திறந்து விடப்பட்டது. இவ்வாறு செய்து மூன்று நாட்களின் பின்னர் மரங்கள் தடிகள் செழிக்கவும் உயிரினங்கள் வாழவும் நல்ல மழை பெய்தது.

* * *

சில காலங்களில் மழை இல்லாது நெற்பயிர்கள் வாடி அதனால் விளைச்சல் குறையப் போகிறது என்று சுவாமிகள் கருதினால் தாம் உண்பதை நிறுத்தி, தியானத்தில் மூழ்கி விடுவார்கள். ''பொடு, பொடு'' என்று மழைத்துளிகள் கீழே விழும், சுவாமிகள் உளம் மகிழ்ந்து வெளியே காயப்போட்டு இருந்தவற்றை எடுத்துப் பேணுமாறு துதிப்பார்கள்.

மகாதேவ ஆச்சிரம மலர் – 1982



27-4-1982 வியாழக்கிழமை நடந்தேறிய சிவ தீட்சை வைபவத்தின்போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பெரியார்களின் விபரம்:

1. இடமிருந்து வலமாக முதலாவது தற்போது ஆச்சிரம பீடாதிபதி குருசந்நிதானம் தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள்.

2. சிவதீட்சை தரும் வரணியூர் குருக்கள் குறிச்சி பொன்னுக் குருக்கள்.

3. மகாதேவ ஆச்சிரம ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ தவத்திரு வடிவேற் சுவாமிகள்.

4. 1982ல் கொழும்பில் நடைபெற்ற அகில உலக இந்து மகாநாட்டிற்கு வருகை தந்த தமிழ் நாடு இராசபாளையம் செல்வம் நாராயண ராஜா *L.C.E. & L.S.B.T.T.(M.A.)*

# குருவே சிவமெனக் கூறினன் நந்தி

ஸ்ரீலஸ்ரீ தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள்

சாட்ஷாத் பரப்பிரமம் காலத்திற்குக் காலம் சீவராசிகளை ஆட்கொள்ளும் வண்ணம் தூல உருவெடுத்துப் பூவுலகில் அவதார புருடராகத் தோற்றி அஞ்ஞானத்தின் வசப்பட்டு கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும் உலகியல் வழக்குக்கேற்ப நடந்து அருமை பெருமையாகக் கிடைத்த மானிட ஜென்மத்தை வீணடிக்க விடாது தடுத்தாட்கொண்டு நல்லுபதேசத்தை உபதேசித்து அதன் வழியே ஒழுக வைத்து நித்தியம் அநித்தியம் இரண்டின் பாகுபாட்டைச் சந்தேகமற உபதேசித்து காலத்திற்கு காலம் மனத்தில் எழும் சந்தேக வினாக்களுக்கு ஐயமின்றி அனுபவ ரீதியாக விடையளித்தும் தானும் வாழ்ந்து காட்டியும் தானுங் கெட்டுப் போகாது தம்மை அண்டினோரையும் கெட்டுப் போகாது பரிபக்குவப்படுத்தி தேன் போன்று உண்மை நிலையை எடுத்துக் காட்டி பஞ்ச பூதங்கள் நீ அல்லை, பஞ்சப் புலன்கள் நீ அல்லை, அகக் காரணங்கள் நீ யல்லை, பஞ்சவாயுக்கள் நீயல்லை, கன்மேந்திரியங்கள் நீயல்லை என்னும் தத்துவங்களை எடுத்துக் காட்டி நீ ஆத்ம சொரூபம், தத்துவமஜி மகா வாக்கிய பிரகாரம் அதுவாயிருக்க வைத்த குருநாதரின் பாதகமலங்களை சிரமேல் தாங்கி சுவாமிஜியின் திருவாக்கிலிருந்து உதிர்ந்த சில பகுதிகளை அடியோங்கள் வெளிக்கொணர வேண்டிய கடப்பாடுடையோம்.

1956ஆம் ஆண்டு சுவாமிஜீயின் ஆச்சிரமத்திற்கு வருகை தர முடிந்து. அப்போது சுவாமிகள் மிகவும் அன்போடு அடியேனை அழைத்துச் சகல விடயங்களையும் விசாரித்துவிட்டு அதன் பின்பு குளிர்பானமும் தந்தார். பின்னர் அடியேன் பிறவித் துன்பம் நீங்குவதற்கு வழிகாட்ட வேண்டும் என்று எம்மனம் அவாவுற்று வினாவியது. அதற்குச் சுவாமிகள் ''ஓ அப்படியோ ஏன் அப்படி யோசிக்கிறீர்' என்னும் பதில் உத்தரம் கிடைத்தது. அதற்கு அடியேன் சுவாமிஜீ எல்லாத் துன்பங்களிலும் பிறவித்துன்பம் பொல்லாதது என்று படித்திருக்கின்றேன். எனவே இனிமேற் பிறவி இல்லாது இருப்பதற்கு மாற்று வழியிருந்தால் அவற்றை எடுத்துக் கூறினால் நன்று என்றுத் தரம் கொடுத்தேன். அப்படி

நீர் விரும்பின் தினசரி காலை, மாலையில் இங்கு வந்து நிரம்பப் படிக்க வேண்டும். இங்கு இருவர் தினசரி படிக்கின்றனர். அவர்களுடன் சேர்ந்து சமய சாஸ்திர நூல்களைக் கிரமந் தவறாது படித்து அதன் பிரகாரம் ஒழுக்க சீலராக இருந்து நேரம் கிடைத்த போது இங்குள்ள பணிகளை செயல்படுத்தி (ஆதி பௌதிகம், ஆதி தெய்வீகம், ஆதி ஆத்மீகம்) இவற்றை சரியாகத் திர விசாரித்து அறிந்து இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் முதலாய அட்டாங்க யோகம் இவற்றை முறையே முதல் மூன்றையும் அனுசரித்து ஒழுகிவரின் மிகுதியாக உள்ள ஐந்து நிலைகளும் தன்னில் வந்து சேரும். யோசிக்க வேண்டாம். தினசரி இங்கு வந்து போம் என்னும் வாக்கியத்தை அடிக்கொருக்கால் சுவாமிகள் கூறிக்கொண்டே இருக்கும் அக்காலத்தில் திருவாளர் த. நல்லதம்பி என்னும் பெரியவர், தொண்டர், சமூகப் பணிக்கும் சைவ சமயப் பணிக்கும் தன்னை முற்று முழுதும் அர்ப்பணித்து திருநெறிக் கழகம், மகாதேவ ஆச்சிரமம் இவற்றை அமைத்து இந்த இரண்டு நிறுவனங்களையும் மையமாக வைத்துச் சமயப் பணிகளை நடாத்தியும் நெறிப்படுத்தியும் இப்பணிகளில் மிகவும் ஆர்வமுடையவர்களை ஆச்சிரமத்திற்கு அழைத்து சுவாமிகள் வாயிலாக சமய தத்துவ விளக்கங்களை வாரிவளங்குவிப்பார்கள். அக்காலம் கிளிநொச்சி மாவட்டமாகாது, கரைச்சிப் பிரிவாக இருந்தகாலம். குடியேற்றத் திட்ட காலம். பலவகைப்பட்ட இயல்புகளைக்கொண்ட மக்கள் குடியேறினார்கள். இவர்களை வழிப்படுத்தவே 1952ஆம் ஆண்டளவில் குடியேற்றம் ஆரம்பிக்கும் காலப் போக்கில் யாழ்ப்பாணத்துச் சிவயோக சுவாமிகள் எங்கள் குருநாதனை 'ஊத்தைப் புரம் காணும் நீர் அங்கு சென்று கன வேலைகள் இருக்கிறது. அதைப் போய் பாரும்' என்று ஆசீர்வதித்து அனுப்பிய செய்தி சுவாமிகள் கதையோடு கதையாகக் கூறுவார்கள். அக்காலத்திற்றான் உருத்திரபுரம் சிவாலயம் கண்டுபிடிக்கப்பட்டுப் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்கள் வழிபாட்டுக்கு உருவாகியது. அதன் வழித்தோன்றலாக ஆங்காங்கு சைவ மக்கள் இருக்குமிடமெல்லாம் அந்த மக்களுக்கு பிடித்தமான பிள்ளையார் ஆலயமோ, முருகன் ஆலயமோ, அம்பாள் ஆலயமோ, வைரவர் ஆலயமோ, நாக தம்பிரான் ஆலயமோ சிறு சிறு அளவில் அமைக்கப்பட்டு இன்றைய காலத்தில் பெரும் க்ஷேத்திரங்களாகக் காட்சி கொடுத்தும் வழிபடுபவர்க்கு இஷ்ட சித்திகளைக் கொடுத்தும் மக்கள் அனைவரையும் தற்போதைய இன்னலில் இருந்து காப்பாற்றிக்கொண்டிருக்கின்றன மேற்படி ஆலயங்கள். இவ்வாலயங்களில் நித்தியநைமித்திய பூஜைகள், கூட்டுப் பிரார்த்தனைகள், உபன்னியாசகங்கள், வழிபாடுகள் வழுவின்றி நடைபெற செலவினத்திற்கு அரச நிலங்களை



எடுத்துக் கோயில்களுக்குக் கொடுத்த தனிப்பெரும் உரிமை திருநெறிக் கழகத்திற்கே உரியது. இதுமட்டுமல்லாது பரிபாலன சபையையும் அமைத்து அவற்றைச் சரியாக இயங்க வைத்த பெருமையும் திருநெறிக் கழகத்தையே சாரும். இத் திருநெறிக் கழகத்தை ஸ்தாபித்தவரும் நீண்ட காலம் காரியதரிசியாகவும் இருந்து ஆச்சிரமம், குருகுலம், பாடசாலைகள், பல்வேறு சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் ஆகியவைகளில் மாபெரும் தொண்டாற்றிய திருவாளர் த. நல்லதம்பி அவர்களை என்றும் மறக்க முடியாது. அருட்குருநாதன் தொடர்பால் ஆச்சிரமத்தை உருவாக்கி இப்பகுதிவாழ் மக்களுக்கு சமய நெறியைப் போதித்து அருள்வழி நடாத்தி வாழ்க்கையை வளப்படுத்தி உய்யும் நெறியை உணர வைத்த பெருமையும் அவர்களையே சாரும்.

## சுவாமிகளின் போதனையும் சாதனையும்

சுவாமிகள் ஆச்சிரமத்திற்கு வருகைதருபவர்களைவிட ஆங்காங்கு எங்கு அழைக்கின்றார்களோ அடியவர்கள் அங்கெல்லாம் சென்று ஆலயங்கட்கு அடிக்கல் நாட்டியும், அடிக்கல் நாட்டிய ஆலயங்களுக்கெல்லாம் கைவண்ணம் மிக்க சிற்பாசாரிகள், சிற்பசாஸ்திரிகள், இவர்களை அறிமுகப்படுத்தியும், பூர்த்தியான ஆலயங்களுக்கு பிரதிஸ்டா; குடமுழுக்கு விழாவும் அனுபவம் வாய்ந்த சிவாச்சாரியார்மூலம் செய்வித்தும் மக்களை வழிபாட்டு முறைகளில் ஈடுபடுத்தியும் பண்ணுடன் தோத்திரங்களைக் கற்றுக்கொடுத்தும் பயிற்றுவித்தும் வந்துள்ளார்கள்.

கிளிநொச்சிப்பகுதி மட்டுமல்லாது யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மன்னார், நாவலப்பிட்டி, தாமரைவல்லிக்குறாப், மட்டக்களப்பு, திருக்கோணமலை, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் சமயப்பணிகள் செய்ததுடன் சாத்திரநூல் பகவத் கீதையில் உள்ள பிரதான பகுதிகளை எடுத்து விளங்கவைத்து கேட்போர் அகத்தில் பதியவைத்துச் சாதனைக்குக் கொண்டுவாருங்கள் என்றும் வாக்குக்கொடுத்து பின் ஒவ்வொரு வீடுகளில் பகவக்கீதை இருக்கவேண்டும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிக்கவேண்டும். படித்த பிரகாரம் அனுட்டானத்திற்குக் கொண்டுவர வேண்டும். அதன் பிரகாரம் வாழ்க்கை நடாத்த வேண்டும். முறையாகக் கருமம் செய்தல் உத்தமம். அப்படியான கர்மம் நிஸ்காமிய கர்மமாக மாறவேண்டும். பலனை எதிர்பாராது கர்மம் செய். கர்மம் செய்யும்வேலை உன்னுடையது. பலன் இறைவனுக்குரியது. பலனை எதிர்பாராதே. இப்படியாக நிஷ்காமிகமாகக் கருமமாற்றினால் சித்தம் பரிசுத்தமடையும். அதன் நிமித்தம்

பக்தி, யோகம், ஞானம் ஆகிய மேற்பகுதிகளையும் பெற்று சிவராசிகள் முத்திப்பேற்றையடைய வழிகிடைக்கும் என்னும் பகுதியை மிக மிகத் தெளிவு பெறப்புரியவைப்பார்கள்.

1964ஆம் ஆண்டுப் பகுதியில் கனகபுரம் படித்த வாலிபர் திட்டத்திலும் இவ்வகையான வகுப்புக்கள் நடந்ததுண்டு. அப்போது,

கீழ்க்காணும் சுலோகத்தைப் படிப்பதுண்டு,

அன்னாத் பவந்தி பூதானி பர்ஜன்யாதன்னஸம்பவ:!
யக்ஞாத்பவதி பர்ஜன்யோ யக்ஞ கர்மஸமுத்பவ:!!

உணவினின்று உயிர்கள் உண்டாகின்றன. மழையினின்று உணவு உருப்படுகிறது. யக்ஞத்திலிருந்து மழைவருகிறது. யக்ஞத்துக்குப் பிறப்பிடம் கர்மம்.

பகவத்கிதை
கர்மயோகம்
அத்-3 சுலோ-14

சமய சாஸ்திர வகுப்புக்கள் நடாத்தும் காலங்களில் தோத்திர நூல்களை கற்பதுடன் சாஸ்திர நூல்களையும் கற்கவேண்டும். சாஸ்திர நூல்களில்தான் தன்னை உணரும் உண்மைகள் பொதிந்துள்ளன. எனவேதான் சாஸ்திர நூலும் தோத்திர நூலும் தவறது கற்றவன் அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம், இம் மூன்றையும் விலக்கியவனாவான். மேலும் உயர்ந்த வேதாந்த சாஸ்திரங்களில் பிரத்தானத்திரயம் என்று ஞாபகப்படுத்தும் இயல்பு உண்டு. அவையாவன பகவத்கிதை, உபநிஷதங்கள், பிரம்மசூத்திரம் என்பன இம்மூன்றையும் கற்க வேண்டும். அவன்தான் சமய சாஸ்திர நூல்களைத் துறைபோகக் கற்றவனாவான். சமயங்களின் முடிந்த முடிபையும் காண்பான். அவனே பிரம்ம சொருபியாவான். (தத்துவமஜி யாவான்) தன்னையறிந்தவன் தலைவனை அறிவான் என்ற பிரகாரம். 'தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவேநீ ஒரு தந்திரம் சொல்லல் வேண்டும் வெண்ணிலாவே' இராமலிங்கவள்ளலார்பாட்டு. இதுதோத்திரம் பண்ணு, தியானம்பண்ணு, நீ அதுவாயிரு, எல்லாம் சரியாய்நடக்கும் நடப்பிக்க ஒருத்தன் இருக்கின்றான். உன்னுடைய தலையில் தூக்கிப்போடாதே என்னும் இன்னுரைகளை எடுத்துரைத்து ஆறுதல் கூறுவதுண்டு:

## ஆச்சிரம நிகழ்ச்சிகள், நித்திய நைமித்திய பூஜைகள்

தினசரி காலை 4 மணிக்கு திருப்பள்ளியெழிச்சி, தோத்திரம் நாராயண பஜனை
காலை 8 மணி தொடக்கம் 9 மணிக்கிடையில் பூஜை,



காலை 9 தொடக்கம் 1 மணிவரை புராணம், சமய சாத்திரம் வாசித்தல்,
பி. ப. 1 மணிக்கு மதிய பூஜை,
2 மணிவரை ஓய்வு,
$2\frac{1}{2}$ மணி தொடக்கம் 5 மணிவரை ஆச்சிரம விவகாரம்,
5 மணி தொடக்கம் 6 மணிவரை தியானம்,
6 மணி முதல் 7 மணிவரை இரவு பூஜை, தொடர்ந்து பிரார்த்தனை.

இப்படித் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. திருவருட் கருணையுடன். இத்தனைக்கும் உறுதுணையாகவும், அன்னை பராசக்தியாகவும், அன்னபூர்ணியாகவும், அருட்சக்தியாகவும் இருந்து அத்தனை செயற்பாட்டிற்கு அருட்திரு பரமானந்த வல்லிஅம்மையார் பணி போற்றற் பாலது.

## சுவாமிகளின் குரு பாரம்பரியம்

ஸ்ரீ கடையிற் சுவாமிகள், நீராவியடி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்;
ஸ்ரீ கனகரத்தினம் சுவாமிகள், சிவகுருநாதபீடம், கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
ஸ்ரீ மகாதேவ சுவாமிகள், சிவகுருநாதபீடம், கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
ஸ்ரீ வடிவேற் சுவாமிகள், மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி.
ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள், மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி.

தவத்திரு வடிவேல் சுவாமிகளின் பிரதம குருநாதர் மகாதேவ சுவாமிகளின் ஜெனன தினத்தின் பேரால் மாசம் தோறும் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஆச்சிரமத்தில் விசேட பூஜை, பிரார்த்தனை, அன்னதானம், அருட்த்தானம், ஆகியவை நடைபெற்றுவந்துள்ளது. அருட் குருநாதர் 1990ஆம் ஆண்டு ஆனி மாசம் ஆயிலிய நக்ஷத்திரத்தில் (2-6-90) மகா சமாதியடைந்தார்கள். சுவாமிகள் சமாதியடைந்த ஆயிலிய நக்ஷத்திரத்தில் மாசம் தோறும் அபிடேகம், பூஜை, ஆராதனை, பிரார்த்தனை, அருட்த்தானம், அன்னதானம் ஆகியன திருவருள்துணை கொண்டு நடந்து வருகின்றது. இப் பூஜைகளுக்குரிய செலவினங்களை கிளிநொச்சிப் பகுதியிலுள்ள ஆலய பரிபாலன சபையார் பொறுப்பேற்று நடாத்திவருகின்றனர். இது போற்றுதற்குரிய விடயம். அவ்வடியார்களுக்குக் குருவருள் சித்திப்பதாகுக.

நைமித்திய பூஜைகள், ஆனி உத்தரம், சித்திரை வருடப் பிறப்பு, பௌர்ணமி புரட்டாதி, சக்தி பூஜை,
குருபூர்ணிமா தினம்,
ஆவணித்திருவாதிரை 1990ஆம் ஆண்டு தொடக்கம் ஆனி ஆயிலியம்,
நாயன்மார் குரு பூஜை (நால்வர்),
மார்கழித் திருவாதிரை,
மார்கழி ஏகாதசி, (சுவர்க்கவாயில்),
மகா சிவராத்திரி

ஆகியன நடைபெற்று வருகின்றன. இக் காலங்களில் சுவாமி ஜீயின் அருளுபதேசங்களை அடியார் பலரும் வந்து செவிமடுத்தும் சாதனை பண்ணியும் சந்தேகங்களை விசாரித்தும் அறிந்தும் செல்வது வழக்கம்.

இங்ஙனம் இம்மைக்கும் மறுமைக்கும் ஒத்ததன்மையதாய் விளங்கும் இறைவனருளே மறுமைக்கும் கைதந்துதவி நல்வாழ்வு வாழ வைக்கும். இவை ஞான நூல்கள் எடுத்துரைக்கும் உண்மை மொழியாகும். அடியார்களின், ஞானவான்களின் செய்திகள் வெளிப்படுத்தும் பரம இரகசியமும் இதுவே ஆகும். இம்மைக்கும், மறுமைக்கும் இறைவன் அருளே நின்று உதவிபுரிகின்றது. ஆனால் இரண்டு நிலைக்கும் வேறுபாடுண்டு. இம்மை மறுமைகளில் ஆன்மா மல பந்தத்தினாலே கட்டுண்டு இருக்கிறது. ஆனதன்மையால் திருவருளை அல்லது பதியைப் பற்றியறியும் வேட்கையோ அதனைப் பற்றிப் பிடிக்கும் வேகதாகமோ அதற்கேற்படுவதில்லை. செம்மையின் பத்தைப்பெறவிழைந்து நிற்கும் நிலையிலே ஆன்மா சிவபுண்ணியவசத்தால் மலபரிபாக மெய்தி தூய்மையுற்று இருக்கின்றது. அந்நிலையில்மேலாம் அருள் நாட்டத்தை அடைய அவா அடைகின்றது. அருளைப் பருகத் தாகங்கொள்கிறது.

திருவருளே குருவடிவாய் நின்று தன்னை ஆண்ட அற்புதத்தை ஆன்மா உணரும்போது முன்னைய உண்மையும் ஒருங்கே புலனாகிவிடும். பிறவிதோறும் நமக்குத் தெரியாமலே தன்னலத்தை விரும்பி நான் என்றும் எனதென்றும் இறுமாப்பெய்திப் புறம் புறம் திரிந்ததெல்லாம் நேற்றும் இன்றும் என்றும் முக்காலமும் அவ்வருளே என்னும் பேருண்மையும் புலனாகின்றது. முன்பு ஒரு காலத்தில் தத்துவ உண்மையாக இருந்த காரியம் இப்பொழுது அனுபவ உண்மையாகிவிடுகின்றது.

எனவே நாமெல்லாம் குருநெறி பிடித்து ஒழுகவேண்டும். அதனால் வாழ்வு முழுவதும் சிவபுண்ணியப்பேறு பொலியவேண்டும்,



அதன் வாயிலாக இப்பிறப்பிலேயே ஞான குரு தரிசனம் பெற வேண்டும். பேரானந்தப் பெருவாழ்வடைந்து எல்லோரும் இன்புற்றிருத்தல் வேண்டும். தாயுமான சுவாமிகளும் கூவியழைக்கின்றார்கள். பொய் வந்துழலும் சமயநெறி புகுத வேண்டாம் சேரவாரும் ஜெகத்தீரே என்றும்,

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே என்றும்''

சிவ, சிவ, சிவ
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

---

**பாடுவார் பசிதீர்ப்பாய்**

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக உண்பலிக்கு உழல்வானே
காடுநின் இடமாகக் கடு இருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீ அன்றே.

— சுந்தரர்

**யானும் உன்னைப் பரவுவனே**

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

— மணிவாசகர்

**மனமே உனக்கென்ன வாய்**

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் – சீசீ
சினமே தவிராய் திருமுறைக ளோதாய்
மனமே உனக்கென்ன வாய்.

— சிவபோகசாரம்

உ

சிவமயம்

ஸ்ரீ சற்குருவே நம

# ஆன்ம விசாரம்

## தத்துவஞான உபதேசம்

(மெய்யுணர்வுப் போதனை)

ஸ்ரீலஸ்ரீ வடிவேற் சுவாமிகளின் ஆஞ்ஞைப்படி

ஸ்ரீ மகாதேவ சுவாமிகள் நினைவு மலரைத் தழுவியது

மாநுடராகிய நமக்கு உலகத்தில் இன்பம் இருவிதம். அஃதாவது, பஞ்சப் பொறிகளாலும் மனத்தாலும் அனுபவிக்கும் விடயானந்தம் ஒன்று; மற்றது கீர்த்தி. முந்திய விடயானந்தம், தான் பஞ்சப் பொறிகளாலும் மனத்தாலும் அஃததற்குரிய இன்பங்களை நுகரும் இன்பம். மற்றக் கீர்த்தியென்றது: தான் மற்றவர்களுடைய பொறிகளுக்கும் மனத்துக்கும் இன்பத்தை நுகர்த்தும் இன்பம். இவை இரண்டும் முறையே இரத்தலும் ஈதலும் போலுமாதலால் இவற்றுட் கீர்த்தியே சிறந்தது என்பதைப் பிரயாசப்பட்டு விளக்க வேண்டுவதில்லை. தான் பிறர் பாடும் கீதத்தைக் கேட்டு மகிழ்வதற்கும், பிறர் கேட்டு உவக்கும் வண்ணம் தான் பாடுவதற்கும் எவ்வளவு தாரதம்மியம்? இதனாலன்றோ கீர்த்தியை அறிவாளிகளும் மேன் மக்களும் விரும்புவதும், மற்றை விடயானந்தத்தை அறிவினரும் கீழ் மக்களும் விரும்புவதும் வழக்காயிருக்கின்றது. மாயாகாரியமான உலகவின்பமெல்லாம் அநித்தியமேயாயினும் விடய இன்பம் அந்தந்த க்ஷணத்திலேயே அழிவது; கீர்த்தி ஆயுசு பரியந்தம் நிற்பது. மாநுடரைத் தான் ஏதொரு காரியத்தில் உவப்பிக்கிறானோ அவன் கீர்த்திமான். விளங்கச் சக்தியற்ற ஒரு சபையிலே தன் வித்தியா சாமர்த்தியத்தை இகழ்ந்தார்களாயின் அது காரணமாகத் தான் சமர்த்தனல்லனென்று அவகீர்த்தியாய் விடுமா? இனி வித்தியா சாமார்த்தியமல்லாத ஒருவன் நடிப்பால் தன்னின் மிகவிழிந்த மூடர் சபையிலே சமர்த்தன் என்று மதிக்கப்பட்டமை கொண்டு தான் கீர்த்திமான் என்று முடிந்துவிடுமா? ஆதலால் யார் யார் மதிக்கினுமென்? இகழினுமென்? உலகோர் வியக்சத்தக்க சாமர்த்தியம் தனக்குளதாக அமைந்த உண்மையே கீர்த்தி.

ஈசுவரனுடைய பஞ்சப்பொறிக்கும் இன்பஞ் செய்தல் தான் பூசை எனப்படும். எங்ஙனம்? திருச்செவிக்குக் கீதம், திருக்கண்



களுக்குத் தீபாதி உபசாரம், நாவுக்கு நைவேத்தியம், மூக்குக்குச் சுகந்த தூப சுகந்த பரிமளம், திருமேனிக்கு அபிஷேகம், மென் மலரால் அர்ச்சனை.

இனி, அவர்மேலே அவருடைய குண விசேடங்கள் பராக்கிரமங்கள் அமைய விசித்திரமான நவரச அமைதிபெறப் பாமாலை இயற்றுதல் 'கீர்த்தி' என்ற பகுப்பில் அடங்கியது. ஆதலினாலன்றே தம்மேற் பாடுதலை ஈசுவரன் விசேட பணியாகக் கொண்டாரென்பது புராணாதிகளில் வியக்கப்படுகின்றது.

பிறர் குற்றந் தூற்றலாகிய புறங்கூற்று: ஆற்றாமை, பொறாமை, செருக்கு, களிப்பு, (மதம்) என்னும் இந் நான்கு துர்க்குணமுங் காரணமாக நிகழும்.

அவற்றுள் ஆற்றாமையாவது; பிறன் தனக்குத் திமை செய்வானாக; தானும் அதைப் படவேண்டியவனாயிருப்பின் ஆற்றானாவன்; அது காரணம் பற்றியது ஆற்றாமை.

பிறன் ஆக்கங் கண்டு மனஞ் சகியாமையே பொறாமையாம். அதனால் அவனிடத்திலுள்ள இழிவுகளை எடுத்துப் பிறர்க்குச் சொல்வதே அவர் தூற்றலாகும்.

செருக்கு: தான் அது போலுங் குற்றமில்லாதவன் பிறன் மேலுள்ள குற்றத்தைத் தூற்றல்.

களிப்பு: உவகை மிகுதியினாலே பிறிதொரு காரணம் வேண்டாமலே தூற்றல்.

நீ எதைச் செய்யப் புகும்போதும் ஈசுவரனுக்குப் பிரீதியாகத் தகுவதனைச் செய்.

நீ பிற ஆன்மாக்களுக்கு யாதொரு விதமாயேனும் இம்சை செய்பவனாயிருக்கு மட்டும் ஈசுவரனுடைய தயவைப் பெறமாட்டாய்.

நீ பிறனுக்குக் கோபத்தை விளைக்கினும் இம்சையே; பொறாமையை விளைக்கினும் |இம்சையே. நீ பிறனுக்குக் காமத்தை விளைக்கினும் இம்சையே. நீ உனது வடிவழகியான மனையாளைப் பிறிதொருவனுக்குக் காட்டினாய். அதுபற்றி அவனுக்குக் காமமுண்டாயிற்று. அவனுக்குண்டான மோகத்துக்கு நீயே காரணன்;

உன்மேலே கோபங்கொண்டவன் அதைச் சாதித்தலால் அவன் தன் வருத்தந் திரும்படி, உனக்கு அவனால் வருஞ் சிட்சையை நீ சகித்தலும் அருளே (புண்ணியமே). உன் மேலே பொறாமை கொண்டவனுக்கு அது தணியும்படி தாழ்மையாய் நட.

## ஓர் தெளிவு

ஈசுவரன் தெளிவான பக்குவர்க்கேயன்றி மற்றையோர்க்குத் தன்னைச் சம்சய நிலையாகவே விளக்குவன், அதெல்லாம் பாச நீக்கத்தின் பொருட்டாக வேண்டியது பற்றியே நிகழ்வது. புரா ணாதி சாஸ்திர விருத்தங்களெல்லாம் இந்தச் சம்சய விளக்கத்தை யாக்குவதற்கே நிமித்தமாய் உண்டுபட்டன. பல திறக் கொள்கை களாய்ச் சமயங்கள் இருப்பது மிதுபற்றியே.

பிறரால் உனக்கு இம்சை உண்டாகும்போது, இதற்குக் கார ணம் ஈசுராநுக்கிரகம் உனக்குப் போதாமையே என்பதைத் தெளிவாய் அறிந்துகொள். ஆகவே, மேலும் மேலும் அங்ஙனம் ஆகாமைப் பொருட்டு நீ செய்யத்தக்கது ஈசுவர அநுக்கிரகத் தைப் பெற இடையறாமல் முயற்சிப்பதே.

பிறர் குற்றஞ் செய்த வழி நாம் பொறுக்க வேண்டுவது மற் றைப் பூதங்களாலும் தெய்வங்களாலும் தன்னாலும் நிகழ்வனவற் றைப் பொறுத்தல்போல ஈசுவர ஆஞ்ஞை என ஒத்து ஒழுக வேண்டியது. இன்னும் அதன் மேலும் ஈசுவரனுடைய தயவைப் பெறுதற்கு அதுவே முக்கிய சாதனமாயிருப்பது பற்றியும் அங்ங னம் ஒழுக வேண்டியது. இன்னும் அது மட்டோ பிறன் செய்த குற் றத்துக்கு நாம் சிட்சை செய்ய முயல்வோமானால் அநேகமாய் அக்குற்றமெனப் பட்டவை குற்றமோ அன்றோ எனச் சம்சயத் துக்கு இடமாயிருப்பது பெரும்பான்மையாதலால் உண்மை யுணர்ந்தே குற்றமென முடிபு செய்ய வேண்டியது. ஆகவே, எவ் விதத்திலும் பொறுதியே தக்கது.

நாம் உறுதியெனப்பட்ட ஆன்ம லாபத்தைப்பெற வேண்டுதற் கும் இடையறாது ஈசுவரனுக்குப் பணிசெய்ய வேண்டியது. அவன் அகோராத்திரமாய் எஞ்ஞான்றும் நம்மைப் பந்தத்தினின்று நீக் கும் வண்ணம் செய்துகொண்டு வரும் உபகாரத்திற்காகச் செய்ந் நன்றி தவறாமைப் பொருட்டும் அவனுக்கு இடையறாத பணியாள னாக வேண்டியது. உலகத்திலே நமக்குச் சம்பவிக்கும் தீங்குகளுக் கும் பரிகரிப்பாகும் பொருட்டும் அஃதே செய்யவேண்டுவது. உலகத் திலே நமக்கு இடையூறுகள் சம்பவிக்குங்கால் அவை அவனுடைய



திருவருள் நமக்குப் போதாமை பற்றியே நிகழ்வன ஆதலின் அத னைப் பெற்றுக்கொள்ளுதற் பொருட்டும் அஃதே செய்யவேண்டு வது. ஆகவே, எல்லா விதத்திலும் ஈசுவரனுக்குப் பணியாளனாக வேண்டும் என்பது உறுதியே. ஆதலால், விவேகிகள் யாவரும் யாவற் றுக்கும் பரிகாரமாக அதனையே மேற்கொள்வாராவார்.

நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடி யேனையுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே.

தனக்குத் தீங்கு செய்த பிறனுக்கு எவன் சாபம் இடுகிறானோ அவன் பதிலாகத் தீங்கு செய்வோனிலும் வல்லமை குறைந்தவன். இது சரீர வலிமை இல்லாத ரிஷிகளிடத்தே இருந்தமை சரித்திரங் களால் அறியப்படுகின்றது. உலக நடையிலே துட்டுவதென்பதும் இதுவே.

ஒருவன் தனக்குத் தீங்குசெய்த பிறன்மேல் அதற்காகப் பழி சாதிக்கும் எண்ணம் உள்ளமட்டும் தான் ஈசுவரனுக்கு அன்பன ஆகமாட்டான். அஃது அற்ற பின்பே ஈசுவரனுக்கு அன்பனாகத் தக்கவனாவான். பூதங்களாலும் தெய்வங்களாலும் நிகழ்வனவற் றிலே ஈசுவரன்மேற் பழி சாதிக்க வேண்டியதாயிருக்க அவற்றிற துணியாமை ஈசுவரன் வலியவனாயும் அகப்படற்கரியனாயும இருப பது பற்றியே. அங்ஙனமன்றோ? பிறன் தீங்கு செய்த வழி அவன மேற் பழி சாதிக்கத் துணிவது இதற்குத் திருஷ்டாந்தமாயிருக்கும். என்னையெனின், பிறன் தீங்கு செயத வழி அவன்மேற் பழி சாதிகக மனம் ஊக்கினவன் அதுபோலும் பிறவற்றிலும் அங்ஙனம் ஏன் ஊக்கான்?

தனக்கு வரும் துன்பங்களுக்கு விலகித் தப்பிக்கொள்ள வழி தேடுவது தவறு. என்னையெனின், வரும் துன்பங்கள் எதுவும் ஈசு வர ஆஞ்ஞை பற்றியே வருவன. விலகினாலும் அத்துணைத் துன் பங்கள் தன்னை வந்து பிடியாமல் விடமாட்டா. ஆதலால், வருந் துன்பங்களை உடன்பாட்டோடு சகித்துக்கொள்வது ஈஸ்வர பிரீ தியைத் தரும்.

தமக்கு மகிமையை நிலைபெறுத்த நிமித்தமென்றே மெய்யு ணர்வில்லார் பலரும் அகங்காரத்தை அபிமானிக்கின்றனர். எவன் அகங்காரத்தை அபிமானியாமல் தன் பாதுகாப்பை ஈசுவரன் துணையில் வைத்திருக்கிறானோ அவன்றான் தனக்கு மகிமையை நிலைபெறுத்துவானாவன். உலகத்திலே பிதாவானவன் தனக்கு

அடங்கித் தன்னிடத்திலே பாதுகாப்பை நம்பியிருக்கிற பிள்ளைகளுக்குத்தான் முக்கியம் பாதுகாப்பாளனாயும், அங்ஙனமாகாது தன்னிட்டம் ஒழுகும் அடங்காப் பிள்ளைகளிடத்தில் அபிமானம் வையாமலும் ஒழுகுவதும் காண்கின்றோம்.

## ஈசுவரன்

சத்தியமே யாவர்க்கும் ஈசுவரன்: சத்தியமாவது தானறிந்த உண்மைக்கு மாறுபடாத நடை. இன்ப துன்பங்களிலெல்லாம் சகல சீவர்களது நிலைமையும் நம்மைப் போலவே இருக்கக் காண்கின்றோம். ஆதலால், சகல சீலர்களையும் நாம் இன்ப துன்பங்களிலும் உறுதிப் பயனிலும் நம்மைப் போலவே பாவித்து ஒழுகவேண்டியது. சத்தியத்தை ஆள்பவன் எவனோ அவனே ஈசுவரனது உண்மையைப் பெறுபவனாவான்.

யாருக்கெனினும் தீங்கு செய்கிறவன் தனது அறியாமை காரணமாகவே அது செய்கின்றான். அறியாமையால் நிகழ்வனவற்றையெல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டியதே. அங்ஙனமன்றித் தெரிந்து செய்தானெனின், அதுவும் மோகம், பொறாமை, செருக்கு, களிப்பு என்னும் காரணங்களுள் ஒன்று பற்றியே நிகழ்ந்திருக்குமாகலின் அச்செயலெல்லாம் அறியாமை காரணமே.

நமக்குத் தீங்கு செய்தவனுக்குப் பதில் செய்து சிட்சிக்க அதிகாரி நாமல்லேம். தீங்கு செய்தவனைச் சிட்சித்தற்கு உரியான் அரசன் என்னும் உலக வழக்குப் போலவே நமக்குத் தீங்கு செய்தவனையும் சிட்சித்தற் குரியான் ஈசுவரனே என்னும் உண்மையை உணர்ந்து ஒழுக்கக்கடவேம். இரக்கம்பற்றியாயின் அது செய்யத் தகும்.

## ஞான யோகம்

காமக் குரோதாதி தீக்குணங்களும் அவற்றின் காரணமாய அகங்கார மமகாரங்களும் அழிந்து அதன் மேலும் அவை காரணமாய அசுத்த வாதனைகளும் கழன்று நினைவிறக்கும் நிலை ஞான யோகமாம்.

## தியாந யோகம் – ரூபத்தியாநம் கர்ம யோகம்

காமக் குரோதாதி துர்க்குணங்கள் முழுதும் அற்றவனுக்கு ஞானயோகமே கைகூடுவதாயிருக்கும். துர்க்குணங்கள் சில ஒழிந்தும் சில ஒழியாமலும் இருக்கும் நிலையிலே ஈசுவரன் மேலிட்ட அன்பின் மிகுதியுடையோனாகிய பக்தியோகன் தைல தாரைபோல ஈசுவரனை ரூபத்திருமேனியாக இடைவிடாது பாவித்தலே தியான



யோகமாகும். இதுவே பக்தியோகமென்பதும். துர்க்குணங்களுள் ஏதொன்றாவது அழியப் பெறாதானுக்கு அது காரணமாக நினைவொழிய மாட்டாமலிருக்கும். அதனால் அவனுக்கு ஞானயோகம் கைகூடுவதரிது. ஆயினும் இந்நிலையார் சிலருட் பக்குவ விசேடத்தினால் ஈசுவரன் மேலிட்ட அன்பின் மிகுதியுண்டாயின் நினைவுக்குக் காரணமிருக்கவும் அவற்றிற் செல்லாது அன்பால் ஈசுவரன் மாட்டிழுக்கப்படுவன், அஃது என்போலவெனின், காமமோகிய ஓர் பாலிய புருடன், தனக்குகந்த ஓர் மங்கையைக் கண்டு அவன் சிந்தனைக்குரிய விஷயங்களே அநேகம் உளவாயிருப்பவும், காம மோகத்தால் அம்மங்கையையே இடையறாது பாவிப்பான். இவனுடைய பாவனைக்குத் தேய்வுண்டாகவும் வருமாதல்போலப் பக்தியோகியின் பாவனைக்கும் தேய்வுண்டாகலாம். காமமோகியின் பாவனை சிந்தனைக்குரிய விஷய சங்கடங்கள் மேலிட்ட வழியேனும் அவண் மேலிட்ட மோகம் குன்றிய வழியேனும் குன்றவரும். இங்ஙனமே பக்தியோகிக்கும் ஒழியாதிருக்கும் துர்க்குண சேட்டை விஞ்சிய வழியேனும் ஈசுவரன் மேலிட்ட அன்பு குன்றவந்த வழியேனும் அவன் பாவனையாகிய பக்தி யோகம் சிதையும்.

துர்க்குணங்களும் உளவாயிருப்ப அவற்றை அழித்தொழியாது அவற்றை அடக்குவது மாத்திரையாகச் செய்யும் எந்த யோகமும் பயன் பெறாது. அது ஈசுவரனிடத்திலே ஏதும் காமிய பலன்களைப் பெறுதற்கு மாத்திரமே உரியது.

ஒரு ஏகாந்த ஸ்தானமான வனத்திலே ஓர் தேவகோட்டத்தின் பக்கத்தே ஒரு சாது பலகாலமாக வாசஞ்செய்துகொண்டிருந்தார். அந்தக்கோயிலின் கண்ணதாகிய தெய்வத்துக்குப் பற்பல தூர தேசங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து வழிபாடு செய்கிறதுண்டு. அந்தச் சாதுவினிடத்து பக்திமையும் பழக்கமுமுடைய இரண்டு பக்தர்களோடு ஒரு புதியோனும் வந்துஒருநாள் அவரைவணங்கி நின்றான். அப்பொழுது புதியோன் சாதுவைப் பிரார்த்தித்து, ''சுவாமீ, எனக்குள்ள ஒரு கண் குருடாயிருக்கும் இந்தத் தோஷத்தை உமது மகத்துவத்தால் மாற்றியருளல் வேண்டும்'' என்று வேண்டினான். அப்பொழுது அந்தப் பெரியவர், ''அடே பக்தா, சாதுக்கள் பிறர் வேண்டியவற்றையெல்லாம் அனுக்கிரகிக்கத் தக்கவர்களாய் இருக்க வேண்டுமென்பது அவர்க்கு நியத லக்ஷணமல்ல. தவத்தான் மேலிட்ட சிற்சிலர் மாத்திரம் தமது தெய்வத்துவத்தால் அப்படி வேண்டியவை சிலவற்றை அனுக்கிரகிக்கத் தக்கவராய் இருப்பதுண்டு. ஈசுவர சங்கற்பமாகச் சாதுக்களுள்ளும் சிலருக்கு அப்படியேதும் அனுக்கிரக பலஞ்சாதிக்க அமைந்து இருப்பதுமுண்டு. மாநுடராயிருக்கும் ஒவ்வொருவருக்கும் தேகம் அழியுங்காறும் தத்தமக்குரிய இருவினைப்

பயன்களை அனுபவிப்பது தப்பாது. அங்ஙனமாக நாம் நமக்குரிய வினைப்பயனை ஒழிக்க வல்லமாயினன்றோ பின்பு பிறர்க்குரியதை ஒழித்தல்கூடும். நல்லது, இந்த வரத்தை இங்கே அனுக்கிரக தேவதையாய் எழுந்தருளியிருக்கும் இந்தத் தெய்வத்திலிடந்தான் வேண்டுவாயாக'' என்றார். பக்தன், ''சுவாமி, அப்படிப் பலமுறை பிரார்த்தித்தும் இந்தத்தெய்வம் இதை எனக்கு அனுக்கிரகஞ் செய்யவில்லை; அதனாற்றான்உம்மிடம் வேண்டினேன் என்றான். சாது, ''அடா, மதிகெட்டவனே! தெய்வமே அனுக்கிரகிக்க இஷ்டமற்றதை மற்றை யாராவது எப்படி அனுக்கிரகித்தல் கூடும்?'' என்று அறிவூட்டினார். இருவினைப் பயனைத் தமது மலபந்தத்துக்கு மருந்தென வேண்டி நுகரும் சாதுக்கள் தாம் தமது உண்மை நெறிக்கு விரோதமாக அவற்றைப் பிறர் விஷயத்தில் நீக்க முயல்வது எவ்வாறு சித்திக்கும்? சாதுக்கள் இருவினைப் பயன்களைத் தாம் வேண்டி நுகரும் இருவினையொப்புடையோர் ஆதலின், அவர் பிறர்க்கும் அவற்றை அங்ஙனமே வேண்டுவர்.

செருக்கு: தமக்கு ஏதும் மேம்பாடு கிடைத்தமை காரணமாகத் தம்மிடத்துண்டாவது. மேம்பாடு நிலையற்றதாகலின் செருக்கு நிலையுறுதல் யாங்ஙனம்? ஆதலாற் செருக்கை ஆளுதல் மதிகேடு.

பிறன் தனக்குத் தந்த தலைப்பாகை அங்கி ஜோடுகளைப் பூண்டு செல்வானுக்கு அதுபற்றிச் செருக்கு உண்டாக இடமில்லை. அதுபோல் ஈசுவரனே நமக்குத் தரும் மேம்பாடுகள்பற்றி நாம் செருக்குறுதல் தகாது.

பிறன் எவனுக்காயினும் தான் ஒரு குற்றம் செய்தால் அதற்காக அவனுக்கு வணக்கஞ் சமர்ப்பித்து அந்தக் குற்றத்துக்குப் பொறுதி கேட்கவேண்டும். இது செய்ய உடன்பாடில்லாதவன் மூர்க்கன்; ஆண்மையற்றவன். உலகம் அறிந்த மேம்பாட்டாளன் பிறரை வணக்கஞ் செய்யப் பொறுதி கேட்கக் கூசான். எவன் அற்ப மனுஷனோ அவனே இதற்குப் பின்னிடுவான்.

தான் செய்த குற்றத்துக்குச் சிக்ஷை செய்யாமல் தன்னைக் காக்கும்படி அரசனிடத்தாயினும் ஈசுவரனிடத்தாயினும் வேண்டுதல் செய்பவன் உண்மை நெறியாகிய நடுவுநிலைமைக்கு மாறுபட்ட மூடனாவான். அவன் தான் பெற்றுச் சகிக்க வேண்டிய தண்டனைக்கு அஞ்சும் வீரமற்ற பெண்மையனுமாவன், தீங்கென்பன வெல்லாம் பிற ஆன்மாக்களுக்குச் செய்யும் இம்சையே; பிற ஆன்மாக்கள் அறிந்து மனம் வருந்துவதற்கேதுவாயிருக்கும் செயலே ஈசுவரத் துரோகம். அதுவே ஆன்மத் துரோகமுமாம்.



தான் பிறர்க்குச் செய்த குற்றத்துக்காகப் பெறக்கடவதாயிருக்கும் தண்டனைக்குத் தப்ப முயற்சி செய்பவனும் ஆண்மையற்றவனே.

பிற உயிர் ஒன்றற்குத் தான் தீங்கு செய்தபோது ''ஐயையோ! நான் இந்த உயிரை இன்ன தீங்கு செய்து வருத்தினேனே'' என்று தன்னைத்தான் நொந்து துன்புறுவதே தக்கது. இஃதன்றித் தான் செய்த அத் தீங்கிற்காகத் தண்டனை பெறாமல் தப்ப வழிதேடுவது பேரிழிவு. தான் செய்த அத் தீங்கிற்காகப் பின்பு இரங்குவதுடையானுக்கு மாத்திரமே ஒருவாறு அஃதொன்றே அத்தண்டனைக்குச் சிறிது பரிகாரமாகும். அவ் விரக்கமில்லாதவன் எத்துணைக் கடுந்தவந்தான் செய்யினும் ஈசுவரனும் அதற்குப் பரிகார பலன் கொடார்.

சத்தியத்துவத்தில் மனுஷருடைய தாரதம்மியம் எவ்வளவு மட்டாயிருக்கிறதோ ஈசுவரனும் அவ்வளவாயே அவர்களை மதித்து நடத்துவார். துருக்கிய சாதியார் இயற்கையிற்றானே முரட்டுத்தனமுடையவர்கள். அவர்களுக்காய் ''அல்லா'' வெனப் பெயர்பட்டு நிற்கும் ஈசுவரனும் அவர்கள் மற்றவர்களோடு ஒழுகும் இரக்கத்துக்குத் தக்கவிதமாய் நிக்கிரகாநுக் கிரகங்களைச் சாதிப்பர்.

உலகத்திலே சீதோஷ்ண பாகங்களுக்குத் தக்க பிரகாரமாக அங்கங்கும் மானுடர்கள் ஊண் உடை நடை முதலியவற்றிலே வேறுபட்டவர்களாயிருக்கிறார்கள். அவ்வவர்களுக்குப் பதியாயமைந்த ஈசுவரனும் தத்தம் இயல்பமைந்தவனே யென்பது அவ்வவர்க்கும் கொள்கையாயமைந்திருக்கிறது. இதனால் மறுமையில் அவ்வவர்க்குக் கிடைக்கும் மோக்ஷ பதவியும் அவ்வவர் இயல்புக்குத் தக்க புவன அண்டமாயேயிருக்கும்.

தத்தம் மதமே உண்மை என்னும் நியமமும் ஒவ்வொரு மதத்தார்க்கும் அமைந்த கொள்கையே.

எல்லா மதங்களையும் ஒரே ஈசுவரனது ஆஞ்ஞை என உணரும் உண்மை அறிவாளர்தாம் மெய்யுணர்ந்த ஞானிகளெனப்படுவார்கள்.

நீ பிறர்க்குத் தீங்கு செய்தாயாயின், அவர்க்கு அதுபற்றி உண்டான வருத்தத்தை எவ்வாறாகவேனும் நீயே பரிகரித்து அவர்களைத் திருப்தி செய்தல் வேண்டும். உன்னால் வருத்தம் அடைந்த சீவருக்கு அது தணிந்து திருப்தி உண்டாகாதவரை உனக்கு உய்வு கிடைக்கமாட்டாது. நீ பிறனுக்குச் செய்த தீங்கு

ஒன்றற்கு ஒருவிதத்தாலேனும் பரிகரிப்புச் செய்வதியலாதாயின் நீயும் அவனைப்போலவே அதுபோலுந் துயரத்தை உனக்கு உண்டாக்கி அதற்காக உன் சிவபரியந்தம் துயரத்தை அனுபவி. எங்ஙனமெனின், சோழராஜா, பசுவைப் போலவே தானுந் தன் பிள்ளையை யிழந்து துன்புற முயன்றது போலவாம்.

இங்ஙனமன்றி நீ பிறனுக்குச் செய்த துயரத்துக்காகப் பிராயச்சித்தஞ் செய்து அதன் பாவத்தைத் தணிக்க முயல்வது தவறு. உன்னால் பிறனுக்குச் சம்பவித்த வருத்தம் நீ செய்யும் பிராயச்சித்தத்தால் நீங்குமா? ஆனால் அவ் வருத்தத்தைத் தணிக்கும் வண்ணம் ஈசுவரனைப் பிரார்த்திப்பது மாத்திரம் தக்கதே. அதற்கான தண்டனையை விலக்கும்படி ஈசுவரனைப் பிரார்த்திப்பது தவறு.

பற்றுக்களெல்லாம் அற்று வாதனை மாத்திரத்தில் நின்றவனே யோகத்துக்குத் தக்கவன்.

## பற்றுக்களை ஒழிப்பது எதற்காக?

பற்றுக்களாற் பிறப்பு இறப்புக்களாகிய வேதனை எஞ்ஞான்றும் தம்மைப் பற்றிக்கொண்டு நிற்கும்; அதற்காகவே பற்றை ஒழிப்பதெனின், அது தக்கதன்று. பற்றுக்கள் ஈசுவரனுக்கு நாம் ஆட்படுதற்குத் தடையாயிருப்பது பற்றியே அவற்றை நாம் ஒழிக்க வேண்டியது.

பிரபஞ்ச வாழ்க்கையிலே மிக உழைத்தும் சித்தி பெறாத சிலர், பரமார்த்தத்திற் புகுந்து பார்ப்போம் என்று அதில் முயன்று பார்ப்பதும் ஒரு விதம். இவர்கள்பாடு அதிலெப்படியோ இதிலும் அப்படியாய்த் தானிருக்கும்.

பிரபஞ்ச வாழ்க்கையிலே சித்திபெற்று நின்ற நிலையிற்றானே தனக்கு அநாதி தொடங்கி இடையறாது உபகரித்துவரும் ஈசுவரனுடைய தயவை விளங்கி அந்த நன்றியறிவால் அவனுக்கு ஆட்படப் பிரபஞ்சத்தை விடுகிறவனே உத்தமன். இவனுடைய நிலைக்குக் கலக்கம் வராது.

தேவ தண்டனைக்கேனும் இராசதண்டனைக்கேனும் அஞ்சித் தீங்கு செய்யாமல் இருப்பாரும் சிலர்; இயலாத்தன்மையால் அது கூடாதிருப்பாருஞ் சிலர்; தீங்கு செய்தால் அதுபற்றிப் பின்வரும் இடையூறுக்கஞ்சி அது செய்யாதிருப்பாருஞ் சிலர்; தமக்கு வரும் இழிவுக்கஞ்சுவதால் அது செய்யாதிருப்பாருஞ் சிலர்; இடம்



பொருள் ஏவல் ஒன்றும் இன்மையால் அது செய்யாதிருப்பாருஞ் சிலர்; இவை ஒன்றற்கும் அஞ்சாது அது செய்வார் மக்களாயினும் மிருக வர்க்கத்தினராவர்.

உயிர்களைத் தன்னைப்போல் அபிமானிப்பதால் பிறிதோர் காரணமும் வேண்டாது அருள் காரணமாகத் தீங்கு செய்யாதவனே உத்தமன்.

ஒருவனிடத்தில் சிவகாருண்ணியத்தாற் பாவஞ்செய்யாமையின் காமக்குரோதாதி துர்க்குணமெல்லாம் அழியவேண்டும். அப்பால் ஈசுவரன் மேல் அன்பினால் உலகப்பற்று அழிதல் வேண்டும்; இதுவே உண்மை வழி.

பரமார்த்தனாகவேண்டிய ஒவ்வொருவனும் முதல் ஆன்ம ஐக்கியம் பெற்றே அப்பால் ஈசுவர ஐக்கியம் பெறல் வேண்டும்: முதல் ஆன்ம ஐக்கியம் பெறாதவன் ஈசுவர ஐக்கியத்தைப் பெறுதல் சித்தியாது.

உலகத்திலே ''பாவி'' என்றிருப்பவன் ஒன்றற்கும் இயலாதவன். இயலுமானால் அவன்றான் எல்லாத் தீங்குகளையும் செய்ய முன்னிற்பவனாவான்.

நீ பிறர்மேலே குற்றந்தூற்றுகின்றாய். நீ ஒருவாற்றானேனும் அங்ஙனம் உடையையன்றோ? எனின்' 'அன்று' எனச் சமாதானஞ் சொல்ல யோக்கியையல்லை. பிறரைக் குற்றந் தூற்றும் போது நீ யோக்கியை என்பதுதானே உன் உள்ளக் கிடக்கை. இஃது எத்தகைய இழிவு.

பிறர் மேலே யாரும் குற்றம் தூற்றும் பொழுது, நீ அதை இகழ்ச்சியாகாவண்ணம் சமாதானஞ் செய்யத்தக்கவனாயிருக்க வேண்டும்.

நாம் பிறரோடு சம்பாஷிக்கும் அவசியமற்ற பொழுது போக்குப் பேச்செல்லாம் களிப்பே.

நோய் வறுமை மனக்கிலேசம் என்னும் இவைகள் அற்றிருக்கும் இன்பமான நிலையானது களிப்பைக் கிளப்பிவிட்டுப் புறங்கூற்றுப் பயனில் சொல் புளுகு என்னும் உரைத்தவறுகளை விளைக்கின்றது; இன்பமான நிலை தீங்குகளை விளைத்தற்கே தக்கது.

ஒரு வைத்தியசாலையிலே அநேகர் நோயாளிகளாய் இருந்தார்கள். அவர்களுள் முந்தி ஆரோக்கியம் பெற்றவர்கள் பெறாது வருந்துகிறவர்களை இகழ்வது வழக்கா?

பற்றுக்களெல்லாம் அற்றும் அசுத்த வாதனை நிற்பது மனத்
திற் களிப்புளதாயிருப்பதுபற்றியே. ஈசுவரன் மாட்டுப்பணி தவறு
தல் பற்றி விசாரமுண்டாயின் அசுத்த வாதனை உளதாகாது.

தான் பிறனுக்கு யாதும் நன்றி செய்தவன், அதற்காக ஏதும்
பதில் பெற்றுவிட வேண்டுமென்று அவசரப்படுவோன் மிகப் புத்தி
குறைந்தவன். நன்றிகளுக்குப் பதில் பெற்றுவிடுதலினும் பெறா
மையே தகுதி.

நன்றி செய்வது நன்றிகேடனுக்கே செய்தல் வேண்டும். உப
காரஞ் செய்வது பதில் செய்ய மாட்டாதவனுக்கே செய்யவேண்
டும்.

தீயவொழுக்கத்துக்குக் காரணம் அஞ்ஞான பந்தம். எவ
னொருவனை அவன் தீக்குணம் பற்றிப் பழிக்கின்றோமோ அஞ்
ஞான பந்தமுடைய மற்றும் யாவரையும் அங்ஙனமே பழிக்க
வேண்டும். அஞ்ஞான காரணமான தீக்குண முடையவர்களுள்
அதை அற்பமாக உடையவர்களுஞ் சரியே; அதிகமாக உடையவர்
களுஞ்சரியே; அதில் ஒன்று உடைய வர்களுஞ் சரியே: பத்து உடை
யவர்களுஞ் சரியே; நூறு உடையவர்களுஞ் சரியே: ஆதலால்,
தீக்குணமுடையோரை, அதன் காரணம் அஞ்ஞானம் என்பதை
விளங்கிக்கொள்ளாமல் இகழ்வதெல்லாம் தவறாகும். உயர்ந்த
வகுப்பிற் கற்க வந்த மாணாக்கர், தாழ்ந்த வகுப்பிற் கற்று
நிற்பாரை இகழ்தல் தவறு.

பிறரை இகழ்வதெல்லாம் பொறாமையும் செருக்கும் பற்றியன.
காருண்யம் பற்றியனவன்று.

பிறரை அவர் தீக்குணம் பற்றி நாம் இகழும்போது அங்ஙனம்
இகழ்தலாகிய அது தானே முதல் நம்மில் தீக்குணமாகின்றது.

தானும் தன்பாலுள்ள குற்றங்களால் இகழப்படற் குரியவனா
யிருந்து கொண்டு தான் பிறரை அவர் குற்றம்பற்றி இகழ்தல் எவ்
வளவு மடமை? இது பொறாமையின்பாற்படுகின்றது.

எவர்களையும் எந்த க்ஷணத்திலும் மரணத்துக்குரியவர்களா
கவே தெளியவேண்டும். எவரொருவரையாவது ஏதொரு கால நிய
திக்குரியராக மதித்துப் பற்றுச் செய்தொழுகுவது அறியாமை
யாகும்.

நீ உன் மனைவி மக்கள் முதலிய குடும்பத்தார் மேலே பற்
றுச் செய்தொழுகின்றாய். வேண்டியவழி ஈசுவரனால் அது நீக்கவிய
லும். அங்ஙனம் இயலுமாயிருக்கவும் அவர் அது செய்யாதிருத்தல்



நீ பற்றுச்செய்து வருந்தவேண்டியே. பற்று அன்பின் காரணமா
யிருக்கின்றது. அன்பு சுகங்காரணத்தா லுண்டாவதாயிருக்கின்றது'
சுகத்தை வெறுத்தால் எல்லாச் சங்கடமுந் தொலைந்துவிடும்.

ஈசுவரானுக்கிரகத்தினால் நமக்குப் புலப்பட்டிருக்கிற மெய்யு
ணர்வை உலகத்தார்க்குப் போதித்து அவர்களைத் திருத்துவது
தக்கதன்றோவெனின்; ஈசுவரனே சகல ஆன்மாக்களையும் அவர
வர் பக்குவத்திற்கு தக்க நிலையில் வருவித்துத் திருத்திக்
கொண்டு வருகிறார். அங்ஙனமாக நாம் ஒன்றை முன்னிட்டுச்
செய்வது ஈசுவரன் மேல் அறியாமையேற்றுவதாய் அவர் கிருத்தி
யத்திற்கு மாறாய் முடியும். ஆதலால், திருவருள் வசப்பட்டு
நின்று செய்யுங் காலம் வந்தால் மாத்திரமே இதை மாத்திரமன்று
மற்றும் ஆகவேண்டிய எல்லாவற்றையும் இனிது செய்யலாம். அந்
நிலையில் அது ஈசுவரச் செயலாகும். ஆகவே, ஈசுவரனே எதை
யுஞ் செய்யவேண்டியவர் என்பது முடிபாகின்றது.

உலகத்திலே ஆன்மாக்கள் பலவும் பாவிகளாய் மோக்ஷ
நிலைக்கு அபாத்திரராய் உழல்கின்றார்களேயென்றால்,அவர்களை
யெல்லாம் அவரவர் பக்குவமுணர்ந்து அங்ஙனம் நடத்துவான் ஈசு
வரனாயிருக்க நமக்கு அதில் பேச்சு யாதுக்கு?

உலகத்தின் நடபடியெல்லாம் ஈசுவர ஆஞ்ஞையோ, அன்றோ?

நம்மினும் நமக்கினியன் ஈசுவரன்; அவன் எல்லாச் சீவர்களுக்கும்
சகாயனாயிருக்கின்றான். இந்த உண்மையை ஒப்புக்கொள்வோன்,
பிறசீவரால் தனக்குவரும் இடையூறுகளுக்கு அஞ்சுவது நம்பிக்
கைக்கு விரோதம்.

## சமுசாரிகளுக்கு

சமுசாரிகளே. நீங்களும் மற்றும் சாதுக்கள்போல ஆன்ம
லாபத்துக்கு உழைக்கிறதற்குத் தடையென்னவிருக்கிறது? *சமுசாரத்
தால் எப்பொழுதும் குடும்ப சம்ரக்ஷணைக்கான விவகாரங்களே
மிஞ்சியிருப்பதால் ஈசுவரனுக்குத் தொண்டுபட்டுய்ய நமக்கு நேர
மில்லை என்பீர்களானால், விவகாரங்களிற் சென்று மிஞ்சின
நேரம் நுமக்குக் கிடைப்பதில்லையா? அப்பொழுது யாது செய்
கின்றீர்கள்? ஈசுவரனையும் சிந்தித்தபடியே செய்யத் தக்கதான

* ஈசுவரனுக்கு அடிமைத் திறம் பூண்டு புறத்தாலும்அகத்
தாலும் அகோராத்திரம் இடையறாமல் அவனுக்குத் தொண்டு
புரிதல்தான் ஆன்ம லாபத்துக்கு உண்மையான வழி. அகத்
தொண்டாவது உட்பூசையும் தியானமுமாம்.

விவகாரங்களை நீங்கள் நடத்தும்பொழுது அங்ஙனம் சிந்தியாமைக்கு நியாயமென்னை? நீங்கள் அங்கும் இங்கும் நடந்து செல்லும் காலங்களில் யாது செய்கின்றீர்கள்? உங்களுக்கு லீவாகக் கிடைத்திருக்குங் காலங்களில் இடையறாமல் தொண்டு புரிந்து, விவகாரங்களை நடத்தும் காலங்களிலும் குடம் எடுத்தாடு வாள் போல ஈசுவரன்மேற் சிந்தை வைத்தபடி வருந்தி விவகாரங்களைப் புரிவீர்களானால், அப்பால் ஈசுவரன் உங்கள் ஊழியத்தின் மேல் இரங்கி, நீங்கள் விவகாரங்களற்றுச் சதா தனக்குத் தொண்டு புரியத்தக்க நிலையில் உங்களை ஈசுவரன் நியமிப்பார். தனக்குத் தொண்டுபுரிய இஷ்டமில்லாதவர்களான உங்களுக்கு அவரேன் விவகாரங்களைக் குறைப்பார்? தோட்டக்காரனான ஒரு வறிஞனுடைய பையன் கல்வி கற்க விரும்பித் தோட்ட வேலையை அசட்டை பண்ணினான். தந்தை அவனுடைய எண்ணத்துக்கிணங்காமல் கடினமான வேலைகளை அவனுக்குப் பணித்தான். பையன் கல்வியின் விருப்பத்தினாலே அந்தக் கடினமான வேலைகளையும் அவ்வப்போதும் முடித்துக்கொண்டு கல்வியையும் அந்த வேலை முயற்சி தவறாமல் அதனோடு சாமர்த்தியமாய்க் கற்று வந்தான். தந்தை, கல்வியில் மிஞ்சின பரிபக்குவமுடைய தன் மகனது நிலைமையை நன்றாயுணர்ந்து பின்பு அவன்மேல் இரங்கி அவனை முழுக் காலமும் கல்வி கற்கவே நியமித்தான்.

## புண்ணியம்

புண்ணியங்களெல்லாவற்றினும் விசேடபுண்ணியமாவது பிறர் செய்த தீங்கைப் பொறுத்தல். இது விவகாரிகட்கே.

பாவங்களெல்லாவற்றுள்ளும் கொடியதாவது நண்பின் கிழமையால் நம்பி நன்மை செய்ய முயன்று குற்றப்பட்டாரை வெகுளுதல்.

நீ ஈசுவரனுக்குப் பிள்ளையாயிருக்க வேண்டுமானால் எப்படி ஒழுகவேண்டும்?

குழந்தையானது தனக்குச் சம்பவிக்கும் யாதொரு விஷயத்திலும் விசாரமில்லாதிருப்பது போல நீயும் அங்ஙனம் ஒழுகுவாயானால் அதுவே ஈசுவரனுக்கு நீ குழந்தையாயிருக்க விதம்.

## ஈசனுக்குகந்தவன்

மற்றெவ்வித துர்க்குணம் உடையவனாயிருப்பினும் செருக்கற்றவனாயிருப்பவனில் மாத்திரமே ஈசுவரன் பிரீதியாயிருப்பர். செருக்



கான நடை உடையவனை அவனிடத்தே அதைக்காண்பார் யாவரும் வெறுக்கின்றனர். சர்வ வியாபியாய் எல்லாவற்றையும் காண்பவனாயிருக்கிற ஈசுவரனுக்கு அது எவ்வளவு வெறுப்பாயிருக்கும்? செருக்குடையான் எவ்வளவு வழிபாடு செய்யினும் ஈசுவரனால் அவனுக்கு அநுக்கிரகம் கிடைப்பதும் அரிது. செருக்கொன்றே பிறர் பொறாமை செய்தற்கு முழுதும் காரணமாம். ஆதலால் செருக்கு தன்னை யுடையானை எல்லாவிதத்தாலும் அழிவு செய்யும்.

செருக்கற்றவனில் (அடக்கம் உடையானில்) ஒருவரும் பொறாமை செய்பவராயிருக்கமாட்டார். எவரும் அவன் பேரில் தயவுடையவராயும் அவன் மேல் எளிதில் இரங்கி உதவிக்குரியவராயும் இருப்பர். ஈசுவரனும் இவன் மேல் அங்ஙனமே.

தனக்கு வரக்கடவதான நட்டம் ஒன்றையும் உணரவொட்டாத தான களிப்புக் குணமும் ஈசுவரனுக்கு வெறுப்பைத் தரும்.

## பொறாமைக்கும் கோபத்துக்கும் வேறுபாடு

இவற்றிற்கு வேறுபாடென்னை? இரண்டும் ஒன்றற்குரிய பரியாயமுமல்ல. ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்யும்போது அஃதொன்றே சிற்சிலரால் பொறாமையாகவும் சிற்சிலரால் கோபமாகவும் கொள்ளப் படுகின்றது. தங்கள் மகிமையைப் பெரிதாக அபிமானிக்கிறவர்கள் ஒருவன் தமக்குச் செய்த குற்றத்தை ''இவன் நம்மை மதியாமல் இங்ஙனம் செய்யவா?'' என்று அதனைப் பொறாமையின்பாற் படுத்துகின்றனர். இனி, தமக்கு மகிமையை அவ்வளவாக அபிமானியாத மற்றொரு சாரார் அதே குற்றத்தைக் கோபத்துக்கிடமாக்குகின்றனர். தமக்கு மகிமையைப் பெரிதாக அபிமானிப்போர், பிறர், தம் செருக்கைப் புலப்படுத்துவதாய்ச் செய்யுஞ் செயல்களையெல்லாம் பொறாமைக்கிடமாக்குவர். ஆதலால், செருக்கே பொறாமையை விளைத்தற்கு மூலகாரணம்.

ஈசுவரனிடத்திலே வேண்டிக் கொள்ளும் பிரார்த்தனை எவனுக்குத் திடமாகக் கிடைப்பதாகும்? ஈசுவரனுக்கு அடிமைத்திறம் பூணாதவன், ஈசனுக்குப் பூசனை, தவம் முதலிய பிரீதிகளைப் போதியதாகச் செய்தே பெற்றுக்கொள்ளல் வேண்டும். அப்படிச் செய்தும் தான் வேண்டியது கிடையாதாயின், ஈசுவரனுக்குத் தான் செய்த பிரீதி போதாதெனவறிக.

மேலும், தான் பாடுபட்டுத்தேடாத பொருளைக்கொண்டு ஈசுவரப் பிரீதியேனும் தான தருமங்களேனும் செய்பவனுக்குப்பலன் கிடைப்பது அதற்குத் தக்கவிதமாயேயிருக்கும்.

இனி ஈசுவரனுக்கு அடிமைத்திறம் பூண்டவன் தான் ஈசுவரனிடத்தில் வேண்டுவதைப் பிரார்த்தனை மாத்திரத்திற் பெறத்தக்கவனாயிருப்பன். ஈசனுக்கு அடிமைத்திறம் பூண்டவனாவான், பலத்தைக் கருதி ஒன்றையும் செய்யாதவனும், ஈசன் தனக்கு முழுதும் உபகாரியாயிருக்கும் நன்றியை யுணர்ந்து அதற்குக்கடப்பாடாக என்றும் அவன் மாட்டு நிறைந்த அன்பினால் இடையறாத் தொண்டுடையவனும், ஈசுவரனுக்கு வெறுப்பாவனவாய செருக்குக் களிப்புப் பொறாமை கோபம் லோபம் என்னும் தீக்குணங்களை அழித்து அவனுக்குத் தயவு பிறக்கும் வண்ணம் பிறராலும் பிறவற்றாலும் உண்டாகும் ஹிம்சைகளைப் பொறுத்து ஒழுகுபவனுமாயுள்ளவன். இவனும் ஈசுவரனுக்கு மேலாகப் பிறிதொன்றை மதியாதவனாயிருந்தாற்றான் வேண்டிய பிரார்த்தனையைப் பெறத்தக்கவனாவான். எவன் ஈசுவரனையன்றிப் பிறிதொன்றைத் தன் மனத்திற் சிந்திப்பவனாயிருக்கின்றானோ, அவன், தான் சிந்திக்கும் அவற்றை ஈசுவரனிலும் மேம்பட்ட மதித்தவனாவான். ஆதலால், ஈசுவரனையன்றிப் பிறிதொன்றையும் சிந்தியாதவனே ஈசுவரனை மேலாக அபிமானிக்கின்றவன்.

''சாப்பறைத் தொழிலாளிக்குச் சுடலை ஞானமில்லை'' அது போலவே, கற்றும் கற்றும் அவற்றால் விதிக்கும் ஒழுக்கம் திருந்தி வராதவனுக்குக் கற்பனவற்றாற் பயனில்லை.

உன் பக்ஷத்தில் ஏதும் சிவநாசம் முதலான பெரும் துன்பங்கள் நேரிடும் காலங்களில் அவற்றை நீ மற்றொரு வழியாலும் பரிகரிக்க இயலாமல் முடிந்த சமையத்தில் மாத்திரமே ஈசுவரனைத் துணை வேண்டிப் பிரார்த்திக்கிறாய். இது சமையத்தில் ஈசுவரனிடத்திலே உனக்குண்டாகிய அடிமைத் திறத்தை நீ சதாகாலமும் இங்ஙனமே பேணி ஈசுவரனுடைய துணையையே என்றும் எல்லாவற்றிற்கும் நம்பி நடப்பாயானால் உன் பிரார்த்தனை கைகூடுந்தான். மற்றொரு பக்ஷத்தாலும் இயலாதபொழுது மாத்திரம் நீ ஈசுவரனைத் துணை கேட்பாயானால் அவர் உனக்குத் துணைசெய்ய வருவாரா? உனக்கு மற்றொன்றாலும் இயலாத பக்ஷத்தில் ஈசுவரனிடம் துணை வேண்டுவதை, மற்றையவற்றால் இயலுந்திறங்களிலும் அவருடைய துணையைத்தான் வேண்டிக் கொண்டாலென்ன?

ஒருவனுக்கு இடம் பொருள் ஏவல்கள் எவ்வளவுக்கில்லையோ, ஈசுவரனுடைய துணை அவனுக்கு அவ்வளவுக்கு வேண்டியதாயிருக்கும். ஆதலால், இடம் பொருள் ஏவல் ஒன்றும் இல்லாமையே ஈசுவரன் துணையை அதிகம் வேண்டுவதற்கிடமாய் முடிந்து அவனுடைய சம்பந்தத்தை வளர்விக்கும். ஆதலால் அதுவே நன்மை.



எவ்வளவுக்கு இடம்பொருள் ஏவல் மிகுதியோ அவ்வளவும் ஈசுவரனை மறத்தற்கிடமாகும்.

பிற சீவர்களை எல்லா விஷயத்திலும் தானாகக் கருதி நடப்பது தான் அருள். அதற்கு மறுதலையாக வேறாகக் கருதி அவற்றினும் தனக்கு மேம்பாடும் சுகமும் வேண்டுவது பொறாமை. பொறாமையுள்ளமட்டும் துவித பாவனையும், துவித பாவனையுள்ளமட்டும் பொறாமையும் நீங்காமலேயிருக்கும்.

ஈசுவரன் உனக்கு மெய்யுணர்வைத் தருவது நீ அவற்றாற் கடைத்தேறும் பொருட்டன்றோ! அங்ஙனமாக, நீ அவற்றைப் பக்குவமில்லாத பிறர்க்குப் போதித்து அது காரணமாக உனக்குக் கீர்த்தி சம்பாதிக்க முயன்று கொள்வாயானால் உனது நிலைமை யாதாகின்றது? நீ இங்ஙனம் ஒழுகுவது உனக்குக் கீர்த்தியாகிய மேம்பாடு கருதியல்லவென்பையாயின், உன்னிலும் உனக்கினியார் பிறரெனக் கருதியோ, நீ பெறக்கடவதாய நன்மைகளையும் இழந்து நீ அவர்க்குப் போதிக்கின்றாய்? முளைக்கத் தகாத இடத்திலே வித்தை விதைப்பார் யாவர்? பசித்து வருந்தி வந்து வேண்டுவானுக்கன்றோ உணவு கொடுப்பது. பசியாதவனுக்குக் கொடுக்கும் உணவு தோஷங்களையன்றோ விளைக்கும்.

## அருள்

தன்னைப் போல்வனவே பிற ஆன்மாக்களும் என்பதையுணர்ந்து அவ்வாறொழுகுவது அருள்.

## அன்பு

யாவராயினும் தனக்கு இன்பந் தருவார்களிடத்து உண்டாகும் விருப்பு அன்பு எனப்படும்.

## கோபம்

யாவராயினும் தனக்குத் துன்பம் தருவார்களிடத்து உண்டாகும் வெறுப்பே கோபம் எனப்படும். தமக்கு மேம்பாட்டை அபிமானிக்கும் அகங்காரிகள் தமக்குத் துன்பந் தருவாரைப் பொறாமைக்கிடமாக்குவர். ஒருவன் பிறருக்குத் தன் செருக்கைப் புலப்படுத்துவதால், தானே அவர்க்குப் பொறாமையை விளைக்கிறான். பொறாமை கொள்வோனிலும் அதற்குக் காரணம் விளைக்கும் இவனே தப்பிதமுடையோன்.

காமக் குரோதாதி துர்க்குணங்களையெல்லாங் கழற்றி அதன் மேலே பழமையான வாதனைகளும் கழன்று நினைவறப் பயின்ற முடிவையுடையது ஞான யோகம்.

அங்ஙனம் துர்க்குணமெல்லாம் அழியமாட்டாதாருள்ளே சிற்சிலர் ஈசன் மேலே மிக்க அன்பு வாய்ந்தவராய், அதனால் அவ்வீசனை மறக்கமாட்டாராவர். அதனால் அவர் பிரபஞ்ச வாதனை அனைத்தையும் மறந்தவராய்த் தலைப்பட்டுப் பக்தியோகிகள் எனப்படுவர்.

'நாச்சியார் நினைத்தூட்டுவதொன்று; யான் நினைத்துண்பதொன்று' * ஈசுவரன் சீவர்களுக்கு மாயா போகங்களை நுகர்விப்பது அவர்களுடைய பாசத்தைக் கழற்ற. மெய்யுணர்வில்லாத சீவர்கள் அந்த உண்மையைத் தெரியாதவராய்ச் சனனந்தோறும் நமக்குக் கிடைத்திருக்கிற மனைவி மக்கள் நண்பர் வீடு பொருள் பண்டம் ஜனன பூமியாகிய மாயா போகங்களை நித்தியமெனக் கருதி அவற்றால் இன்பத்தை நுகர்வதும் துன்பத்தை இ•ப்பதும் தமக்குரிய பிரயத்தனமெனக் கொண்டொழுகா நிற்பர். அதுவும் அவர்கள் பக்குவத்துக்குத் தக ஈசுவரனது ஆஞ்ஞை வயந்தான். மெய்யுணர்விற் கொப்ப ஒழுகும் ஒழுக்கமே பக்குவம்.

செருக்கைப் போலவே களிப்பும் ஈசுவரனுக்கு வெறுப்பைத் தருவதாகும். க்ஷணத்திலே வரக்கடவதாகிய இடர்களை உணரவொட்டாமலும் தான் பெறக்கடவதாகிய உறுதியை நினையவொட்டாமலும் தடைசெய்த மடமையின் களிப்பாளிகள் அற்ப அறிவினர்.

உனக்குச் சுகத்துக்குக் காலம் வரும்போது மகிழ்வதுஞ் செய்யாதே; துன்பம் வரும்போது அதன் காரணங்களில் வெகுள்வதுஞ் செய்யாதே. இவையும் ஈசுவரனுக்கு வெறுப்பைத் தருவன.

உனக்குத் துன்பங்கள் வரும்போது அவற்றை ஊட்டுகின்றான் ஈசுவரனே என்பதை நன்கு தெளிந்து இடம் பெறுவாயாயின், அது ஈசுவரனுக்கு உன்மேல் மிக்க பிரீதியைத் தரும்.

---

* நாச்சியார் அன்னத்துக்கு மிச்சமென்று தவிட்டுக்கழியையூட்ட, அடிமை இதனை இப்போது உண்பதால் பின்பு சோற்றை அதிகமாக உண்ண வயிறு இடந்தரும் என்று நினைத்து உண்டான் என்பது.



மானுடராகிய நமக்கு உறுதியாக வேண்டும் பிரயத்தனம் யாது? ஈசுவரப் பிரீதியான ஒழுக்கம்.

நாம் பிறரை அவரது குற்றங்களைக் கண்டிக்கில், அது அவரது நயம் கருதி நாம் செய்வதாயிருக்க வேண்டியது. நமது கோபம் பொறாமை முதலியவற்றின் ஆறுதற்காக அது செய்வோமாயின் அது ஈசுவரனுக்கு அப்பிரீதியாயிருக்கும்.

ஈசுவரன் ஆன்மாக்களுக்கு இன்ப துன்பங்களை ஊட்டுவதெல்லாம் சடசித்துக்களைப் பிரேரித்து நின்றேயல்லாமல் தாமாய் வெளிப்பட்டல்ல. பிறரால் நமக்கு இம்சை உண்டாகும்போது அதற்காக ஈசுவரனை வேண்டுவதும் முறைப்படுவதுமே செய்யத்தக்கது. அதுபற்றியே நன்மை உண்டாகற்பாலது. இங்ஙனமன்றி இம்சையுண்டாகும் விஷயங்களில் சீவர்களிற் சீறி அழுக்கறுத்துக் கடுமொழி புறங்கூற்றுக்களை வழங்கி அவர்களைக் குற்றந்தூற்றுவது நமது காலத்தையும் பாழாக்கி நமக்கு அஞ்ஞானத்தையும் நிலைப்படுத்தி ஈசுவரனுக்கு நம்மேல் வெறுப்பையும் நம் பெற்றுக் கொள்வதாகும்.

பிறர் தீங்கு செய்தால் அதற்காக ஈசுவரனோடு குறைகூறிக் கொள். செய்தார்மேல் ஒரு பிரயத்தனமும் வேண்டாதே.

பிரபஞ்ச விவகாரமொன்றையும் முக்கியமென நாட்டஞ்செய்யாமல் எப்போதும் உன்மனம் ஈசுவரன் திருவடியையே முக்கியமெனப் பற்றி அபிமானிக்குமாயின் அப்போது ஈசுவரனது பாதுகாப்பு உனக்கு முழுதும் கிடைப்பதாகும்.

நாம் விரும்பும் நன்மை உண்மையின் பக்கத்தேயிருக்கின்றது; ஆனால், அது உண்மையல்ல. தீமை அனுபவம் நிகழும்போது, கஷ்டப்பட்டு நாம் அதிற் றாக்குறாதவண்ணம் தப்பித்துக்கொள்ள வழியறிந்தபின் நன்மையினது சுகத்திலும் மகிழாதபடி கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், நன்மையின் சுகமும் தீமையின் துக்கமும் நம்மால் அனுபவித்து முடிவு பெறுவனவாயிருத்தலால் (1)

நீதிகளைக் காட்டிலும் அநுபவமே சிறந்தது. அநுபவத்தின் மூலமாய் வாழ்க்கையில் புண்பட்டு, அடிபட்டு நொந்து கண்டறிந்தவற்றிலிருந்து நாம் உணர்ந்து கொண்ட அநுபவ ஞானங்களால் ஒருவாறு கடைத்தேறலாம். (2)

நீ எப்பொழுதும் கொடையாளனாகவேயிரு. எல்லாவற்றையும் கொடுத்துவிடு; பிரதியுபகாரம் பெற விரும்பாதே; முக்கியமாக

உன்சேவை நிபந்தனையுமின்றி யாதொரு கொடு; அன்பைக் உன் போல, நாம் ஈசுவரன் நமக்குக் கொடுப்பது யினாற் சகாயஞ்செய்; கொடுப்போமானால், உறுதி உண்மையான உதாரத்துவத்தினாற் பெறலாம். (3)

ஈசுவர பத்தி எல்லா ஈசுவரன் ஒருவனே கொடையாளி. இச்சைகளை இச்சைகளையும் தடுப்பதற்குச் சாதனமாயிருப்பதால் யும்பூர்த்தி செய்ய அதை உபயோகிப்பது. பெருந் தவறாகும். (4)

எல்லா எல்லாச் சிந்தனைகளையும் எல்லாச் செய்கைகளையும் ஈசுவரனை வார்த்தைகளையும் ஈசுவரனிடத்து அர்ப்பித்தும் நாம் நம்மைப்பெரிய அது அணுவளவேனும் மறந்திருப்போமாயின், நாம் துக்கத்திலமிழ்த்திவிடும். ஏனெனில், இவற்றை அர்ப்பிப்பதும் அவரை மறவாதிருத்தற்கே யாதலால். (5)

அத்தியந்த அன்பும் உத்கிருஷ்ட (மேலான) ஞானமும் ஒன்றே. ஆனால், ஈசுவரனைப்பற்றி வாய்ஞானம் பேசுதல் உபயோகப்படுவ தல்ல. (6)

ஈசுவரனிடத்துண்டாகிய மெய்யன்பு மேலீட்டினால் எவனொ ருவன் உலக வழக்கங்களையும் சாஸ்த்திர வழக்கங்களையும் மறந்து விடுகிறானோ அவனே சந்நியாசி. (7)

அன்பாகிற சூரியன் ஒருவனது இருதயத்திலே உதயமாகத் தொடங்கும் போதே அவன் எத்தகைய கர்மங்களையும் ஈசுவரப் பிரீதியாகவே செய்ய ஏவப்படுவான். (8)

உலகத்திலே நாம் சுகமென்று கருதுகின்ற ஒவ்வொரு சுகத்துக் கும் பின்னே துக்கம் உண்டாகின்றது. (நமது புத்தி எதில் எவ்வ ளவு சீக்கிரமாக அபிவிருத்தி யடைகின்றதோ அவ்வளவு சீக்கிர மாக ஒன்று மற்றதைப் (சுகத்தை அல்லது துக்கத்தைப்) பின் தொடர்கின்றது.)

நமக்குச் சுகமும் துக்கமும் மாறி மாறி வருவதால் நிலையுடை யனவன்று. அன்றியும், சுகமும் துக்கமும் முறையே பொன்விலங்கும் இரும்பு விலங்கும் போல்வனவாம். (9)



உ

சிவமயம்

ஸ்ரீ சற்குருவே நம!

# ஆன்ம விசாரம்

## இரண்டாம் பாகம்

சிறுவர்களுக்குச் சிற்றிலிழைப்பு விளையாட்டு அவர்கள் வீட்டில் வெகு இன்ப துன்பமாயிருக்கும்; எல்லாம் அநித்தியமாய்ச் க்ஷணத் தில் அழிந்துவிடும். முதியோர் நடாத்தும் உலக வாழ்க்கையும் இங்ஙனமே தம்மட்டில் இன்ப துன்பமாய்ச் க்ஷணத்தில அழிந்து விடுகின்றது. இரண்டிலும் வேறுபாடென்னை? மெய்யுணர்ந்தார்க்கு உலக வாழ்க்கை சிற்றிலிழைப்பு வாழ்க்கையாய்ப் புலப்படுகின்றது.

ஈசுவரன் பிரபஞ்சத்தை நடத்தும் விதம் ஒன்று; சீவர்கள் தாம் எண்ணி நடக்கும் விதமொன்று. ஈசுவரன் சீவர்களுக்குத் துன்பத்தை ஊட்டிப் பக்குவப்படுத்தும் நிமித்தமே சுகத்தைக் காட்டுகிறார். சீவர்கள், தங்கள் சாமாத்தியத்தினால துன்பங்களை அகற்றிச் சுகத்தில் வாழவேண்டுமென்றே பிரயத்தனஞ் செய்து கொண்டிருக்கிறார்கள். ஈசுவரன, அவர்கள் சுகத்தை முயலும முயற்சி வழியாகவும், துன்பத்தை அகற்றமுயலும் முயற்சி வழி யாகவும் தாம் கருதிய துன்பத்தை ஊட்டி நடத்துகிறார். மெய்யுணர்ந்தார்க்கே இந்த உண்மை விளங்கும்.

குரங்கு அதிக சேட்டை உள்ளது; அது பயனற்றவைகளை யெல்லாஞ் செய்யும். அதற்குத்தான செய்வனவெல்லாம பயனு டையவைகளென்றே அபிப்பிராயம். மனிதருள்ளும் திருத்தமற்ற வர்கள் இந்நிலையினரே.

நாம் நம்பொருட்டாகவே ஜீவர்களுக்கு எதையுஞ் செய்வோம்; ஈசனோ ஜீவர்களுக்கு அவர் பொருட்டாகவே எதையுஞ் செய்பவர்.

தாமாய் உடன்பட்டுத் துன்பம் அநுபவிக்கிறவர்கள் உடனே பயன்பெற்றவராகின்றனர். துன்பத்துக்கஞ்சிச் சுகத்தை நுகரத் தலைப்பட்டவர்கள் பின்பு அவர்களுக்குத் துன்பத்துக்கு விதையிட்ட வராயினர்.

ஒருவனுக்கு ஞானம் போதிக்க ஒருவனில்லாவிட்டால், மற் றொருவனும் இன்னும் பலபேரும் ஈசுவரனுமே உண்டு. ஒருவன் தன் தேர்ச்சிக்குக் கற்க வேண்டுவது தானே போலத் தன்னை

மெய்யொழுக்கத்தில் நடத்துவதற்குத் தானே வேண்டியவனாயிருக்கின்றான். ஆதலால், தான் மெய்ந்நெறியிற் சாத்தியம் பெற்று முடியும் வரையும் பிறரைப் போதித்துத் திருத்தவென்று முயல்வது தவறு.

முரட்டுத்தனமான மனைவி இல்லாதவனுக்கு அவளுடைய அனுபவந்தெரியாது. முரட்டுத்தனமான வேலையாள் இல்லாதவனுக்கு அவனுடைய அனுபவந்தெரியாது. சாந்தமான மனையாளையுடையவனிலும் முரட்டுக்காரியை உடையவன் படிப்பாளி. மற்றவைகளிலும் இப்படியே முரட்டாளை உடையவனுக்கும் அஃதொன்றே தெரியும் தனக்கில்லாமற் பிறருக்குடையவைகளாய் இருப்பவைகளையும் தன்னதுபோலப் பாவனைசெய்து எல்லா அநுபவமும் தான் உடையவனாய் வந்தவனே ஞானி அவனே எல்லாருக்கும் ஒப்ப நடக்கும் திறமை பெற்றவன்.

வறியவர்களுக்கு வறுமை வராது. வறுமை வருவது செல்வர்க்கே. ஆதலால், செல்வன் எப்பொழுதும் வறுமை வரும் என்னும் அச்சம் உடையவனாயிருக்கின்றான்; வறியவனுக்கு அஃதில்லை. செல்வமான நிலையிற் பயின்றவன், அதற்கு அருமை வந்தபோது வறியவன் ஆகின்றான்.

ஒருவன் நமக்கு ஒரு குற்றத்தை விளக்கமில்லாமற் செய்தால் பின்பு அவன் விளங்கித் துயருறாதிருக்கும் பொருட்டாக நாம் அதை அவனுக்குத் தெரிவியாதிருக்கக் கடவோம்.

பிறர் நமக்குச் செய்யுங் குற்றங்களை அல்லது தீங்குகளைப் பொறுப்பதற்கு முக்கியமான பரிகாரம், நாம் பிறர்க்குச் செய்திருக்கும் அவை போல்வனவற்றைக் கிளறி எடுத்துச் சமன்படுத்துவதே. இது இதற்கு நியதமானது. ஆகையால், நம்மீடத்தில் குற்றமெனப்பட்டவை எவ்வளவு மிகுந்திருந்தனவோ அவ்வளவும் நாம் ஜீவர்களை நம்மைப்போல் ஏகபாவனைபண்ணி (நாமாக) ஈடேற்றம் பெறுவதற்கு அருமருந்தாம். தன்னிடமுள்ள குற்றங்கள், அவை கொண்டு பிறனைத் தானாகப் பாவனை செய்வானுக்கு மட்டுமே நன்மைக்கிடமாம். அது செய்யமாட்டாத துவித பாவகனுக்கு அத்தனையும் தீங்குக்கேயிடமாம். பிறர்செய்த குற்றமொன்றற்குச் சமமானது. நம்மிடம் இல்லாவிட்டால் ''நாமும் அவனைப் போன்ற உபாதி (செயற்கை) வசப்பட்டிருந்தால் இதே குற்றத்தைச் செய்ய வசப்பட்டிருப்போம்'' என்று சமாதானம் பெற்றுக்கொள்.

மலத்தைத் தின்னும் பன்றிக்கு அது குணமாகவே இருக்கிறது; அதை இகழ்பவனே குற்றவாளி; அதுபோலப் பிறரை அவர் குற்றம்



பற்றி இகழ்வோரே குற்றவாளிகள். அவருக்கும் அது குணமாயின் அவரை இகழ்வோரும் குற்றவாளிகளே.

துன்பத்துக் கஞ்சுகிறவனை ஈசன் பாம்பாட்டுகிறார்; ஒரு பித்தனைச் சிறுவர்கள் கோபம் மூட்டி விளையாட்டுப் பார்ப்பது போலுமிருக்கின்றது. துன்பத்துக்குப் பயந்து தப்பமுடிவுவராது.

ஒருவனை, அவன் செய்த ஒரு குற்றம்பற்றி இகழ்வது தவறு அதன காரணமாகிய அவனது மல பந்தமே இகழப்படற்பாலது. அங்ஙனமாயின்; பந்தமுடையராய நாம் யாவரும் ஒருங்கே அது பற்றி இகழப்படல் வேண்டும்.

ஜீவர்களுக்குள்ள மலபந்தம் அவர்களுக்குத் துன்பமாய் ஊட்டியே தொலையும். ஆதலால், துன்பத்துக் தப்பமுயன்றால் மலபந்தமே தொலையாது; தொலையாதவரை நெடுகத் துன்பமே ஆதலால், துன்பத்துக்குத் தலைகொடுத்து விட்டால் அதுவாறாக மலபந்தம் தொலையும். பின்பு துன்பமேயில்லை. மருந்துண்பதாகிய துன்பத்தைச் சகிப்பவனுக்கே ரோக காரணமாக விளையும் துன்பம அறும.

க்ஷயரோகி இருமுகிறான். அவன் இருமுவதும் தன் வருத்தத்தைச் சகிக்கமாட்டாமலே. அருகில் இருக்கிறவர்கள் தங்களுக்கு அது கேட்க வருத்தமாயிருக்கிறதென்று அவனை வைகிறார்கள். இதில் யார் சரி? யார் குற்றவாளி? கேட்கிறவர்களுக்கு வருத்தமென்பதுபற்றி அவன் தன் வருத்தத்தை அடக்கி இருமாமல் இருக்க இயலுமா? அவனுடைய வருத்தத்துக்காக இரங்கி இவர்கள் பொறுத்திருக்க வேண்டுவதே நியாயம். இவர்களுக்கும் அப்படியே இருமலும் வரும்; பிறவும் பல வரும். அதை அநுபவித்துணர்ந்தவர்கள் நோயாளியை வையமாட்டார்கள். தங்களுக்கும் அப்படியான நிலைமை வந்து அனுபவியாமை தான் இந்த மடமைக்குக் காரணம். இதனால், துன்பங்கள் பல அநுபவித்தவர்களே அறிவாளிகள் என்பது விளக்கமாகிறது.

மனிதர்களுக்குள்ளே கோபம், பொறாமை, களிப்பு, மதிப்பு, ஆசை, லோபம், பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொலாகிய பிதற்று என்னும் இக்குற்றமெல்லாம் மேலே காட்டிய நோயாளியின் இருமல் போலிருக்கிறது. இவற்றிற்குக் காரணமாகிய மல பந்தம் க்ஷயம்போலிருக்கிறது. ஆதலால், இங்கே காட்டிய இக்குற்றங்களுடையாரை, அவை தம்மை வருத்துவது பற்றியே பிறர் வைகின்றனர். க்ஷயநோயற்றால் இருமலறும்; மலபந்தமற்றால் இக்குற்றங்கள் அறும்.

ஒவ்வொரு ஆன்மாவும் தன் அறிவுமட்டில் நல்லன என்று தோன்றுமவற்றையே மற்றவைகளுக்குச் செய்கின்றன. கோபாலன், தனக்கு இரங்கிக் கொடுத்த உபகாரத்தைக் கொற்றன் தனது சாமர்த்தியத்தால், தான் பெற்றதென்று மற்றவர்களோடு தன்னை வியப்பாடுகிறான். உலகத்திலே, நன்றிகேடென்பனவற்றுள் தலை மையானது இதுவே கொற்றனுக்கு, இது தனக்கு நல்லதாகவே புலப்பட்டு நடைபெறுவதாயிற்று.

எல்லாரும் தாம் தாம் அவ்வப்போது செய்யும் மூடத்தனங்க ளுக்குப் பின்பு பின்பு இரங்குவார்கள், இதனால், செய்யும்போது தெரியாதவர்கள் அல்லது மோகத்தின் மிஞ்சிச் செய்தவர்கள் என்பது திடமல்லவா?

ஒவ்வொரு ஆன்மாவும் பிறப்பில் எவ்வளவு எவ்வளவு துன்பத்தை நுகர்ந்து கொண்டனவோ அவைதான் பிறப்புக்களாற் பெற்ற பயன்.

ஆன்மாக்களுக்குப் பந்தம் ஒழியும் விதம்; கோபம் வந்தே அஃதொழிய வேண்டும். பொறாமை வந்தே அஃது ஒழியவேண்டும். அவமதிப்பு வந்தே அஃதொழியவேண்டும். இப்படியே ஒவ்வொரு குற்றங்களும் காரணம் உண்டாகியே அவை ஒழிய வேண்டும். ஆதலால், தான் திருத்தம் பெறவேண்டியவன் இவை தனக்குச் சம்பவிப்பதைக் காத்திருக்க வேண்டும்.

எமக்குத் துன்பஞ் செய்கிறவன் ''உனக்குக் கோபமிருக்கிற'' தென்று தெரிவிக்கிறான்; ஏதொன்றால் மேற்படுகிறவன் ''உனக்குப் பொறாமையிருக்கிற'' தென்று தெரிவிக்கிறான்; திருடன் 'உனக்கு ஆசையிருக்கிற'' தென்று தெரிவிக்கிறான். இப்படியே நம்மிடமுள்ள குற்றங்களைப் பிறரே தெரிவிக்கிறார்கள். இவர்கள் இல்லாவிட்டால், நாம் நம்மைச் சரிப்பட்டவராக எண்ணி ஏமாந்து போவோம். நமது குற்றங்களைத் தெரிவிப்பவர்கள் நமக்குக் குருவாகவும் வைத் தியனாகவும், மதிக்கத் தக்கவர்கள். இவர்களது சகவாசமே நம்மை ஈடேற்றுவது.

நாம் நமக்குச் சம்பவிக்குந் துன்பங்களை அகற்ற முயலாமற் சகித்துக் கொள்வதே விவேகம். துன்பங்களைச் சகிக்க வேண்டு மென்பதே ஈசுவர கட்டளை. அகங்காரமாடுவதும் ஈசுவரனுக்கு மிகவெறுப்பு.

சுகத்தைப் பெறுவதற்கும் துன்பமே படவேண்டுவதால், அப்ப டித் துன்பம் அநுபவித்துப் பெறும் சுகத்தாற் பயன் யாது?



நமக்குத் துன்பஞ் செய்பவர்களாற்றானே நாம் அஞ்ஞான நிவிர்த்தி பெறவேண்டிருப்பதால், நாம் அவர்கள் மேற்றானே அது பொருட்டாக நன்றியுடையராயொழுகல் வேண்டும் அவர்களை யன்றி நமக்கு அஞ்ஞான நிவர்த்தி கிடையாது.

துன்பத்தை உடன்பட்டு நுகரவேண்டுமென்பது ஈசுவரகட்டளை; துன்பங்களை அகற்ற முயலும் முயற்சிகள், அஞ்ஞானத்தை விர்த்தி செய்கின்றன; ஈசுவர தொண்டையும் இழப்பிக்கின்றன; தாமுந் துன்பமாயிருக்கின்றன; முடிவற்றனவுமாயிருக்கின்றன; ஜீவரோடு துவிதம் உண்டாகிறது; ஈசனுக்கு நம்மேல் வெறுப்பையும் விளை விக்கின்றன. துன்பத்தை உடன்பட்டு நுகர்வது ஈசனுக்கு நம்மேல் தயவை உண்டாக்குகின்றது.

ஜீவன் அஞ்ஞானத்தாற்றான் நடத்தப்படுகிறான்; தனக்குச் சுவதந்திரமிலன்; ஆகவே, இவனுக்கு யாதொன்றில் அகங்கார மேன்?

அகங்காரம் (– மதிப்பு), கோபம், களிப்பு, அழுக்காறு முத லான எவ்வித குற்றங்களையும் அவற்றினியல்புணர்ந்து மெய்யுணர் வால் அகற்றுவது பற்றி நயமுண்டல்லாமல், அவற்றைப் பயங் காட்டி இடர்ப்படுத்தி அகற்றுவதுபற்றி யாதும் பயனில்லை; மெய் யுணர்ந்து நீக்க உதவியாயிருக்கும்.

ஈசனது திருவுள்ளம் இல்லாமல் ஒரு ஆன்மாவின் கோபம் மற் றொன்றைத் தண்டிக்க அல்லது கொல்ல மாட்டாது. ஆதலால் அஞ்ஞானம் ஈசனது ஆஞ்ஞையிலே தொழில்பட்டு ஆன்மாவை இயக்குகிறது.

வெயர்வை சிந்தச் சரீரம் வருந்தி உழைக்கிறவனுக்குந் துன்பந் தான். அதற்கஞ்சிச் சும்மாவிருக்கிறவனுக்கும் அப்போது துன்பந் தான். ஸ்திரீகளோடு சையோகமாயிருப்பவனுக்கும் ஊடல் முத லான பல காரணங்கள் தோன்றி அப்போது துன்பந்தான். இவ் விதமே எல்லாம் மெய்யுணர்விலாதவர்க்குத் தத்தமளவில் துன்பந் தான். ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்ப்பது சரியீனம்.

ஈசுவரனுக்கு ஆயுள்குன்ற வந்தாலும் துன்பத்துக்கு முடிவு வராது. துன்பந் தன்னை அகற்ற முயலும் முயற்சியாலும் துன்ப மாயிருக்கிறது. அத்தகையதாகிய துன்பத்துக்கு முடிவு இந்த க்ஷணத்திலும் பெறலாம். அஃதாவது அது வருந்தோறும் அஞ்சாது தலை கொடுக்கத் துணிந்துகொள்வதே.

தன் சுவதந்திரத்தால் (-தன் வல்லமையால்) ஒரு கருமத்தைச் செய்கிறவன் அகங்காரங்கொண்டால் தகும். தனக்கென வல்லமை இல்லாதவன் அகங்காரங் கொள்வது எவ்வளவு மடமை. ஈசுவரன் தனக்கென்று சுவதந்திரம் உடையவன்; அவனோ அகங்காரங் கொள்வதிலன். ஜீவன் அஞ்ஞானத்தின் வசப்பட்ட செயலுடையவன் அவனுடைய அகங்காரமும் அஞ்ஞானத்தின் செயலே. தனக்கென்று ஒரு செயலுமற்ற அத்தகையனாகிய ஜீவனுக்கு அகங்காரமிருப்பது வியப்பாயிருக்கிறது. இந்த உண்மை விளங்காமையினாலே, தான் சுதந்திரனென்று அஞ்ஞானத்தின் செயலைத் தனது செயலாக மதித்து அகங்கரிக்கின்றான்.

பைத்தியகாரர் நம்மை மதிக்கவேண்டுமென்று நாமும் பைத்தியகாரனாயிருக்க வேண்டுவது எவ்வளவு மடமை.

தங்களுக்குச் சுகஞ் செய்பவனை 'நல்லவன்' என்பது உலக வழக்கம். இங்ஙனமே துனபஞ் செய்பவனைத் 'தீயவன்' என்பதும். இது உண்மையல்ல. நிக்க செல்வன், வறியவன், உயர்ந்தோன், இழிந்தோன், நலலவன, பொல்லாதவன் என்பனபோலும் விகற்பங்களெல்லாம் சுகத்தையே உறுதியென்றும், துன்பத்தை இடர் என்றும் மயக்கங்கொண்ட உலகோர் கொள்கை. மேலே காட்டிய விகற்பங்களெல்லாம் மலபந்த ஒழிவு இல்லாத் தாரதம்மியம் உடைய ஜீவர்கட்கே உரியது. உலகோர் பிறப்பின் வேறுபாடுகொண்டே ஜீவர்கட்குத் தாரதம்மியம் கொள்வர். பந்த நீக்கத்தில் (உலக) விசேடம் உடையவன்றான் செல்வனல்லன்' அஃதில்லாதவன்றான்வறிஞனல்லன்.

தன்னால் இயலுமாயிருக்கவும் பிறர்க்குத் தீங்கு செய்யாதவன்றான் நல்லவன். தன்னால் இயலாதிருக்கவும் பிறருக்குத் துன்பஞ் செய்ய மனம் உடையவன் மிகப் பொல்லாதவன்.

பிறருக்குச் சுகத்தை அவர் பொருட்டாக செய்கிறவன்றான் நல்லவன். பிறருக்குத் துன்பத்தை அவர் பொருட்டாக விட்டவன்றான் நல்லவன்.

மெய்யுணர்வு எவ்வளவு பெற்றிருக்கின்றானோ அவனே செல்வன்; அஃதில்லாதவன்றான் வறியவன்.

அறிவாளிகள் எனப்படும் ஒவ்வொருவர்க்கும் உத்தம இலக்கணமாவது அறிவினாலே தம்மிற்றாழ்ந்தவர்க்கு அவரவரளவு தெரிந்து



அவரவர் அறிவுக்கேற்பக் கோபம் பொறாமைகள் அவர்க்கு உண்டாகாவண்ணம் தாம் சாதுரியமாய் நடந்து கொள்வதே.

அவரவர் அளவு தெரிந்து அவரவர்க்கும் இயைய நடப்பது தான் அறிவின் மேம்பட்டானுக்கு அழகு.

பிறரையெல்லாம் தனக்கு இயையச் சரிப்படுத்தி நடத்தலாமென்று முயல்வது உலக ஞானமில்லாதானியல்பு. உத்தமம்; பிறருக்குத் தான் சரிப்படுவது. அதமம்; பிறரைத் தனக்குச் சரிப்படுத்த விரும்புவது பிறருக்கு இயைய நடக்கமாட்டாமைதான் அறியாமை; இயைய நடப்பதே அறிவின் பலன்.

ஈசுவரன் ஆன்மாக்களைப் பயமுறுத்தி நடத்துவதில் விதம் இரண்டு: (1) திருந்தக்கூடிய பக்குவமுள்ளதற்குப் பயத்தைக் காட்ட, அது கொண்டு உண்மை தெரிந்து மேலே அதுபோல்வன செய்யாது திருந்தும். (2) பயங்காரணமாக அப்பொழுது அதுமட்டில் அஞ்சி நடக்கும். இது பிறர் பொருட்டாக ஈசுவரன் நடத்தியது.

அபக்குவர்கட்கு ஈசன் காணப்படினும் யாதும் பயனில்லை. பக்குவர்கட்கு ஈசனைக் காணவேண்டுமெனத் தேவையுமில்லை. அபக்குவமான நிலைமையில் ஈசன் வந்து ஒரு உறுதி சொல்லினும் ஒருவனுக்கு அதன் உண்மை தெரியமாட்டாது. 'இருதய சுத்தம்' ——————இதன்——————ஞாபகமாய் இருக்கட்டும்.

ஒவ்வொரு ஆன்மாவின் குணமும் தொழிலும் அஃததன் அஞ்ஞான மயம். ஆகவே, ஆன்மா சுதந்திரமின்று. தன்னைப்போல மற்றவையும் சுதந்தரஹீநம் என்று ஒப்புக்கொள்ளாமை குற்றம். பந்தம் பல திறம்.

அஞ்ஞானம், அவித்தை, ஆணவம், மலம் இவை ஒரு பொருளன.

தன்னைப்போல்வனவே மற்றவையும் என்னும் ஒப்புவராமை குற்றம். இஃதுண்டாகும் பொருட்டே பிறப்பிறப்புக்களிற் சிக்ஷையுறுத்தப்படுகின்றது. இஃது உண்டான மட்டே அனைத்தும் ஒழிந்துவிடும்.

ஒருவனுக்கு கல்வியானது பிற ஆன்மாக்களையெல்லாம் தானாக உணரப்படிப்பதே. பாவங்களெல்லாவற்றுள்ளும் தலைமையானது யாது? பிறரை அவமானஞ் செய்வதும் அதற்கிடமானவற்றைச் செய்வதுமாம்.

குற்றம் அல்லது சரியீனம் தவறு என்பது யாது? ஆன்மாவைப் பந்தித்த மலமே. அது காரியமாக நிகழும் செயல்களொன்றும் குற்றமெனப்படா. சாரணமுளதாகக் காரியத்தைக் குற்றஞ் சொல்வது சரியாகாது. அல்லதூஉம், அது காரியமாக நிகழ்வன எனப்படுவன: அப்பந்த நீக்கத்துக்கு நிமித்தமுமாம். ஆகலானும் அது குற்றம் எனப்படா.

பந்தம் உண்டான குற்றம் யாரிடம் குறைகூறத் தக்கது? யாரைப் பார்த்தாலும், சிற்சில குணமும் குற்றமும் உடையராயே யிருக்கின்றனா. தன்னிடமுள்ள குணங் குற்றம் யாவற்றையும் ஓருங்குணர்ந்தவனே அறிவாளி. தன்னிடமுள்ள குற்றமொன்றை யும் தெரியாமற் கண்மூடிக் கொண்டவன்றான், (உலகத்தில்) செல்வன்; சுகமுடையவன் (விவேகமும் விசாரணையுமற்ற இவனே, கன்னேரனைய மனக்கடையாய்க் களிப்புண்டு அவலக்கடல் வீழ் வோன்; அறிவிலி.)

ஒவ்வொருவருடைய குற்றங்களையும் பிறரே அறிகின்றார்கள் தன் தன் குற்றங்களைத்தான் அறிந்தவனே அறிவாளி, பொறாமை யானனுக்கே பிறர் குற்றம் நன்றாக விளங்கும். அவனுக்கு அஃதடங்குமட்டும் தன் குற்றம் விளங்கவே மாட்டாது.

மாநுடருள்ளே சிலர் நமக்கு நல்லவரெனப்படுவதும், சிலர் தியவரெனப்படுவதும் பிரபஞ்சத்திலே எந்தப்பொருளாயினும் ஒன்று. நமக்கு நல்லதெனப்படுவதும், தீயது எனப்படுவதும் நமது அஞ்ஞானமாகிய குற்றமே. சர்க்கரை தித்திப்பதும், வேம்பு கசப் பதும அதனதன் இயற்கை. ஆதலின், அவை நல்லன தியனவெனப் படா. மாநுடருள்ளே சிலர் நல்லவராயிருப்பதும், சிலர் தியவரா யிருப்பதும் மலபாக வேறுபாடாதலின் அதுவுமியற்கையே.

நமக்குள்ள விருப்பு வெறுப்பு என்னும் வேறுபாட்டினாலே தான், நல்லது தீயது என்னும் விகற்பம் தோன்றுவதாயிருக் கின்றது. நமக்கு விருப்புக்கிடமாயிருப்பதை நல்லதென்கின்றோம்; வெறுப்புக்கிடமானதைத் தீயது என்கின்றோம். ஆதலின், விருப்பு வெறுப்பு என்னும் வேறுபாடுள்ள குற்றம் நம்மதே.

நமது மலம் பன்றிக்கினியதாயிருக்கின்றது. நமக்கு வெறுப்ப தாயிருப்பதுபற்றி நாம் அதனைக் கெட்டதெனலாகாது அதுதான் அஞ்ஞானம்.

ஒவ்வொருவனும் தமது அறிவினளவுக்குச் சிறந்தது என்று காணப்பட்டதையே நல்லது என்று முடிவுபண்ணுகிறார்கள். இஃதறியாமையே.



பிதற்றுகிறவன் அதை நல்லதென்கிறான் பேசவிஷயமுண்டா காதவன் சும்மாவிருப்பது யோக்கியமென்கிறான்.

பன்றிக்கு மலம் இனிப்பதுபோல, ஆன்மாக்களுக்கு மலபக்குவ பேதப்படி தத்தம் களிப்பு, கோபம், அழுக்காறு, பிதற்று, புளுகு, குறளை முதலிய அவ்வவை தத்தமக்கினிது.

காமவெறிக்கு மருந்து, பயம், மற்றைக் களிப்புக் கோபம் முதலானவை. ஆன்மாவோடு சகசம் போல்வனவாதலின் பயத் தால் தணிவதன்றி, அழியத்தக்கனவல்ல.

ஒருவனுக்குப் பாகற்காயினியது; மற்றொருவனுக்கு அது ஆகாது. இது யார் குற்றம்? பாகற்காயினது குற்றமா?

அஞ்ஞானத்தின் முதிர்ச்சி சிறுமை, அகங்காரங்கொள்வோர், தம்மைப் பெரியரா மதிக்கின்றனர். அகங்காரம் அஞ்ஞான முதிர்ச்சியாதலின் அதுதான் சிறுமை; ஆகவே, பெருமையாவது அகங்காரவிழப்பே.

பொறாமையும் அதுகாரணமான செயல்களும் பதில் செய்ய இயலாதவனது செயல்கள் பொறாமைப்படுகிறவன் அந்நிலையில் தாழ்ந்தவன் அதை விளைத்தவன் அந்நிலையில் மிக்கவன்.

தனக்குத் தீங்கு செய்தவனை அரசனாவது தெய்வமாவது தண்டிக்கட்டும் என்று நாம் நோவது, 1-வது பொறாமையாகிய இழிதொழிலாயிருக்கிறது. 2-வது தீங்கு செய்தவன் தண்டனைப் படுவது யார் நயத்துக்காக? அவன்றன் நயத்துக்காகவன்றோ. அவன்மேல் இரங்கியா நாம் அவனைத் தண்டனைப்படுத்த வேண்டு கிறோம். தீங்கு செய்தவனை ஈசுவரன் தண்டிக்கட்டும் என்று வேண்டுவது நமக்கோர் பெரும் இழிவு.

தனக்குப் பிறன் தீங்கு செய்தானென்று அரசனிடம் முறைப் பாடு வேண்டுகிறவர்கள் யாவரோ அவரெல்லாம் சுதந்திரமில்லா தவர்கள். அவர்களுள் செல்வம் வறுமை என்பன முதலிய வேறு பாடிருந்தாலும், யாரும் சுதந்திரமில்லாத இந்நிலைமையிற் சம மானவர்களே. ஒன்றற்காகவேனும் அரசனிடம் முறைப்பாடு வேண்டத்தேவைப்படாதவன் எவனோ அவனே மற்றெவர்களினும் பெரியவன்; சமர்த்தன்.

கேட்டவர்களுக்கு ஒன்றைத் தெரிவிப்பது அவர்கள் நிமித்த மான தாகலின், அது தக்கது. தானாய்ப் பிறனைப் புத்திபோதிக்

கவும் கண்டிக்கவும் திருத்தவுமென்று முயல்வதெல்லாம் தன்னயத் துக்காகவே செய்துகொள்வன.

ஒருவன் தன் மனையாளைக் கற்புடையவளாயிருக்கத் தெண் டிப்பதெல்லாம் அவன் தனக்காக. அவளுக்காகவாயின், அப்படி யிருக்கத் தெண்டிக்கவேண்டியவள் அவளே. அவள் அப்படிக்குக் கேட்டுக் கொண்டதற்காக இவன் செய்வதாயின்; அது அவளுக் காகவாயிருக்கும்.

## துன்பமென்பது தவம்; சுகமென்பது அவம்;

சிற்றறிவாளர்க்கு, அல்லது சிறுவர்க்கு அடக்கம் பொறுமை பிறர்க்கு இனியராயொழுகல் முதலான சந்மார்க்கங்களைப் போதித் தால், அது கேட்டமாத்திரமாய் அவர் திருந்துவது இயலாது. இந்த உபதேசத்தைப் பெற்று ஒழுகத்தக்க அநுபவம் வந்த காலந்தான் இது பயன்படும்

யாருக்காயினும் ஓர் போதனையை அவர், அது பெற்று ஒழு கத்தக்க பக்குவங்கண்டே போதித்தல் வேண்டும்.

ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் மற்றவைகளைத் தாம் அகங்காரத் தால் மீறவேண்டுமென்றே இறுமிக்கொண்டு நிற்கின்றன. ஒவ் வொருவரும் பிறருக்கு அதிகாரமுடைய விஷயத்திலே, தாம் அப்பி றரை அடக்க ஆத்திரங் கொண்டவர்களாயே யிருக்கின்றனர். மனைவி, புருஷனுக்கு மற்றெல்லா விஷயத்தில் அடங்கினும், தனக் கென உரியதான சமையற்காரியம் போல்வன ஏதொன்றிலாவது புருஷனை அடக்கக் காத்திருப்பாள்; ஆசிரியருக்கு மாணவரும் இங்ஙனமே.

ஆகவே, எல்லோரும் ஒருவர்மேல் ஒருவர் அகங்காரத்தால் மீறத்தக்கவர்களாகவே யிருக்கின்றனர். யார்தாம் முற்றும் அறிந் தவர்? யார்தாம் ஏதொன்றாயினும் அறியாதவர்? ஆகவே, யார் பெரியர்! யார் சிறியர்!!

மெய்யுணர்வு கிடைத்தும் அதனை உடன்படவொட்டாமல் மறைப்பது தான் திரோபவம். திரோபவமாவது. பக்குவம்வராத ஆன்மாவுக்கு அது உண்டாங்காறும் போகத்தை உண்மையென மயக்குதல்.

உலகத்திலே யாவரும் அல்லது ஒவ்வொருவரும் தாம் தாம் அறிந்ததே புத்தி; அதேமுடிவு என்றென்றிருக்கிறார்கள்; தாம்



தாம் அறிந்தமட்டு அதுவாகலின், தான் அறிந்த மட்டுக்கு மேல் ஏதேனும் உண்டென்று துணிவது இயற்கைக்கு விரோதமான காரியம் கண்ணுள்ளவனுக்குத்தான் காட்சிகள் விளங்கும். அஃதில்லாதவ னுக்கு காட்சியென ஒன்றிருக்கின்றதென அறிவதுண்டாகாது.

விவேகத்தாலாவது குணத்தாலாவது நடையாலாவது நாகரீகத் தாலாவது பலருள்ளே தாழ்ச்சியுள்ளவனாயிருக்கும் ஒருவனை நாம் இகழுகிறோம். அவன் அப்படி இருத்தற்கு அமைந்துள்ள காரணம் யாவதேனும் உளதாயிருக்கும் புத்திவிசாரம் இல்லாமை யினாலேனும், சோம்பலாலேனும் மானமின்மையினாலேனும் அவன் அவன் அப்படியிருக்கலாந்தானே. இன்னும் இவைபோலும் பல உளவாயிருக்கலாம். அவை உண்மை அவன்பேரிற் குற்றமல்ல. அவனுடைய உபாதியில் (நிலைமையில்) நாமும் இருந்தால், அவ னாயேயிருப்போம். அவன் குற்றவாளியல்லன். அவனுடைய பந்தத் தின் இயல்பு அஃது அதனை உணராமல், நாம் அதிகம் அறிந்து விட்டோம் என்ற மதிப்பினாலேனும் அல்லது அவன்மேல் யாதும் பொறாமையினால் அவமதிப்பாகவேனுமே நாம் அவனை நிந்திக் கிறோமாதலால் நாமே குற்றவாளி.

ஒருவன் ஒருவியப்பான காரியத்தைச் செய்தால், அது நமக்கிய லாமையினால், மதிக்கிறோம். ஒருவன் ஒரு இழிவான காரியத்தைச் செய்தால், அதில் நாம் வல்லமையுடையோம் என்பது பற்றி அவனை அவமதிக்கின்றோம். அவனோடொப்பான் அது செய்யான்.

பிறரை, அவமதிக்கிறவர்களெல்லாம், தங்கள் அஞ்ஞானமாகிய விசரினாலேயே அது செய்கின்றார்கள் ஆகவே, அதற்கு யார்தாம் தப்பமுடியும்?

ஒரு குற்றத்தைச் செய்கிறவனும் குற்றவாளிதான்; அவனை நிந்திக்கிறவனும் குற்றவாளிதான்.

யாவனொருவன் யாதொரு குற்றத்தைச் செய்தான் என்று நாம் கேள்விப்பட்டபொழுது, நாம் அதற்குச் சொல்லவேண்டிய சமாதானம்; ''ஆம்! ஆம்! அவன் ஒரு ஆத்மாதானே, பந்தமுடை யனவாகிய ஆன்மாக்களுக்குரிய இயற்கையைக் கடந்து புதிதான ஒரு குற்றம் அவன் செய்ததன்று'' என்பதே.

சாத்தன் ஒரு ரோகத்தால் வருந்துகிறான்; இதற்குப் பரிகார மென்ன? இந்த நோய்க்கு இப்பொழுது யாதும் பரிகாரஞ்செய் தாலும், இன்னும் வரவரப் பிறப்புக்களிலெல்லாம் ரோகங்கள் வந்துகொண்டே இருக்கும். அங்ஙனமாயின், இவை இனி வர

வொட்டாமற் செய்துகொள்ளப் பரிகாரம் யாது? இந்த ரோகங்
களுக்கெல்லாம் காரணம் கன்மம்; அதற்குக் காரணம் மூலமான
அஞ்ஞானம், அது தீர்ந்தால் ரோகமும் அற்றுப்போம். ஆயின்
அதன் தீர்வுக்குத்தான் பரிகாரம் யாது? அது கன்மமாய்ப் பரிண
மிக்க, கன்மம் ரோகமாய்ப் பரிணமித்து ஆன்மாவை வருத்த, அது
முழுவதும் வருந்தித் தீர்வதே அதன் தீர்வுக்கு முடிந்த பரிகாரம்;
நிகழ்வததெல்லாஞ் சரியே.

பிறர் நமக்குத் துன்பங்களை ஊட்ட ஊட்ட, அவர்களுக்கு
அவை மறுமைக்குப் புசிப்பாகவும், நமக்கு அவை இப்பொழுதே
புசிப்பாகவும் இருவருக்கும் அஞ்ஞானம் தொலைகின்றது. துன்பங்
களை உடன்படாது மறுதலிப்பார்க்கு அவை பின்பு மறுமைக்குப்
புசிப்பாகின்றன. உடன்பட்டஞான்று அஞ்ஞானம் அற்று விடு
கின்றது.

இருமுகிறவன் அதற்குக் காரணமான நோயுடையவன். கோபம்,
பொறாமை களிப்பு முதலிய தீத்தொழிலுடையானும் அவற்றிற்குத்
தகுந்த காரணமான அஞ்ஞானமுடையவன். ஆதலின், அவனை
நாம் குறை கூறுவது தவறு. இருமுகிறவன் அதன் காரணம் ஒய
விடுவன்; மேலையானும் அங்ஙனமே.

துர்க்குணங்களை விட முழுதும் மனம் உடன்பட்டவனாய்,
அக்கறையற்று மறதி கொண்டவனுக்கே பயம் பயன்படும்.

ஒருவன் புலாலை ஊன் ஒழுக ஒழுகச் சுமக்கின்றான். ஒரு
சைவன் அதனைக் கண்டு அருவருத்து நிந்திக்கிறான். யார் குற்ற
வாளி? தனக்கு இயற்கையான அத்தொழிலைச் சைவனுக்காக
அவன் விட்டொழிந்து விடவேண்டுமா? அதனை அவனுக்கியற்கை
என்றுணராமை சைவனுக்கு மடமை! உலக நடையாவும் இங்ஙனமே.
ஒவ்வொருவனும் தான் செய்யும் ஒவ்வொன்றையும் தனக்கு நேர்த்தி
என்றே செய்கின்றான்.

ஒருவனுடைய இயற்கை தெரிய வேண்டுமானால் அவனுக்குப்
பலவித இம்சைகளைச் செய்து தெரியவேண்டும். அவரவர்க்கும்
இனிய நடந்தால் எல்லாரும் நல்லவர்கள்தாம்.

ஈசுவரனிடம் நாம் ஏதும் ஒரு சுகத்தை வேண்டினால் அதற்
காகத் தவஞ் செய்யச் சொல்லுவார். சுகத்தைச் சும்மா தரமாட்
டார். இனி, அவரிடம் யாதும் ஒரு துன்பத்தைத் தரும்படி வேண்
டினால், பதில் வேண்டாது சும்மா தருவார்: கேட்பவன் தனக்கு
அதன் நன்மையை விளங்கித் தேவைகண்டு கேட்கவேண்டும்.
பரீக்ஷைக்காகக் கேட்பது அவமதிப்பாயிருக்கும். இதனால் துன்பமே



ஆன்மாவின் உய்திக்கு நியதமானது என்பது தெரிகிறதல்லவா?
எதை நமக்கு ஈசுவரன் சும்மா தருவாரோ அதே நமக்கு இனியது
அதுதான் துன்பம்.

தமக்குத் துன்பஞ் செய்கிறவர்களை உலகோர் 'ஐயோ!
இவன் வியபிசாரி, இவன் திருடன், இவன் கோபி. இவன்
பொறாமையுடையவன்' என்றென்றின்னனவாகக் கண்டிக்கிறார்
கள்; இது எதற்காக? தங்கள் சுகத்திற்காக மேலே காட்டிய அவ்
வவர்களும் வியபிசாரம், திருட்டு, கோபம், பொறாமை என்பன
வான இக் குற்றங்களை அற்றவர்களாயிருக்க வேண்டுமாம். தங்
கள் சுகத்துக்காகப் பிறரை யோக்கியராக வேண்டுமென்னும் இழி
வான இரப்பும், எளிமையான வேண்டுகோளும் இதுபோல்வன
யாதும் இல்லை. தாமும் மற்றவர் பொருட்டு இங்ஙனம் யோக்
கியராகாமையென்னை. இஃதென்ன பக்ஷபாதம்!

தன்னை குண ஒழுங்கங்களாற் திருத்திக்கொள்ள வேண்டு
மென்னுந் தேட்டமாகிய பக்குவம் வந்தவனுக்கே, அவனுக்காக
வென ஒன்றைப் போதித்தல் தகும். அந்தப் பக்குவம் வராதவர்
களைக் கண்டிப்பதெல்லாம் கண்டிப்பவர்கள் தங்கள் நயத்துக்
காக.

இவன் வியபிசாரி. இவன் திருடன். இவன் கோபி, இவன்
பொறாமையுடையவன்' இவன் டம்பன், இவன் நம்மை மரியாதை
செய்கிறானில்லை என்றென்று இன்னனவாகப் பிறரைக் குறை
கூறுவதெல்லாம் கூறுவாரது ஆற்றாமையைக் காட்டுகின்றது.
அவர்கள் மிஞ்சினவர்களும் இவர்கள் தாழ்ந்தவர்களும் என்பதே
இக்குறைக் கூற்றால் அறியக் கிடக்கின்றது. இது சிறுமை! சிறுமை!
தன்னிழிவைத் தானே புலப்படுத்துவது எவ்வளவு சிறுமை!

தனக்கென ஒன்றையும் தேவையற்று விட்டவன் பிறருக்கு
ஒன்றைப் போதிக்கில் அதுதான் பிறருக்காவதாயிருக்கும்.

ஒன்றற்குரிய அழகை வியப்பதில் ஒருவர்க்கொருவர் பேதப்படு
கின்றார்கள்.; ஒருத்தியுடைய அதரத்தை ஒருவன் வியக்கின்றான்;
மற்றொருவன் அவமதிக்கின்றான். இதன் காரணமென்ன? ஒரு
ஸ்திரியின் அழகை ஒருவன் மதிக்கிறான், ஒருவன் அவமதிக்கின்
றான். காரணம் என்ன? அவ்வவற்றிற்கு மேம்பட்டனவற்றைத்
தான் கண்டறியாதவன் அவ்வவற்றையும் வியப்பான் கண்டறிந்த
வன் அவமதிப்பான்.

உருசியில் வேறுபாடு வாத பித்த சேடங்களிற் றங்கியுள்ளது
போல. கண் முதலான ஒவ்வொரு இந்திரியங்களுக்கும் உபாதி

சேடங்
பேதமுண்டு. ஒவ்வொருவருடைய மனசுக்கும் பித்தலாத
களுக்குத் தக்கவாறு பேதம் உண்டு. மெய்யநுபவம் பொய்யநுப
வங்களால் வந்த பேதம் சிறந்த வழக்கு.

உலகத்திலே மரணம், துன்பம், அவமானம் முதலான கவலை
களுக்கு மனுஷர் தேற்றம் பெறமாட்டாமல் அறிவு கலங்கு
கிறார்கள். இதற்கோ உய்யும் வழி கிடையாது. மனத்தேற்றத்
திற்கும் வழி காணவில்லை; வழி உண்டு, அதைப் பெற்றவர்கள்
தாம் அத் துன்பங்களுக்கு மருந்து பெற்றவர்கள். உலக நடை
யைப் பற்றி ஈசுவரன் கொண்டு நடாத்தும் அபிப்பிராயத்தையும்
தாங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தையும் சீர்தூக்கி
உண்மை தெரிய வேண்டும். உலகோர் அபிப்பிராயம். தங்கள்
சாமர்த்தியத்தால் துன்பங்களை விலக்கி இன்பங்களை ஆக்கி
வாழலாம் என்பது. ஈசன் அபிப்பிராயம் இஃதன்று. துரண்டிலிரை
போலச் சுகத்தைக் காட்டி அது நிமித்தமாய் ஆன்மாக்களை
வருத்திப் பந்தம் அகற்றுவதே. எல்லாரும் சுகமாய் மாத்திரம்
வாழ்ந்து கொள்ளவேண்டுமென்பது அவர் கருத்தன்று.

முலையரும்பி உறுப்பு
ஒருத்தி பேதைப் பருவம் கடந்து,
வேறுபாடுகள் தோன்றிப் பெண்மையாகிய பக்குவம் உண்டாங்
காலம் ஆடவர்கள் தன்னை அழகு முதலியவற்றால் அவாவவேண்
டும் என்னும் பிரீதி கொள்கின்றாள். இங்ஙனமே ஆன்மாக்களும்
பக்குவமுறுங்காலத்தில் தான் என்பது ஆன்மாவேயென வுணர்ந்து
தன்னை அழகுடையதென்று யாவரும் மதிக்கவேண்டுமென்னும்
பிரீதிகொண்டு கோபம், பொறாமை, களிப்பு: லோபம், மோகம்
முதலான துர்க்குணங்களை அகற்றியொழுக முயற்சிப்படுவர்.
இதில் முக்கியமான முயற்சி, அகங்காரத்தை (மதிப்பை) அகற்றி
நடக்க முயல்வதே. இஃதொன்று சரிப்பட்டால் மற்றவையனைத்
துஞ் சரிப்படும் இஃதொன்றுளதாயின் யாதொன்றும் சரிப்படுவ
தரிது. ஆதலால் இதை அகற்ற ஒழுகுவதே மிக முக்கியம்; முடிந்த
பரமார்த்தப்பேறு.

பக்குவமாகாதது பேதை; அது தோன்றியது பெதும்பை பக்கு
வம் முற்றியது மங்கை.

மெய்யுணர்வெய்தாதவர்கள் மத்தளம்; அஃதெய்தியவர் உரல்
மெய்யுணர்வாளனுக்குத் துன்பந்தாங்குவது ஒன்று வருத்தம்; அது
வராதவனுக்குத் துன்பந்தாங்குவதும் வருத்தம்; தாங்காமையும்
இயலாது. அவன் வருத்தத்தை ஆக்குவதும் உடையன்.

மெய்யுணர்வில்லாதவனுக்குப் பிறர் குற்றமே தெரியும்; மெய்
யுணர்வாளனுக்குத் தன் குற்றமே தெரியும்.



ஈசுவரன் முற்றறிவர்; முழுதாற்றலர்; காருண்ணிய சுவரூபி;
நம்மைப்போல் யாதொன்றிலேனும் இயலாமை உடையவரல்லர்;
சோம்பலுடையவருமல்லர்; தடுமாற்றம், மறதிகள் உடையரு
மல்லர்; இத்தகையாளர் ஜீவர்களை நடாத்தும் விதம் தவறான
தாய் யாதும் குறை கூறத்தக்கதாயிராது. ஆதலால், உலகம் நடக்
கிற பிரகாரம் எதுவோ அதுதான் சரி; எல்லா ஜீவர்களும் ஒழுகும்
விதம் சரி. ஆன்மாக்களைப் பந்தித்திருக்கும் அஞ்ஞானங்களெல்லாம்
ஒரு விதமானவைகளல்ல. ஈசுவரன் அதனதன் போக்கில் அதை
அதை நடத்துவதே தகுதியென்று கண்டு, அத்திறமே நடத்து
கிறார்; வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களின் நடவடிபோல,
ஆதலால், யாரொருவருடைய நடையையாவது நாம் சரியீன
மென்று சொல்வதே சரியீனம் தான் நடைபெறுத்தும் விதமே
சரியானதென்று அவர் சொன்னார்.

உலகத்திலே ஒருவனைக் கோபியென்றும், ஒருவனைப் பொறா
மையுடயவனென்றும், ஒருவனைத் திருடனென்றும், இன்னனவாக
நாம் ஒவ்வொருவரைச் சரியீனம் பேசி வெறுக்கின்றோம். சரியீனம்
நம்மதே; அவரதன்று. ஈசுவரன் அவருக்குணட்டி முடிந்த படிப்பின்
திருத்தம் அதுவே.

இவன் கோபி; இவன் திருடன் என்று பிறரைக்கண்டிக்கிறவர்
களெல்லாம் தங்கள் சுகநிமித்தமே அது செய்கின்றார்கள். இவனு
டைய சுகத்துக்காக அவன் திருடாமல் இருந்துவிட இயலுமா?
இப்படியுங் கேட்கலாமா? தன்னயத்துக்காகத் திருந்த அறிய
மாட்டாதவன், பிறர் நயத்துக்காகத் திருந்த அறியக் கூடுவானா?

பிறப்பையல்ல நீக்க வேண்டியது: அஞ்ஞானத்தையே:
அஃதற்றால், பிறப்பால் வருத்தமில்லை அது பரீக்ஷை போலிருக்கும்.

ஆன்மாக்களுக்கு அஞ்ஞானம் எவ்விதமாய் அகலவேண்டும்.
அஃததற்கும் காரணமாகிய மலத்தில் உள்ள பிரகாரமாக, கோபம்,
பொறாமை, களிப்பு, வெறுப்பு. லோபம், டம்பம், மதிப்பு, என்
னென்னும் துர்க்குணங்களாய்ப் பரிணமித்து, நுகர்வாய்க் கழிந்து
அகலவேண்டும். ஆதலால், ஆன்மாக்களிடம் இத் துர்க்குணங்களு
டைமைபற்றி அவற்றை இகழ்வது மடமை.

பிறர் வேண்டும் என்று கேட்க அவரைக் கண்டிப்பதும் திருத்
தங் கூறுவதும் போதிப்பதுமே அவர்க்காக. இங்ஙனமன்றித் தாமாய்
வலிந்து பிறர்க்கு இவற்றைச் செய்வதெல்லாம் தமக்காகவே
அவர்க்கன்று.

செல்வம் இன்பமான நிலை; தீவினைகளையெல்லாம் ஈட்டுவதற்கு நிமித்தம் துன்பமான நிலை, அவற்றை நுகர்தற்கு நிமித்தம் இன்பமான நிலையிற் களிப்பில்லாவிட்டால் அது இன்பமல்ல. துன்பமான நிலையில் அச்சமில்லாவிட்டால் அது துன்பமல்ல; இன்பமான நிலைக்குக் களிப்பு இயற்கை. அது மயக்கமாதலின் எல்லாத் தீவினைகளுக்கும் அது காரணம்.

மருந்தை உண்ண சம்மதமில்லாத அவிவேகிக்கு அதற்குக் கூலியாகப் பின்பு சிறிது இனிப்புக் கொடுக்கப்படுகின்றது; இனிப்பாலா மருந்தாலா பிரயோசனம்? சுகதுக்கங்களுக்குள்ளே துக்கம் மருந்து போல்வது; சுகம் இனிப்புப் போல்வது. இன்னும், தூண்டிலூண் சுகம்; அதனாற் சாவு துன்பம். இந்த ஊண் நல்லதா?

விவேகிகள், பயனற்றதான இனிப்பைக் கூலி வேண்டாது பயனுடைத்தான மருந்தையே உண்பார்கள். மெய்யுணர்வார் பயனற்றதான சுகத்தைப் பதில் வேண்டாது. துன்பத்தையே பயன் நோக்கிவேண்டி நுகர்வர்;

மிஞ்சி வருந்துகிறவன் பரலோகத்துக்கு அவ்வளவுக்கு விரைவான் வருத்தம் நடைக்குச் சமம். சுகம் அடிக்கடி நுகர்வோன் பரலோக பாதைக்குத் தாமதப்படுகின்றான்.

ஊழின்வண்ணம் சுகநுகர்ச்சிக்கு இடமுண்டானால், பொருளுக்கு வழி பார்த்திருக்க வேண்டியதில்லை. நுகர்ச்சிக்கு ஊழ் இல்லாவிட்டால், பொருள் இருந்தும் அஃதில்லாததாகும்.

ஒரு பெரு நலத்தைப் பெறலாமாயின் எத்தனையோ நட்டங்களை (வருத்தங்களை) ஒருவன் அடையலாம். ஆன்மாவாகிய நான் பரிசுத்தனாதற்காக எத்தனையோ வறுமை, அவமானம், கிலேசம் முதலான பலவற்றை அடையலாம்.

துன்பத்துக்கிடமான செலவை உண்டாக்குவதெல்லாம் தவத்தை விலைக்குக் கொள்வதாகும். ஆதலின், அதே நன்று. தவத்தை யார் ஆகாதென்பர்? தவந்தான் துன்பம்.

ஒருவன் அகங்காரம் ஒன்றையும் விட்டுவிட்டால் அவனிடத்து முன்புள்ளதான குற்றங்கள் இழிவுகள் எல்லாம் அற்றுவிடும் அகங்காரம் விட்டவன்மேல் யாதும் குற்றம் கூறுவோர் சரியீனர். தன் மீதுள்ள குற்றங்கள் இழிவுகள் தீர வழி யாது? அகங்காரத்தை அகற்றுவதே.



யாவனொருவன் யாதொரு பாவத்தைச் செய்கிறான்; அதனால் வருந் தண்டனையை நரகத்திலாயினும், பூமியிலாயினும் தானே அனுபவித்தற்குக் கடமைப் பட்டவனாயிருக்கின்றான். பிறன் செய்த பாவத்திற்கு நாம் கடமைப் பட்டவர்களாயிருக்கவில்லை. இங்ஙனமாக, பாவிகளை நாம் குறை கூற, கண்டிக்க அல்லது நிந்திக்க நமக்குக் கடமையென்னை?

நமக்குச் சரியீனரெனப் புலப்படும் குண ஒழுக்கங்களையுடையோர் யாவரும் நம்மையே சரியீனர் என அதனாற்றெரிவிக்கின்றனர். அதனால் அவர் நமக்குக் குருவுமாகின்றனர்.

யாவற்றினுஞ் சிறந்தது பரோபகாரம். அவற்றுள்ளே தலைமையானது அப் பிறர் குற்றங்களை அவர் வருத்தம் நோக்கிப் பொறுப்பது

தனக்கு மேற்பட்ட பகையொன்றுளதாக அஞ்சாதவனே வீரன்; அவன் யாவன்? ஞானியே தன்னை மேற்கொள்ளத் தக்கவன் ஒருவன் வந்து தன்னைத் தாக்கிய பொழுது, அவனோடு பதில் சாதிக்க முயலின், அது அச்சம் பற்றியதாயிருக்கும்; அல்லது பொறாமையாயிருக்கும். பொறாமை பிறன் மேம்பாட்டைச் சகியாமையாதலின் பதில் சாதிக்க முயறல், எவ்வாற்றானும் தன்பாற் றாழ்ச்சியுடைமையைப் புலப்படுத்தும்; ஆதலின், பதில் செய்யாமைதான் வீரம்.

பிறர் குற்றஞ் சகியாமை பொறாமை. ஆகவே, அது தன்பாற் சிறுமையுடைமையாகப் புலப்படுத்துகின்றது.

**நம் வாழ்நாள் ஒவ்வொன்றிலும் எவ்வளவும் துன்பத்தைப் பெற்றுக்கொண்டோமோ அவ்வளவுந்தான் பிரயோசனம் இந்த ஜநநத்தில் எவ்வளவு துன்பத்தைப் பெற்றோமோ அவ்வளவுந்தான் இந்தப் பிறப்பால் நாம் பெற்றுக் கொண்ட பயன்.**

பிறரிலே, உரித்தாளிகள், அன்னியர் என்னும் யாரிடத்தும் நாம் குற்றங்கண்டு குளறுவதெல்லாம் நமக்காகவே, நமது சரியீனமே எல்லாம்.

துன்பங்களை வெறுப்பாய் நுகர்கின்றவன், மருந்தைப் பிரீதியற்று உண்ணுஞ் சிறுவர்களையொக்கின்றான். இது பெரும் மடமை. துன்பங்களை ஈசுவரன் நிறுத்தும் வரையும் நுகரவேண்டும். பிள்ளைகள் சம்மதியாவிட்டாலும் தாய் அவைகளுக்கு வலிந்

தாயினும் மருந்தூட்டாமல் விடுவதேயில்லை. இங்ஙனமாக நாம்
சம்மதியாமைதான் பெரும் மடமை.

அஞ்ஞானத்தடிப்பான காலத்திலே, பிறர் உண்ண, உடுக்க,
களிக்க மனம் பொறுக்கமாட்டாதவன், அதன் முடிவான காலத்
தில், பிறன் தன் பொருளைத்திருடவும், தன் மனையாளை அப
கரிக்கவும் இன்னும் எவ்வித தீங்குகளைச் செய்து மகிழவும் அதற்
கெல்லாம் மனம் உவக்கக் காத்திருப்பான்.

இன்பங்களின்மேல் ஆன்மாக்களுக்கு உளவாயிருக்கும் ஆசை
தான் திரோபவ காரணம்.

அகங்காரம் தம்மை மேம்படுத்தற்குரியது என்று எண்ணிக்
கொள்கின்றார்கள். அது பொறாமையை விளைத்துத் தன்னை
அவனிற் றாழ்ந்தவனாக்கிவிடுகின்றது. பொறாமை செய்வோன்
தாழ்ந்தவன். அதற்கிடமானவன் உயர்ந்தவன்;

இன்பத்தின்மேல் ஆசையுளதாயிருக்குமட்டும் ஆன்மாக்களுக்
குத் துன்பத்தில் அச்சம் உண்டாகாது. ஆசையற்றுத் துன்பத்தில்
அச்சம் வந்தவர்களுக்கு அதை விளைப்பார் மேற் கோபம்
பொறாமை முதலிய தீக்குணங்கள் விருத்தியாகும் துன்பமானது,
பிணிக்கு மருந்துபோல, அஞ்ஞானத்துக்கு மருந்து என்னும்
உண்மை தெரிந்து அநுபவம் உண்டாகத்தான் துன்பத்தில்
வெறுப்புற்று விருப்புண்டாகும்.

துன்ப நுகர்ச்சியாற்றானே அஞ்ஞானம் அகலுகின்றது. அதற்கு
ஜீவர்களது உதவி ஒருவர்க்கொருவர் வேண்டியது. ஒரு ஆன்மா
தனது அஞ்ஞானத்தைக் கோபம், பொறாமை அவமதிப்பு திருட்டு
வியபிசாரம் நிந்தை முதலியன பரிணமிப்பால் மற்றவற்றிற்குத்
தாக்க அவை தாம் முந்திய பிறப்பிற்செய்து கொண்ட கோபம்
முதலிய தீவினைக்கீடாகத் துன்பமாய் நுகருகின்றன. இங்ஙனமே
ஒவ்வொன்றும்.

ஒருவனுக்கு நாமாய் ஒரு புத்தியைப் போதிக்க முயல்வதும்,
இன்னும் நாமாய் வலிந்து எதைச் செய்ய முயல்வதும், முன்னிருந்த
அவனது நிலையைச் சரியீனம் என்று எண்ணச் செய்தலினால்
தவறாகின்றன.

நமக்குச் சம்பவிக்கும் இருவினைகளும், முந்தி நாம் செய்ததற்குப்
பதில் என்று சமாதானம்பண்ணு அல்லது ஈசனே நமது நன்மைக்
காகத் தாமாக, விளைக்கின்றார் என்பதை ஒப்புக்கொள். இந்த
இருவிதமுமன்றி வேறு காரணம் யாது மின்மையின் அனுபவிக்க
வருவது யாதையும் நீ விசாரமின்றி ஒப்புக்கொள்ளலாம்.



எவர்கள் எதை எளிதிற் பெறுகின்றார்களோ, அவர்கள் அதிற்
செருக்குடையராவார்கள்.

அறிவைப் போதனையாகப் பெறுவதிலும் அநுபவமாகப் பெறு
வதே உறுதியானது ஆதலால், போதனையாக உணர்த்தும் ஆசானி
லும், அநுபவமாக உணர்த்தற்குரிய பகைஞர் மூடர், சிறுவர்,
சோம்பலாளர் முதலானவர்களே விசேடமாக நன்றி பாராட்டற்
குரியவர்கள்.

**அழுந்திய அஞ்ஞானிக்குத் திரோதான சக்தி போலச்
செல்வமும் அத்தகைய மறைப்பிற்குரியது.**

சுகம் அநுபவிப்பதிலும், துன்பத்தை அகற்றுவதிலும் நாம்
ஆத்திரங்கொண்டவர்களாய் இருக்கின்றோம். அது போலவே பிறர்
விஷயத்திலும் நாம் நடுவு நிலைமையாய் இருக்கவேண்டியது.
ஒருவன் கோபம், பொறாமை, களிப்பு மதிப்பு (செருக்கு) பிதற்று,
வைவு, ஊறு, திருட்டு பழிப்பு, வஞ்சம் முதலான குற்றங்களைப்
பிறர்பாற் செய்யும் போது. அவற்றை அவர் தம் நோய் தணிந்து
ஆறுதற்காக தாம் இரக்கமுடையராக வேண்டும். சுகம் அடை
வதிலும் அப்படியே.

வறியவன் உணவு காமம் முதலிய புசிப்பு இல்லாமல் வருந்து
கிறான். செல்வன் அவற்றை மிகப் புசித்து வருந்துகிறான். ஆகவே
துன்பத்திற்குக் காரணம் வறுமையா?

கோபத்தின் இழிவும் கெடுதியும் கோபிக்கிறவனுக்கல்லத் தெரி
வது; படுகிறவனுக்கே. பொய். களவு, வியபிசாரம், பொறாமை,
கடுஞ்சொல், வைவு, குத்திரம், வஞ்சகம், பக்ஷபாதம். ஊறு
இவை முதலான எல்வித துன்பமும் அவற்றைப் படுகிறவர்
களுக்கே பயன்படும். இதனாலும் துன்பமே உறுதி. பயப்பதென்
பது தெளியப்படும்.

தன் குற்றங்களைத் தனக்கு விளங்காதவரையும் தான் அவற்
றைச் செய்யவே வேண்டும்.

களவு செய்தவன், தான் படுந் தண்டனையைப் பிரீதியாகப்
படவில்லை. அதுபோலவே; துன்பங்களை ஒருவன் ஊழ்வினைப்
பயனென்று உடன்பட்டு. பட்டுத்தரிப்பது. ஆற்றாமையான
உடன்பாடு இங்ஙனமே. ஈசுவரன் நமக்குத் தந்தனவும். ஊட்டு
வனவுமாய. யாவற்றையும் நாம் திருப்தியென ஒப்புக்கொள்ளல்
வேண்டுமென்னும் இதுவும் ஆற்றாமையான உடன்பாடே.

காயத்தாலும் வாக்காலும் மனத்தாலும் ஆகிய இம்மூன்றாலும் தன்கண் நிகழ்வனவற்றைப் படிப்பதே படிப்பு.

நீ ஒரு ஆயுதத்தால் யாதொன்றை அறியும்போது அது அரிபடாதிருந்தால் 'கத்தி கூரில்லை' என்று பேசாதே. நீ துர்ப்பலன் என்பதையே விளக்கும் 'இந்தக் கத்தியால் இதை நான் அறுக்கமாட்டேன்' என்று உண்மை பேசு.

ஒருவன் தான் யோக்கியன் என்னும் மதிப்புக்காக நடக்கவேண்டிய திருத்தத்துக்கு நாம் புத்தி போதிக்க வேண்டியது அவசியமல்ல. தனக்கு மதிப்பை வேண்டுகிறவன் அதற்காகத் தானே திருந்த நடப்பான்.

தனக்கு அஞ்ஞானத்தை அகற்ற ஆத்திரங் கொண்டவனுக்கே திருத்தத்துக்காக புத்தி சொல்லவேண்டியது அதுவும் அவன் கேட்டால் கேட்டவனுக்கும், பக்குவம் தெரிந்து தக்கதை உணர்த்தல் வேண்டும்; மகிமைக்கு ஞானியாக முயன்றவனுக்குமல்ல.

விருப்பு அற்றவனுக்கு மனிதருள்ளே நல்லவர் இவர் என்ற வேறுபாடில்லை. வெறுப்பு அற்றவர்களுக்குத் தீயவர் என்ற வேறுபாடில்லை.

பிறர் செய்யுந் தீங்குகளுக்குப் பதில் செய்யும் முயற்சி இருக்குமட்டும், ஒருவனுக்கு அஞ்ஞானத்தை உணரும் உணர்ச்சியே சித்திக்க மாட்டாது.

தனக்கு அஞ்ஞானத்தை அகற்ற முயன்று கொண்டவனுக்கு அதன் வேதனை உணரப்படுதலால், பிறனுக்கும் அது அவ்வண்ணமே என உண்மை தெரியப்படும், ஆகவே பிறன் செய்யும் கோபம், பொறாமை, வைவு, புறங்கூற்று, செருக்கு, அவமதிப்பு, அணாப்பு முதலிய குற்றங்களிலெல்லாம் அவன்மேல் இரக்கம் உதிக்கும். அதனால் அவன் தன்மேல் அவற்றைச் செய்து அவற்றாலாகிய வருத்தம் தனியட்டும் என்னும் உடன்பாடு உண்டாகும். இதுதான் பரோபகாரம்.

செல்வத்தால் களிப்பும் வறுமையாற் கவலையும் இயற்கை; ஆயினும், இவை அவரவர் அறிவுக்குத் தக்கபடியிருக்கும் செல்வர் வீட்டுக்கு வாழ்க்கைப்பட்ட வறியவள் ஒருத்தி, தனக்குப் பெரும் பாக்கியம் கிடைத்ததாகச் செருக்குற்றாள்; மற்றொருத்தி தான் அவரளவுக்குத் தக்கசெல்வம் இல்லாதவளாய் முடிந்ததே; இதிலும் வறியவனுக்கு வாழ்க்கைப்பட்டாற் செருக்காயிருக்கலாமேயென்ற கவலைகொண்டாள்.



அகங்காரமாகிய நோய்க்குச் சத்துருக்களாகிய துன்பஞ் செய்பவர்களே வைத்தியர். அவர்கள் செய்யும் திருட்டு, ஊறு, வியபிசாரம், வைவு, இழிப்பு, புறங்கூற்று, பொறாமை, அவமதிப்பு, அணாப்பு முதலான துன்பங்கள் தனக்குப் பொறாமையை விளைக்க அவைகளே மருந்தாகும். இத்துன்பமாகிய மருந்தில் வழி அகங்காரநோய் மற்றொரு விதமாகவும் மாறாது.

ஒவ்வொருவரும் தாம் தாம் எதைச்செய்யும் போதும் அவ்வப்போதும் அஃதனைதச் சரி (நேர்த்தி) யென்றே செய்கின்றார்கள். யாரைக் குறை சொல்லலாம்?

**யாதொன்றற்கும் அஞ்சித் துன்பமென்று பின்வாங்காதவனே ஞானி.**

பிறர் செய்கைகளுக்குள்ளே நமக்கு அருவருப்பாயிருப்பவைகள் எல்லாம் (அங்ஙனமாயிருத்தற்குக் காரணம்) அவை நமக்குத் துன்பமாயிருப்பதனாற்றான் துன்பத்தைத் தனக்கு நலமென்று உணர்ந்து வருந்துகிறவன் பிறர் விஷயத்திலும் நடுவு நிலைமையாயிருக்க வேண்டியது இதுதான் அருள். அபக்குவனுக்கு அருள் ஒரு விதம்; பக்குவனுக்கு ஒரு விதம். எந்த நிலையிலும் மற்றவர்களைத் தன் போலக் காண்பதுதான் அருள்.

## சிவ சாயுச்சியம்

பிரமசாக்ஷாத்காரம் ஒருவனுக்கு எவ்வாற்றாற் கைகூட வேண்டும்? தான், ஈசுவரனுக்குப் பூசை செய்பவன் அவனைத் தானாகக் காண்கின்றான். அதனோடு அன்பும் பிரவிர்த்தியாகின்றது. இத்தகையானுக்கே மேற்கூறியது கைக்கூடும். பூசை, அநுபவத்தால் தானாகச் செய்கின்றது. அநுபவத்தால் வந்த இந்தப் பாவனையும், அதனோடு சகசமாயுதித்த அன்பும் ஆகிய இந்த இரண்டுமின்றி ஈசுவர சாயுச்சியம் யாண்டுச் சித்திக்கும்? பூசித்து வராதவனுக்கு அன்புமில்லை ஈசுவரனிடத்தே அன்பும் இல்லாதவனாய், வெறும் பாவனையால், ''நான் பிரமம்'' என்று ஊழிகாலம் சும்மாவிருந்து பார்த்தும் என் பயன்! இரண்டு பொருளை ஒட்டுவதற்குப் பிசின் போலவே, பிரமபாவனைக்கு அன்பு நியதம் அன்பாலேதான் தானாக வேண்டும். (தான் – ஈசன்)

எல்லாவற்றினும் பிச்சைத்தனமானது யாது? மற்றவர்களையெல்லாம் தனக்கு இதஞ்செய்து ஒழுகும்படி வேண்டுதல். பெருந்தனமாவது யாது? எல்லாருக்குந் தான் அவர் நெறிப்பட்டு அவர்க்கு

இதஞ் செய்வானாய் ஒழுகுதல். இவ் விரண்டின் சுருக்கமாவது: பிறரைத் தனக்கு நல்லவராயிருக்க வேண்டுதலும் அது வேண்டாது தானே அப்பிறர்க்கெல்லாம் நல்லவனாயிருப்பதுமாம்.

சுகமானது தூண்டிற் றசைபோலச் ஜீவர்க்குத் துன்பத்தில் மாட்டுவதற்காகவும் வருந்தினோர்க்குச் சிறிது ஆறுதற்காகவும், செருக்குற்று (அதனால்) உண்மையை மறந்து ஆசாயமியத்தை ஈட்டுவதற்காகவும் ஈசுவரனால் ஊட்டுப்படுகின்றது. ஆதலால், அத்தகையதாகிய சுகத்தை நம்முடைய பிரியத்துக்கு நாம் விழைதலாகாது; ஈசுவர ஆஞ்ஞையாகக் கிடைத்தால் நுகரலாம்; அதையும் உடம்படாமை நன்று.

## அஞ்ஞானம் திரிகரணங்களாலும் கக்கியே யழியும்

பிறருடைய ஆசாரம், உடை நடை முதலிய பாவனை, பேச்சு, நாகரீகம், பொறாமை முதலிய துர்க்குணம் ஆகிய இவற்றை யெல்லாம் ஒருவன் நிந்திப்பது இவனது அஞ்ஞானமே ஆன்மாக் களிடத்தே காணப்படுகின்ற செருக்கு, களிப்பு, பக்ஷபாதம், வஞ்சனை, லோபம், பொறாமை முதலான குற்றங்களை யெல்லாம், அவைகளிடத்தே நிகழும் வாந்தி, பேதி, குத்து, வலி, சுரம் முதலான நோய்கள் போலக் கவனிக்கவேண்டியது.

தாம் இம்மையிலே, செல்வம், உத்தியோகம், கல்வி, இராசரீகம் முதலான மேம்பாடுகள் ஏதும் உடையவராயிருந்தும், அவற்றை இப்பொழுதுபோல் மறுமைக்கும் வேண்டுமேயென எண்ணி முயல மனந்தரியாதவர்களிடத்தில் வேறென்ன யோக்கியக்குணந்தான் இருக்கும்?

ஆன்மாக்களுக்குள்ள குண ஒழுக்க வேறுபாடுகள் எல்லாம் அவ்வவற்றின் அஞ்ஞானம் பற்றினதாகலான், அவைகளை, (இவை நல்லது இவை தீயது எனபனவான விகற்பங்களை) அவற்றின் மீது ஏற்றுதல் தகாது. திருப்தி கொள்ளாமை, தம் குற்றமேயன்றிச் செய்வார் மேலதன்று.

பிறர்க்குத் தீங்கு செய்பவர்களெல்லாம் தாம் மேலே பக்குவப் படவும், அவற்றைப் படுவோர் இப்பொழுது பக்குவமுறவுமே அவற்றைச் செய்கின்றார்கள்.

அபக்குவனுடைய கேள்விக்கு உத்தரஞ் சொல்ல முயல்வது தனது மதிப்பு முதலிய அஞ்ஞானமே.



உன் பிரீதிக்காக, மற்றவனை அகங்காரம் அடங்க நீ வேண்டுவது எவ்வளவு மடமை! அச்சத்துக்காக அடங்குவது அடக்கமன்று அகங்காரம் அற்றல் ஞானி. உன் மகிமைக்காக மற்றவனை ஞானியாக்க வேண்டுவதிலும், நீ அடங்கி ஞானியாவதன்றோ பெருமை.

இச்சித்த வேறேதோ கிடைத்தும், நீ திருப்தி கொள்ள மாட்டாயென்பதற்கு, தற்போதிருக்கும் உனது நிலைமையில் நீ திருப்தி கொள்ளாதிருப்பதே சாக்ஷி.

ஜீவர்களை (நீ செய்யும்) துவித பாவனையே பாவமாவது; தானாகப் பாவனையே புண்ணியமாவது. நோயாளிகள் அஃதுடையாராயிருப்பது பற்றிப் பெற்றோர்க்கு அவர்கள்மேற் கோபமல்ல. இங்ஙனமே, அஞ்ஞானப் பிணியாளராகிய ஜீவர்கள்மாட்டு ஈஸ்வரன் ஈஸ்வரிகளுக்கும்.

குற்றங்களை, அவற்றின் காரணம் பயன் இவைகளை முன்னுணர வல்லவன் செய்யவேண்டியதில்லை. அது மாட்டாதவன் செய்து பின்பு உணரக்கடவன்.

துன்பத்தையே வேண்டி நுகர்வோன் உத்தமன். அதனோடு இன்பத்தையும் வேண்டிச் சமமாக நுகர்வோன் மத்திமன். ''நன்றாங்கானல்லவாக் காண்பவ ரன்றாங்கா வல்லற்படுவ தெவன்'' இன்பத்தை மட்டுமே வேண்டி, துன்பத்துக்குத் தப்ப முயல்வோன் அதமன். அதுவுஞ் சித்திபெறாதது. மேலும், உத்தமன் இன்பங் கிடைப்பின், அதை ஈசுவரப் பிரீதியாக்கி, தான் உவவான்.

ஏதொரு குற்றத்தை ஆன்மா செய்யுமோ, (அது) தான் அக்குற்றமாகிய அஞ்ஞானம் அகல (அஞ்ஞானத்தினின்றும் அகல) வாந்தி செய்ய வேண்டியவன் செய்து சுகப்பட வேண்டியதை ஒக்கும்.

பிறரை அவர் அழகாவது பேச்சாவது நடையாவது மற்றும் எவ்வித நாகரீகமாவது குணமாவது ஒழுக்கமாவது நன்றாயில்லையென்று அவைபற்றி வெறுப்போமானால் பிறரும் நம்மை இங்ஙனம் (இவைபற்றி) வெறுப்பார்களே. நாம் பிறரை வெறுக்கும் அதுகொண்டு ஈசனும் நம்மை வெறுப்பாரே: (பூரண) செப்பம் ஆரிலே சரியென்று முடிவுபட்டது. ஒருவனுக்கு நன்றாயிராததொன்று மற்றொருவனுக்கு நன்றாயிருப்பதுமுண்டே.

என்மேற் புறங்கூறுகிறவன் பொறாமையாகிய முட்டுத் தனியட்டும்; கோள்மூட்டுகிறவன் வாயை விற்றுப் பலன் பெறட்டும்;

வைகிறவன் வைது கோபமுட்டுத் தணியட்டும்; இழிப்பவன் இழித்து
உவக்கட்டும்; இவர்கள் இவ்வாற்றான் வருத்தந் தணிந்து சுகமுற,
நான் இரங்கக் கடவேன். பிறர் நமக்குச் சுகஞ்செய்வாராயின்,
அது நமக்கு மறப்பை விளைத்து, ஈசனையும் உறுதியையும் மறப்
பிக்கின்றது. பிறர் நமக்குத் துன்பஞ்செய்வராயின் அவர் நம்மைத்
தவஞ்செய்விக்கின்றவராவர். ஆகவே, அதன் பயன் எவ்வளவு
பெரியது.

பிறர்க்கு நீ நல்வினைகளைச் செய்யும் போதாயினும், துன்
பங்களைச் செய்யும் போதாயினும், கண்டிக்கும் போதாயினும்,
பழிக்கும் போதாயினும், நீ செய்யும் அவைகள் உன் கருத்துக்கு
எத்தகையவாயிருக்குமோ, அவர் கருத்துக்கும் அவை அத்தகைய
வாகும் என்று முடிவுபண்ணிக் கொள்ளாதே. அவரவர் அறிவுக்குத்
தக்கபடி வெவ்வேறு பாடாயிருக்கும்.

ஒரு கொடையாளி, தன்னிடம் வந்த யாசகனை, ''உனக்கு
யாது வேண்டும்'' என்றான். அவன் ''உன் மனையாளைத் தரல்
வேண்டும்'' என்றான். அதற்கு அக்கொடையாளி சினங்கொண்
டான் அவர்களுக்கிடையில் ஈசுவரன் வந்து தோன்றிக் கொடை
யாளியை நோக்கி ''நீ யாசகனாயிருக்க விரும்புகிறாயா? கொடை
யாளியாயிருக்க விரும்புகிறாயா? நீ கொடையாளியாயிருக்க வேண்டு
மாயின், யாசகர் உன்னிடம் இரப்பனவற்றுள் உனக்குச் சுதந்திர
மாயிருக்கும் எதையும் நீ கொடுக்கவே வேண்டும். உன் தேகத்தைக்
கேட்டாலும் கொடுக்கவே வேண்டும். நீ ஒன்றையும் கொடுக்க
இயலாத பக்ஷம், நீயும் இரப்பவனாகின்றாய் என்று கூறிச் சென்றார்.

மழையினாலும் வெள்ளத்தினாலும் இடியினாலும் மின்னலினா
லும் மலையினாலும், தீயினாலும் என்றிவை போன்ற பூதங்களாகிய
சடங்களாலும், பாம்பு தேள் முதலிய சிற்றறிவுப் பிராணிகளாலும்
நமக்குத் தீங்கு சம்பவிக்கும்போது, அவைகளை, அவற்றாறானே
சம்பவித்தனவென்று பொறுப்போமாயின், மாநுடரால் விளையுந்
தீமைகளையும் அவ்வண்ணமே பொறுக்கலாமே. மேலே கூறியவை
களை ஈசுவரனால் விளைந்தனவென்று பொறுப்போமானால்,
மாநுடரால் விளைகின்றவைகளையும் அவ்வண்ணமே ஈசுவரனால்
விளைந்தனவென்று பொறுக்கலாமே. மாநுடரால் தீங்கு விளையும்
போது அதுபற்றி அவர்மேலே கோபஞ்செய்கின்ற நாம், வெள்ளம்,
தீ முதலிய சடப் பொருள்களால் விளைந்தனவற்றிலும் ஈசுவரனை
முற்படுவோமாயின் அவர்மேலே கோபஞ் செய்வோமன்றோ! அவர்
நமக்கு முற்படாமையினாலும் முற்படினும் நமது கோபம் அவர்



கட் செல்லாமையுமன்றி அது நமக்கே தீங்கு பயப்பதாலும் அவர்
மேலே நாம் கோபஞ் சாதிப்பது இயலாதாகின்றது. இதனால்
மாநுடர்மேலே கோபம், பொறாமை முதலிய துர்க் குணங்கள்
அற்றவர்களே ஈசுவரன் மீதும் அஃதற்றவர்களென்பது முடிபா
யிற்று. மாநுடர் மேலே சாதிக்கும் துர்க்குணமெல்லாம், ஈசுவரன்
மேல் அஃதுடைமைக்குச் சமமாம். இனி ஈசுவரன், சடப்பொருள்
காரணமாக நமக்கு விளைக்குந் தீங்குகளெல்லாம் நம் பயன்
கருதி நமக்கு அவர் செய்யும் நன்மைகள் என்பது சித்தமாயின்
மாநுடரால் விளைகின்றவற்றையும் அங்ஙனமே சமாதானம் பண்ணி
யிருக்கலாமே.

உலகத்திலே யார் பெரியவர், யார் சிறியவர்? யார் நல்லவர்.
யார் பொல்லாதவர்? யார் தேவைப்பட்டவர்? யார் தேவைப்
படாதவர்? யார் பகைவர். யார் உறவர், யார் வேண்டுபவர்,
யார் வேண்டப்படாதவர்? யாது நிலை, யாது நிலையற்றது? எதை
நம்பலாம். எதை நம்பக்கூடாது? எல்லாம் உன்னுடைய மாயை;
ஒருகால் பெரியவனென்றவன் பின்பு சிறியவனாகின்றான்; ஒரு கால்
உறவோன் பின்பு பகைஞன் பின்பு ஒருகால் பகைஞன் உறவோன்,
மற்றவைகளும் எல்லாம் இவ்வண்ணமே.

ஈசுவரா! இந்த உலகத்திலே கெட்ட முயற்சிகள் எத்தனை?
பட்டபாடுகள் எத்தனை! கெட்ட கேடுகளெத்தனை! பெற்ற பேறுக
ளெத்தனை!

மனமே! இன்பமுஞ் சரியே துன்பமுஞ் சரியே; ஒன்றிலும்
நினைப்பு வேண்டியதுமில்லை. ஒன்றிலும் பேச்சுவேண்டியது
மில்லை. நீ குற்றவாளியாயிருக்கும்வரையும் பிறரைக் குற்றம் கூறு
வது பக்ஷபாதம்; இன்னும் அது பொறாமையின் காரணமாம்.
,திருத்தத்துக்காகப் பிறரைக் குற்றங் கூறுகிறேன்' என்பையா
யின், தனது அஞ்ஞானத்தை அகற்ற விரும்பி முயலும் ஒருவ
னுக்கே அவனும் வேண்டிக்கொண்ட வழி இயையும் இங்ஙனமன்றி
இன்பதுன்ப நிமித்தமாகப் பிறரைக் குற்றங் களைந்து திருத்துவது
அவசியமற்ற காரியம்.

குற்றவாளி (அஞ்ஞானி) தான் அழுக்காறு கோபம் முதலிய
துர்க்குணத்தாற் பிறனிடத்துக் குற்றங்களையே காண்பான். குற்ற
வாளி (மெய்யுணர்வாளி) அருள் என்னும் குணம் கைவந்தமை
யால், பிறரிடத்திலே குற்றங்காண விரும்பான். குற்றம் புலப்படி
னும், அதற்காக இரங்குவான். தான் குணநயம் உடையனா
தலின் பிறரிடத்தும் அவற்றைத் தேடிக் கண்டு வியப்பான்.

அன்பு! தனக்கு இன்பந்தருவார்க்கண் உள்ள பிரீதி. அது தன் னைப் போல் அவர்களைப் பாவித்தலால் நிகழ்வது. விருப்பு வெறுப்பு அற்றவர்களுக்கு அவ்வன்பே பிறர்மாட்டு அருளாய் மாறிவிடும்.

பிறரிடத்தே பெறும் இன்ப நிமித்தமாக அவரிடம் வைக்கும் பிரீதி. அன்பு எனப்படும். பிறர் அடையுந் துன்பங் கண்டு அது நிமித்தம் அவரிடை வைக்கும் பிரீதி இரக்கம் எனப்படும்.

தான் பெறும் இன்ப நிமித்தமாக அப்பிறரிடை உண்டாவது அன்பு தமது அன்புக்குரியார் துன்புறுவது கண்டு உண்டாகும் இரக்கம் அவராற் றமக்குக் கிடைக்கும் இன்பத்துக்காகவே.

ஈசுவரன் நமக்குப் புத்தி குறைந்த சமயத்தில் தெரிவித்து உதவி செய்வான். அறிவாளி தன்னிற் தாழ்ந்தவர்களது அறி வினளவு உணர்ந்து அதற்குத்தக்க விதமாய் நடக்க வேண்டும். அல் லாத பக்ஷம் அவன் குற்றவாளி. குழந்தைக்கு முன்னே நெருப்பை வைத்தால் அது தன்னைச் சுட்டுக் கொள்ளும் என்பது அறிவாளி தெரிந்த விஷயம். அப்படி சுட்டுக்கொள்ள வைப்பது அறிவாளியின் குற்றமல்லாது குழந்தையினதன்று.

சாத்தன் என்பவன் கொற்றனைப் புறங்கூற அது சமயத்தில் கொற்றன் அதனைப் பக்கத்தில் நின்று கேட்டுக்கொண்டான். பின்பு கொற்றன் அது நிமித்தமாகச் சாத்தனோடு சண்டைக்கு முயன்றான். அப்பொழுது சாத்தன் கூறிய சமாதானம் 'கொற்றா' பொறு, பொறு நான் உன்னை இகழ்ந்தது ஒரு பக்கம் இருக்கட்டும்; நீ கேட்கத்தக்க எளிதாக நான் பேசியதுதான் குற்றம் என்றான்.

ஒருவனுக்கு ஏதும் நன்மை செய்திருப்பினும் அவனிடம் ஏதும் தீங்கு பெற்றிருப்பது அதாவது துன்பம் பெற்றிருப்பது பெரும் நன்மை.

ஒரு காலமும் பிறனுக்கு ஒருவிதமாகவேனும் வெறுப்புண்டா காமல் நடந்துகொள். பிறனுக்கு உனது நடையால் ஒருவித இம் சையும் உண்டாகாமல் நடந்துகொள். இது பெருஞ் சாமர்த்தி யம்.

மானமுடையவனிலும் அது கெட்டவன் நமக்கு நல்லவன். அவன் நம்மிடம் இரந்து நம்மைத் தியாகியாக்குகின்றான்.

அகங்காரம், தன் பயன் நுகர்ந்தாற்றான் கழியும்; ஒவ்வொரு வித ஆசையும் இங்ஙனமே; கோபம், பொறாமை முதலியவும்



இங்ஙனமே ஒன்றை அநுபவித்துத் தீரவேண்டுமே யல்லாமல், எல்லாவற்றையும் சற்போதனையான் மட்டுந் தீர்ப்பது இயலாது: போதனை அநுபவம் இரண்டும் வேண்டும்.

மெய்யுணர்வாளி தீங்குகளை ஆன்மாவாகிய தனக்குக் கெடுதி யென்று அகற்றுகிறான். லௌகிகன் தனக்குத் துன்பத்துக்கிடமா கிறதென்றும், இன்பத்துக்கு இடையூறென்றும் ஒருவாறு தீங்குகளை அகற்றுவான். யோக்கியத்துட்பட்டதல்ல. ஆன்ம லாபத்துக் கிடை யூறு என்று விலக்குபவனிலும் அருளால் விலக்குபவனே யோக்கியன்.

நீ அகங்காரி என்று பிறரைக் கண்டிக்கிறவனும் அகங்காரி. நீ எப்பொழுது சரிப்பட்டாய் என்பதற்கு அறிகுறி. நிகழ்வதை யெல்லாம் சரியென உன் மனம் எப்பொழுது உடன்பட்டதோ அப்பொழுது நீ சரிப்பட்டாய்; அப்பொழுது உனக்கு வாக்கும் இறந்தது; மனமும் இறந்தது.

ஒப்பு: இதில் அனைத்தும் அடங்கும். (1) இருவினை ஒப்பு. (2) அனைத்தையும் நடுவு நிலைமையாக ஒப்பு. (3) எல்லாம் திருவருளாய் ஒப்பு. (4) தான் பிறர் என்னும் வேறுபாடில்லாமல் ஒப்பு. (5) யாவரையும் அருளாய் ஒப்பு. (6) எல்லாச் சீவரும் ஒன்றென ஒப்பு. (7) எல்லாத் தெய்வமும் ஒன்றென ஒப்பு. (8) தனக்கு ஈசுவரன் தரும் சுகபோகங்களை நமக்கு இது அமை யும் என்னும் திருப்தி ஒப்பு. (9) தனக்கு ஈசுவரன் ஊட்டும் துன்பத்தை வேண்டாம் என்று வெறுக்காமல் உடன் படல் ஒப்பு. (10) நிகழ்வதெல்லாம் சரியென்னும் ஒப்பு.

பாக்கியவான்: இயற்கையிலே தான் செல்வனாயினுமென்! வறியவனாயினுமென்! தனக்கு ஈசுவரன் இட்ட சுகதுக்க நிலை மையிலே திருப்தியுடையவன் பாக்கியவான். அதில் திருப்தியில்லாது குறைகூறி முறுமுறுக்கிறவன் அற்பன்.

அருளாவது, நோயாளிகண்மேலும் அவர்களுக்கு அந்நோயைப் பரிகரிக்கும் தருமவைத்தியன் மேலும் உளதாய இரக்கம். நோயென் றது அஞ்ஞானம். நேயாளிகளிடத்து அவர்கள் வருந்துவது கண்டு சகியாமையால் உளதாகின்றது. வைத்தியனிடத்து அந்நோயை மாற்றி உய்விக்கும் தயாளம் பற்றி உளதாகின்றது.

தன்மேலே யாவரும் பற்றுள்ளவராயிருக்கின்றனர். ஆதலால், அது போலவே மற்றை உயிர்களிடத்தும் ஈசுவரனிடத்தும் பற்றுள்ள வராய் எவர்களும் இருக்கவேண்டியது நடுவுநிலைமையுடையவன் இப்படி ஒழுகுவான்.

பிறரிடத்தே குற்றங்கண்டு கண்டிக்கிறது. அவர்களை வருத்து
வதாயிருக்கிறது. ஆதலால், அந்த இம்சையை நாம் ஏன் செய்ய
வேண்டும்? அதற்கெல்லாம் அதிகாரி ஈசுவரன். அவர் குற்றங்
களில்லாதவர். நாம் கோபம் பொறாமை முதலிய துர்க்குணம்
உடையேம். ஆதலால், நாம் செய்யும் கண்டனம் அக்குற்றம்
பற்றியதாயிருக்கும்.

பிறரை நாம் குற்றம்பற்றிக் கண்டிப்பது அவர் நயத்துக்கா
யின், அவர் நம்மிடம் திருத்தஞ் செய்யும்படி வேண்டிக்கொண்
டாலன்றோ அது கூடும். வேண்டினும், எம்மிடத்திற் கோபம்
பொறாமை முதலிய துர்க்குணம் உண்டாயமட்டும் அது தகாது.

நாம் பிறரைக் கண்டிப்பதெல்லாம் நமக்குத் துன்பம் நிகழா
மைக்காக வேனும். இன்பத்துக் காகவேனுமாயிருக்கின்றது. ஆதலால்,
அக் கண்டம் நமது கோபம் பொறாமைகளைச் சகிக்கமாட்டாமை
பற்றி நிகழ்வது. ஆதலின், அது தகாது.

ஈசுவரன், ஆன்மாக்களோடு எப்படி நடக்கிறாரோ நீயும் அவர்
களோடு அப்படி நட. தன் ஆன்ம ஈடேற்றங் கருதி ஒருவனிடத்து
உளதாகுங் குணத்திருத்தமே திருத்தம். அச்சம் பற்றியதால் உலக
மதிப்புக் கருதியாதல் உளதாகும் குணத் திருத்தம் திருத்தமன்று.

ஆன்ம ஈடேற்றங் கருதாத ஒருவனுக்கு, இயற்கையில் அமைந்
துள்ள குணத் திருத்தம் யாதும் உண்டாயின் அது மதிப்புக்கிட
மானதல்ல.

நீ பிறரை யாதுங் குற்றங்கண்டு அவமதிப்பாகக் கணிக்கும்
போது அத்தகைய குற்றங்களாற் றிருத்தம் வந்த உனது நிலை
மைக்கு ஈசுவரனிடம் நன்றியறிதலாயிரு. அக்குற்றம் உடையார்
கள்மேல், திருத்தம் வராத அவர்கள் நிலைமைக்காக இரக்கம்
உடையவனாயிரு.

எதுடையும், பகைமையும், கலகமும், மனச் சஞ்சலமும், அவா
வும் ஆகிய இவைபோலுங் கெடுதிகளெல்லாம் ஒவ்வொருவருக்கும்
தத்தமிடத்துள்ளனவல்லாமற் பிறராற் சம்பவிப்பவையல்ல.

ஒவ்வொருவருக்கும் தத்தமக்குப் பகைவன், தத்தம் அஞ்ஞா
னமேயல்லாமல் பிற ஜீவர்களல்ல. மனக்கோட்டம் உடையவர்
களுக்கு எங்குபோய்த் தப்பலாம்; எந்நிலையில் உய்யலாம் என்
றாலும் அங்கும் கெடுதிகள் சம்பவித்துக்கொண்டே வரும்.



உனக்கு ஒருவன் தீங்கு செய்ததன் நிமித்தமாக அவனைக்
குணக்கேடன் என்று நீ கண்டிப்பது பெரும் மடமை. அதை நீ
யார் நன்மை கருதிச் செய்கின்றாய்? உன்னுடைய வசதிகளுக்கு
இசையாத நிமித்தமாக ஒருவனை யோக்கியனல்லன் என்றிகழ்வ
தும் பேதமை. அதுவும் யார் பொருட்டுச் செய்கின்றாய்?

உனக்கு ஒருவன் துன்பஞ் செய்தபொழுது அதைத் தீங்கென்று
ஒப்புக்கொண்டதில் நீ குற்றவாளி. உனக்குப் பிறன் சுகம் விளைத்த
பொழுது அதை நன்மையென ஒப்புக்கொண்டதிலும் நீ குற்ற
வாளி.

எனக்குத் தீங்கு செய்த ஒருவனை எனது தந்தையாகிய ஈசு
வரன் வெறுக்கிறாரா? அவருக்கில்லாத வெறுப்பு எனக்கேன்? நாம்
சீவகர்கள் மேலே கோபம், பொறாமை முதலிய துர்க்குணம் ஆளு
மட்டும் அவையெல்லாம் ஈசுவரன் மேலே செய்வனவாம், ஈசுவர
னிடத்தே தாயனாய் இருக்கவேண்டியவன் சீவர்களிடத்தே
அவற்றை ஒழித்தல் வேண்டும். நாம் சீவர்கள் மாட்டுவைக்கும்
பிரீதியாயினும் வெறுப்பாயினும் எல்லாம் ஜீவர்களுக்கல்ல; ஈச
னுக்கே.

உனக்கு நேரிடும் எவ்வித சங்கடங்களையும் ஈசுவரனே ஊட்டு
வதாக ஒப்புக்கொள்; உனது திருத்தத்துக்காக ஈசன் நமக்கு எதை
ஊட்டுகினும் சீவர்கள் மூலமாகவே அதைச் செய்யவேண்டி யிருப்
பதால் நாம் சீவர்களை நோக நியாயமில்லை.

மதிப்புப் பிரீதி ஒன்று. இது அகங்காரம். அநுபவத்தில் பிரீதி
ஒன்று. மதிப்புக்கும் அநுபவத்திற்கும் ஆக்கம் பயப்பதில் உளதா
வது விருப்பு. இவ்விரண்டிற்கும் கேடு பயப்பதில் உளதாவது
வெறுப்பு, தான் தனக்கு மதிப்பை வேண்டிக்கொள்வதால் அதில்
மேற்படும் பிற சீவர்களில் உளதாவது அழுக்காறு.

கோபம், அழுக்காறு, களிப்பு, மதிப்பு, செருக்கு முதலிய
துர்க்குணம் மீறி அடாத கூறுவானையும் செய்வானையும் ரோகம்
மேற்கொண்ட நோயாளியென இரங்கு அல்லது பைத்தியம் மேற்
பட்ட பித்தன்போல் மதித்து இரங்கு.

இடம் பொருள் ஏவல் முதலிய உதவிகள் எவ்வளவுக்கிருக்
குமோ அவ்வளவுக்கும் ஈசுவரன்மேல் நினைப்பும் தேவையும் உண்
டாகாது.

குத்து. வலிப்பு. எரிவு தெண்டல் முதலான நோய்களால்
ஆற்றாது குளருகிறவனும், கோபம்; பொறாமை, களிப்பு முத

கடுஞ்சொல், பழி லான துர்க்குணங்கள் மேற்கொண்டு ஆற்றாது குளறுகின்றவனும், சம மொழி, புறங்கூறல் முதலானவற்றால் மாவர். ஆதலால், அவரைப் போலவே இவரிடத்தும் நாம் இரங் கக்கடவேம்.

இரக்கங் காரணமாகப் பிறர்க்கு ஏதும் போதனை செய்ய மனம் ஏவுமானால் அதை ஈசுவரனிடஞ் சொல்லி நடத்திக்கொள். உனக்கு அஞ்ஞானங்கள் முழுதும் அகலுமட்டும் நீ வாய் திறக்க லாகாது.

நீ பிறருக்கு ஒன்றைப் பேசப் புகும் பொழுதும் ஒன்றைச் செய்யப் புகும் பொழுதும் அது அவர்க்கு எத்தகையதாயிருக்கும் என்பதை முன்பு யோசித்துக் கொள்.

எந்த எந்தப் போகத்தையும் நுகர்ந்து திருப்தி பெற்ற பின் உண்டாகும் பற்றறுதியே திறமானது. ஒரு போகத்தை விரும்பு இறவன் அதனை நுகரவேண்டும். மெய்யுணர்வால் பற்றறுதி கூடு மானால் ஆகட்டும். அச்சத்தினால் அடங்கியிருந்தவர்களெல்லாம் பின்பு நுகர்ந்தே தொலைப்பார்கள்.

அருள், அன்பு என்னும் இரண்டனுள், அன்பு பொய்யென்பது மெய்யுணர்ந்தார்க்கே நன்கு புலப்படும். பிறரைக்கொண்டு நமக்கு ஊழ்வினைப் பயனாக இன்ப துன்பமென்னும் இரண்டையும் ஊட்டு கிறவர் ஈசுவரனே. அந்த உண்மையை விளங்காமல் இன்பந் தருப வர்களில் அன்பும், துன்பந் தருபவர்களில் பகைமையாகிய வன்பும் கொள்வது அறியாமை. ஒரு பிறப்பில் நமக்கு அன்புடையார் என இருந்த மனைவி மக்கள் உற்றார் என்போர் மறுபிறப்புகளிலும் அங்ஙனம் ஆகின்றார்களா? இல்லையே இவையெல்லாம் ஈசனது திருவிளையாட்டு. ஒரு பிறப்பிற்றானே அன்புடையார் பகைவரா கவும். அவர் அன்பினராகவும் சம்பவிக்கின்றதே. தீவினை நுகருங் காலத்தில் உறவினரும் பகைவராம். நல்வினை நுகர்ச்சியில் பகை வரும் உறவினராம். ஆதலால், அன்பென்பது பொய். பிற ஜீவர்களையெல்லாம் தானாகப் பாவிப்பதாகிய அருள் ஒன்றே மெய் அஃதொன்றே நமக்குத் தெய்வ குணம்.

மெய்யுணர்வாளி ஒருவன்றான் தன் ஆசை கோபம் முதலிய துர்க்குணங்களைத் திருத்த வல்லவன். மற்றவர்கள் எதையும் அநுபவித்தே திருந்த வேண்டும்.

பேச்செல்லாம் தன் மதிப்பாகிய அகங்காரம். பிறருக்கு அதை இருக்கச் சகியாமையாகிய அழுக்காறு என்னும் இரு காரணங்களும் கொண்டே நிகழ்வவாயின.



தாய் தந்தை முதலான சகல பாசமும் ஈசுவரன் ஆட்டிய இப்பிறப்புக் கூத்து எல்லாவற்றிற்கும். அவ்விசனே காரணன் என்று குடும்பம் முதலான சகல பாசங்களிலும் பற்றற்று நில். இயலாதா யின், தாய் எல்லாரையும் தந்தை எல்லாரையும் தாய் தந்தை எனவும், மைந்தர் எல்லாரையும் மைந்தர் எனவும், சகோதரர் எல்லாரையும் சகோதரர் எனவும், இம்முறையே எல்லாரிடத்தும் அன்பு செய்து பக்ஷபாதமற்றவனாய் நில். அருளாளுவை.

ஒருவன் தன்னைச் சரிப்படுத்துவது முழுதும் நடுவு நிலைமையி னாலேயே அமைய வேண்டும். அருள் என்பதும அதுவே.

உனது துர்க்குணங்களையெல்லாம் மெய்யுணர்வால் அகற்று. இயலாதாயின் பிறர்க்கும் இத்துர்க்குணங்கள் இங்ஙனமே ஒழித் தற்கு எளிதானவல்லவென்று உண்மையுணர்ந்து நடுநின்று உன்னைப் போலவே பிறரையும் பாவித்து அவர்களுடைய துர்க்குணங்களுக் காக அவர்கள் மேல் இரங்கு.

மெய்யுணர்வானிடத்துள்ள திருத்தவீனங்கள் குறை கூறுதற் கிடமாமன்றி அஃதில்லாதவனது திருத்தவீனங்கள் குறை கூறுதற் கிடமாகா. அச்சங்காரணமாகவும் தனக்குச் சுகத்தை வேண்டியும் ஒருவனிடத்துளதாகும் திருத்தங்கள் மதிப்புக்கிடமாகா.

பேச்செல்லாம் தன்னை மதித்தலும் பிறனைத் தாழ்த்தலு மாயிருக்கின்றன.

ஒருநோயாளி ரோகத்தால் வருந்தும்போது தக்க ஔஷதம் இல்லையேயென்று நாம் இரங்குகிறோம். அதுபோல, கோபம், பொறாமை, களிப்பு முதலான துர்க்குணனுக்கு அவை தீர்ந்து சுகப்பட மெய்யுணர்ச்சி இடைக்கவில்லையேயென்று அதற்காக நாம் இரங்கவேண்டும்.

உனது சுகத்துக்காக நீ பிறனைத் திருத்த முயல்வது அயோக் கியம்.

யாவராலேனும் எவ்வித துன்பம் நேரிட்டாலும் அவற்றை யெல்லாம் நாம் வெறுப்பில்லாமற் சகிக்கவேண்டு மென்பது ஈசுவர நியமம்.

வருந் துன்பங்களை வினைப்பயனென்று நாம் நுகர்ந்தால் மேலே பிறவிக்கிடமில்லை.

பாலிய பருவக் குழந்தைகள், குமாரர் விருத்தர்களான லௌகி கர்களுக்குக் குழந்தைகளாய்ப் புலப்படுகின்றனர். லௌகிகரெல்லாம்

மெய்யுணர்வுடைய ஞானிகளுக்குக் குழந்தைகளாய்ப் புலப்படு இன்றனர்.

குழந்தைகளின் செயல்கள் மற்றையவர்களுக்கு வியர்த்தமான (பயனற்ற) தென்று புலப்படுகின்றது. அதுபோல, அம்மற்றையவர் களின் செயல்கள் மெய்யுணந்த ஞானிகளுக்கு அங்ஙனம் புலப்படுவ தாயின், புத்தியீனரை, குழந்தைகளை நாம் வெறுக்காதது போல வெறுக்காதிருக்க வேண்டியது மெய்யுணர்ச்சி யுண்டாகாதவர் யாரும் புத்தியீனர்தாம்.

ஒரு நண்பன் தனக்குச் சரிவந்த புத்திமானாகிய நண்பனை நன்கு மதிப்பான். பிதா மாதாக்கள் தம்மக்களுள்ளே புத்திசாலி களை மதிப்பார்கள். அதுபோல, ஈசுவரனும் ஈசுவரியும் மெய் யுணர்வுடைய ஆன்மாக்களாகிய குழந்தைகளை மதிப்பார்கள்.

சம்பவிக்கும் நல்வினை தீவினைகளெல்லாம் லௌகிகனுக்கு இன்பதுன்ப மாத்திரமாகின்றன. மெய்யுணர்வாளனுக்கு அவை இன்ப துன்ப மாத்திரமாமன்றி மெய்யுணர்வுக்கும் பயனாய், அவன் பெறும் உறுதிப் பேற்றிற்குப் பரீக்ஷா ரூபமாயுமிருக்கின்றன.

உனக்குள்ள அஞ்ஞானம் அகலும் பொருட்டாக உனது பொறாமை கோபம் களிப்பு மதிப்பு (அகங்காரம்) முதலிய துர்க் குணங்களை அகற்று.

உனக்குள்ள அஞ்ஞானம் அகலும் பொருட்டாகப் பிறர் குற்றத் தைப்பொறு. உன்மேல் உனக்கு எப்படிப் பிரீதியோ மற்றையவர் கள் மேலும் நீ அப்படியாயிரு.

துஷ்டன் சொல்லுகிறான்; எனக்குப் பிற ஜீவர்களை என்னைப் போலக் காணும் அருள் இன்னும் உண்டாகவில்லை. நான் பிறரை எவ்விதம் இம்சை பண்ணுகிறேனோ அவ்விதம் நானும் ஈசனால் பிறரைக் கொண்டு இம்ஸிக்கப்படுவேன். என்பொருட்டு நீங்கள் இரங்கவேண்டாம். ஈசனிருக்கிறார். நீங்கள் என்னைத் துஷ்ட னென்று குறைகூறுவதும், தூற்றுவதும், கண்டிப்பதும் எல்லாம் உங்கள் அஞ்ஞானமே. இப்படிப்பட்டவர்களிடம் அருள் எங்கே இருக்கிறது; நான் செய்வதற்குத்தக்க தண்டனையை நான் பெறு கின்றேன். நீங்கள் என்னைக் குறைகூறி உங்களுக்குரிய அருளை அழித்துக் கெட்டுப்போகாமலிருங்கள்.

பிறரால் நமக்குத் துன்பமுண்டானபோது அவர்களை நாம் குறைகூறுவதெல்லாம் நமக்குள்ள அழுக்காறே; (மனக்கோட்டமே) துன்பஞ் சகிக்கமாட்டாமை பற்றியாயின், சடப்பொருள்களாலும்,



மிருகங்களாலும் ஈசன் துன்பங்களை ஊட்டும்போது நாம் ஒப்புக் கொள்ளவில்லையா.

ஒரு குற்றத்தைத் தெரியாமற் செய்கிறவனிலும் தெரிந்து செய்கிறவன் திறம். தெரியாது செய்கிறவன் மிருகம்.

பிறரிடத்தே துன்பங்கண்டவழி அவர்மேல் நாம் இரங்குவது போல ஆன்மாக்களிடத்தெல்லாம் கோபம், பொறாமை, களிப்பு, லோபம் முதலிய துர்க்குணமாகிய அஞ்ஞானநோய் காணும் பொழுதெல்லாம் அவர்கள் மேல் அவை பொருட்டாக நாம் இரங் கல் வேண்டும்.

ஈசுவரனுக்குப் பிள்ளைகளாயிருக்கும் ஆன்மாக்கள் எல்லா வற்றுள்ளும் மெய்யுணர்விற் றேறியவைகள் முதியவைகளுக்கும், மெய்யுணர்வு வராதவைகள் குழந்தைகளுக்கும் சமமாம்;

பிரபஞ்சத்திலே ஒருவனுக்குச் சம்பவிக்கும் எவ்விதமான துன் பமும். பிள்ளைகளுக்குக் கல்விப் பயிற்சிபோலும், ஒருவனுக்குச் சம்பவிக்கும் சகலவித இன்பங்களும், ஒரு பிள்ளையை ஆடை, அணி, ஊண் முதலிய எல்லா உதவிகளும் ஊட்டி அதனைக் கற்க விடாமற் காலங்கழிப்பது போலுமிருக்கிறது.

ஆன்மாக்களெல்லாம், ஈசுவரனுக்குப் பிள்ளைகளாக ஒரே நிலைமையுடையனவாயிருந்தும் பிரபஞ்சத்திலே அவைகளெல்லாம் வெவ்வேறான நிலைமையிலிருப்பதனால் நான் புருஷன் ஆத்மா, இவள் மனைவி ஆத்மா, இது பிள்ளை ஆத்மா. இது சகோதர ஆத்மா, இது அடிமை ஆத்மா, இது மாடாத்துமா, இது நாயாத் துமா என்று இவ்விதமே தாரதம்மியம் ஏற்பட்டவைகள் போல் மயங்கப்படுகின்றன இதை மெய்யுணர்வால் அகற்றி உண்மைகாண வேண்டும்.

ஒரு பிதா தன் வீட்டுக் கருமங்கள் நடைபெறவேண்டித் தன் பிள்ளைகள் பலருள்ளும் ஒருவனைச் சமைக்கவும், ஒருவனை வேட்டி தோய்க்கவும், ஒருவனை வீடு பெருக்கவும், ஒருவனை மாடு பார்க்கவும், ஒருவனைக் கணக்கெழுதவும், ஒருவனை எல்லா ருக்கும் அதிபதியாய்க் கருமங்களை நடப்பிக்கவும் அவரவர் அளவு கண்டு நியமித்தான். எந்நிலையிலிருந்தாலும் எல்லாரும் அப்பிதா வுக்குப் பிள்ளைகள் என்பதிற் சந்தேகமா?

நான் ஒருவனை என் அடிமை எனவும், என் பகைவன் எனவும் என் நட்பினன் எனவும் இவ்வாற்றாற் பலரிடத்தும் வேறுபாடு

வைத்து நோக்குவதுபோல, ஈசனும், என்னையும் அப் பிறரையும் அவ்வாறு வேறுபாடு வைத்து நோக்குவாரோ?

துன்பங்களிலே பரீக்ஷிப்படாதவன் கல்லாத பிள்ளைகளுக்குச் சமமானவன். அதிற் பரீக்ஷிப்பட்டவன்றான் கற்றுத் தேறினவனுக்குச் சமம். கல்வியிலும் பெரியது துன்ப அநுபவம்.

## அருள் எவனுக்கு வரும்? எவனுக்கு வராது?

தொந்தரை என்று அஞ்சிக் குடும்பப் பாரத்தை விட்டுச் சஞ்சலமற்றிருக்கலாமென்று வனவாசமாய் இருப்பவனுக்கு அருள் உண்டாக இடமில்லை. குடும்ப பாரத்தோடிருப்பதனால் கோபம், பொறாமை, களிப்பு, லோபம் முதலான துர்க்குணம் பிறவிர்த்திக்கு இடமுண்டாக, அவற்றை மெய்யுணர்வாற் களைந்து, மெய்யுணர்ச்சி கொண்டும் களைதற்கரிய இத்துர்க்குணங்கள் அஃதில்லாத சாதாரணர்க்கு எவ்வளவு துன்பம் பயப்பனவாயிருக்குமென்று தன்னிற் கண்டவாறு பிறரிடத்துக்கண்டு இருந்தும் நடுவுநிலைமையுடையானுக்கே அருள் கைகூடும்.

பிறருடைய சரீர வருத்தம் வறுமை இவற்றைக் கண்டு வருந்துவதன்று இரக்கம். பிறருக்குள்ள கோபம் பொறாமை முதலிய அஞ்ஞானப் பிணிகண்டு அவை பொருட்டாக இரங்குவதே இரக்கம். முன்னே தன்னிடத்தே அவ்வருத்தங்கண்டு பின்பு பிறரிடத்தும் அவை அத்தன்மையவாம் என்று காண்பானுக்கு வருவது அருள்.

ஒருவன் தான் குற்றமற்றவனாயிருக்க வேண்டுமாயின், தான் பிறர் குற்றம் பொறுப்பதொன்றையும் விரதமாய் அநுட்டிக்க வேண்டியது. பிறர் குற்றம் பொறுத்து, அதற்காக அவர்கள்மேல் இரக்கமுடையவன் எவனோ அவன்றான் குற்றமற்றவனாவன்.

ஒருவன் கோபம் பொறாமைகள் மீறி என்னை இழிவாக வைது கன்னத்திலும் அடித்தான். இதனால் எனக்கு வந்த நட்டம் ஒரு அடியும் சில ஏச்சுந்தான். அவன், தனக்கு இதுகொண்டு ஆக்கிக் கொண்ட தேட்டமும் தனது துர்க்குணங்களை அழிக்க முடியாமல் அவற்றை ஆக்கிக்கொண்ட நிலைபேறும், சீர்தூக்க ஐயையோ! எவ்வளவு பெரியன!!

பிறரால் தனக்குத் துன்பங்கள் நேரிட்டு வருந்துகின்றவனுக்கு அது நுகர்ச்சியுமாய்த் தான் பின்பு பிறருக்கு அவை செய்யாமைக்கு மெய்யுணர்வைப் பயக்கின்றது. தான் பிறருக்குத் துன்பம் செய்யாமல் இடம்பெறுமட்டும் எனக்குப் பிறரால் தீங்கு நேரிடும். பிறர்



தனக்குத் துன்பஞ் செய்வதும் ஆகிய இரண்டும் திருத்தத்துக்கிடமானவை.

பிறர் தனக்குச் செய்யுந் துன்பத்தால் தான் வருந்துகின்றவன், தான் பிறருக்குந் துன்பஞ் செய்யும் போதும் அது பிறர்க்கு அவ்வளவாமாதலை யுணர்வான். அதனால்தான் பின்பு பிறனுக்குத் துன்பஞ்செய்ய ஏவப்படான்.

தன் வல்லமைக்கு அடங்காமல் கோபம், பொறாமை, களிப்பு, காமம்மதிப்பு முதலிய காரணமாகத்தான் பிறருக்குத் துன்பஞ்செய்ய ஏவப்படுகிறவன், தனது துர்க்குணங்கள் தனக்கு அடங்காமை போலவே பிறருக்கும் அவை அடங்காமை யாலன்றோ அவர்கள் நமக்குத் துன்பஞ் செய்ய ஏவப்பட்டனர். என்று உண்மை உணர்தலால்தான் பிறர் குற்றம் பொறுப்பவனாவான்.

சாத்தன் தான் பிறனுக்குச் செய்த குற்றத்துக்காக அரசன் தண்டனைகளைக் கொண்டு தன்னைத் தண்டிக்கும் போது, தான் அதனைச் சகித்துக் கொள்ளாது சீறுவானாயின், அது அரசனுக்குக் கோபத்தை விளைக்குமல்லவா? அது போல, நாம் பிறனுக்கு முன்னைப் பிறப்பிற் செய்த தீவினைக்காக ஈசன் இம்மையிலே பிறரால் நமக்குத் தண்டனை யுறுத்தும் போது நாம் பொறுத்துக் கொள்ளாது வெகுள்வோமாயின் ஈசன் நம்மை வெறுப்பாரே.

ஆதலால், தீ முதலிய சடங்களாலாதல் விலங்கு முதலிய சிற்றுயிர்களாலாதல், மானுடர்களாலாதல் நமக்கு எவ்வெத்தீங்கு விளையினும் நாம் அவற்றை யெல்லாம் நமக்குக் கன்ம பரிகாரமென்று மகிழ்ந்து சகித்தல் வேண்டும்.

ஒருவன் தன்னைக் கத்தியாற் குத்திக் கொண்டான். அதற்கு நாம் அவனை வெறுக்க நியாயமென்னை? இது போலவே, ஒருவன் நமக்காவது பிறர்க்காவது கோபம் பொறாமைகளால் யாதுந் தீங்கு செய்தபோது, அதற்காக, நாம் அவனை வெறுப்பதும் தவறாம். நமக்காவது பிறர்க்காவது ஒருவன் ஒரு நன்மை செய்தானாயின் அதில் அவனை நாம் உவப்பதும் வேண்டியதில்லை. ஏனென்றால் ஒருவன், தான் பிறருக்கென்று செய்யும் நன்மை தீமைகளெல்லாம் அவன் பின்பு தனக்கே ஆக்கிக்கொள்ளும் தேட்டமாயிருக்கின்றன. தாம் பட்டு நுகர்வோர்க்குக் கன்ம பரிகாரமாகிய பயனையும் பயக்கின்றது. ஆதலால் அவர்கள்; அவன் மீது நன்றி பாராட்ட வேண்டியவராயிருக்கின்றனர். ஆதலால் நமக்குத் தீமை செய்வோரை நாம் வெறுத்தால் ஈசன் நம்மை வெறுப்பார்.

பிறர்க்குத் தீங்கு செய்வோர், தமக்குத் தீங்கும், அப்பிறர்க்கு நன்மையும் விளைத்தவராகின்றனர். பிறர்க்கு நன்மை செய்வோர் அப்பிறர்க்குத் தீங்கும் தமக்கு நன்மையும் செய்தவராவார்.

பிறரால் தான் இம்சை பட்டறியாதவன், தான் பிறருக்கு அதிக இம்சை விளைவிப்பவனாயிருக்கின்றான்.

ஒருவனிடத்துள்ள கோபம், பொறாமை, லோபம், களிப்பு என்னும் தீக்குணங்கள், அவை பற்றி, ஏதும் இடையூறு தனக்குச் சம்பவித்தால் ஒருவாறு தணியும். அதுவும் யோக்கியமான தணிவல்ல.

பிறன் தன்பேரிற் றாக்குகின்ற கோபம், பொறாமை களிப்புக்களின். அருவருப்பையும் அவற்றாற் தனக்கு வரும் துன்பத்தையும் தான் சிந்திக்கச் சிந்திக்க அவை தணிவதே யோக்கியம்.

ஏது காரணமாக நாம் பிறரில் வெறுப்பும் அழுக்காறாகிய வன்கண்மையும் கொண்டோமோ அது காரணமாகவே அப்பிறர் மீது நாம் இரக்கம் வைக்கவேண்டும்.

எவர்களும் பிறரைக் குண ஒழுக்கந் தூயராயிருக்க வேண்டுமென்று கத்துவதும் இருமுவதுமெல்லாம் தம் நயத்தை வேண்டுவதாயேயிருக்கிறது.

முற்றும்

குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு – 12

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 11 | 18 | தரத்தன்று | தரத்ததன்று |
| 14 | 18 | மனையின் | மலையின் |
| 15 | 23 | நாமும் | தாமும் |
| 17 | 19 | ஆனபடியினாற்தான் | ஆனபடியினாற்றான் |
| 19 | 29 | என்றும் | என்னும் |
| 19 | 31 | கர்மயோகத்துக்கு | கர்மயோகத்திற்கு |
| 21 | 3 | ஐந்தெழுத்துக்கு | ஐந்தெழுத்திற்கு |
| 26 | 13 | தளைத்திட | தழைத்திட |
| 27 | 28 | முதன்மையுறு | முதன்மையுறும் |
| 27 | 32 | பொலிபெற | பொலிவுபெற |
| 28 | 15 | உயிர்க்குல | உயிர்க்குலம் |
| 28 | 32 | எமநின்னருள | ஏமநின்னருள் |
| 29 | 8 | மாமணிக்கண்டேனே | மாமணியைக்கண்டேனே |
| 29 | 26 | ஏந்திடவும் | ஏத்திடவும் |
| 31 | 17 | செயவெனை | செய்யவெனை |
| 35 | 24 | அருட்த்தாளம் | அருள்த்தாளம் |
| 45 | 14 | முன்னம் | முள்ளம் |
| 51 | 24 | துளைகுக்ம் | துளைக்கும் |
| 52 | 3 | சேனாநோங்கி | சேணோங்கி |
| 54 | 24 | பாரதீனமாக | பராதீனமாக |
| 75 | 11 | தம்யை | தம்மை |
| 75 | 18 | சுவாமிஜி | சுவாமிஜீ |
| 76 | 38 | உவன்னியாசகங்கள் | உபன்னியாசங்கள் |
| 77 | 5 | காயதரிசி | காரியதரிசி |
| 77 | 38 | வ்டுகளில் | வீடுகளிலும் |
| 78 | 29 | யெழிச்சி | யெழுச்சி |
| 85 | 6 | நன்கடம்பனை | நங்கடம்பனை |
| 86 | 8 | சீலர் | சீவர் |
| 86 | 80 | தியாந | தியான |
| 87 | 7 | மோகிய | மோகி |
| 91 | 16 | அவன்றான் | அவன்தான் |
| 95 | 8 | பொறாமை | பொருமை |
| 100 | 9 | அர்ப்பித்து | அர்ப்பணித்து |
| 123 | 21 | தனியட்டும் | தணியட்டும் |
| 124 | 27 | அவற்றாறானே | அவ்வவற்றானே |
| 129 | 11 | குளருகிறவள் | குளறுகிறவனும் |
| 130 | 30 | ஒருவன்றான் | ஒருவன்தான் |

COVER OFFSET BY UNIE ARTS (PVT) LTD.TEL. 330195